5953

அ23:

9.12.78

என். ராமசாமிக்கோன்,
அக்கவுண்டு புக்ஷாப்,
கீழாவணிமூலவீதி,
மதுரை.

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION,
PAGANERI.

PRESENTED BY:
V. PR. PL. M.
RAMVISWANATHAN CHETTIAR
PAGANERI.

ஸ்ரீ

மஹாபாரத வினா விடை

முதல் பாகம்

ஆதி, ஸபா, ஆரண்ய,
விராட, உத்தியோக பர்வங்களடங்கியது

APPROVED BY THE TEXT BOOK COMMITTEE.

மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூல் முதல் உதவி போதகரான

ஆ. சி. கஸ்தூரிரங்கய்யர், பி. ஏ., எல். டி.

அவர்கள் இயற்றியது.

மூன்றாம் பதிப்பு.

வெ.பெரி.பள.
V.PR.PL.
RANGOON.

சென்னை

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி

மயிலாப்பூர்.

1912

All Rights Reserved.]

[விலை அணா 12.

அட்டவணை.

நெ.	விஷயம்.	விளுக்கள்.	பக்கங்கள்.
	பீடிகை	30	1
1	ஆதிபர்வம்	192	9
2	ஸபாபர்வம்	55	74
3	ஆரண்யபர்வம்	135	95
4	விராடபர்வம்	42	155
5	உத்தியோகபர்வம்	83	173
	அனுபந்தம்		1
	ஆக விளுக்கள்	537.	

TEMPLE AND CO., MADRAS.

முதற்பதிப்பு முகவுரை.

வினு விடை: ரூபமாகப் பாரதம், பாகவதம் ஆகிய இவைகளை எழுதுவதாகத் தீர்மானித்து, முதலில் சிறந்ததும், ஐந்தாம் வேதம் என்று பெயர் பெற்றதுமாகிய மஹாபாரதம் வெளியிடப்பட்டிருக்கிறது. பாரதத்தை மூன்று பாகமாக எழுதுவதாகத் துணிந்து இப்புத்தகத்தில் முதல் ஐந்து பர்வங்கள் மாத்திரம் எழுதப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு முன் எழுதப்பட்டுள்ள பீடிகையில், மஹாபாரதம் வெளிவந்த மாதிரி, பர்வங்களின் ஸாரம் முதலிய மஹாபாரதத்தைப் பற்றிய பொது விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இவ்வாறு பாரதம் முதலிய நூல்களை எழுதத் துணிந்ததற்குக் காரணம் பின்வருமாறு. வெகு நாளாக என்மனதில் சிறுவர்களும் எளிதில் உணரும்படியாக, பாரதம் முதலியவைகளை தமிழில் எழுத வேண்டும் என்ற ஒரு ஆவலிருந்தது. இதற்கு முன்பாக அச்சிட்டு வெளிவந்திருக்கும் பாரதம் முதலியவைகள் வெகுவாக விரிந்தும், வர்ணனை முதலியவைகள் நிறைந்தும் இருக்கின்றன. அவைகளிலிருந்து சிறுவர்கள் கதைகளின் ஸாரங்களை எளிதில் அறிவது கஷ்டம். மேலும், ஆதிபர்வம், உத்தரகாண்டம் முதலிய உற்பத்திகளைச் சொல்லும் பாகங்களில் சிறுவர்கள் படிக்கத்தகாத வர்ணனைகளும் கதைகளும் இருக்கின்றன. ஆகவே இவைகளை விட்டுவிட்டு முக்கியமான விஷயங்களைமாத்திரம் தொகுத்து எழுதவேண்டியது எனக்கு அவசியமாகத் தோன்றியது. இவைகளை வேண்டியபடி தொகுத்து எளிய வசன ரூபமாக எழுதலாமா என்ற யோசனை வந்தபொழுது, அவ்வாறு எழுதத் தொடங்கினால் இவை மிகவிரியும் என்று எண்ணி ஸாதாரண வசன ரூபமாக எழுதுவதிற் பயனில்லை என்று விட்டுவிட்டேன். இவ்வாறு இவைகளை எழுதும்வகை அறியாது இருக்கையில், ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி மானேஜர் வி. குப்புஸ்வாமி அய்யர் அவர்கள், ம-ள-ள-ஸ்ரீ திருநெல்வேலி ஏ. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களால் இயற்றப்பட்ட இராமாயண வினு விடையின் 'புரூப்' காகிதங்களை என்னிடம் கொடுத்து அவை

களைத் திருத்தும்படி சொன்னார். அந்த வினாவிடையில் யுத்தகாண்டம் முடியத்தான் இருந்தது. அப்பொழுது உத்தர காண்டத்தையும் நான் வினா விடை ரூபமாகச் செய்து இராமாயண வினா விடையைப் பூர்த்தி செய்வதாக ஒப்புக்கொண்டு அவ்வாறே செய்தேன். நான் எழுதிய உத்தரகாண்டத்தோடு அந்த இராமாயண வினா விடை வெளி வந்தது.* பாரதம் முதலியவைகளை எழுத ஆவல் கொண்டிருந்து, சுருக்கமாய் எழுதும் வழி தெரியாது மயங்கிக் கொண்டிருந்த எனக்கு உத்தரகாண்டம் எழுதிமுடித்ததும், பாரதம் முதலியவைகளையும் வினா விடை ரூபமாகவே எழுதலாம் என்ற துணிவு பிறந்தது. இதற்குள் பாரதத்தை வினா விடை ரூபமாக எழுதினால் நலமாய் இருக்கும் என்று குப்புஸ்வாமி அய்யர் அவர்கள் தூண்ட இதை எழுதத் தொடங்கினேன்.

வினா விடை ரூபமாய்க் கதைகளை எடுத்துச் சொல்லுவதில், சிறுவர்களுக்கு இரண்டுவிதப் பிரயோஜனங்கள் உண்டு. சிறுவர்களது மனத்தை மாற்றி ஸாரத்தை அறியவொட்டாது தடுக்கும் வர்ணனை முதலிய பாகங்களை வினாவிடையில் விட்டுவிடலாம். ஆகையால் இந்த ரூபமாகச் சொல்லும் கதையின் ஸாரத்தை, சிறுவர்கள் எளிதில் அறிய இடமுண்டு. மேலும், வினா விடை ரூபமாக ஒரு கதையைச் சொல்லுங்கால் சிற்சிலவிடங்களில் கதையைத் தலைகீழாகச் சொல்லும்படியாக நேரிடும். அதில் முக்கிய விஷயங்கள் முன்னாகவும் மற்றைய விஷயங்கள் பின்னாகவும் வரும். இந்த ரூபமாக ஒரு கதையைப் படித்த சிறுவனுக்கு ஒழுங்காக அக்கதையை சொல்லும் திறம் வந்துவிட்டால் அவன் அக்கதையையும், அதன் முக்கிய பாகங்களையும் ஒருநாளும் மறக்கவேமாட்டான். வினா விடை ரூபமாகப்படித்த கதையை ஒழுங்காக மாற்றிச்சொல்வது சிறுவர்களது மனதை ஒழுங்குப்படுத்தும் ஒரு சிறந்த அப்பியாஸமாகும். இந்த ரூபமாகக் கதைகளை எழுதுவதில் இவ்விரண்டு உபயோகங்கள் இருப்பதால்தான் எனக்கு இவ்வாறு பாரதம் முதலிய கதைகளை எழுதுவது நலம் என்ற உறுதி உண்டாயிற்று.

* உத்தரகாண்டத்தைப்போல மற்றைய காண்டங்களும் விஸ்தாரமாக எழுதப்பட்டு இராமாயண வினா விடையின் இரண்டாம் பதிப்பு கூடிய சீக்கிரத்தில் வெளிவரும்.

இந்த உறுதியோடு எழுதி வெளியிட்டிருக்கும் இப்புத்தகத்தில், அநேக சொற்குற்றம் பொருட்குற்றம் இருப்பினும் இருக்கும். அவைகளில் பெரும்பிழையாய்த் தோன்றுபவைகளை எடுத்துத் தெரிவித்து, இரண்டாம் பதிப்பிற்கு ஸகாயமாகும்படி செய்யும் அன்பருக்கு நான் எக்காலத்தும் நன்றியறிதல் உடையவனாய் இருப்பேன். இப்புத்தகம் சிறுவர்களுக்கு ஆனந்தத்தை விளைவிக்குமாயின், யான் எந்த எண்ணத்தோடு இதை எழுதத் தொடங்கினேனோ அந்த எண்ணம் பூர்த்தியானதாக எண்ணி மனத் திருப்தியோடு இருப்பேன்.

கடைசியாக இந்தப் புத்தகத்தை மிகுந்த ஜாக்கிரதையோடு அச்சிட்டு வெளிக்கொண்டுவந்திருக்கும் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மானேஜர் வி. குப்புஸ்வாமி அய்யர் அவர்களுக்கு நான் மிகுந்த நன்றியறிதலுடையவனாய் இருக்கிறேன்.

இரண்டாம் பதிப்பு முகவுரை.

இவ்விரண்டாம் பதிப்பில் சிற்சில சீர்திருத்தங்களும் ஒழுங்குகளும் புதிதாகச் செய்யப்பட்டுள்ளன. பீடிகையில் சிற்சில பாகங்கள் புதிதாக ஸம்ஸ்கிருத பாரதத்திற்கு ஏற்பமாற்றி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பர்வ ஆரம்பத்திலும் அவ்வவ்விடத்தில் வில்லிபுத்தூரார் எழுதியுள்ள காப்புச் செய்யுளை அமைக்கப்பட்டிருக்கிறது. இவைகள் மூலமாக வாசிப்போருக்கு கிருஷ்ண பரமாத்மாவின் திவ்ய சரிதம் வெளியாகி ஆநந்தத்தை விளைவிக்கும் என்ற கருத்தோடு இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. மேலும் முடிவில் எழுதியுள்ள அநுபந்தத்தில் தமிழ் பாரதத்திலுள்ள புதிய கதைகளை சுருக்கமாக எடுத்து எழுதப்பட்டிருக்கிறது.

ஆ. சீ. க.



சேஷசயனம்.

ஸ்ரீ

மஹாபாரத வினு விடை

ஸ்ரீ கிருஷ்ணய பரப்பிரஹ்மணே நம:

நீடாழி யுலகத்து மறைநாலொடைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராஜன் மாபாரதஞ் சொன்னநாள்
ஏடாகவடமேரு வெற்பாகவங் கூரெழுத்தாணிதன்
கோடாகவெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ

பீடிகை.

வினு 1.—முதலில் ஸ்ரீ கிருஷ்ணய பரப்பிரஹ்மணே நம: என்று சொல்வானேன்?

விடை.—கடவுளது பூரண அவதாரமாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானது அருளால் பாரதத்தில் யாவும் ஒழுங்காக நடந்தன ஆதலால், முதலில் ஸ்ரீ கிருஷ்ணய பரப்பிரஹ்மணே நம: என்றோம்.

வினு 2.—பாரதம் என்பது என்ன? அது யாரால் செய்யப்பட்டது?

விடை.—இது சந்திர வம்சத்தில் உண்டான பரதன் என்னும் அரசனது மரபில் தோன்றின பாண்டவர்கள் கௌரவர்கள் என்பவர்களது சரித்திரத்தைச் சொல்லும் இதிஹாஸம். இது வேதவியாஸ மஹா ரிஷியால் செய்யப்பட்டு, தமது கொம்பை எழுத்தாணியாக உபயோகித்து மேருமலையில் விநாயகரால் எழுதப்பட்டது.

வினு 3.—இதற்கு மஹா பாரதமென்று பெயர் வருவானேன்?

விடை.—அநேக அரிய விஷயங்களாகிய தர்மங்களும், ஞானங்களும் இச்சரித்திரத்தில் அடங்கி இருப்பதால் இதற்கு மஹா பாரதம் என்று பெயர் வந்தது. இதுபற்றியே இதற்கு ஐந்தாம் வேதம் என்று ஒரு பெயரும் உண்டு.

வினு 4.—இந்தச் சரித்திரம் யாருக்கு யாரால் சொல்லப்பட்டது?

விடை.—பஞ்சபாண்டவர்களுள் ஒருவனுகிய அர்ச்சுனனது கொள் பேரனுகிய ஜனமேஜய மஹாராஜனுக்கு வேதவியாஸ மஹா ரிஷியின் சிஷ்யர்களுள் ஒருவராகிய வைசம்பாயன மஹா முனிவரால் சொல்லப்பட்டது.

வினு 5.—ஜனமேஜய மஹாராஜனுக்கு வைசம்பாயனர் இந்த பாரத கதையைச் சொல்லக் காரணமென்ன?

விடை.—ஜனமேஜய மஹாராஜன் ஸர்ப்ப யாகத்தை ஒருவாறு பூர்த்திசெய்தான பின்னர், அவரைப்பார்க்க வியாஸ மஹா ரிஷி அவரது ஸபைக்கு வந்தார். அவரைப் பார்த்து தனது மூதாதைகளாகிய பாண்டவ கௌரவரது சரித்திரத்தை விஸ்தாரமாய்க் கேட்க வேண்டுமென்று அரசன் வேண்டிக் கொள்ள அப்பொழுது வியாஸர் தனது சிஷ்யனுன வைசம் பாயனருக்கு பாரதக்கதையைச் சொல்லும்படி உத்திரவு செய்தார்.

வினு 6.—ஸர்ப்பயாக மென்பது என்ன?

விடை.—ஹோமம் செய்து மந்திர பலத்தால் ஸகல ஸர்ப்பங்களையும் ஹோமாக்கினியில் விழுந்து பிராணனை விடும்படி செய்யும் யாகமே ஸர்ப்பயாக மெனப்படும்.

வினு 7.—இந்தக் கொடிய யாகத்தை இவ்வரசன் செய்யக் காரணம் என்ன?

விடை.—தனது தகப்பனுர் ஒரு ரிஷியினது சாபத்தால் தக்ஷகன் என்ற பாம்பு தீண்ட இறந்தார் என்று கேள்விப்பட்டு இவ் வரசன் ஸர்ப்ப குலத்தை எல்லாம் நாசம் செய்யவேண்டு மென்ற எண்ணத்தோடு இந்த யாகத்தைச் செய்ய ஆரம் பித்தான்.

வினு 8.—இந்த யாகம் ஒருவாறு பூர்த்தி யாயிற்று என்று சொன்னேமே, ஏன்?

விடை.—இந்த யாகத்தில் ஸகல பாம்புகளும் வந்து தீயில் விழுந் திறக்க, தக்ஷகன் பயம்கொண்டு இந்திரனது கட்டிற்காலில்

சென்று சுற்றிக்கொண்டான். இவ்வாறு இருக்கையில், அஸ்தீகர் என்றரிஷி ஒருவர் வந்து அரசனைத் தனக்கு ஒரு உபகாரம் செய்யவேண்டுமென்று கேட்டார். அப்படியே செய்வதாக அரசன் ஒப்புக்கொண்டான். அப்பொழுது மந்திரபலத்தால், இந்திரன் இருக்கும்பொழுதே அவனது கட்டில் ஹோம குண்டத்திற்கு நேர் வந்துவிட்டது. அரசனை நோக்கி இந்த யாகத்தை யிப்படியே நிறுத்திவிடவேண்டும் என்று அஸ்தீகர் கேட்டுக்கொள்ள, அரசனுக்கு தன் வார்த்தைக்கு விரோதமாய் நடக்க மனம்வராமல், யாகத்தை நிறுத்திவிட்டான். ஆகையால் தான் இந்த யாகம் ஒருவாறு முடிந்தது என்று சொன்னது.

வினு 9.—இப்படி அஸ்தீகர் கேட்டுக்கொள்ள காரணம் என்ன?

விடை.—இவர் வாஸுகி என்னும் ஸர்ப்ப ராஜனது சகோதரியும், தனது தாயுமாகிய ஜரத்காருவினுடைய குலத்தைக் காப்பாற்றவேண்டுமென்று இந்த யாகத்திற்கு வந்தார்.

வினு 10.—ஸர்ப்ப வம்சத்தில் ரிஷி பிறக்கக் காரணம் என்ன?

விடை.—ஜரத்காரு என்னும் ஒரு ரிஷி பிரம்மசாரியாயும், ஜிதேந்திரியராயும் உலகத்தில் உலாவுங்கால், ஒரு பாழுங்கிணற்றில் ஒரு சிறிய கொடியில் மாட்டிக்கொண்டு தலைகீழாய்த் தனது பிதுருக்கள் தொங்குவதையும், அவர்களைத் தாங்கும் கொடியைக்கூட எலிகள் அறுப்பதையும், அவர்கள் அலறுவதையும் கண்ணுற்றார். பின்பு அவரது வேண்டுகோளின்படி தான் விவாகம்செய்து வம்ச விருத்தி செய்வதாகவும், தனது பெயரையே உடைய ஒரு கன்னிகை கிடைத்தால்மாத்திரம் விவாகஞ்செய்து கொள்ளுவதாகவும் சொல்லிப் போனார். கொஞ்சகாலம் தேடிப்பார்த்து தனக்கு பத்தினி அகப்படாததுகண்டு தனது எண்ணத்தை வாயால் உறக்க வெளியிட்டார். உடனே அதை தனது தூதரால் அறிந்து வாஸுகி தனது சகோதரியான ஜரத்காருவை ரிஷிஜரத்காருவுக்குக் கொடுத்தான். இந்த ரிஷிக்கு ஸர்ப்ப கன்னிகையிடத்து அஸதீகர் உண்டானார்.

வினு 11.—இப்படி முன் சொன்ன காரணங்களுக்காக வைசம்பாயனர் ஜனமேஜய மகாராஜருக்குச் சொன்ன பாரதம் எத்தனை பிரிவுகளை உடையது?

விடை.—பதினெட்டு பிரிவுகளை உடையது. ஒவ்வொரு பிரிவிற்கும் பர்வம் என்று பெயர்.

வினு 12.—அப் பர்வங்களுக்கு முறையே பெயர் என்ன?

விடை.—அவைகளின் பெயர் முறையே ஆதி பர்வம், ஸபா பர்வம், ஆர்ண்ய பர்வம், விராட பர்வம், உத்தியோக பர்வம், பீஷ்ம பர்வம், துரோண பர்வம், கர்ண பர்வம், சல்லிய பர்வம், ஸௌப்திக பர்வம், ஸதிரீ பர்வம், சாந்தி பர்வம், அனுசாஸன பர்வம், அசுவமேத பர்வம், ஆசிரமவாஸ பர்வம், மௌஸல பர்வம், மஹாப் பிரஸ்தான பர்வம், ஸ்வர்க்காரோஹண பர்வம் ஆகிய இவைகளே.

வினு 13.—இவற்றுள் ஆதி பர்வத்திலடங்கிய கதையின் சுருக்கம் என்ன?

விடை.—சந்திர வம்சத்தவரது உற்பத்தியும் பாண்டவர் கௌரவர்கள் பிறந்து, வித்தை பயின்று, விவாகம் செய்துகொண்டு, கௌரவரது கெட்ட குணத்தினுல் இரு திறத்தாரும் வெவ்வேறு இடங்களில் சில காலம் ஸுகமாய் இராஜ்யம் ஆண்டதுமே இப்பர்வத்தி லடங்கிய கதையாம்.

வினு 14.— ஸபா பர்வ கதைச் சுருக்கம் என்ன?

விடை.—தருமபுத்திரரது இராஜதானியில் அமைக்கப்பட்ட ஸபையின் வைபவமும், அவர் செய்த இராஜஸூய யாகவைபவமும், அதைக் கண்ட துரியோதனுதியர் பொருமைகொண்டு பாண்டவரைச் சூதாட அழைத்து அவர்கள் இராஜ்ய வைபவங்கள் யாவையும் தோற்கும்படி செய்ததும், பாண்டவர் காட்டிற்குச் சென்று பன்னிரண்டுவருஷம் வனவாஸம் செய்து ஒரு வருஷம் அஜ்ஞாத (எவராலும்கண்டு பிடிக்க முடியாதபடி மாறுவேஷம் பூண்டு பட்டணங்களில்) வாஸம்செய்தால் பின்பு இராஜ்யம்கொடுப்பதாக துரியோதனன் சொன்னதும் இப் பர்வத்தின் கதை.

வி௵ 15.—ஆரண்ய பர்வத்தின் கதை என்ன?

விடை.—பாண்டவர்கள் பிராம்மண சிரேஷ்டர்களோடு வனவாஸம் செய்ததும், அப்பொழுது மார்க்கண்டேயர் முதலிய மகான்களிடத்திலிருந்து ஸத்விஷயங்களை யறிந்ததும், அர்ச்சுனன் பரமசிவனைத் தரிசித்து பாசு பதம் பெற்று ஸ்வர்க்கத்தில் இந்திரனோடு சில காலம் வாஸம் செய்ததும், பாண்டவர்களுக்கு மலைபோல் வந்த ஆபத்துக்கள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கியதுமே இப்பர்வத்தி லடங்கிய கதையாம்.

வி௵ 16.—விராட பர்வத்தி லடங்கிய கதை என்ன?

விடை.—பன்னிரண்டு வருஷம் வனவாஸம் செய்த பின்பு ஒரு வருஷம் பாண்டவர்கள் விராடராஜன் பட்டணத்தில் அஜ்ஞாத வாஸம் செய்ததும், அவ்வரசனது மைத்துனனாகிய கீசகனைக் கொன்றதும், அவரைக் கண்டுபிடிக்க வந்த துரியோதனாதியரை தோல்வி யடையும்படி செய்ததுமே இப்பர்வத்தி லடங்கிய கதையாம்.

வி௵ 17.—உத்தியோக பர்வத்தின் கதை என்ன?

விடை.—ஸபா பர்வத்தில் சொன்னபடி வனவாஸமும், அஜ்ஞாத வாஸமும் செய்தபின்னர் துரியோதனாதியரிட மிருந்து தாம் அடையவேண்டிய இராஜ்ய பாகத்தை பாண்டவர்கள் தூதர்கள் மூலமாய் அடைய முயன்றதும், கிருஷ்ணபகவான் பாண்டவர்களுக்காகக் கடைசியாய் தூது சென்றதும், அப்பொழுது துரியோதனன் இராஜ்யம் கொடுக்கிறதில்லையென்று பிடிவாதமாய்ச் சொன்னதைக்கேட்டு யுத்தத்திற்கு வேண்டிய உபாயங்கள் செய்ததுமே இப்பர்வத்தி லடங்கிய கதையாம்.

வி௵ 18.—பீஷ்ம பர்வத்தி லடங்கிய கதை என்ன?

விடை.—தனது உறவினரை அநியாயமாய்க் கொல்லவேண்டுமே என்று பரிதபித்த அர்ச்சுனனை பகவத்கீதை சொல்லி யுத்தம் செய்யும்படி ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஏவிய பிரபாவமும், பீஷ்மர் கௌரவர் பக்கத்தில் ஸேனாதிபதிப் பட்டம்பெற்று அது விசித்திரமாய் பத்து நாள் யுத்தம் செய்த வலிமையும், இப்பர்வத்தி லடங்கிய கதையாம்.

வினு 19.—துரோண பர்வக் கதை என்ன?

விடை.—பத்தாம் நாள் மாலை பீஷ்மர் அடிபட்டு யுத்தகளத்தில் யுத்தம் செய்யத் திறமின்றி விழுந்தவுடன் துரோணரை சேனாதிபதி யாக்கியதும், அவர் மேல் ஐந்துநாள் விசித்திர யுத்தம் செய்ததும், இரு பக்கத்திலும் சிறந்தவீரர்கள் இறந்ததும், 14-ம் நாள் இரவில் யுத்தம் நடந்ததும், கடைசியாய் 15-ம் நாள் தருமபுத்திரர் ஒரு பொய்சொன்ன காரணத்தால் துரோணர் இறந்ததுமே இப்பர்வத்தி லடங்கிய கதையாம்.

வினு 20.—கர்ண பர்வத்தி லடங்கிய கதை என்ன?

விடை.—மேல் இரண்டு நாள் கர்ணன் சேனாதிபதிப் பட்டம் பெற்று சண்டை செய்ததும், அப்பொழுது தைரியம் குறையும்படி அவனுக்கு ஸாரத்தியம் செய்த சல்லியன் அவனோடு ஸம்பாஷித்ததும், 17-ம் நாள் மாலை எல்லா அஸ்திரங்களையும் மறந்து, தத்தளித்துக்கொண்டு புதைந்திருக்கும் தன் தேரைத் தூக்கமுயலும் தருணத்தில் அர்ச்சுனனது பாணத்தால் கர்ணன் இறந்ததுமே, இப் பர்வத்தின் கதை.

வினு 21.—சல்லிய பர்வத்தின் கதை என்ன?

விடை.—18-ம் நாள் காலை முதல் உச்சி காலம் வரை சல்லியன் சேனாதிபதியாகிச் சண்டை செய்ததும், அவன் இறந்ததும், பின்பு, ஓர் குளத்தில் சென்று ஒளித்துக்கொண்டு தன் பலத்தை விருத்திபண்ண முயன்றுக்கொண்டிருந்த துரியோதனனுக்கும், பீமஸேனனுக்கும் அக்குளக்கரையிலே கதா யுத்த முண்டாய்க் கடைசியாய் துரியோதனன் தன்தொடையில் அடிபட்டு யுத்தகளத்தில் விழுந்ததுமே இப்பர்வத்தின் கதையாம்.

வினு 22.—ஸௌப்திக பர்வத்தி லடங்கிய கதை என்ன?

விடை.—பதினெட்டாம் நாள் இரவில், பாண்டவர்கள் படைவீட்டில் புகுந்து அங்கு தூங்கிக்கொண்டிருந்த இளம் பஞ்சபாண்டவரையும், இதர பாண்ட வீரரையும் அசுவத்தாமன் கொடுங் கொலை புரிந்ததும், பின்பு பகவான் ஏற்பாட்டால் அன்று வேறிடத்தில் தங்கியிருந்த பாண்டவரிடம் மிகுந்த

அவமானத்தை அடைந்து அவன் ஓடிப்போனதும் மேலே அவன் அபாண்ட வாஸ்திரப் பிரயோகம் செய்ததுமே இப் பர்வத்திலடங்கிய கதையாம்.

வினா 23.—ஸ்திரீ பர்வத்தி லடங்கிய கதை என்ன?

விடை.—பதினெட்டுநாள் யுத்தத்தில் மாண்ட வீரரது ஸ்திரீகள் யாவரும் யுத்தகளம் வந்து பிரலாபித்ததும், பாண்டவர் முதலியவர்கள் தமது உறவினர்களுக்குத் தர்ப்பணம் செய்ததும், அப்பொழுது குந்தியால் கர்ணன் தமக்கு தமயன் என்று தருமபுத்திரர் அறிந்து துக்கித்ததுமே இப்பர்வத்தின் கதையாம்.

வினா 24.—சாந்தி பர்வத்தின் கதை என்ன?

விடை.—தமது உறவினரை அநியாயமாய்க் கொன்றுவிட்டோமே என்ற துக்கத்தாலும், தமது தமயனாகிய கர்ணனைக் கொல்லும்படி வந்ததே என்ற துக்கத்தாலும், இராஜ்யமாள மனம் வராத தருமபுத்திரருக்கு நாரதர் கர்ணன் சரத்திரங் கூறிப் பின்பு அர்ச்சுனன் பகவான் முதலியோர் தெளிவுண்டாகும்படி செய்து அவருக்குப் பட்டாபிஷேகம் செய்ததும், இதற்கு மேலும் தருமபுத்திரர் மனம் தெளியாதது கண்டு சாந்தமும், திடமும் வந்து அவர் ஸுகமாய் இருக்கும்படி, யுத்தகளத்தில் பத்தாம் நாள் அடிபட்டு விழுந்து மரணமடைய உத்தராயணத்தை எதிர்பார்த்திருந்த பீஷ்மரால், பகவானது வேண்டுகோளின்படி தருமங்கள் உபதேசிக்கப் பட்டதுமே இப் பர்வத்தி லடங்கிய கதையாம்.

வினா 25.—அநுசாஸன பர்வத்தின் கதை என்ன?

விடை.—சாந்தி பர்வம் சொல்லியும், தருமபுத்திரர் ஸமாதானமாகாததைக் கண்டு மறுபடியும் விசேஷ தருமங்களைச் சொன்னதே இப் பர்வத்தின் கதை.

வினா 26.—அசுவமேத பர்வத்தின் கதை என்ன?

விடை.—தருமபுத்திரர் அசுவமேத யாகம் செய்ததும், பின்பு பகவான் கீதையில் சொல்லிய விஷயங்களை அர்ச்சுனன் மறந்து

போய்விட்டபடியால் அவனுக்கு அவர் கீதையின் ஸாரத்தை அநுகீதா ரூபமாகச் சொன்னதுமே இப் பர்வத்தின் கதையாம்.

வினு 27.—ஆச்ரமவாஸ பர்வத்தினது கதை என்ன?

விடை.—திருதராஷ்டிரர், காந்தாரி முதலியவர்கள் விதுரரது உபதேசத்தால் வைராக்கியமடைந்து குருக்ஷேத்திரத்தருகில் சென்று பர்ண சாலையில் தியானுதிகள் செய்துகொண்டு கடைசியில் ஸ்வர்க்க மடைந்ததே இப் பர்வத்தின் கதையாம்.

வினு 28.—மௌஸல பர்வத்தின் கதை என்ன?

விடை.—ஒரு ரிஷியின்சாபத்தால் யாதவர்கள் எல்லோரும் ஸமுத்திரக்கரையில் முளைத்திருந்த கோரைப்புற்களை பிடுங்கி அடித்துக் கொண்டு இறந்ததும், ஸ்ரீ கிருஷ்ணபகவான் வைகுண்டத்திற் கேகியதுமே இப்பர்வத்தின் கதைகளாம்.

வினு 29.—மஹாப்பிரஸ்தான பர்வத்தி லடங்கிய கதை என்ன

விடை.—ஸ்ரீ கிருஷ்ணபகவான் வைகுண்டம் அடைந்ததையும், அர்ச்சுனன் வலிகுறைந்ததையும், கலியுகம் ஆரம்பித்ததையும் அறிந்த யுதிஷ்டிரர் தமது தம்பிமார் திரௌபதி இவர்களோடு வடமேருவைநோக்கி மௌனமாகப் போக ஆரம்பித்ததும், வழியில் ஒவ்வொருவராய் தருமபுத்திரரும், ஒரு நாயும் தவிர மற்றையாவரும் இறந்து விழுந்ததுமே இப் பர்வத்தின் கதையாம்.

வினு 30.—ஸ்வர்க்காரோஹண பர்வத்தின் கதை என்ன?

விடை.—தருமபுத்திரர் தமது தேகத்தொடு ஸ்வர்க்கத்திற்குப் போகும் வழியில் அவர் சொன்ன ஒரு பொய்க்காக நரகத்தைப் பார்க்கும்படி நேரிட்டதும், பின்பு ஸ்வர்க்கம் சென்று தமக்கு வேண்டியவர்களோடு ஸுகமாய் இருந்ததுமே இப்பர்வத்தி லடங்கிய கதைகளாம்.



பீஷ்மர் சபதம்.

25-ம் பக்கம் பார்க்க.]

ஆதிபர்வம்.

முருகார் மலர்த்தாம முடியோனையடியார் முயற்சித்திறந்
திருகாமல்விளைவிக்கு மதயானைவதனச் செழுங்குன்றினைப்
புருகூதன்முதலாய முப்பத்துமுக்கோடி புத்தேளிரு
மொருகோடிபூதே வருங்கை தொழுங்கோவை யுறவுன்னுவாம்.

வினா 1.—சந்திர வம்சத்தில் பரதன் என்ற ஓர் அரசனிருந்த தாகச் சொன்னோமே அவன் யாருடைய பிள்ளை?

விடை.—அதே வம்சத்தில் உதித்த துஷ்யந்தன் என்ற அரசனுக்கும் கண்வரது தபோவனத்தில் வளர்ந்துகொண்டு வந்த சகுந்தலைக்கும் பிறந்த பிள்ளை.

வினா 2.—ரிஷியினுடைய பெண்ணை க்ஷத்திரியனுக்கு எப்படி விவாஹம் செய்துகொடுத்தார்.

விடை.—சகுந்தலை உண்மையில் ரிஷிப் பெண் அல்ல, அவள் விசுவாமித்திரர் இராஜாவாயிருந்து பிரும்மரிஷிப்பட்டம்பெற தபஸ் செய்யுங்கால் அவரது தபஸைக்குலைக்க வந்த மேனகை என்னும் அப்ஸர ஸ்திரீக்கும் விசுவாமித்திர ராஜாவுக்கும் பிறந்தவள்.

வினா 3.—இவள் கண்வர் ஆசிரமத்தில் வளரக் காரணம் என்ன?

விடை.—இவள் பிறந்ததும், மேனகை இக்குழந்தையை விசுவாமித்திரரிடம் கொடுக்க அதைப் பார்த்தவுடன் விசுவாமித்திரருக்குத் தம் தபசு கெட்டுப்போனது ஞாபகம் வந்தது. உடனே அதிக கோபத்தோடும் வெட்கத்தோடும் அவர் குழந்தையைக் கவனியாமல் போக, மேனகையும் தான் வந்த வழியேபோயினள். ஆதலால் குழந்தை தனிமையாய்க் காட்டில்விடப்பட்டது. கண்வமஹாரிஷி, காட்டில் சகுந்தமென்னும் பறவைகளால் போஷிக்கப்பட்டு வளரும் இக்குழந்தையைக் கண்டு, அதற்கு சகுந்தலை என்று பெயரிட்டுத் தமது ஆசிரமத்தில் கொண்டுவந்து வளர்த்துவந்தார்.

வினா 4.— துஷ்யந்தனுக்கும், இவளுக்கும் எப்படி விவாஹம் நடந்தது?

விடை.—துஷ்யந்தன் ஒருநாள் வேட்டைக்குப் போனபோது, தனது பரிவாரங்களை ஓரிடத்தில் விட்டுவிட்டு தனியே ரிஷி ஆசிரமங்களில் சென்று அங்குள்ள ரிஷிகளை தரிசிக்கப் போனுன். சகுந்தலை தனிமையாய்க் கண்வர் ஆசிரமத்திலிருப்பதைக் கண்டான். அவளிடமிருந்தே அவள் பிறப்பு முதலியவைகளைத் தெரிந்துகொண்டு, அவளை காந்தருவ விவாஹமாக அங்கேயே விவாஹம் செய்துகொண்டு, இரண்டொரு நாள் அங்கேயே அவளோடு இருந்துவிட்டு, தன் சேனைகளை அனுப்பி அவளை சீக்கிரத்தில் இராஜ்யத்திற்கு அழைத்துக் கொள்வதாகச் சொல்லிப்போனுன்.

வினு 5.—கண்வர் இதை அறிந்தவுடன் என்ன சொன்னுர்?

விடை.—'என்னைக் கேட்காமல் நீ செய்தபோதிலும் நீ செய்தது நல்ல காரியம்தான்' என்று சந்தோஷமாய்ச் சகுந்தலை செய்த காரியத்தை ஒப்புக்கொண்டார்.

வினு 6.—அரசன் பிறகு சகுந்தலையை இராஜ்யத்திற்கு அழைத்துக் கொண்டானு?

விடை.—இராஜ்யத்திற்குப் போனதும் தனக்கும் சகுந்தலைக்கும் நடந்த விஷயங்களை எல்லாம் அவன் மறந்துவிட்டான். ஆகையால் அவன் ஸுமார் ஏழுவருஷமட்டும் ஒருவரையும் சகுந்தலையிடம் அனுப்பவில்லை.

வினு 7.—இது வரையில் சகுந்தலை பொறுத்துக்கொண்டு எவ்வாறிருந்தாள்?

விடை.—முன்பு அரசன் விட்டுப் போகும்போது அவள் கர்ப்பமாயிருந்தமையால், கொஞ்சகாலத்திற்கெல்லாம் மஹா பலம், தேஜஸ் முதலியவைகள் அமைந்த ஒரு புத்திரனை யடைந்தாள். அவனுக்கு ஆறு வயதாகும் வரையில் அவனது விளையாட்டுக்களையும், அவனது பல விசேஷங்களையும் பார்த்துக்கொண்டே, அரசன் ஆளனுப்புவதை அவ்வளவு ஆவலோடு எதிர் பார்க்காது, சீக்கிரத்தில் வந்து நம்மை இராஜ சேவகர்கள் அரசனிடம் கொண்டுபோவார்கள் என்று இருந்தாள்.

வினு 8.—இக் குழந்தை என்ன என்ன விளையாட்டுகள் விளையாடியது?

விடை.—காட்டிலுள்ள மிருகங்களை பயமின்றித் துரத்துவதும், தைரியமாய் புலி, சிங்கம் முதலிய துஷ்ட ஜந்துக்களின் குட்டிகளை எடுத்துக்கொண்டு தாய் மிருகங்களை அதட்டி அடிப்பதுமே இக் குழந்தையினது விளையாட்டாம். ஆகையால் இக் குழந்தைக்கு ஸர்வதமனன் என்று பெயரிட்டார்கள்.

வினு 9.—அப்படியானால் சகுந்தலை அரசனைப் பார்க்காமலே தனது காலத்தை கழித்தாளா?

விடை.—இல்லை. இந்த ஸர்வதமனனுக்கு ஆறு வயது ஆனதும், கண்வர் தமது சிஷ்யர்களைக் கூப்பிட்டு இவளைக் கொண்டுபோய் அரசனிடம் விட்டுவிட்டு வாருங்கள் என்று கட்டளையிட்டார்.

வினு 10.—அரசன் இவளை அங்கீகரித்துக்கொண்டானு?

விடை.—அரசனுக்கு இவள் விஷயமே மறந்து போய்விட்டமையாலும், அநேக காலமாய்விட்டபடியாலும், குழந்தையைப் பார்த்துங்கூட அவனுக்கு ஞாபகம் வராததால், நீ என் பெண்சாதி யல்லவென்று மறுத்துவிட்டான்.

வினு 11.—அப்பொழுது சகுந்தலை என்ன செய்தாள்?

விடை.—அரசன் மறுத்ததையும், ரிஷியின் சிஷ்யர்கள் தன்னைத் தனிமையாய் விட்டுப் போனதையும் கண்ட சகுந்தலை, தன்னால் கூடியமட்டும் அரசனை ஞாபகப்படுத்த, தனது பிறப்பு, தனக்கும் அரசனுக்கும் நடந்த விஷயங்கள் முதலியவைகளைச் சொல்லிப் பார்த்தும், அரசன் ஒப்புக்கொள்ளாதது கண்டு, மிகுந்த துக்கத்தோடு திரும்பிக் காட்டுக்குப் போக யத்தனித்தாள்.

வினு 12.—அப்பொழுது என்ன விசேஷம் நடந்தது?

விடை.—உடனே ஓர் அசரீரிவாக்குண்டாயிற்று. அது சகுந்தலை துஷ்யந்தனது மனைவி என்றும், ஸர்வதமனனே அவன் பிள்ளையென்றும், யாவரும் கேட்கும்படி சொல்ல, அரசன் சகுந்தலையையும், குமாரனையும் அங்கீகரித்துக்கொண்டான்.

வினு 13.—இந்த ஸர்வதமனன் யார்?

விடை.—இவனே பின்பு பரதன் என்று பெயர் பெற்றுன். இவன் வெகு நீதியாய் இராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். இவனது வம்சமே பரத வம்சம் என்று சொல்லப்படும்.

வினு 14.—இவனுல்தான் நமது தேசத்திற்கு பாரதவருஷமென்று பெயர் வந்ததோ?

விடை.—இல்லே. ஜடபரதர் என்பவர் ஒருவர் இராஜ்யமாளுங்கால் மிகச் சிறந்த அரசராய் இருந்தமையால் அவர் ஆண்ட நமது தேசத்திற்குப் பாரதவருஷம் என்று பெயர் வந்தது. இவரது சரித்திரத்தை ஸ்ரீமத் பாகவதத்தில் பஞ்சம ஸ்கந்தத்தில் காணலாம்.

வினு 15.—இப் பரதனுக்கு முன் பிறந்த சில முக்கிய அரசர்கள் பெயர் என்ன?

விடை.—நகுஷன், அவன் பிள்ளை யயாதி முதலியவர்கள், யயாதி பிள்ளை பூரு, யது முதலியவர்கள். அவர்களில் பூரு வம்சத்தில் சில தலைமுறைக்குப் பின் துஷயந்தன் தோன்றினுன்.

வினு 16.—இவர்களுள் நகுஷனைப் பற்றிய விசேஷம் என்ன?

விடை.—இவன் இந்திரப் பட்டம் பெற்றதும், அகஸ்தியர் சாபத்தால் மலைப் பாம்பானதும், பீமசேனனைப் பிடித்துக் கொண்டதும், தருமபுத்திரரால் ஸந்தேகம் தெளிந்து சாபத்திலிருந்து விடுபட்டதும், ஆரண்ய பர்வத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப் போகிறும்.

வினு 17.—யயாதிக்கு பூரு, யது என்ற பிள்ளைகள் யாரிடத்தில் பிறந்தார்கள்?

விடை.—யயாதிக்கு சுக்கிராசாரியர் பெண்ணுகிய தெய்வயானை இடமாக யது முதலிய நான்கு பிள்ளைகளும், விருஷபர்வன் என்ற இராக்ஷஸ ராஜன் பெண்ணுகிய சர்மிஷ்டை இடமாக பூரு முதலிய பிள்ளைகளும் உண்டானுர்கள்.

வினு 18.—சுக்கிராசாரியர் தேவலோகத்தில் உள்ள பிராம்மண உத்தமர் அல்லவா? அவரது பெண்ணை யயாதி அடைய வேண்டிய காரணம் என்ன?

விடை.—தேவகுருவாகிய பிரஹஸ்பதியின் பிள்ளை கசன் என்பவன் சாபத்தால் இப்படி நேர்ந்தது.

விஞ 19.—கசன் சாபங்கொடுத்த காரணம் என்ன?

விடை.—கசனை தெய்வயானை "என்னைக் கல்யாணம் செய்துகொள்" என்று கேட்க, அதற்கு அவன் "நீ என் குருவினது பெண், எனக்கு நீ ஸஹோதரியாக வேண்டும் ஆதலால் நான் உன்னை விவாஹம் செய்துகொள்ளக்கூடாது" என்றான். அதற்கு அவள் "உனக்கு என் தகப்பனார் சொல்லிய மந்திரம் பலிக்காமல் போகட்டும்" என்று சபிக்க, கசன் "நீ தேவ பிராம்மண குலமாயிருந்தும் பூலோகத்தரசனையே விவாஹம் செய்துகொள்ளக் கடவாய்" என்று மறு சாபங் கொடுத்தான்.

விஞ 20.—கசன் சுக்கிராசாரியராகிய அஸுர குருவினிடத்தில் என்ன கற்றுக்கொள்ள வந்தான்?

விடை.—முன்காலத்தில் அஸுரர்களுக்கும் தேவர்களுக்கும் யுத்தமுண்டாயிற்று. அப்பொழுது சுக்கிராசாரியர் தனக்குத் தெரிந்த ஸஞ்ஜீவினி மந்திரத்தால், மாண்டுபோன அஸுர சேனைகளை பிழைப்பித்து வந்தார். இந்த ரஹஸ்யத்தை அறிந்த தேவர்கள் தாமும் லாபமடைய எண்ணி, பிரஹஸ்பதியின் புத்திரனாகிய கசனை சுக்கிராசாரியர் வீட்டிற்கு அனுப்புவித்து அந்த மந்திரத்தை கற்றுவரும்படி செய்தார்கள். ஆதலால் கசன் சுக்கிராசாரியர் வீடு சென்றான்.

விஞ 21.—இவன் தேவர் பக்கத்திலிருந்தும் இவனைக் கஷ்டப் படுத்தாது அஸுரர்கள் சும்மா விருந்தார்களா?

விடை.—அஸுரர்கள் இவனை அநேகம் தடவை கொன்று சாம்பலாக்கியும், தெய்வயானைக்கு இவன்பேரிலிருந்த பிரீதியினாலே, சுக்கிராசாரியரால் ஸஞ்ஜீவினி மந்திர மூலமாய், அநேகம் தரம் பிழைப்பு மூட்டப்பட்டான்.

விஞ 22—கடைசியாய் சுக்கிராசாரியரிடம் இருந்து மந்திரத்தைக் கசன் கற்றுக்கொண்டானா? எப்படி?

விடை.—இப்படிக் கசன் அடிக்கடி பிழைப்பு மூட்டியதைப் பார்த்த அஸுரர்கள் கசனைக் கொன்று சாம்பலாக்கி மதுவோடு கலந்து

சுக்கிராசாரியருக்குக் கொடுத்துவிட்டார்கள். அதை அறியாமல் சுக்கிராசாரியரும் குடித்துவிட்டார். பின்பு தெய்வயானை கசனைக் காணேமே என்று பரிதபிக்குங்கால், கசன் தனது வயிற்றிலிருப்பதை அஸுர குரு கண்டார். இப்பொழுது ஸஞ்ஜீவி மந்திரத்தைச் சொன்னால் கசன் பிழைத்து தன் வயிற்றைக் கீறிக்கொண்டு வருவான் என்றும், அதனால் தாம் இறப்போம் என்றும் தெரிந்துகொண்டார். ஆதலால் அவர் கசனுக்கு மந்திரத்தை உபதேசித்து அவன் வெளியில் வந்ததும் தம்மைப் பிழைக்கும்படி செய்வதே நல்வழி எனத் தீர்மானித்தார். அப்படியே கசன் வெளியில் வந்து தன் குருவைப் பிழைப்பு மூட்டினுன். இவ்வாறு அஸுரரது கெட்ட எண்ணமே கசன் காரியத்தைப் பூர்த்திசெய்வித்தது.

வினு 23.—இப்படி அடாத காரியத்தையும் செய்ய உத்தேசித்து தனக்கு அநியாயமாய்ச் சாபமுங் கொடுத்த தெய்வயானைக்கு மறுசாபங் கொடுத்தபின்பு கசன் என்ன செய்தான்?

விடை.—தெய்வ லோகம் சென்று தன் பிதாவாகிய பிரஹஸ்பதிக்கு மந்திரத்தை உபதேசம் செய்து அவர் மூலமாய் தேவர்களுக்கு ஸுகத்தை உண்டாக்கினுன்.

வினு 24—கசன் சாபம் எப்படி தெய்வயானை விஷயத்தில் பலித்தது?

விடை.—ஒருநாள் தெய்வயானையும் விருஷபர்வன் என்ற அஸுர ராஜன் குமாரியாகிய சர்மிஷ்டையும் சேர்ந்து ஒரு திவ்விய தடாகத்தில் ஸ்நாநம் செய்யப்போனுர்கள். அப்பொழுது காற்றடிக்க இருவருடைய வஸ்திரங்களும் ஒன்றோடொன்று சேர்ந்துவிட்டன. அப்பொழுது சர்மிஷ்டை ஸ்நாநம்செய்தெழுந்து, தெரியாமல் தெய்வ யானையினது வஸ்திரத்தை எடுத்துக் கட்டிக்கொண்டாள். உடனே இருவருக்கும் தர்க்கமுண்டாய்க் கடைசியில் அது சண்டையாய் முடிய, சர்மிஷ்டை தனது தாதியர் மூலமாய் தெய்வயானையை ஒரு பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டுப் போய்விட்டாள். மறுநாள் அங்கு வேட்டையாட வந்த யயாதி என்ற இராஜன் அக்கிணற்றிலிருந்து இந்தத் தெய்வயானையை கையைப்பிடித்துக் கரை

ஏற்றினான். உடனே தெய்வயானையும் அவ்வரசனையே மணம் புரிவதாகத் தீர்மானித்தாள்.

வினா 25.—சுக்கிராசாரியர் தெய்வயானையால் நடந்த விஷயங்களைத் தெரிந்துகொண்டவுடன் என்ன செய்தார்?

விடை.—உடனே அதிகோபத்தோடு விருஷபர்வன் இடஞ்சென்று அவன் பெண் செய்த அகிருத்தியத்தைச்சொல்லி தாம் ஊரைவிட்டுப் போவதாகச் சொல்லவே, அரசன் வேண்டிக் கொள்ளப் பிறகு தம் பெண் எண்ணப்படி சர்மிஷ்டையை அவள் ஊழியக்காரியாகச் செய்தால் தாம் ஊரைவிட்டுப் போவதில்லை என்றார். அதைக்கேட்ட அஸுரராஜன் அப்படியே செய்துவிட்டான்.

வினா 26.—சுக்கிராசாரியர் யயாதியாகிய மாப்பிள்ளைக்கு என்ன சொல்லி அனுப்பினார்?

விடை.—'என் பெண்ணே உன்பட்டமகிஷியாய் இருக்கவேண்டும். இந்த சர்மிஷ்டையை நீ ஸ்திரீயாக வைத்துக்கொள்ளவே கூடாது. அவளை ஊருக்கு வெளியில் வைத்திருக்கவேண்டும். அவளை நீ பெண்சாதியாக்கிக் கொண்டாயென்று தெரிந்தால் உன்னை சபித்துவிடுவேன்' என்றார்.

வினா 27.—யயாதி மஹாராஜன் எப்படி நடந்துகொண்டான்?

விடை.—ஊருக்குச்சென்று சில வருஷங்கள் தெய்வயானையோடேயே ஸுகமாய் இருந்தான். அப்பொழுது தெய்வயானையிடத்தில் யது முதலிய இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள்.

வினா 28.—யயாதிக்குப் பூரு என்ற பிள்ளை பிறந்ததாகச் சொல்லியிருக்கிறோமே அதெப்படி?

விடை.—ஒருநாள் யயாதி தனிமையாய்த் தனது உத்தியான வனத்திலிருக்கும்பொழுது சர்மிஷ்டை வந்து அரசனை பலவந்தம் செய்ய அதற் கிணங்கியதால் அவளிடம் பூரு முதலிய மூன்று பிள்ளைகள் உண்டானார்கள். பூரு என்பவன் எல்லாப் பிள்ளைகளிலும் சிறியவன்.

வினா 29.—இது சுக்கிராசாரியருக்குத் தெரியவந்ததா? எப்படி?

விடை.—ஒருநாள் பூரு முதலிய பிள்ளைகள் தெருவில் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்ட தெய்வயானைக்கு அரசனது சாயை அந்த பிள்ளைகளிடத்தி லிருந்ததாகத் தோன்றியது. உடனே அச்சிறுவர்களை யழைத்து ' உங்கள் தகப்பன் யார் ' என்றுகேட்க, அறியாத சிறுவர்கள் அருகிலிருந்த யயாதியைக் காண்பித்துவிட்டார்கள். உடனே தெய்வயானை அதிகக் கோபத்தோடு சுக்கிராசாரியரிடம் இந்த சமாசாரத்தைத் தெரிவித்தாள்.

வினு 30.—சுக்கிராசாரியர் இதைக்கேட்டதும் என்ன செய்தார் ?

விடை.—உடனே அரசனிடம் வந்து அவனுக்கு அன்றுமுதல் கிழத்தனம் வரவேண்டுமென்று சபித்தார். உடனே யௌவன வயதிலிருக்கும் யயாதிக்கு ஒரு ஸுகத்தையும் அநுபவிக்க முடியாமலிருக்கும்படி கிழத்தனம் வந்துவிட்டது.

வினு 31.—யயாதி எவ்வளவு காலம் இந்தச் சாபத்தால் கஷ்டப் பட்டான் ?

விடை.—இதிலிருந்து அதிக கஷ்டத்தை அடையவில்லை. சுக்கிராசாரியருக்குத் தயவு வரும்படி நடந்துகொண்டதனால் இதிலிருந்து தப்புவிக்கக் கொஞ்சம் இடம்கொடுத்தார். அதாவது ' கிழத்தனம் வந்தபோதிலும், நீ அதை ஒருவனுக்குக் கொடுத்து அவனது யௌவனத்தை வாங்கிக்கொள்ளும் சக்தி உனக்கு வரட்டும் ' என்று அஸுரகுரு அநுக்கிரஹித்தார். ஆதலால் சிற்றின்பத்தின் ஆசைமாறாத அரசன் தனது கிழத்தனத்தைக் கொடுத்து யௌவனத்தை வாங்கிக்கொண்டு அநேக காலம் சுகங்களை அநுபவித்தான்.

வினு 32.—யயாதியின் கிழத்தனத்தை யார் ஏற்றுக்கொண்டு தனது யௌவனத்தை அவனுக்குக் கொடுத்தார்கள் ?

விடை.—யயாதியானவன் தனது புத்திரர்கள் ஒவ்வொருவரையும் தனது கிழத்தனத்தை ஏற்றுக்கொண்டு அவர்களது யௌவனத்தைத் தரும்படியாகவும், அப்படிக்கொடுத்தால் அதைத் திரும்பவும் கொஞ்ச காலத்திற்கெல்லாம் கொடுத்துவிடுவதாகவும் கேட்டுப் பார்த்தான். ஒருவரும் அதற்கு ஸம்ம

திக்கவில்லை. கடைசியாகப் பூரு அதற்கு ஒப்புக்கொண்டு தகப்பனார் இஷ்டப்படி செய்தான்.

வினு 33.—யயாதி அப்பொழுது என்ன செய்தான்?

விடை.—யதுவிற்கு உன் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் அரசராவதற்கு யோக்கியமில்லாதவர்களாகட்டுமென்று சாபங் கொடுத்து, இதுபோன்ற சில சாபங்களை மற்றைய பிள்ளைக்கும் கொடுத்தான். பூருவுக்கு ஜனங்களுடைய இஷ்டத்தை அநுஸரித்து இளவரசு பட்டாபிஷேகம் செய்தான்.

வினு 34.—யயாதி யௌவனத்தோடு எவ்வளவு காலம் ஸுகானுபவம் செய்தான்?

விடை.—வெகுகாலம் ஸுகானுபவம் செய்தான். அதன் பின்பு கூட அவனுக்கு திருப்திவரவில்லை. பின்பு தன் புத்திரனாகிய பூரு என்பவன் கிழத்தனத்தை வாங்கிக்கொண்டு கவலையற்றிருப்பதைக் கண்டுவியந்து; யயாதி யோசனைசெய்து அதன் பேரில் தன் கிழத்தனத்தை வாங்கிக்கொண்டு பூருவினிடத்தில் தனது யௌவனத்தைக் கொடுத்தான்.

வினு 35.—யயாதி அப்பொழுது என்ன யோஜனை செய்தான்?

விடை.—ஆசைக்கோர் அளவில்லை. தேகத்திற்கு கிழத்தனம் வர வர ஆசைக்கு யௌவனம் வருகிறது. அநுபவித்து ஆசை தீருகிற தென்பதே கிடையாது. நெய்விட விட, எப்படி நெருப்பு விருத்தியாகிறதோ, அதுபோல அநுபவம் ஆக ஆக, ஆசையும் விருத்தியாகும். ஆதலால் புத்திமான்கள் அதைக் கூடிய சீக்கிரத்தில் நிவர்த்திக்கப் பார்ப்பார்கள் என்று யோசித்தான்.

வினு 36.—பின்பு யயாதி என்ன செய்தான்?

விடை.—கிழத்தனத்தை ஏற்றுக்கொண்டு, தனது புத்திரனை பூரு செய்த ஸத்கிருத்தியத்தை ஜனங்கள் யாவருக்கும் தெரிவித்து, அவர்களது இஷ்டத்தையும் ஸம்பாதித்துக்கொண்டு பூருவுக்குப் பட்டாபிஷேகம் செய்துவிட்டு வனம் சென்று தவம் செய்து கடைசியாக ஸ்வர்க்கத்தை அடைந்தான்.

வினு 37.—இவன் ஸ்வர்க்கத்தை அடைந்த பின்பு அங்கு நடந்த விசேஷம் என்ன?

விடை.—ஸ்வர்க்கத்தில் கொஞ்சகாலம் வாஸம் செய்தபிறகு இந்திரன், யயாதியைப் பார்த்து 'நீர் யாரைப்போல் தபோபலமுடையவர்' என்று கேட்க, அதற்கு யயாதி 'ஒரு ரிஷியும் எனக்கு நிகரல்ல' என்று பெருமை பாராட்டினுன். உடனே இந்திரன் 'நீ செய்த ஸத்காரியங்களெல்லாம் இந்த மறுமொழியோடு க்ஷீணித்துவிட்டன. ஆகையால் உன்னை எனது சேவகர்கள் பூலோகத்தில் தள்ளிவிடுவார்கள், போகலாம்' என்று அவனை அங்கிருந்து தள்ளும்படி செய்தான்.

வினு 38.—அப்பொழுது யயாதி என்ன சொன்னுன்?

விடை.—யயாதி, அப்பொழுது 'துள்ளின மாடு பொதிசுமக்கும்' என்ற பழமொழியின் கருத்தை உள்ளபடி அறிந்துகொண்டு, பரிதபித்து இந்திரனை நோக்கி 'எனக்குக் கீழே விழும்படியான நிலை வந்தபோதிலும் ஸத்துக்கள் மத்தியிலேயே தங்கும்படி அநுக்கிரஹிக்கவேண்டும்' என்று பிரார்த்திக்க, இந்திரனும் சரி என்று ஒப்புக்கொண்டான்.

வினு 39.—யயாதி எங்கு வந்து விழுந்தான்?

விடை.—யயாதி பூமியிலே வந்து விழாமல் ஹோமப் புகையால் ஆகாயத்திலேயே நிறுத்தப்பட்டான்.

வினு 40.—இந்த ஹோமத்தைச் செய்தவர்கள் யார்?

விடை.—அஷ்டகன், பிரதர்த்தனர், வஸுமனஸ், சிபி என்ற நால்வர்கள். இவர்கள் யயாதியினுடைய பெண் வயிற்றுப் பேரர்கள். (இவர்களது விஷயத்தை ஆரண்ய உத்தியோக பர்வங்களில் விஸ்தாரமாய்ச் சொல்லப் போகிறேம்.)

வினு 41.—இப்பேரப் பிள்ளைகள் அப்பொழுது என்ன செய்தார்கள்?

விடை.—இவர்களில் ஒவ்வொருவரும் தாங்கள் செய்த புண்ணிய பலத்தில் ஒவ்வொரு பாகம் யயாதிக்கும் கொடுத்தார்கள். ஆனுல் சிபி மாத்திரம் தனதுபலன் முழுவதையும் கொடுத்

தான். இப்படிக்கொடுத்த தருமத்தின் பலத்தால் இவ்வை வரும் ஸ்வர்க்கத்திற்கு திவ்ய ரதங்களில் சென்றூர்கள். (சிபியின் மஹத்வம் ஆரண்யபர்வத்தில் சொல்லப் போகிரும்.) பின்பு யயாதி ஸ்வர்க்கத்தில் சௌக்கியமாய் இருந்தான்.

வி 42.—இந்தப் பூருவுக்குப் பின் முக்கிய அரசன் யாவன்?

விடை.—துஷ்யந்தன். இவனைப்பற்றி முன்னமேயே சொல்லியாய் விட்டது.

வி 43.—பரதனுக்குப் பின் முக்கியமான அரசன் யாவன்?

விடை.—ப்ரதீபன் என்ற அரசன். அவன் கங்கோத்தரையில் சிலகாலம் தபஸு செய்துகொண்டிருந்தான்.

வி 44.—அப்பொழுது என்ன விசேஷம் நடந்தது?

விடை.—ப்ரதீபன் இவ்வாறு தபஸு செய்துகொண்டிருக்கையில் கங்காதேவி ஒருநாள் ஒரு யௌவன ஸ்திரீ உருக்கொண்டு அவனது வலது தொடையில் வந்து உட்கார, அரசன் கங்கையை நோக்கி "என்ன காரணத்தால் நீ இங்கு வந்தாய்?" என்று கேட்டான்.

வி 45.—அதற்கு கங்கை என்ன பதில் சொன்னுள்?

விடை.—"நான் உன்னை விவாஹம் செய்துகொள்ள வேண்டுமென்று வந்தேன்" என்றுள்.

வி 46.—அதற்கு அரசன் என்ன மறுமொழி சொன்னுன்?

விடை.—'அந்த எண்ணத்தோடு வந்தால் நீ எனது இடது தொடையில் உட்கார்ந்திருக்கவேண்டும். நீ உட்கார்ந்த இடத்தில் பெண்ணும், மருமகளும் உட்காருவார்கள். ஆகையால் நான் உன்னை விவாஹம் செய்துகொள்ளமாட்டேன். ஆனுல் எனது பிள்ளையை உன்னை விவாஹம் செய்துகொள்ளும்படி செய்கிறேன்," என்றுன்.

வி 47.—இவன் பிள்ளை பெயர் என்ன?

விடை.—இவன் பிள்ளைக்குச் சந்தனு வென்று பெயர். இவனது கை பட்டவர்களுக்கெல்லாம் ஸுகமுண்டானதால் இவனுக்கு இப்பெயர் வந்தது.

வினு 48.—தெய்வப் பெண்ணுகிய கங்கை இவனை விவாஹம் செய்துகொள்ள விரும்புவானேன் ?

விடை.—முன் காலத்தில் இக்ஷ்வாகு வம்சத்தில் மஹாவிசுவன் என்ருெரு அரசன் இருந்தான். அவன் மஹா கீர்த்திமான். ஒருகாலத்தில் தேவதைகள் யாவரும் பிர்ம்மாவைத் தரிசிக்க வந்திருந்த ஸமயத்தில், அங்கே இந்த அரசனும் போய்ச் சேர்ந்தான். கங்காதேவியும் பிர்ம்மாவை தரிசிக்க அங்கு வந்திருந்தாள். அப்பொழுது அகஸ்மாத்தாய் ஒரு காற்று வீசி, கங்கையின் மேல்வஸ்திரத்தை ஒதுக்கவே, உடனே ஸகல தேவதைகளும் பரஸ்திரீகளை இந்நிலையில் பார்ப்பது பாப ஹேதுவென்று தமது தலையை குனிந்துகொண்டார்கள். இந்த மஹாவிசுவன் மாத்திரம் மிகுந்த ஆவலோடு கங்கையைப் பார்த்தான். கங்கையும் அவ்வாறே செய்தாள். இதற்காகப் பிர்ம்மா இவனை ' நீ மறுஜன்ம மெடுத்தபின்புதான் என் உலகத்திற்கு வரவேண்டும் ' என்று சபித்தார். பிறகு கங்கையைப்பார்த்து 'நீயும் பூலோகத்திற்குபோய் மறு ஜன்ம மெடுக்கவும் என்று ' சபித்தார். பரஸ்திரீகளைக் கண்ணெடுத்துநோக்கல் பாபம் என்று நன்ருய்த் தெரிந்துகொண்ட அரசன், உலகத்தில் ப்ரதீபனது பிள்ளையாகிய சந்தனுவாகப் பிறந்தான். இந்த ஸம்பந்தம் முன்னமே இருந்ததினுல் சந்தனுவை கங்கை விவாஹம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டாள்.

வினு 49.—சந்தனுவை கங்கை எப்பொழுது எவ்வாறு விவாஹம் செய்துகொண்டாள் ?

விடை.—சந்தனு ஒருநாள் வேட்டைமார்க்கமாக கங்கைக்கரையில் வந்தகாலத்தில், தகப்பன் சொன்னபடி கங்கையைக்கண்டான். உடனே தனக்கு பத்னியாக வேண்டுமென்று வேண்டிக் கொள்ள அவளும் பின்வருமாறு சொன்னுள். " நான் உங்களை கணவனுக ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனுல் நான் செய்யும் சில விஷயம் தங்களுக்குத் தகாதனவாய்த் தோன்றிய போதிலும் என்னைத் தடுக்கக்கூடாது. நீங்கள் சொல்லியபடி யான் நடக்கக் காத்திருக்கிறேன். என்னைச் சில விஷயங்களில்

தடுப்பீர்களானால், உடனே தங்களைவிட்டுப் போய்விடுவேன்" என்றாள். இதற்கு அரசன் இசைந்து அப்பெண்ணை விவாஹம் செய்துகொண்டான்.

வி 50.—அப்படித் தகாதனவாய்த் தோன்றும்படியாக இப்பெண் என்ன காரியங்கள் செய்துகொண்டு வந்தாள்?

விடை.—ஸகல விதத்திலும் அரசனுக்கு ஹிதத்தையே இவள் செய்துக்கொண்டு வந்தாள். ஆயினும் அவளிடத்தில் பிறக்கும் பிள்ளைகளை மாத்திரம் உடனே அவள் கங்காநதியில் தூக்கி எறிந்துகொண்டு வந்தாள். இந்தக் கொடிய காரியத்தை மாத்திரம் இப்பெண் தவறாது செய்துவந்தாள்.

வி 51.—எவ்வளவு காலம் இப்படி இவள் செய்து வந்தாள்? சந்தனு எவ்வாறு இதைப் பொறுத்து வந்தான்?

விடை.—ஏழுபிள்ளைகள் வரையில் இவள் இப்படிக் குரூரமாய்க் கங்கையில் எறிந்துவிட்டாள். இதுவரையில் "இப்பெண், எங்கே தடுத்துப் பேசினால் கோபித்துக்கொண்டு போய்விடுவாளோ, நமக்கு ஸுகம் கெட்டுப்போகுமே" என்று நிரம்பவும் சந்தனு பொறுத்துப் பார்த்தான். அப்பொழுது எட்டாவது பிள்ளை பிறந்தது. முன்போலவே இதையும் கங்கையில் எறியப் போனாள்.

வி 52.—கங்கையில் எறிந்தாளா? எறிய வில்லையா? பின்பு இவள் என்ன செய்தாள்?

விடை.—இவ்வளவு நாளும் மிகுந்த கஷ்டத்தோடு பொறுத்த இந்த அரசனுக்கு இப்பொழுது ஸகிக்கமுடியாத துக்க முண்டாய் விட்டது. "நமது வம்சத்திற்கு ஒரு பிள்ளை கூடவா இருக்கக்கூடாது" என்று எண்ணிக்கொண்டு அவளை "கங்கையில் எறியாதே" என்று தடுத்தான். உடனே அவள் அதை நதியில் எறியாது, "ஆனால் எனக்கு நீர் கொடுத்த வாக்குப்படி நான் உம்மை இப்பொழுது விட்டுப் போகவேண்டியதுதான். இப் பிள்ளையை நான் வைத்து வளர்த்து கொஞ்ச காலத்திற்கெல்லாம் உம்மிடத்தில் கொண்டுவந்து சேர்க்கிறேன்" என்று சொல்லிவிட்டுக் கங்கைநதிக்குள் மறைந்துவிட்டாள்.

வினு 53.—கங்கை ஏழு பிள்ளைகளையும் கொல்லுவானேன்? எட்டாவது பிள்ளையைமாத்திரம் இப்படி வளர்ப்பானேன்?

விடை.—மஹாவிசுவனுக்கு சாபம் கிடைத்தபின்பு, கங்கை திரும்பி வரும் வழியில், அஷ்டவஸுக்களைக் கண்டாள். அவர்கள் முகம் வாட்டமா யிருப்பது கண்டு, அதற்குக் காரணம் அவர்களுக்கு பூமியில் மனிதராய்ப் பிறக்கும்படி வசிஷ்ட சாபம் வந்திருப்பதாகத் தெரிந்துகொண்டாள். அப்பொழுது வஸுக்கள் கங்கைக்குள்ள லோக ஸம்பந்தத்தையும் தெரிந்து கொண்டு, தாங்கள் எட்டுப்பேர்களும் எட்டுப் பிள்ளைகளாக கங்கைக்கே பிறப்பதாக ஒத்துப் பேசிக் கொண்டார்கள். அவர்களில் ஏழு வஸுக்களின் குற்றங் குறைவாயிருந்ததால் தாங்கள் பிறந்ததும் தங்களைக் கங்கையில் எறிந்து விடும்படி அவளை பிரார்த்தித்தார்கள். "எட்டாவது வஸுமாத்திரம் பூலோகத்தில் இருக்கட்டும், அவனே இக்குற்றங்களுக்குக் காரணம். ஆனால் அவன் ஸம்ஸார விருத்தி செய்யமாட்டான். தான் இருக்கவேண்டிய காலம் உலகத்திலிருந்து, எங்களிடம் திரும்பி வருவான்" என்றார்கள். அதற்கு கங்கை இசைந்து முன்சொன்னபடி ஏழுபேரைக் கங்கையில் எறிந்து, எட்டாவது பிள்ளையை வளர்த்து வந்தாள்.

வினு 54.—அஷ்டவஸுக்களுக்கு என்ன காரணத்தால் இச்சாபம் வந்தது?

விடை.—அந்த அஷ்டவஸுக்களில் ஒருவன் தனது பெண்சாதியை திருப்திசெய்ய, மற்றைய வஸுக்களுடைய ஸஹாயத்தால், வசிஷ்டரது காமதேனுவைக் கன்றோடு திருடி விட்டான். இதை அறிந்த வசிஷ்டர் முன்சொன்ன சாபத்தைக் கொடுத்தார்.

வினு 55.—சந்தனுவின் பிள்ளையின் பெயர் என்ன?

விடை—அப்பிள்ளைக்குக் காங்கேயன் என்றும் தேவவிருதன் என்றும்பெயர். இவன் தகப்பனைவிட மிக சிறந்தவனாய் விளங்கக் கூடியவனாய் இருந்தான்.

வி 56.—சந்தனு பின்பு எவ்வாறு தனது குமாரனை அடைந்தான்?

விடை.—தனது திவ்ய இராஜ்யத்தில் மனுநெறிதவறாது செங்கோல் செலுத்தும் ஒருநாள், சந்தனு ஒரு கரடியை வேட்டையாடும்படி நேரிட, அதைத் துரத்திக்கொண்டு கங்கைக்கரை வரை சென்று, அங்கு அதை சங்கரித்தான். அப்பொழுது கங்கையில் மிகவும் ஜலம் குறைந்திருப்பதை நோக்கி "இதென்ன அற்புதம்! கங்கையில் கூட இப்படி நீர் குறையும்படி வந்ததே!" என்று ஆச்சரியத்தோடு சுற்றிலும் பார்த்தான். அங்கு திவ்ய தேஜஸோடு ஒருபிள்ளை கங்கைக்குக் குறுக்கே பாண அணை போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான். அப்பொழுது கங்கை வெளியில் வந்து பிள்ளையை அரசனிடம் ஒப்புவித்தாள்.

வி 57.—சந்தனு மறுபடியும் விவாஹம் செய்துகொண்டாரா? யாரை? எப்படி?

விடை.—ஒருநாள் வேட்டைக்குப் போகும்போது காட்டில் யோஜனகந்தி அல்லது ஸத்தியவதி என்ற பெயருடைய ஒரு செம்படக் கன்னிகையைப் பார்த்து மிகுந்த கஷ்டத்தின்பேரில் இவர் அவளை விவாஹம் செய்துகொண்டார்.

வி 58.—இந்த ஸத்தியவதி என்பவள் யார்? அழகான கன்னிகை எப்படி செம்படவனுக்குப் பெண்ணானாள்?

விடை.—இவள் உபரிசரவஸு என்ற அரசனுடைய அம்சத்தால் மீனின் வயிற்றில் தங்கும்படி நேரிட்டுப் பிறந்தவள். இவளை ஒரு செம்படவன் மீனின் வயிற்றைப் பிளந்து எடுத்தமையால் இவள் செம்படவர் அகத்தில் அவரது பெண்போல் வளர்ந்தனள்.

வி 59.—இவளுக்கு துர்நாற்றமல்லவா இருக்க வேண்டும், அப்படி இருக்க இவளுக்கு யோஜனகந்தி என்றபெயர் எப்படி வந்தது?

விடை.—இவள் சிறு கன்னிகையாய் யமுனாநதியில் ஓடம் ஓட்டிக் கொண்டிருக்கும்போது பராசர மஹாமுனி அங்கு வர அவரது அநுக்கிரஹத்தால் இவளுக்கு இந்த நற்கந்தம் வந்தது.

வினு 60.—பராசரர் எதற்காக இந்த வரனைக் கொடுத்தார்?

விடை.—லோக உபகாரார்த்தம் ஒரு சுப லக்கினத்தில் ஒரு பிள்ளையை உண்டாக்க எண்ணிப் பராசரர் வரும்பொழுது யமுனா நதியைத் தாண்ட இங்கு வந்தார். யமுனாநதி மத்தியில் போகும்பொழுது அவர் உத்தேசித்த லக்கினம் வந்தது கண்டு, இப் பெண்ணைத் தம் அநுக்ரஹத்திற்குப் பாத்திரமாகும்படி கேட்க, அவள் ஒப்புக்கொண்டதால் அங்கேயே ஒரு திட்டில் வியாஸபகவான் உண்டானார். இப்படி அந்த ஸமயத்தில் அவருக்கு இசைந்ததற்காக இவ்வரனை இந்த முனி அவளுக்குக் கொடுத்தார்.

வினு 61.—இப்படி இவளுக்கு ஒரு பிள்ளை முன்னமேயே பிறந்திருக்குமானால் எப்படி இவளைச் சந்தனு விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்று எண்ணினார்?

விடை.—பராசரரது அநுக்கிரஹத்தால் முன் இருந்ததுபோல இவள் கன்னிகையாய் விட்டபடியால் இவளுக்கு ஒரு தோஷமும் இல்லாமற் போய் ஸாதாரணமான கன்னிகையாகவே இருந்தாள். ஆகையால்தான் ஸன்மார்க்கரான அரசரும் இவளை விவாஹம் செய்துகொள்ள எண்ணினார்.

வினு 62.—இவளை விவாஹம் செய்துகொள்வதற்குமுன் அரசனுக்கு என்ன கஷ்டமுண்டாயிற்று?

விடை.—அரசன் ஸத்தியவதியின் பிதாவை விவாஹ விஷயமாய்க் கேட்க, அவன் "என் பெண்ணின் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கு நீ முடிசூட்டுவாயானால், நான் இந்தப் பெண்ணை உனக்கு விவாஹம் செய்து கொடுக்கிறேன்" என்று சொன்

னன். அரசனால் இதற்கு எப்படி இசைய முடியும்? காங்கேயனுக்கல்லவோ இராஜ்யம் நியாயமாய்க் கொடுக்கவேண்டும்? ஆதலால் மிக துக்கத்தோடு அரசன் தனது அரண்மனைக்குப் போகும்படி நேரிட்டது.

வின 63.—இந்தக் கஷ்டம் எப்படி நிவர்த்தியாய் சந்தனு ஸத்தியவதியை கல்யாணம் செய்துகொண்டார்?

விடை.—இப்படி தகப்பன் துக்கத்தோடு வந்தான் என்பதைக் கேட்ட காங்கேயன் ஸத்தியவதியின் பிதாவிடம் சென்று "நான் ராஜ்யத்தை விரும்புவதில்லை ஸத்தியவதிக்குப் பிறக்கும் பிள்ளைக்கே கொடுக்கிறேன்" என்று சபதம் செய்தார். அப்பொழுது அந்தச் செம்படவன், "நீ விரும்பாவிட்டால், உனது புத்திரர்கள் விரும்புவார்களே அப்பொழுது கலஹம் நேருமே, அதனால் எனக்கு என்ன லாபம்" என்றான். அப்பொழுது காங்கேயன் மஹா கோரமான பிரதிக்ஞையைச் செய்தான். "நான் இராஜ்யத்தையும் விரும்புவதில்லை. நான் விவாஹத்தையும் செய்துகொள்ளுவதில்லை. இப்படியே ஆயுள் முழுவதும் பிரம்மசாரியாகவே இருப்பேன்" என்றான். இதனால் இவருக்கு பீஷ்மர் என்ற பெயர் வந்தது. இதன் பின்பு ஸத்தியவதியை செம்படவன் அரசனுக்கு விவாஹம் செய்துகொடுத்தான்.

வின 64.—சந்தனுவிற்கு ஸத்தியவதியிடம் எத்தனை புத்திரர்கள் பிறந்தார்கள்? அவர்களின் பெயர் என்ன? அவர் எப்படி வாழ்ந்தார்கள்?

விடை.—இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களுக்கு முறையே சித்ராங்கதன் என்றும் விசித்திரவீரியன் என்றும் பெயர். அவர்களில் முதல் பிள்ளையை சித்ராங்கதன் என்ற கந்தர்வன், தன்பெயரை வஹித்த மனிதன் பூலோகத்தில் உயிரோடிருக்கலாமா வென்று அஹங்காரம்கொண்டு ஸம்ஹாரம் செய்தான். ஆதலால் ஒரு பிள்ளைமாத்திரம் உயிரோடிருந்தான்.

வின 65.—இவனுக்கு விவாஹம் நடந்ததா? அப்பொழுது நடந்த விசேஷம் என்ன?

விடை.—பீஷ்மர் காசி ராஜன் புத்திரிகளது ஸ்வயம்வரத்தில் சென்று அவனது புத்திரிகளாகிய அம்பிகை, அம்பாலிகை, அம்பை என்பவர்களை, வீரர்கள் மத்தியில் இரதத்தில் ஏற்றிக்கொண்டு விசித்திர வீரியனுக்குப் பாரியைகளாகச் செய்ய வேண்டுமென்று கொண்டுவர, அப்பொழுது தன்னை எதிர்த்த அரசர்களை வென்றார். வரும் வழியில் அம்பைத் தான் வேறொரு இராஜனை மனதில் பர்த்தாவாக வரித்ததாகச்சொல்ல பீஷ்மர் அவளுக்குப் போகும்படி அநுமதிகொடுத்தார். (இவளால் நடந்த கலஹத்தை உத்தியோக பர்வத்தில் சொல்லப்போகிறோம்.) அம்பாலிகை, அம்பிகை ஆகிய இவர்களை விசித்திர வீரியனுக்கு பீஷ்மர் விவாஹம் செய்வித்தார்.

வினு 66.—விசித்திரவீரியன் எவ்வளவு காலம் ஸுகமாய் வாழ்ந்தான்? அவனுக்கு எத்தனை பிள்ளைகள்?

விடை.—அவன் விவாஹமாய் ஏழு வருஷகாலம் ஜீவித்திருந்து பின்பு க்ஷயரோகத்தால் இறந்தான். அவனுக்கு ஒரு பிள்ளை கூட இல்லை.

வினு 67.—அப்பொழுது குல விருத்திக்கு என்ன ஏற்பாடு செய்தார்கள்?

விடை.—ஸத்யவதி முதலில் பீஷ்மரை விவாஹம் செய்துகொண்டு குல விருத்தி செய்யும்படி அநுமதி கொடுத்தும், "என் பிரம்மசரிய விருதத்திற்கு விரோதமாய் ஒன்றும் செய்யமாட்டேன்" என்று அவர் மறுத்து விட்டார். பின்பு இம்மாதிரியான ஆபத்துக்காலங்களில் நல்ல சிறந்த மஹான்கள் அநுக்கிரஹத்தால் இராஜபத்தினி குழந்தைகளை அடையலாம் என்று பீஷ்மர் நியாயத்தை எடுத்துக் காட்டத் தனது புத்திரனாகிய வியாஸரை ஸத்யவதி தியானித்தாள். மாதாவினது வேண்டுகோளிற்கிசைந்து வியாஸரும் அநுக்கிரஹிப்பதாக ஒப்புக் கொண்டார்.

வினு 68.—வியாஸர் அனுக்கிரஹத்தால் யார் யாருக்கு எவ்விதமான புத்திரர்கள் உண்டானார்கள்? ஏன் அப்படி உண்டானார்கள்?

விடை.—முதலில் அம்பிகைக்கு அநுக்கிரஹிக்கும்பொழுது அவள் பயத்தால் கண்ணை மூடிக்கொண்டமையால் அவளிடத்தில்

அந்தகனுகிய திருதராஷ்டிரன் பிறந்தான். பின்பு அம்பா லிகைக்கு அநுக்கிரஹிக்கும் பொழுது அவள் பயத்தால் வெளுத்துப் போனமையால் அவளுக்குப் பாண்டு என்னும் வெளுத்த தேகமுடைய புத்திரன் உண்டானுன். 'கடைசி யாய் நல்ல புத்திரன் ஒருவனை அம்பிகை யிடத்தில் உண்டாக்க வேண்டும்' என்று ஸத்யவதி வியாஸரைப் பிரார்த்திக்க, அவர் அப்படியே ஒப்புக்கொண்டுவந்தார். அம்பிகை, தான் வராது தனது தாதியை அனுப்ப, அவளிடத்தில் மஹா தர்மாத்மாவாயும், புத்திமானுயும், யமதர்மரது அம்சாவதார மாயும் உள்ள விதுரர் உண்டானுர்.

வினு 69.—யமதர்ம ராஜா சூத்திர ஸ்திரீ வயிற்றில் அம்சாவதாரம் செய்யவேண்டிய காரணம் என்ன?

விடை.—யமதர்மனுக்கு இவ்வாறு பிறக்கவேண்டும் என்று மாண் டவ்ய ரிஷி சாபம் நேர்ந்தமையால், இப்படி அவதாரம் செய் யும்படி நேரிட்டது.

வினு 70.—மாண்டவ்ய ரிஷி யமதர்மனைச் சபிப்பானேன்?

விடை.—இவரை ஒரு காரணத்தால் அரசன் கழுவேற்ற, அதி லிருந்து பின்பு அரசனே அவரை வெளியி லெடுத்துவிட முடி யாமல் கழு மரத்தை மேலேயும், கீழேயும் அருத்து விடச் செய்தான். இவர் தேகத்துள் இந்த இரும்பாணி இருந்த மையால் ஆணிமாண்டவ்யர் என்று பெயர்பெற்ற ரிஷி தாம் செய்த எந்த் பாபத்திற்காக இப்படி கழுவேறும்படி வந்ததென்று யமனைப் போய்க் கேட்டார். அதற்கு அவன் "நீர் ஏழு வயதில் தட்டாரப் பூச்சி முதலியவைகளை முட் களால் குத்தி வேடிக்கை பார்த்து வந்தீர். ஆகையால் இந்தக் கஷ்டம் உமக்கு வந்தது" என்றுன். "சிறுவர் செய்த பாபம், தாய் தகப்பனுக்கென்று அறியாமல் என்னை வீணுய் கஷ்டப் படுத்தினுயே, ஆதலால் நீ சூத்திரனுய்ப் பிறக்கக் கடவாய்" என்று இவர் சாபங் கொடுத்தார்?

வினு 71.—ரிஷியை யாது காரணத்தால் அரசன் கழுவேற்றினுன்?

விடை.—ஒருநாள் மாண்டவ்ய ரிஷி தமது ஆசிரமத்தில் ஸமாதியி லிருக்கும்பொழுது சில திருடர்கள் சேவகரால் துரத்தப்பட்டு

ரிஷி யிருக்குமிடம் வந்து சாமான்களை எறிந்து விட்டு அங்கேயே ஓரிடத்தில் ஒளிந்தார்கள். சேவகர்கள் வந்து ரிஷியை கேள்விகேட்க ரிஷி மௌனமாய் இருந்ததையும், பக்கத்தில் திருட்டுப்போன வஸ்துக்கள் இருப்பதையும் கண்டு, ஆச்ரமத்தை சோதிக்க ஆரம்பிக்க, திருடர்கள் அகப்பட்டார்கள். உடனே ரிஷியை ஒரு திருடனாக வெண்ணி அரசனிடம் அவர்கள் கொண்டுபோய்விட்டு அவன் ஆக்ஞையின் பேரில் எல்லோரையும் கழுவேற்றி விட்டார்கள்.

வினு 72.—திருதராஷ்டிரன் முதலியவர்களுக்கு யார் யார் பெண் சாதிகளாய் அமைந்தார்கள்?

விடை.—திருதராஷ்டிரனுக்கு காந்தார தேசத்தரசன் பெண்ணும், சகுனி என்பவனது தங்கையுமாகிய காந்தாரி என்பவளும், பாண்டுவிற்கு குந்திபோஜராஜனது தத்துப் பெண்ணாகிய குந்தியும், மத்திர தேசாதிபதியாகிய சல்லியனது சகோதரியாகிய மாத்ரியும், பெண்சாதிகளாய் அமைந்தார்கள்.

வினு 73.—இம் மூன்று பெண்களுள் யாரிடத்தில் என்ன முக்கிய விசேஷம் இருந்தது?

விடை.—குந்தி யிடத்தில் ஒரு மந்திர மிருந்தது. அதை எந்த தேவதையை உத்தேசித்து உச்சரித்தாலும் அந்த தேவதை வந்துவிடும். அவனது அநுக்கிரஹத்தால் அவள் பிள்ளையை அடையும் சக்தி உடையவளாக இருந்தாள்.

வினு 74.—இது இவளிடம் இருப்பதற்குக் காரணம் என்ன?

விடை.—இவள் கன்னிகையாய் தனது தத்துப் பிதா வீட்டிலிருக்கும்போது ஒருநாள் தூர்வாஸ மகரிஷி சாதுர்மாஸ்ய விருதத்திற்கு அங்கே வந்தார். அப்பொழுது குந்தியைச் சிச்ருஷை செய்யும்படி அரசன் ஏவ, அவள் இந்த மஹா கோபிஷ்டருக்கு பூரண திருப்தி வரும்படி நடந்துகொண்டாள். அந்த ரிஷி சந்தோஷத்தால் இந்த மந்திரத்தை குந்திக்கு உபதேசித்தார்.

வினு 75.—குந்தி இந்த மந்திரம் கிடைத்ததும் என்ன செய்தாள்?

விடை.—அது சக்தி உடையதா அல்லவா என்று பரீக்ஷபார்க்க சூரியனை உத்தேசித்து ஜபிக்க, அவர் அநுக்கிரஹத்தால் இவளுக்கு கன்னியாப் பருவத்திலேயே கர்ணன் என்ற ஒரு பிள்ளை பிறந்தது. சூரியன் சொல்லியபடி அந்தப் பிள்ளையை ஒரு பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டுவிட்டாள். பின்பு சூரியன் அநுக்கிரஹத்தால் இவளுக்கு கன்னியாப் பருவம் வந்துவிட்டது. (இந்தக் கர்ணன் கதையை சாந்தி பர்வத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப் போகிறோம்.)

வினு 76.—இவளுக்கு குந்திபோஜன் தத்துப் பிதாவென்று சொல்லியிருக்கிறதே, இவள் சொந்த பிதா யார்?

விடை.—இவள் யயாதி பிள்ளையாகிய யதுவின் வம்சத்தில் பிறந்த சூரராஜன்பெண்ணும், ஜகந்நாதரான கிருஷ்ண பகவான் பிதாவாகிய வஸுதேவரது ஸகோதரியுமாம்.

வினு 77.—குந்திக்கு இம்மந்திரங்களை உபயோகிக்கும் சமயம் வந்ததா? எப்படி?

விடை.—வந்தது. கிந்தம ரிஷி சாபத்தால் பாண்டுவுக்குத் தனது பெண்சாதிகளைத் தொட முடியாமல் போய்விட்டது. அப்பொழுது வம்ச விருத்திக்கு இந்த மந்திரத்தைப் பாண்டுவின் வேண்டுகோளின்படி குந்தி உபயோகித்தாள்.

வினு 78.—கிந்தம ரிஷி ஏன் பாண்டுவை சபித்தார்? எப்பொழுது?

விடை.—மூன்று பிள்ளைகளுள் பாண்டுவே இராஜனாகி திக்விஜயம் செய்தபின்பு ஒருநாள் வேட்டைக்குப் போனவிடத்தில் ஒரு ஆண்மானும், பெண்மானும் விளையாடுவதைக் கண்டு அவைகளை அம்பெய்து கொன்றான். அவை நிஜ மான்கள் அல்ல. ஒரு ரிஷியும் ரிஷி பத்தினியும் அந்த ரூபத்தோடு விளையாடிக் கொண்டிருந்தார்கள். தாம் விளையாடிக்கொண்டிருக்கும்போது தம்மைத் தெரியாது பாண்டு அடித்ததால் "நீயும் உன் மனைவியோடு இப்படி விளையாடினால் உனக்கும் மரணம்வரட்டும்" என்று அந்த ரிஷி சபித்தார்.

வினு 79.—இந்தச் சாபம் கிடைத்தவுடன் பாண்டு என்ன செய்தான்?

விடை.—உடனே இராஜ்யத்திற்குத் திரும்பி வராமல் வானப் பிரஸ்தாசிரமியாய் பெண்சாதிகளோடு காட்டிலேயே இருந்து விட்டான்.

வினு 80.—இவன் குந்தியை மந்திரம் உபயோகிக்கும்படி சொல் லக் காரணமென்ன?

விடை.—பாண்டு காட்டில் வாஸம் செய்யுங்கால் அங்கு அநேக ரிஷிகள் மேருமலையில் இருக்கும் பிரம்மஸபைக்குப் போகும் வழியில் வந்து தங்கினுர்கள். அவர்களோடு கூடப் பாண்டு வும் போக யத்தனிக்கையில், பிள்ளையில்லாதவர்கள் அங்கு வரக்கூடாதெனச் சொல்லி அவர்கள் பாண்டுவைத் தடுத்து விட்டுப் போயினர். உடனே பாண்டுவிற்குப் பிள்ளை வேண்டு மென்று ஆசைவர, குந்தியோடு ஆலோசித்து அவளை மந்தி ரத்தை உபயோகிக்கும்படி செய்தான்.

வினு 81.—குந்தியின் மந்திரபலத்தால் எவ்வெப் பிள்ளைகளைப் பாண்டு அடைந்தான்?

விடை.—குந்தியின் மந்திர பலத்தால் அவளிடத்தில் தருமபுத்தி ரர், பீமன், அர்ச்சுனன் என்பவர்கள் முறையே தருமராஜன், வாயு, இந்திரன் என்பவர்களுடைய அநுக்கிரஹத்தால் உண் டானுர்கள். பின்பு குந்தி பாண்டுவின் வேண்டுகோளின்படி மாத்ரிக்கு இதை உபதேசித்து அவளிடத்தில் நகுல ஸஹா தேவர் என்ற இரட்டைப் பிள்ளைகள் அசுவனி தேவதைகள் அனுக்கிரஹத்தால் உண்டாகும்படி செய்தாள்.

வினு 82.—திருதராஷ்டிரனுக்கு எத்தனை குழந்தைகள்?

விடை.—துரியோதனன் முதலிய 100-பிள்ளைகளும், துச்சலை என் னும் கடைசிப் பெண்ணும் ஆகிய 101-குழந்தைகள் திருத ராஷ்டிரனுக்கு உண்டானுர்கள்.

வினு 83.—இவ்வாறு அநேக குழந்தைகள் காந்தாரிக்குப் பிறக்கக் காரணமென்ன?

விடை.—வியாஸர் ஒருநாள் மிகப்பசியோடு அரண்மனைக்கு வர அவருக்குத் தாமதிக்காமல் காந்தாரி உணவளித்தாள். உடனே வியாஸர் உனக்கு 100-குழந்தைகள் உண்டாகட்டும் என்று

அநுக்கிரஹித்தார். இதனால் இவள் இவ்வளவு குழந்தைகளை அடைந்தாள்.

வினா 84.—இவளுக்குக் குழந்தைகள் பிறந்த விதம் எப்படி? 100–குழந்தைகள் உண்டாக வேண்டி யிருக்க 101-குழந்தைகள் உண்டாவானேன்?

விடை.—கொஞ்ச காலத்திற்கெல்லாம் காந்தாரி கர்ப்பந் தரித்தாள். ஆனால் இரண்டு வருஷம் வரையில் குழந்தை ஒன்றும் வெளி வரவில்லை. இதற்குள் காட்டில் தேவானுக்கிரஹத்தால் குந்திக்கு ஒரு குழந்தை பிறந்ததெனக் கேள்விப்பட்டதும் பொறாமையால் ஒருவருக்குந் தெரியாமல் தனது வயிற்றை இடித்துக் கொள்ள, உடனே அவளது கர்ப்பம் ஒரு பெரிய மாம்ஸபிண்டமாய் வெளியில் வந்து விழுந்தது. இதை வியாஸர் 100 பிரிவாகப்பிரித்து 100 பாத்திரத்திலிட்டு மந்திரித்து வைத்துக்கொண்டு வருகையில், காந்தாரிக்கு 101-வது ஒரு பெண் உண்டானால் நலமாயிருக்கும் என்ற எண்ணம்வர வியாஸர் இதை உணர்ந்து 101-வது ஒரு சிறு துண்டு மீதி வரும்படி பிரித்து 101-பாத்திரங்களி லிட்டார். சில காலத்திற்கெல்லாம் இவைகள் 100-பிள்ளைகளும், 1-பெண்ணுமாக மாறின.

வினா 85.—இவர்கள் உண்டாகும் காலத்தில் என்ன குறிகள் காணப்பட்டன? இவர்களில் முக்கியமானவர்கள் பெயர்களைக் கூறுக? இவர்களுக்குக் கௌரவர் எனப் பெயர்வரக் காரணமென்ன?

விடை.—முதற்பிள்ளை உண்டாகுங்கால் அநேக அபசகுனங்கள் உண்டாயின. இவைகளைக் கண்டதும் விதுரர் முதலிய மஹான்கள் இம்முதல்பிள்ளையை சமுத்திரத்தில் எறிந்து விட்டால், பரதவம்சத்திற்கு க்ஷேமமுண்டாகுமெனப் புத்தி கூற, திருதராஷ்டிரனுக்கு இப்படிச்செய்ய மனம் வரவில்லை. இதுபோலவே, இந்த 101-பிள்ளைகள் உண்டாகும்பொழுதும் அபசகுனங்கள் உண்டாயின. இவர்களில் முக்கியமானவர்களின் பெயர்கள்: துரியோதனன் முதல்பிள்ளை, துச்சாஸனன் இரண்டாவது பிள்ளை, விகர்ணன், துச்சலை (கடைசிப்பெண்),

ஆகிய இவர்களே. பரதவம்சத்தில் குரு என்ற ஒரு அரச னிருந்தான். இவர்கள் அவன் வம்சத்திற் பிறந்தவராகையால் இவர்களுக்கு கௌரவர் எனக் காரண விடுகுறிப் பெயர் கிடைத்தது.

வினு 86.—திருதராஷ்டிரனுக்கு வேறு பிள்ளைகளுண்டா?

விடை.—இவனுக்கு ஒரு வைசியப் பெண்ணிடத்தில் பிறந்த யுயுத்ஸு என்றொரு பிள்ளை உண்டு.

வினு 87.—பாண்டவர்கள் பிறக்குங்கால் என்ன விசேஷங்கள் நடந்தன?

விடை.—தருமபுத்திரர் பிறந்ததும் உலகமே ஸந்தோஷிப்பதுபோல் நற்சகுனங்கள் காணப்பட்டன. அசரீரிவாணி தருமபுத்திரரது நற்குண விசேஷங்களைப் புகழ்ந்து கூறியது. பீமன் பிறந்ததும் அசரீரிவாணி அவனது பலத்தைப் புகழ்ந்து பேசியது. இவன் பிறந்தவுடன் காட்டில் ஒருவேங்கை உறும, தன் மடியில் இருக்கும் குழந்தையை மறந்தவளாய், குந்தி அதிக பயத்தோடு எழுந்திருந்தாள். குழந்தை பீமன் கற்பாறையில் விழுந்தான். அவன் விழுந்ததும் கற்பாறை பொடிப் பொடியாக சிதறிப்போக இந்த சப்தத்தைக் கேட்டு வந்த வேங்கை பயந்தோடிவிட்டது. உடனே பீமனது பலம் எத்தன்மையது என்று பாண்டுவிற்கு விளங்கியது. அரச்சுனன் பிறந்ததும் ஆகாசத்திலிருந்து புஷ்பமாரி சொரிந்தன. தேவதுந்துபி ஆர்த்தன. அசரீரிவாணி அர்ச்சுனனது பிரதாபத்தைப் புகழ்ந்து கூறியது. நகுலஸஹாதேவர்கள் பிறந்தபொழுதும் இதுபோன்ற அசரீரிவாணி உண்டாயிற்று.

வினு 88.—இப்பஞ்ச பாண்டவர்கள் உண்டானபிறகு பாண்டுவின் கதி என்னமாயிற்று?

விடை.—வஸந்தகாலம் வர, குந்தி குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு வெளியே போயிருந்த காலத்தில், பாண்டுவும், மாத்ரியும் உல்லாஸமாய் விளையாடி வந்தார்கள். மாத்ரி பாண்டுவிற்கு கிந்தமரிஷியின் சாபத்தைப்பற்றி ஞாபகப்படுத்தியும், பாண்டு

அதிக ஸந்தோஷமாய் இருந்தபடியால் ஒன்றுந்தோன்றாது தனது மனைவியோடு ஸுகமாய் விளையாடி வந்தான். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் ரிஷியின் சாபப்படி பாண்டு மரணமடைந்தான்.

வின 89.—பின்பு பாண்டுவின் பெண்சாதிகள் என்ன செய்தார்கள்? பின் என்ன நடந்தது?

விடை.—குந்தி தான் உடன்கட்டை ஏறுவதற்கு வேண்டிய ஆதாரங்களை எடுத்துக்காட்ட, மாத்ரியும் தான் அவ்வாறு செய்வதற்குத் தகுந்த ஆதாரங்களை எடுத்துக்காட்டினாள். கடைசியில் மாத்ரி சொல்வதே நியாயமென்று தோன்ற குந்தி அவளுக்கு உடன்கட்டை ஏற அனுமதி கொடுத்தாள். உடனே மாத்ரி பாண்டுவின் தேகத்தோடு ஸஹகமனஞ்செய்து இறந்தாள். உடனே குந்தியையும் அவளது பிள்ளைகளாகிய பாண்டவர்களையும் அங்கு வஸித்துக்கொண்டிருந்த ரிஷிகள் தேற்றி ஹஸ்தினாபுரம் என்ற திருதராஷ்டிரன் ராஜ்யமாளும் பட்டணத்திற்குக் கொண்டுபோய் விட்டார்கள். அங்கு பாண்டுவிற்கும் மாத்ரிக்கும் அபரக் கிரியைகள் கிரமப்படி நடந்தேறின.

வின 90.—பாண்டுவின் மரணத்தால் துக்கக்கடலில் ஆழ்ந்திருக்கும் ஸத்யவதியை வியாஸர் எவ்வாறு தேற்றினார்? பின் என்ன நடந்தது?

விடை.—“ஸுககாலம் யாவும் முடிந்துவிட்டன. இனிமேல் உங்களுக்கு பாண்டவ கௌரவாது சண்டையால் துக்கம் அதிகரிக்குமே ஒழிய ஸுகத்திற்கு இடமில்லை” என்று வியாஸர் ஸத்யவதிக்கு எடுத்துரைத்தார். உடனே இவள் இதை தனது மருமகள் இருவருக்கும் உரைக்க, மூவரும் வனம்சென்று, துறவுபூண்டு, கடவுளைத் தியானித்து, தமது தேகங்களை நழுவவிட்டு, ஸ்வர்க்கமடைந்தனர்.

வின 91.—கௌரவ பாண்டவர்கள் சிறுவர்களாய் இருக்கும்பொழுது எவ்வாறிருந்தனர்? இதனால் என்ன பிரமாதம் விளைந்தது?

விடை.—குழந்தைகள் அனேக அற்புத விளையாட்டுக்களை விளையாடி வந்தன. இவர்களில் பீமன் ஒருவன் மாத்திரம் கௌரவர் 100-பெயர்களை தனது பல விசேஷத்தால் ஸதா தோல்வியடையும்படி செய்துவந்தான். மேலும் இவன் வேகமாய் நடந்துவந்தால் கௌரவரில் சிலர் கீழே விழுந்துவிடுவார்கள். இவைகளால் துரியோதனுதியருக்கு பீமனிடம் பொறாமை உண்டாக, அவனை எப்படியாவது ஒழிக்க வேண்டுமெனத் தீர்மானித்தார்கள். இதற்காகவே துரியோதனுதியர் கங்கையில் பிரமாணகோடி என்ற ஆழமான மடுவின் கரையில் ஜலக்கிரீடாமண்டபம் ஒன்று கட்டி, அதில் விதம் விதமான போஜன விஷயங்களைத் தயார் செய்யச்சொல்லி, பாண்டவர்களை அங்குவந்து ஆனந்திக்க அழைத்தனர். யாவரும் அங்கு சென்று ஆனந்தமாய் விளையாடிக் கடைசியில் சாப்பிட உட்கார்ந்தார்கள். உடனே துரியோதனனே பீமஸேனன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, அவனுக்காகத் தயார் செய்திருந்த நஞ்சிட்ட சோற்றை திருப்திகரமாக பீமன் உண்ணும்படி செய்தான். எழுந்தவுடன் யாவரும் ஜலக்கிரீடைசெய்து கொஞ்ச நாழிகைக்கெல்லாம் களைப்பாய் வந்து லதாக்கிரஹங்களில் படுத்தார்கள். பீமன் விஷத்தின் வேகத்தால் மெய்மறந்து தூங்கத்தொடங்கினுன். யாவரும் தூங்குகையில் துரியோதனன் முதலியோர் பீமனைக் கொடிகளால் கட்டி பிரமாணகோடியில் தள்ளிவிட்டார்கள்.

வினு 92.—பீமன் கதி என்ன ஆயிற்று? என்ன விசேஷங்கள் ஸம்பவித்தன?

விடை.—பீமன் விழுந்ததும் அங்கிருந்த பாதாள லோகத்திற்குப் போகும் சுரங்கத்தின் வழியாய் நாகலோகத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அங்குள்ள பாம்புகள் இவனைக்கடிக்க பாம்பின் விஷத்தால் உணவின் விஷவேகம் குறைந்தது. பீமனுக்குமயக்கந் தெளிந்தது. தன்னை சுற்றிக் கட்டியிருந்த கொடிகளை அறுத்துக்கொண்டு பாம்புகளை அடிக்க ஆரம்பித்தான். இந்த ஆச்சரியத்தை பீமனிடம் இருந்து தப்பிவந்த பாம்புகள் வாஸுகியாகிய ஸர்ப்பராஜனிடம்சொல்ல, அவன் வந்து

பார்த்து, ஸர்ப்பங்களது அபிப்பிராயப்படி பீமனுக்கு 10,000 யானைபலம் வரும்படியான அமிருத ரஸம் கொடுக்க பீமன் 8-கலசம் குடித்துத் திருப்தியடைந்து ஒரு படுக்கையில் படுத்தான்.

வினா 93.—இங்கு பாண்டவர்கள் குந்தி இவர்களது ஸ்திதி என்னமாயிற்று?

விடை.—பீமன் முன்னமே ஊருக்குப் போயிருப்பான் என்று சொன்ன துரியோதனனது சொல்லை நம்பிப் பாண்டவர் முதலியோர் ஹஸ்தினாபுரஞ்செல்ல அங்கு பீமனைக்காணாது கவலையுற்றனர். இதை யறிந்ததும் குந்திக்கு அடங்காத் துயரமுண்டாக, பீமனைத்தேட ஏற்பாடுகள் செய்துவிட்டு விதுரரை யழைப்பித்து அவரோடு அவள் ஆலோசனை செய்து பார்த்தாள். இது துரியோதனனது செயலாகவே இருக்கவேண்டுமென்றும், பீமனை அவர்கள் கொன்றிருப்பார்கள் என்றும் குந்தி சொல்ல, விதுரர் மற்றப் பிள்ளைகளது க்ஷேமத்திற்காக குந்தியை பொறுமையோ டிருக்கச் செய்து, மஹரிஷிகளது ஆசீர்வாத பலத்தால் பீமன் திரும்பிவராமல் போகமாட்டான் என்று தேறுதல் சொல்லிப்போனார்.

வினா 94.—பீமன் எவ்வாறு திரும்பி வந்தான்? பின் நடந்தது என்ன?

விடை.—எட்டு நாள் முடிந்து பீமன் எழுந்ததும் அவனுக்கு 10,000-யானை பலம் உண்டாக, மங்களஸ்நாநம் செய்து பரிசுத்தனானான். நாகர்கள் உடனே பீமனை தூக்கிவந்து பிரமாணகோடியின் கரையில் விட்டுப்போயினர். உடனே பீமன் தனது தாய், ஸஹோதரர் இவர்களிடம் சென்று, தனக்குவந்த ஆபத்துக்களையும் அவைகளால் தான் அடைந்த நன்மைகளையும் பற்றிச் சொன்னான். தருமபுத்திரர் பீமனை ஒன்றுஞ் சொல்லாதிருக்கும்படி அடக்கிவிட்டார். விதுரர், யுயுத்ஸு இவர்கள் அன்று முதல் அடிக்கடி பாண்டவர்களுக்கு நல்ல புத்தி சொல்லிக்கொண்டுவந்தனர். இதன் பின்பு துரியோதனாதியர் பீமனை அனேகந்தடவை விஷம்

வைத்துக் கொல்ல யத்தனித்தும் பயன்படாமல் போயிற்று. விதுரர், யுயுத்ஸு இவர்கள் புத்தி சொன்னபடி ஒன்றும் வெளிவிட்டுச்சொல்லாது பாண்டவர்கள் எல்லாவற்றையும் பொறுத்து வந்தனர்.

வினு 95.—பாண்டவர்கள், கௌரவர்கள் இவ்வாறு வளர்ந்து வருகையில் முதலில் யாரிடத்தில் வில் வித்தை பயின்றனர்?

விடை.—கௌதம ரிஷியின் புத்திரராயும், ஸதா வில் வித்தையிலேயே கவனமுடையவராயு முள்ள சாரத்வதர் புத்திராகிய கிருபாசாரியரிடம் இவர்கள் முதலில் வில் வித்தை பயின்றனர்.

வினு 96.—இவ்வாசாரியருக்கு கிருபர் என்று பெயர் வரக் காரணமென்ன? இவர் யாரிடம் வில்வித்தை கற்றனர்?

விடை.—இவரது தகப்பனுரான சாரத்வதர் வில்லுங்கையுமாய்த் தமக்கு தனுர்வேதத்தில் தேர்ச்சி வரவேண்டுமென்று தபஸு செய்யுங்கால், அவர் தபஸைக் கலைக்க இந்திரனது உத்தரவால் ஒரு தேவதாஸி அங்கு வந்தாள். அவளைக் கண்டு மயங்கி, அவளிடம் ஒரு பிள்ளையையும், ஒரு பெண்ணையும் பெற்றவுடன், தம் தபஸு பங்கமானது தமக்கு ஞாபகம் வந்துவிட்டது. உடனே வெட்கத்தாலும், கோபத்தாலும் அவ்விடம் விட்டு சாரத்வதர் இக்குழந்தைகளைக் கவனியாது வேறோரிடம் சென்றனர். சற்று நாழிகைக்கெல்லாம் அங்கு சந்தனு மஹாராஜனது சேவகன் வந்து, தனிமையாய் வில்லின் அருகே கிடக்கும் இவ்விரு குழந்தைகளையுங் கண்டு இவைகள்மேல் கிருபை கூர்ந்து எடுத்துக் கொண்டு, தனது இராஜன் ஆளும் ஹஸ்தினபுரி சென்று அரசனிடம் காட்ட, அவர் இக்குழந்தைகளுக்கு முறையே கிருபன், கிருபி எனப்பெயரிட்டு ஜாக்கிரதையாய் வளர்த்து வரும்படி கட்டளையிட்டார். இவ்வாறு குழந்தைகள் வளர்ந்து வருவதை கௌதம ரிஷி ஞானதிருஷ்டியால் அறிந்துவந்து இக்குழந்தைகளது பிறப்பை சேவகன் முதலியவர்களு

குத் தெரிவித்துத் தாமே கிருபருக்கு வில்வித்தை கற்றுக் கொடுத்தனர். இதைக்கண்டு பீஷ்மர் பாண்டவ கௌரவர்களுக்கு கிருபரையே தனுர்வேத ஆசாரியராக முதலில் நியமித்தார்.

வி௲ 97.—இதன்பின்பு யாரிடம் இவர்கள் தனுர்வேதம் பயின்றனர்?

விடை.—கிருபியினது கணவரும், பாரத்வாஜரது துரோண கும்பத்தில் உண்டானவருமான துரோணாசாரியரிடம் இவர்கள் வில்வித்தை பயின்றனர்.

வி௲ 98.—துரோணர் ஹஸ்திநாபுரம் வரக் காரணமென்ன? இவ்வூருக்கு வந்தவுடன் துரோணர் எவ்வாறிருந்தார்?

விடை.—தமது பால்ய ஸ்நேகிதனான துருபதனிட மிருந்து அவன் ஸபையார் முன்னிலையில் இவர் மிகுந்த அவமானத்தை அடைய, அதை ஸஹிக்காமல் அப்பொழுதே அச்சபையில் 'நான் சிறந்த சிஷ்யர்களுக்கு எனது வில்வித்தையைக் கற்றுக்கொடுத்து, ஏ மஹா கருவங்கொண்ட அரசனே! அவர்கள் உன்னை தேரோடு தேராய்க்கட்டி என்முன் கொண்டு வரும்படி செய்கிறேன்' என்று கொடிய சபதத்தைச்செய்து, சிஷ்யர்களை அடைதற் பொருட்டு தனது மைத்துனர் இருக்கும் ஹஸ்திநாபுரம் வந்து அங்கு கிருபரோடு இடை இடையே பாண்டவ கௌரவர்களுக்கு வில்வித்தையை சொல்லிக் கொடுத்து வந்தனர். துரோணர் தமது ஸாமர்த்தியம் யாவையும் கொஞ்சநாள்வரையில் ஒருவருக்கும் தெரியாம லிருக்கும்படி மறைத்துவந்தார்.

வி௲ 99.—இவர் துருபதனிடம் போகக் காரணம் என்ன? அவன் எவ்வாறு இவரை அவமானித்தான்?

விடை.—துரோணர் சிறுவரா யிருக்குங்கால், அக்னி விச்வரிஷியிடம் வில்வித்தைகள் கற்றுக்கொண்டிருக்கையில், இவரோடு துருபதனும் வில்வித்தை கற்கவந்தான். அவர்கள் இருவருக்கும் ஸ்நேகம் உண்டாக அதில் துருபதன் 'எனக்கு பாஞ்சாலதேசாதிபத்யம் கிடைத்தால் இராஜ்யமுதலியவைகள்

எல்லாவற்றையும் நீங்களும் ஸுகமாய் என்னேடு அநுபவிக்க லாம்' என்று அடிக்கடி வாக்களிப்பது வழக்கம். கொஞ்ச காலத்திற்கெல்லாம் துருபதனுக்கு இராஜ்யம்வர துரோண ருடைய ஞாபகமே அவனுக்கில்லாமல் போய்விட்டது. இதன் இடையில் துரோணர் கிருபியை மணந்து அசுவத்தாமன் என்ற ஒரு குழந்தையை யடைந்து, இக்குழந்தைக்குப் பாலில் லாது வருந்துங்கால், துருபதனது வார்த்தை இவருக்கு ஞாப கம் வந்தது. உடனே துருபதன் ஸபைக்குச் சென்று தனக்கும் அரசனுக்கும் உள்ள பால்ய ஸ்னேகத்தை எடுத்துச் சொல்லி ஒரு பசு வேண்டுமென யாசித்தார். அரசன் மிகுந்த கர்வத் தோடு 'என் நிலே என்ன உமது நிலே என்ன நமக்கு ஸ்நேஹம் எப்படி இருந்திருக்கக் கூடும்?' என்று சொல்லி ஸபை நடுவில் துரோணரை அவமதித்தான்.

வினு 100.—இந்த துரோணர் வேறு யாரிடம் வில்வித்தை கற்ருர்?

விடை.—தனது இராஜ்யம் யாவையும் காசியபருக்குத் தானம் செய்து திருப்தி யடைந்திருந்த பரசுராமரிடம் மிகுதியாய் இருந்த தனுர் வித்தையை அவரது அநுக்கிரஹத்தால் துரோணர் பூர்ணமாய்த் தெரிந்துகொண்டார்.

வினு 101.—முன் சொல்லியபடி ரஹஸ்யமாயிருந்த துரோணரது ஸாமர்த்தியம் எவ்வாறு வெளிவந்தது?

விடை.—ஒரு நாள் பாண்டவ கௌரவர்கள் பந்து விளையாடத் தொடங்கினூர்கள். அவர்கள் பந்து கிணற்றில் விழ, யாவரும் திகைத்து நின்றனர். அங்கு அப்பொழுது துரோணர் தற் செயலாய் வர அவரைச் சூழ்ந்துகொண்டு, இவர்கள் நடந்த விஷயத்தைத் தெரிவித்தனர். உடனே அவர் துடைப்பக் குச்சிகளில் ஒரு அஸ்திரத்தை மந்திரித்துவிடப் பந்து கரை மேல் வந்து விழுந்தது. இதைக்கண்டு இராஜ குமாரர்கள் இவரது வல்லமையை பீஷ்மரிடம் சொல்ல, அவர் இவர் யாரென்பதையும், என்ன எண்ணத்தோடு ஹஸ்தினுபுரிக்கு வந்தார் என்பதையும் இவரிடமிருந்தே தெரிந்துகொண்டு, அன்றுமுதல் துரோணரையே இராஜ குமாரர்களுக்கு தனுர் வேத ஆசாரியராக நியமித்தார்.

வினா 102.—யார் யார் எவ்வாறு துரோணரிடம் வில்வித்தை கற்று வந்தார்கள்?

விடை.—இவர்களுள் பாண்டவர்கள் கௌரவர்களைவிட அதி சீக்கிரத்தில் வித்தை கற்றுக்கொண்டார்கள். பாண்டவர்களுள் அர்ச்சுனன் ஒருவனே மிகுந்த கருத்தோடு இவ் வில்வித்தையைக் கற்றுக்கொண்டான்.

வினா 103.—துரோணருக்கு யாரிடத்தில் அதிகப் பிரீதி? இது வரக் காரணமென்ன?

விடை.—துரோணருக்கு அர்ச்சுனனிடத்தில் அதிகப் பிரீதி. இவர் பாண்டவ கௌரவர்களை ஏகாந்தத்தில் அழைத்து, 'என் மனதில் ஒரு குறை இருக்கிறது, அதை நீங்கள், தனுர்வித்தையில் தேர்ச்சியடைந்த பின்னர், பூர்த்தி செய்ய வேண்டும்' என்று அவரிடம் சொல்ல, அர்ச்சுனன் ஒருவனே பூர்த்தி செய்வதாக உறுதி வாக்களித்தான். மற்றையவர் யாவரும் மௌனமாயிருந்தனர். இதுபற்றி துரோணருக்கு அர்ச்சுனனிடம் பிரீதி உண்டாயிற்று.

வினா 104.—இவர்கள் வில்வித்தை பயிலுங்கால் யார் யார் இவரிடம் வில்வித்தை கற்க வந்தது?

விடை.—ஸூரிய புத்திரன் என்று அப்பொழுது வழங்கி வந்த கர்ணன், விருஷ்ணி, அந்தகாள் முதலிய இராஜவம்சத்தவர், ஏகலவ்யன் என்ற வேட அரசன் குமாரன், ஆகிய இவர்களே.

வினா 105.—துரோணருக்கு அர்ச்சுனனிடம் பிரீதி அதிகரிக்கக் காரணம் என்ன?

விடை.—ஒருநாள் தமது பிள்ளையாகிய அசுவத்தாமனுக்கு புதிய ஆயுதங்கள் கற்றுக்கொடுக்க வெண்ணித் துரோணர் மற்றையவர்களை வெளியி லனுப்புவதற்காக ஒவ்வொருவர் கையிலும் வாய் குறுகிய கமண்டலுவைக் கொடுத்துத் தண்ணீர் கொண்டுவரும்படி ஏவ, யாவரும் அதைக் கொண்டுவரப் போயினர். அப்பொழுது தனது பிள்ளைக்கு உபதேசிக்கத் தொடங்னர். உடனே அர்ச்சுனன் அதிசீக்கிரத்தில், நதிக்

கும் போகாது, வருணாஸ்திர மகிமையால் தனது கமண்டலுவை நிறைத்துவந்து அசுவத்தாமனுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட வித்தையைத் தானுங் கற்றான். மேலும் அரண்மனைப் பரிசாரகனுக்கு இருட்டில் அர்ச்சுனனுக்கு சோறிடவேண்டாமென்று துரோணர் கட்டளையிட்டார். அதன்படி ஒருநாள் அர்ச்சுனன் சாப்பிடுகையில் விளக்கணைய பரிசாரகன் அவனுக்குச் சோறிடவில்லை. இப்படிச் செய்த போதிலும் கையானது வாய்க்குச்சரியாய்ப் பழக்கத்தினாற் போவதை கண்ணுற்ற அர்ச்சுனன் வில்வித்தையில் அதிகத் தேர்ச்சியடைய இரவிலும் அதைப் பழகத்தொடங்கினான். இதைக்கண்ட துரோணருக்கு அர்ச்சுனனிடம் இருந்த பிரீதி அதிகரித்தது.

வினு 106.—இப் பிரீதியால் துரோணர் என்ன உபகாரம் அர்ச்சுனனுக்குச் செய்தார்?

விடை.—ஏகலவ்யன் அர்ச்சுனனைவிட தேர்ச்சி அடைவானோ என்ற ஸந்தேகத்தால் துரோணர் அவனை சிஷ்யனாக ஒப்புக் கொள்ளவில்லை. அவனோ துரோணரைப்போல ஒரு பிம்பத்தை செய்து வைத்துக்கொண்டு தனது குருபக்தி விசேஷத்தால் அர்ச்சுனனுக்கு துரோணர் இரஹஸ்யமாய்ச் சொல்லிக்கொடுத்த வித்தைகள் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டான்.

வினு 107.—ஏகலவ்யன் அர்ச்சுனனைவிட அதிகத்தேர்ச்சி யடையாதபடி எப்படி துரோணர் தடுத்தார்?

விடை.—துரோணரது அனுமதியின்பேரில் பாண்டவ கௌரவர்கள் காட்டுக்கு வேட்டைக்காகப் புறப்பட்டார்கள். அங்கு ஏகலவ்யனது சிலம்பக் கூடத்தருகில் போகுங்கால் அவனைக் கண்டு அவர்கள் பின் வந்த நாய்குலைக்க, ஏகலவ்யன் ஏழு பாணத்தால் நாயின் வாயை காயப்படுத்தினான். இந்த வித்தை அர்ச்சுனனுக்கு மாத்திரம்தான் துரோணர் சொல்லி இருந்தார். இதைக்கண்டு அர்ச்சுனன் திகைத்து "நீ யார் என்று கேட்க" வேடன் "நான் துரோணர் சிஷ்யன்" என்றான். இதை அர்ச்சுனன் துரோணரிடம் சொல்ல அவ

ரும், இவன் கூடவே ஏகலவ்யனிடம் வந்து "எனக்குக் குரு தக்ஷிணையாக உனது வலதுகை கட்டை விரலைக்கொடு" என, ஏகலவ்யன் உடனே யோசியாது கொடுத்துவிட்டான். இதனால் இவனுக்கு வில்லிழுக்க முடியாமலேபோக, அர்ச்சுனனை மிஞ்ச இடமில்லாமல் போய்விட்டது.

வின 108.—தமது சிஷ்யர்களை துரோணர் எவ்வாறு பரீக்ஷித்தார்?

விடை.—ஒரு மரத்தின் பேரில் ஒரு பட்சி உட்கார்ந்திருக்கக் கண்டு அதை வரிசையாய் ஒவ்வொருவரையும் குறிவைக்கச் சொல்லி தன் உத்தரவின்பேரில் அம்பெய்யும்படி கட்டளையிட்டார். ஒவ்வொருவனும் குறிபார்த்தவுடன், 'உன் கண்ணுக்கு என்ன தெரிகிறது' என்று துரோணர் கேட்க, ஒவ்வொருவனும் சுற்றுமுற்றுமுள்ள ஸகல வஸ்துக்களும் என் கண்ணில் படுகின்றன, என அவர்களை அப்புறம் போகச் செய்தார். கடைசியில் அர்ச்சுனனைக்கேட்க அவன் "எனக்கு பட்சி மாத்திரம் தான் தெரிகிறது, வேறொன்றும் தெரியவில்லை" என, "அம்பு எய்" என்று துரோணர் கட்டளையிட்டார். உடனே பட்சி அர்ச்சுனன் அம்புபட்டுக் கீழே விழுந்தது. இதனால் துரோணர் அர்ச்சுனனது திறமையை யாவரும் அறியும்படி வெளியிட்டார்.

வின 109.—இதன்பின்பு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—துரோணர் தமது சிஷ்யரோடு கங்கைக்கு நீராடச்சென்றார். அங்கு அவரை ஒரு முதலை பிடித்துக்கொண்டது. தம்மைக் காக்குந்திறமை தமக்கு இருந்தும் சிஷ்யரைக் கூவி யழைத்து முதலையைக்கொன்று தன்னை விடுவிக்கும்படி உத்தரவுசெய்தார். சிஷ்யர்கள் யாவரும் ஒன்றும் செய்யத் தோன்றாது திகைத்து நின்றனர். உடனே அர்ச்சுனன் ஐந்து பாணங்களைப் பிரயோகித்து முதலையைக் கொன்று ஆசாரியரை விடுவித்தான். அப்பொழுது துரோணர் ஸந்தோஷத்தால் அர்ச்சுனனுக்குப் பிரம்மசிரோஸ்திரத்தை உபதேசித்து அதன் பிரயோகத்தையும் கற்றுக்கொடுத்தார்.

வினு 110.—இவ்வாறு பாண்டவ கௌரவர்கள் அஸ்திரவித்தை, வில்வித்தை இவைகளில் தேர்ச்சியடைந்த பின்பு துரோணர் என்ன செய்தார்? என்ன விசேஷம் நடந்தது?

விடை.—இவர்களது ஸாமர்த்தியத்தை யாவரும் அறிவதற்காக பீஷ்மர் முதலிய பெரியோர்களது எண்ணப்படி ஒரு பரீக்ஷை ஏற்படுத்தினுர். இதற்காக ஊருக்கு வெளியில் மைதான ஸ்தலத்தில் யாவரும்வந்து கூடினுர்கள். அப்பொழுது பாண்டவ கௌரவர்கள் தமது ஸாமர்த்தியத்தை வெளியிட்டார்கள். யாவரும் இதைக் கண்டு வியந்தார்கள். குந்தி காந்தாரி திருதராஷ்டிரர் இவர்களுக்கு, குழந்தைகள் செய்யும் அற்புத காரியங்களை விதுரர் சொல்லிக்கொண்டு வந்தார்.

வினு 111.—இதில் ஏதாவது சண்டை உண்டாயிற்ரு?

விடை.—முதலில் பீமனுக்கும் துரியோதனனுக்கும் விளையாட்டா யுண்டான வீரியம் உண்மையான சண்டையாகவே முடிந்தது. சப்தம் அதிகரித்துப் பரீட்சை அபாயகரமாவதைக் கண்ட துரோணர் இவர்களை விலக்கும்படி அசுவத்தாமனுக்கு கட்டளையிட்டார். உடனே அசுவத்தாமன் பீமனுக்கும் துரியோதனனுக்கும் மத்தியில் சென்று சண்டையை விலக்கினுன்.

வினு 112.—இதற்குப்பின் யார் யார் தமது திறமையைக் காட்டினுர்கள்?

விடை.—துரோணருடைய உத்தரவின்படி அர்ச்சுனன் தனது திறமையின் விசேஷத்தை காட்டத் தொடங்கினுன். உடனே அர்ச்சுனனது திறமையை யாவரும் வியந்து ஆரவாரித்தனர். அர்ச்சுனன் காட்டிய விசித்திர வித்தை எல்லாவற்றையும் கர்ணனும் காட்டினுன்.

வினு 113.—உடனே துரியோதனன் என்ன செய்தான்? இதனுல் என்ன விளைந்தது?

விடை.—உடனே துரியோதனன் ஸாரதியின் புத்திரனுகிய கர்ணனை ஸ்நேகிதம் செய்துகொண்டான். இப்படியானதும் இவனுக்கு கர்வம்வர அர்ச்சுனனைத் தன்னேடு யுத்தம்

செய்யும்படி அழைத்தான். அப்பொழுது இருவரும் மிகுந்த ஆவேசத்தோடு சண்டை செய்யத்தொடங்கினார்கள்.

வினா 114.—இத் தருணத்தில் யுத்தம் உண்டாக என்ன தடை ஏற்பட்டது? அது எவ்வாறு நிவர்த்திக்கப்பட்டது?

விடை.—இத் தருணத்தில் கிருபாசாரியர் எழுந்து கர்ணனை நோக்கி "நீ உன் குலம், கோத்திரம் உனது வம்சோத் தாரகரான அரசர்களது பெயர் இவைகளை வெளியிட்டால் மாத்திரம் தான், அர்ச்சுனன் உன்னோடு எதிர்த்துப் போர் செய்வான். நல்ல க்ஷத்திரியருக்கு தம்மைவிட தாழ்ந்தவரை எதிர்த்தல் கௌரவக் குறைவு" என்று எடுத்துரைத்தார். கர்ணன் ஒன்றும் பதில் சொல்லமாட்டாமல் வெட்கிநின்றான். அத்தருணத்தில் துரியோதனன் தனது தோழனைக் காப் பாற்றுவதற்காக கிருபரை நோக்கி, "அரச வம்சத்தில் பிற வாதிருந்தபோதிலும் மூன்று திறத்தார் அரசரெனக் கொண் டாடப்படுவார். அவர்கள், நல்ல குடிப்பிறந்தோர், மஹா வீரர், ஸேனாபதிகள் ஆகிய இவர்களே. இப்பொழுது இவன் அரசனல்லவே, ஆதலால் இவனை எப்படி எதிர்ப்பது என்று அர்ச்சுனன் யோஜித்தால், கர்ணனை இப்பொழுதே நான் அங்கதேசாதிபதி யாக்குகிறேன். இனிமேல் போர் நடக்க என்ன தடை" என்று சொல்லி கர்ணனுக்கு வந்த அவ மானத்தை நிவர்த்திசெய்ய அவனுக்கு துரியோதனனிடம் இருந்த பிரீதி அதிகரித்துவிட்டது.

வினா 115.—இவ்வாறு கர்ணன் அங்க தேசாதிபதியாய் யாவரும் வியக்கும்படி பாணவித்தைகளைக் காட்டினதும் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—அந்த ஸமயத்தில் கர்ணனை எடுத்து வளர்த்த ஸாரதி அந்த ரங்க ஸ்தலத்திற்கு வர, பார்த்தவர்கள் நகைப்பரே என்று வெட்கமில்லாமல், தன்னை வளர்த்த பிதாவாகிய ஸார திக்கு கர்ணன் வந்தனைவழிபாடுகள் செய்து, அவனைத்திருப்தி செய்வித்துத் தனது பெருந் தன்மையை வெளியிட்டான். இதைக்கண்ட பீமன் கர்ணனை ஸாரதி புத்திரன் என்று பரி ஹாஸம் செய்ய துரியோதனன் கோபத்தோடு க்ஷத்திரி

யருக்கு அடையாளம் பலமே ஒழிய பிறப்பல்ல வென்று சொல்லிவிட்டு, வீட்டுக்கு தன் பரிவாரங்களோடு சென்று அர்ச்சுனனால் தனக்கு உண்டான பயம் கர்ணனது ஸ்நேகத்தால் நிவர்த்தியாக, ஸுகமாய் வாழ்ந்தான்.

வினு 116.—இவ்வாறு பாண்டவ கௌரவர்கள் கற்றுத்தேர்ந்த பின் துரோணர் என்ன குரு தக்ஷிணை கேட்டார்?

விடை.—பாஞ்சால தேசத்தரசனாகிய துருபதனை தேர்க்காலோடு கட்டித் தம்முன் கொண்டுவந்து விடவேண்டும் என்று தம் உள் எண்ணத்தை வெளியிட்டு குருதக்ஷிணை கேட்டார்.

வினு 117.—இவர்கள் எவ்வாறு குரு தக்ஷிணை கொடுத்தார்கள்.

விடை.—முதலில் கௌரவர்கள் துருபதராஜன் பட்டணத்தை முற்றுகை போட்டுக் கடைசியில் அவனை பிடிக்கமாட்டாது, தோல்வியடைந்து ஓடத் தலைப்பட்டார்கள். இந் நிலையைக் கண்ட பஞ்சபாண்டவர் ஐவரும் உடனே பட்டணத்தைத் தம் ஸேனையால் வளைத்துக்கொண்டு, கொடும்போர் செய்ய கடைசியில் அர்ச்சுனன் வெகு தந்திரமாய் துருபதராஜனை பிடித்து தேரோடு கட்ட, யாவரும் துரோணரிடம் இவ்வரசனைக் கொண்டுபோய் விட்டனர்.

வினு 118.—இப்படி வந்த துருபதனை துரோணர் என்ன செய்தார்?

விடை.—"இப்பொழுதாவது நான் உனது ஸ்நேகத்திற்குத் தகுந்தவனாக உனக்குத் தோற்றுகிறதா? நீ பயப்படாதே, உன்னை நான் கொல்லமாட்டேன்" என்று சொல்லிக்காட்டி, "நான் அரசனாய் இல்லாதகாலத்தில் நீ எவ்வாறு என்னோடு ஸ்நேகிக்க முடியும்? ஆகையால் உன் இராஜ்யத்தில் பாதி என்னைச் சேர்ந்தது, மற்றப்பாதியை நீ ஆளலாம்" என்று சொல்லி அவனை இசையும்படி செய்து பின்பு கட்டவிழ்த்துவிட, அரசன் அன்றுமுதல் பாஞ்சால தேசத்தின் பாதிபாகத்தை ஆண்டுவந்தான்.

வினு 119.—இப்படி துரோணர் செய்தபின்பு துருபதன் மனம் எவ்வாறு இருந்தது?

விடை.—துரோணரைக் கொல்லத்தக்க ஒரு பிள்ளையையும், தன்னை வெகு தந்திரமாய் பிடித்துத் தேர்க்காலோடு கட்டி வந்த அர்ச்சுனனுக்குத் தக்க ஒரு பெண்ணையும் தான் அடைய வேண்டுமென்ற எண்ணம் துருபதனுக்கு உண்டாக, அன்று முதல் அவன் இதற்குவேண்டிய யத்தனங்கள் செய்யத் தொடங்கினான்.

விஞ 120.—இவ்வாறு பாண்டவர்கள் குரு தக்ஷிணை கொடுத்ததும் என்ன நடந்தது?

விடை.—தருமபுத்திரருக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் நடந்தது. இவர் பாண்டுவைவிடச் சிறந்தவர் என்று யாவரும் புகழும் படி தர்ம நெறி தவறாது நடந்துவந்தார். இக்காலத்தில் பீமன் பலராமரிடமிருந்து கதாயுத்த வகைகளைத் தெரிந்து கொண்டு மஹா பலவானானான். அர்ச்சுனன் துரோணரிட மிருந்து இன்னும் புதிதாகிய அரிய அஸ்திரங்களை யறிந்து கொண்டு மிகச்சிறந்த வில்லாளியானான். அப்பொழுது துரோணரது வேண்டுகோளின்படி அவர் தன்னை எதிர்க் குங்கால் தானும் அவரைக் கூசாது எதிர்ப்பதாக அர்ச்சுனன் ஒப்புக்கொண்டான். நகுலனும் சிறந்த யுத்தவீரனாகப் பிர காசித்தான். ஸஹாதேவனோ துரோணரிட மிருந்த தர்ம சாஸ்திர விஷயங்கள் யாவையும் ஐயந்திரிபறக் கற்றுக் கொண்டு சிறந்த புத்திமானானான். பாண்டவர்கள் தமது தகப்பனால் வெல்லமுடியாத அரசர்களைக்கூட வென்று மஹா தேஜோவான்களாய் விளங்கினர்.

விஞ 121.—இப்படிப் பாண்டவர்கள் விருத்தி யடைவதைக்கண்டு யார் யார் என்னென்ன வெண்ணினார்கள்?

விடை.—ஜனங்கள் யாவரும் திருப்தியோடு பாண்டவர்களைப் புகழ்ந்து பேசினர். பீஷ்மர், விதுரர், யுயுத்ஸு, துரோணர், கிருபர் முதலிய தர்மாத்மாக்கள் யாவரும் ஆனந்தித்தனர். ஆனால் திருதிராஷ்டிரனுக்கும், விகர்ணனைத்தவிர மற்றைய துரியோதனாதியருக்கும் அடங்காப் பொறாமை வந்துவிடப் பாண்டவர்கள் ஐவரையும் எப்படியாவது ஒழித்துத் தமது

கீர்த்தியை நாட்டி தாம் நிலைபெறவேண்டுமென்று அவர்களுக்குத் தோன்றியது.

வினு 122.—துரியோதனுதியர் பாண்டவரிடத்தில் இருந்த விரோதத்தை எவ்வாறு முதலில் வெளியிட்டார்கள்?

விடை.—துரியோதனுதியர் திருதிராஷ்டிரனோடு ஆலோசித்து பாண்டவர்களை மெதுவாய் வாரணுவதம் (பிரயாகை) என்ற பட்டணத்திற்கு அனுப்பிவிட்டுத் தாம் ஹஸ்திணுபுரியில் தமது கீர்த்தியை நிலை நிறுத்த எண்ணினுர்கள். பாண்டவர்களை அடியோடு ஒழிப்பதற்கு அவர்களை வாரணுவதத்தில் புரோசனன் என்ற தச்சனுல் முன்னமேயே கட்டப்பட்ட அரக்குமாளிகையில் இறங்கும்படிசெய்து, பாண்டவர்கள் நிச்சிந்தையாய்த் தூங்கும் ஓரிரவில் அந்தமாளிகையைக் கொளுத்தி விடும்படி புரோசனனை ஏவி பாண்டவர்களோடு கூடவே அனுப்பிவிட்டார்கள்.

வினு 123.—இதைத் தெரிந்துகொண்டு யார் எவ்வாறு பாண்டவர்களுக்கு உதவி செய்தது?

விடை.—விதுரர் இதைத் தெரிந்துகொண்டு, முன்பு யுதிஷ்டிரருக்கு மாத்திரம் மிலேச்ச பாஷையில் ஜாடையாக அரக்கு மாளிகையின் ஸ்வரூபத்தையும், அவர்கள் கூடவே வரும் புரோசனனது மோசக்கருத்தையும் வெளியிட்டார்.

வினு 124.–இதைத் தெரிந்துகொண்டு தருமபுத்திரர் என்ன செய்தார்? புரோசனன் பின்பு என்ன செய்தான்?

விடை.—தருமபுத்திரர் ஒன்றும் தெரியாதவர்போல் குந்தி தனது தம்பிமார் யாவரையுங் கூட்டிக்கொண்டு, வாரணுவதம் சென்று அவர்களுக்காகத் தயாராய் இருந்த அரக்கு மாளிகையில் வாஸம் செய்து வந்தார். புரோசனனும் கொஞ்சகாலம் தனது எண்ணப்படி மாளிகையைக் கொளுத்தி விடாது நல்ல ஸமயம் பார்த்துக்கொண்டு சும்மா விருந்தான்.

வினு 125.—இப்படி இருக்கையில் விதுரர், பாண்டவர்கள் தப்புவித்துக்கொள்ள வேறு என்ன ஏற்பாடுகள் செய்தார்?

விடை.—தமக்குத் தெரிந்தவனும், நல்ல நம்பிக்கை யுடையவனுமுள்ள ஒரு சுரங்கம் வெட்டுபவனை தருமபுத்திரரிடம் அனுப்பி, இரகஸ்யமாய் அரக்குமாளிகையிலிருந்து கங்கைக் கரைவரையில் ஒரு சுரங்கம் இயற்றி அரக்குமாளிகையுள் இருக்கும் இதன் வாயை ஒரு கற்பாறையால் அடைத்துவிட்டு, தருமபுத்திரரிடம் இந்தச் சுரங்கத்தின் ரகஸியங்களைச் சொல்லி வரும்படி கட்டளையிட்டார். மேலும் அவர் கங்கைக் கரையில் சுரங்கத்தின் வாயண்டையில் ஒரு குறிப்பிட்ட இராத்திரியில் தப்பி வரும் பாண்டவர்கள் எளிதில் கங்கையைக் கடப்பதற்காக ஒரு நம்பிக்கையான ஓடக்காரனைத் தனது ஓடத்தோடு இருக்கும்படி செய்து இதையும் யுதிஷ்டிரரிடம் வெகு ரகஸ்யமாய்த் தெரிவித்தார்.

வினு 126.—யுதிஷ்டிரர் இவைகளைத் தெரிந்துகொண்டு என்ன செய்தார்? பின் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—இவ்விஷயங்கள் யாவையும் பீமஸேனனிடம் சொல்ல, அவன் விதுரரால் குறிப்பிட்ட இரவில் அரக்கு மாளிகையைக் கொளுத்திவிட்டு சுரங்கத்தின் வழியாய்த் தனது தம்பிமார், தாயார் இவர்களை தூக்கிக்கொண்டு போவதாகத் தீர்மானித்தான். இதே மாதிரி குறிப்பிட்ட நாள் இரவு வரவே புரோசனன் முதலியவர்கள் ஒரு ஸந்தேகமு மின்றி உறங்குகையில், பீமன் கொள்ளிக் கட்டையை எடுத்துக்கொண்டு அரக்குமாளிகையின் நான்கு புறங்களிலும் நெருப்பை வைத்துவிட்டு, தனது தம்பிமார், தாயார் இவர்களைத் தனது தோளிலும், முதுகிலும், கையிலும் தூக்கிக்கொண்டு, தனது காலால் சுரங்கத்தின் கல்லைப் பிரட்டிவிட்டு, அதன் வழியாய் கங்கைக் கரையை அடைந்தான். அங்கு ஓடக்காரன் தயாராய் இருக்க, கங்கையைக் கடந்து அக்கரையில் இருந்த ஹிடும்ப வனத்துட்சென்று பீமன் தனது உறவினர்களை மெதுவான ஓர் இடத்தில் படுக்க வைத்துவிட்டு காவல் காத்து வந்தான்.

வினு 27.—அரக்குமாளிகை தீப்பற்றி எரிந்தபின்பு வாரணாவதவாஸிகள், திருதிராஷ்டிரன் முதலியோர் என்ன செய்தார்கள்?

விடை.—வாரணுவத வாஸிகள், திருதிராஷ்டிரன் முதலியவர்களைப் பழித்தார்கள். திருதிராஷ்டிரன் முதலியோர் அதிக துக்கப்படுவதுபோலப் பாசாங்கு செய்தார்கள். பாண்டவர்களுக்கு வேண்டியவர்கள் துக்கக் கடலில் ஆழ்ந்தனர். விதுரர் மாத்திரம் இவைகளை எல்லாம் பார்த்து துக்கிக்காது மனத்துள் நகைத்து வந்தார். விதுரரைத் தவிர யாவரும் பாண்டவர்கள் அநியாயமாய் இறந்தனர் என்றே எண்ணினுர்கள்.

வினு 128.—பாண்டவர்கள் ஹிடும்ப வனத்திற்கு போனுர்களே அங்கு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—அந்த வனத்துக்கு அதிபதியான ஹிடும்பாஸுரன் மனிதர் வந்திருப்பதாக நாற்ற மூலமாய்த் தெரிந்துகொண்டு தனது தங்கை ஹிடும்பியை மனிதர்கள் எங்கு இருக்கிருர்கள் என்று பார்த்துவர அனுப்பினுன். அவள் வந்து மஹா கம்பீரமாய் உட்கார்ந்திருக்கும் பீமனைக் கண்டதும் இராக்ஷஸ குணம் போய், அவனுக்கு பீமனை கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்ற நல்ல எண்ணம்வர, பீமனிடம் சென்று அவனுக்கு தனது தமையனுல் வரும் அபாயத்தைத் தெரிவித்து, அவர்கள் தப்புவதற்கு வேண்டிய உபாயம் சொன்னுள். பீமன் இதைக் கவனியாது தைரியமாய் இருப்பதைக் கண்ணுற்ற ஹிடும்பிக்கு அவனிடம் இருந்த காதல் அதிகரிக்க, பீமனேடு பேசிக்கொண்டே அவனது அழகைப் பார்த்துப் பிரமித்து, அங்கு வெகு நாழிகை தனது தமையனது கட்டளையை மறந்து நின்றுவிட்டாள்.

வினு 129.—இதற்குள் ஹிடும்பன் என்னசெய்தான்? இது என்னமாய் முடிந்தது?

விடை.—வெகு நாழிகை தன் தங்கை வராதது கண்டு, தங்கைக்குப் போனவிடத்தில் என்ன அபாயம் வந்ததோ என்று பயந்து, ஹிடும்பன் கோபமாய் பீமனிருக்குமிடம் வர, அங்கு தனது தங்கை வெட்கத்தோடும், அடக்கத்தோடும் நிற்பதை அவன் கண்டான். உடனே பீமன் தனது தங்கையை ஏதோ மந்திராதிகளால் கட்டிவிட்டான் என்ற எண்ணம்

வர ஹிடும்பனுக்கு அடங்காக்கோபம் வந்தது. உடனே பீமனோடு சண்டைக்குப்போனான். கொஞ்ச நேரம் இருவரும் சப்தம் அதிகம் உண்டாகாமல் சண்டைசெய்து கடைசியில் பீமன் ஹிடிம்பனைக் கொன்றான்.

வின 130.—ஹிடும்பன் இவ்வா றிறந்ததும் ஹிடும்பி கதி என்ன வாயிற்று?

விடை.—ஹிடும்பனுக்கும், பீமனுக்கும் சண்டைநடந்து கொண்டிருக்கையில் உண்டான சப்தத்தால் குந்தி முதலானவர்கள் எழுந்திருக்க, அவர்களுக்கு ஹிடும்பி தனது எண்ணத்தை வெளியிட்டு வெகுவாகச் சொன்னாள். அவர்கள் ஹிடும்பியினது வேண்டுகோளுக் கிசைந்து, மத்தியான மெல்லாம் பீமனோடு ஸுகமாய் இருந்துவிட்டு, இரவில் பீமனைத் தம்மிடம் கொண்டுவந்து விட்டுவிட வேண்டுமென்று ஹிடும்பிக்குக் கட்டளையிட்டார்கள். பீமனோ தனது தாய் முதலியவர்களது வார்த்தைக்கு இசைந்து, ஹிடும்பிக்கு ஒரு பிள்ளை உண்டாகிறவரையில் அவளோடிருப்பதாகவும், பின்பு போய்விடுவெதாகவும் அவளுக்கு வாக்களித்து கொஞ்சகாலம் அவளோடு அங்கேயே ஸுகித்திருந்தான்.

வின 131.—ஹிடும்பிக்குப் பிள்ளை பிறந்ததா? அந்தப் பிள்ளை என்ன செய்தான்?

விடை.—ஹிடும்பிக்கு கொஞ்ச காலத்திற்கெல்லாம் பீமனைப்போல் மஹா வீர்யவானான கடோத்கசன் என்ற ஒரு பிள்ளை பிறந்தான். உடனே கடோத்கசன் பாண்டவர்களிடம்வந்து "நீங்கள் எப்பொழுது காரியார்த்தமாய் என்னை நினைக்கிறீர்களோ அப்பொழுது நான் உங்களுக்கு என்னாலியன்ற ஸஹாயம் செய்யத் தயாராய் வந்துவிடுகிறேன்" என்று வாக்குக் கொடுத்துவிட்டு தனது தாயைக் கூட்டிக்கொண்டு இஷ்டப்படி அந்த வனத்தில் உலாவி வந்தான்.

வின 132.—இதன் பின் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்? யார் இக்காலத்தில் இவர்களுக்கு எவ்வாறு உதவிசெய்தார்கள்?

விடை.—பாண்டவர்கள் காட்டுவழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில், இவர்கள் கண்முன் பாட்டனாரான வியாஸ மஹாரிஷி

தோன்றி, பாண்டவர்களைத் தேற்றி, இவர்களுக்கு பிராம் மண வேஷம் போட்டு, பக்கத்தில் இருந்த ஏகசக்கிரபுரி என்ற பட்டணத்திற்கு இவர்களை கூட்டிக்கொண்டு போனார். அங்கே தான் மறுபடியும் வரும்வரையில் இவர்களை பிராம் மணர் வீட்டில் இருக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு வியாஸர் மறைந்தார்.

வினு 133.—பாண்டவர்கள் ஏகசக்கிர நகரத்தி லிருக்கும்பொழுது என்ன நல்ல காரியம் செய்தார்கள்?

விடை.—குந்தியின் உத்தரவின்படி, பீமன் அவர்களிருந்த வீட்டுக் காரர் கொடுத்த சோற்று வண்டியைக் காட்டுக்குக் கொண்டு போய் அங்கு வயிருர அதில் உள்ள உணவுகளைப் புசித்து, அவ்வுணவுக்காக வெகு பசியோடு வந்த பகாஸுரன் என் பவனோடு வெகு நாழிகை சண்டைசெய்து கடைசியில் அவ னைக் கொன்றுவிட்டான். அப் பட்டணத்திற்கு அதுவரை யில் பகாஸுரனால் நேரிட்டிருந்த பயத்தை இவ்வாறு பீமன் நிவர்த்தி செய்தான்.

வினு 134.—பகன் யார்? அவன் ஏகசக்கிர நகரத்தவரை எவ் வாறு வருத்தி வந்தான்?

விடை.—இவன் ஏகசக்கிர நகரத் தருகிலுள்ள ஒரு 10,000-யானை பலமுள்ள இராக்ஷஸன். இவன் அடிக்கடி பட்டணத்துள் வந்து அங்கு அகப்படுவர் எல்லோரையும் வயிறு நிறைகிற வரையில் தினம் புசித்துவிட்டுப் போவதுவழக்கம். இதை ஸகிக்கமுடியாமல் அவ்வூரார் பகனோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதன்படி ஊரார் ஒழுங்காய் ஒவ் வொருநாளைக்கு ஒவ்வொரு வீட்டுக்காரராக ஒருவண்டிநிறைய சோற்றையும், அதற்கு வேண்டிய உபகரணங்களையும் அந்த வண்டியில் கட்டி இருக்கும் எருதுகளையும் அதை ஓட்டும் ஒரு சிறுபிள்ளையையும் பகனுக்கு ஆகாரமாகக் கொடுப்ப தாகவும், அதற்குப் பதிலாக பகன் அகப்பட்டவரை புசியா மலும் வேறொருவர் ஊராரை வருத்தாமலும் அவர்களைப் பாதுகாத்து வருவதாகவும் ஏற்பாடு செய்யப்பட்டது. தினம்

ஒரு பிள்ளையை இழப்பது என்பது பகனால் ஏற்பட்ட ஒரு பெரிய துன்பமாக ஊரார் எண்ணி துக்கித்து வந்தனர்.

வினா 135.—இவ்வூர்க் கதை குந்திக்கு எப்படித் தெரியவந்தது? குந்தி அப்பொழுது என்ன செய்தாள்?

விடை.—பாண்டவர்கள் அங்கு வாஸம் செய்கையில் அவர்கள் இறங்கி இருக்கும் வீட்டுக்காரன் பகனுக்குச் சோறு படைக்க வேண்டிய தினம் வர அவ்வீட்டுக்காரர்கள் தமது அருமைக் குழந்தை ராக்ஷஸனுக்கு அநியாயமாய் இரையாகி மாளப் போகிறானே என்று கூக்குரலிட்டு அழத்தொடங்கினார்கள். இதைக் குந்தி கேட்டு ஓடிவந்து அவர்களிடம் இருந்து பகனது கொடுமையைத் தெரிந்துகொண்டு அவர்களைத் தேற்றி தனது பிள்ளைகளுள் ஒருவனை அன்றைக்கு வண்டி ஓட்ட அனுப்புவதாகச் சொல்லி பீமனை அன்று வண்டியை ஓட்டிப் போகும்படி ஏற்பாடுசெய்து, பகாஸுரனை ஸம்ஹாரம் செய்வித்து, ஏகசக்கிரபுரிக்கு நன்மையை உண்டாக்கினாள்.

வினா 136.—ஊரார் பகாஸுரன் எவ்வாறு இறந்ததாக எண்ணினார்கள்?

விடை.—குந்தியின் வேண்டுகோளின்படி அவர்கள் இறங்கி இருந்த வீட்டுப் பிராம்மணர் உண்மையை ஒளித்து யாரோ ஒரு மஹாப்பிராம்மணர் தன்மேல் கருணைகூர்ந்து தமது மந்திர பலத்தால் பகனை ஸம்ஹரித்தார் என்ற வதந்தி உண்டாகிவிட, அது ஊரெங்கும் பரவிற்று. இவ்வதந்தியே ஸத்தியமென ஊரார் நம்பி இருந்தனர்.

வினா 137.—இந்த ஸத்கிருத்யம் முடிந்ததும் பாண்டவர்களுக்கு என்ன நல்ல ஸமாசாரம், யார் வந்து சொன்னார்கள்?

விடை.—பாண்டவர்கள் இறங்கி இருக்கும் வீட்டில் ஒரு பிராம்மணசிரேஷ்டர் வந்து தமது யாத்திரை விசேஷங்களைச் சொல்லி வருகையில், பாஞ்சாலதேசத் தரசனும் துரோணரது ஸ்நேகிதனுமான துருபதனுக்கு சிகண்டி திரௌபதி, திருஷ்டத்யும்னன் ஆகிய இக் குழந்தைகள் உண்டான

விதத்தையும், அப்பொழுது திரௌபதிக்கு ஸ்வயம்வரம் நடக்கப்போகிறது என்பதையும், எடுத்து வெளியிட்டார்.

வினு 138.—இந்த திரௌபதி, திருஷ்டத்யும்னன் யார்? இவர்கள் எவ்வாறு பிறந்தார்கள்?

விடை.—துருபதன், துரோணர் தன்னை ஹஸ்தினுபுரியில் அவமானித்த உடன், இரண்டு எண்ணங்களோடு புறப்பட்டு, அதைப் பூர்த்திசெய்ய ஸதாமுயன்முன் என்று 119-ம் விடையில் சொல்லியிருக்கிறேம். இதற்காகக் காடெங்கும் திரிந்து ஒரு பிராம்மண சிரேஷ்டரைக் கண்டுபிடித்து அவரால் ஒரு யக்ஞத்தை நடத்தி அந்த யக்ஞகுண்டத்திலிருந்து துரோணரைக் கொல்லத்தக்க திருஷ்டத்யும்னன் என்ற பிள்ளையையும், அர்ச்சுனனுக்குத் தக்க கிருஷ்ணை என்ற பெண்ணையும் அடைந்தான்.

வினு 139.—இக் கதைகளைக் கேட்ட பாண்டவர்களுக்கு என்ன எண்ணமுண்டாயிற்று?

விடை.—பாண்டவர்கள் ஐவருக்கும் த்ரௌபதி ஸ்வயம்வரத்திற்குப் போகவேண்டுமென்று தோன்ற குந்தியும் இதற்கிசைந்தாள்.

வினு 140.—இந்த எண்ணத்தை யார் எவ்வாறு ஸ்திரப் படுத்தியது?

விடை.—வியாஸர் முன்சொல்லிப் போயிருந்தபடி பாண்டவர்கள் முன் தோன்றி திரௌபதியின் பூர்வஜன்ம சரித்திரத்தில் ஒரு பாகத்தைச்சொல்லி அவளே பாண்டவர்களுக்கு பெண்சாதியாகப்போகிறுள் என்றும், அவளால் பாண்டவ குலத்திற்கு மேன்மை வரப்போகிறதென்றும் எடுத்துக்காட்டி பாண்டவர்களது எண்ணத்தை உறுதிப்படுத்தினுர்.

வினு 141.—வியாஸர் திரௌபதியின் பூர்வஜன்ம சரித்திரத்தில் எந்த பாகத்தைச் சொன்னுர்?

விடை.—திரௌபதி பூர்வஜன்மத்தில் சங்கரரைக்குறித்து தபஸு செய்து 'எனக்கு பதிவேண்டும்' என்று ஐந்து தடவை சங்கரரைக் கேட்டதால், பகவான் 'உனக்கு அடுத்த ஜன்மத்

தில் ஐந்து புருஷர் ஏற்படுவார்கள்' என்று சொல்லிப் போன தாக உள்ள சரித்திர பாகத்தை வியாஸர் பாண்டவர்களுக் குச் சொன்னார்.

வினு 142.—திரௌபதி ஸ்வயம்வரத்திற்காகப் பாண்டவர்கள் போகையில் என்ன ஆபத்து நேரிட்டது? அது எப்படித் தீர்ந்தது?

விடை.—இவர்கள் இரவும் பகலும் வழிநடந்து போகையில், இர வில் முன்புறம் அர்ச்சுனன் ஒரு தீவட்டியைப் பிடித்துப் போவது வழக்கம். ஓரிரவில் கங்கைக்கரையில் வந்து அதைத் தாண்ட யத்தனிக்கையில், அங்கு ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்த சைத்ரரதன் என்ற கந்தர்வராஜன் இவர்களைத்தடுக்க, மிகுந்த சண்டை உண்டாயிற்று. இதில் கடைசியாக அர்ச்சுனன் தனது கையிலிருந்த தீவட்டியில் ஆக்னேயாஸ்திரத்தை மந்திரித்துவிட, அது சென்று கந்தர்வ ராஜனது இரதம் முதலியவைகளைக் கொளுத்தி, அவனைக் கீழே தள்ளியது. உடனே அர்ச்சுனன் கந்தர்வனைப் பிடித் துக்கொல்ல யத்தனிக்கையில், அக்கந்தர்வனது பெண்சாதி தன் தமயன் இவர்களது வேண்டுகோளின்படி கந்தர்வ ராஜனை உயிரை வாங்காது அர்ச்சுனன் விட்டுவிட்டான்.

வினு 143.—இப்படித் தோல்வி யடைந்ததும் கந்தர்வன் என்ன செய்தான்?

விடை.—தனக்கும், அர்ச்சுனனுக்கும் ஸ்நேகம் ஸதா இருக்க வேண்டும் என்கிற எண்ணத்துடன், மனுவினிடமிருந்து பரம் பரையாய் வந்ததும், ஒருவன் நினைத்தவைகளை யெல்லாம் அவன் கண்முன் கொண்டுவந்து காட்டும் திறனுடையது மான சாக்ஷுஷி என்கிற மந்திரத்தையும், தன்னிடமிருந்த மஹா மகிமை வாய்ந்த குதிரைகளையும் அர்ச்சுனனுக்கு நல்ல மனதோடு கொடுத்து, அவனிடமிருந்து ஆக்னேயாஸ் திரத்தைக் கற்றுக்கொண்டான். இதன் பின்பு அர்ச்சுனன் தன்னை ஜயித்ததற்கு அவனது பிரம்மசரியமும், தான் ஸ்திரீ மத்தியத்தி லிருந்ததுமே காரணமென்று எடுத்துக் காட்டி, பின்பு பாண்டவர்களுக்கு ஒரு புரோஹிதரால்

அரசனுக் குண்டாகும் நன்மைகளை எடுத்துச்சொல்லி, கூடிய சீக்கிரத்தில் ஒரு நல்ல புரோஹிதரை அடைய வேண்டும் என்று அவர்களுக்கு புத்திமதி கூறினான்.

வினு 144.—இவ்வாறு புத்திமதி கூறி வருங்கால் சைத்ரரதன் என்ன சரித்திரத்தை சொல்லவேண்டி நேர்ந்தது? ஏன்?

விடை.—புத்திமதி கூறிவருங்கால் அர்ச்சுனனை தாபதேசா என்று அவன் அழைத்தான். இதைக் கேட்டதும் அர்ச்சுனனுக்கு 'நம்மை தாபதேசன் என்று கூப்பிடு வானேன்' என்ற சந்தேகம் வர, அவன் கந்தர்வனை இதன் காரணத்தைக் கேட்டான். இதற்காக கந்தர்வன் தபதியின் உபாக்கியானத்தைச் சொல்லும்படி நேரிட்டது.

வினு 145.—இந்தத் தபதி யார்? இவளுக்கும், அர்ச்சுனனது வம்சத்திற்கும் என்ன ஸம்பந்தம்?

விடை.—பரதவம்சத்தில் ஸம்வரணன் என்றொரு அரசன் இருந்தான். அவன் ஸூரியனது பெண்ணாகிய தபதியின் அழகைக் கண்டு ஆசைகொண்டு அவளை விவாஹம் செய்து கொள்ள வேண்டுமென்று ஸூரியனைக் குறித்துத் தபஸு செய்தான். பின்பு ஒருநாள் காட்டிற்கு வேட்டையாடப் போகையில் அவளைக் காட்டில் கண்டு மோஹித்து அவளைத் தனக்கு பெண்சாதியாகவேண்டு மென்று கேட்க, அவள் தனது தகப்பனான ஸூரியனது அனுமதியின் பேரில் அவனுக்குத் தான் பெண்சாதியாவதாகச் சொல்லி மறைந்தாள். அரசனுக்கு அடங்காத துக்கம் வர, அவன் மூர்ச்சையோடு கீழேவிழுந்துவிட்டான். மந்திரியால் அரசன் மூர்ச்சைதெளிந்தெழுந்து ஸூரியனை ஆராதித்துத் தனது குருவாகிய வஸிஷ்டரை நினைத்தான். உடனே அவர் வந்து ஸூரியனிடம் சென்று, தன் அரசனது எண்ணத்தை வெளியிட்டுத் தபதியை வாங்கி வந்து அரசனுக்கு விவாஹம் செய்து வைத்தார். ஸம்வரணனுக்கு தபதியிடம் பிறந்தவனே குரு என்னும் அரசன். இதனாலேயே பரதவம்சத்தவருக்கு குருவம்சத்தவர் என்கிற பெயரும் உண்டு. இக்காரணம்பற்றிக் கந்தர்வன் அர்ச்சுனனை தாபதேசன் என்று அழைத்தான்.

வி௵ 146.—வஸிஷ்டரது மஹத்துவத்தைச் சொல்ல வேண்டும் என்று அர்ச்சுனன் கேட்க சைத்திரரதன் என்ன சொன்ஞன்?

விடை.—வஸிஷ்டரிடத்தில் ஒரு காமதேனு இருந்தது. இது விசுவாமித்திரர் தமது பரிவாரங்களோடு வந்திருக்குங்கால் அவர்கள் எல்லாருக்கும் உணவளிக்க, வஸிஷ்டரிட மிருந்து அதைத் தான் கொண்டுபோக வேண்டுமென்று கௌசிகர் நினைத்து அதைக் கட்டிப்பிடித்துக் கொண்டுபோகப் பார்த்தார். விசுவாமித்திரரது நோக்கத்தைக் காமதேனு அறிந்து தன் தேகத்திலிருந்து அனேக ஸேனைகளை சிருஷ்டித்து அவரை வென்றது. உடனே விசுவாமித்திரருக்கு பிரம்ம பலத்தின் மஹிமை தெரியவரத் தபஸுசெய்து பிராம்மணரானூர். இவர் பிராமணராகுமுன், இவருக்கும் வஸிஷ்டருக்கும் காமதேனு விஷயமாய் சண்டை நேர்ந்ததால் கௌசிகருக்கு வஸிஷ்டரிடம் விரோதமிருந்தது. இதனால் கௌசிகர் வஸிஷ்டரது பிள்ளைகளெல்லோரையும் உயிர் இழக்கும்படி சபித்தார். அப்பொழுது வஸிஷ்டருக்கு அடங்காத் துக்கம் வந்தும், கௌசிக வம்சத்தை அழிக்கவேண்டுமென்கிற எண்ணம் அவர் மனதில் தோன்றவில்லை. அவர் மாத்திரம் துக்கத்தால் அனேக வழியில் உயிரை மாய்க்கப் பார்த்தும் உயிர் போகவில்லை. இதற்குள் அவரது மூத்தகுமாரனது பெண்சாதி வயிற்றில் ஒரு குமாரன் இருப்பதை அறிந்து, துக்கம் தீர்ந்தார். இக்குமாரனே பராசர முனி. இவர் பிறந்ததும் தமது தகப்பன், சிற்றப்பன் ஆகிய இவர்கள் இறந்ததைக் கேள்வியுற்று உலகத்தை அழிக்கயத்தனிக்கையில் அப்பொழுதும் வஸிஷ்டர் பிருகு வம்சத்தில் பிறந்து உலகத்தை அழிக்க முயன்ற ஔரவர் என்பவரை அவர் பிதிர்க்கள் தடுத்த கதையைச்சொல்லித் தடுத்து, இவரை நல்ல வழியில் திருப்பினூர். இவ்வளவு மேலான துறவும், சாந்தமும் வாய்ந்தவர் வஸிஷ்டமுனி.

வி௵ 147.—விசுவாமித்திரர் எவ்வாறு வஸிஷ்டரது பிள்ளைகளைக் கொல்ல காரணமானூர்.

விடை.—இக்ஷ்வாகு வம்சத்தில் கல்மாஷபாதர் என்கிற ஒரு அரசர் இருந்தார். அவர் வேட்டைக்குப் புறப்பட்டுப் போகும் போது வஸிஷ்டரது பிள்ளை சக்தி என்பவரோடு விவாதம் செய்து மிகுந்த அபராதத்தைச்செய்ய அவர் 'நீ இராக்ஷஸ ஞய் போகக்கடவது' என்று சபித்தார். இதைக் கேட்டிருந்த விசுவாமித்திரர் தாம் ஒரு இராக்ஷஸனை ஏவி, அரசனுள் புகும்படி செய்ய, அதனால் அவன் பிராம்மணருக்கு மனுஷ்ய மாம்ஸம் ஊட்டல் முதலிய கொடிய அபராதங்கள் செய்து வந்தான். அவர்களது சாபத்தால் இராக்ஷஸத் தன்மை அரசனுக்கு அதிகரிக்க, விசுவாமித்திரர் ஏவிய இராக்ஷஸனது தூண்டுதலால் இவ்வரசன் வஸிஷ்டரது குழந்தைகளைத் தின்ன ஆரம்பித்தான். இவ்வாறு இவன் வஸிஷ்டரது பிள்ளைகள் எல்லோரையும் கொன்றுவிட்டான்.

வினு 148.—இவ்வரசன் கதி என்னவாயிற்று?

விடை.—இவன் ஒருநாள் வஸிஷ்டரையும், அவரது பிள்ளை சக்தியினது கர்ப்பந்தரித்த பெண்சாதியையும் கண்டு அவர்களைத் தின்னவர, வஸிஷ்டரது அநுக்கிரகத்தால் சாபம் நீங்கி, இராஜ்யம் சென்று ஒரு புத்திரனை அடைந்து ஸுகித்திருந்தான்.

வினு 149.—பிராம்மணரது மஹிமையைப்பற்றி இவ்வளவு சொல்லிய பின்பு கந்தர்வன் யாரை பாண்டவருக்குப் புரோஹிதராக நியமித்துக்கொடுத்தான்? பின்பு பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—அதே காட்டில் ஒரு திவ்ய ஸ்தலத்தில் தபஸுசெய்து கொண்டிருக்கும் தேவல ரிஷியினது தம்பியாகிய தௌமியர் என்பவரை கந்தர்வன் பாண்டவர்களுக்கு புரோஹிதராகத் தக்கவர் என்று சொன்னான். இவன் சொல்லியவாறே பாண்டவர்கள் அக்காட்டில் தௌமியரைத் தரிசித்து 'எமக்கு பௌரோஹித்யம் செய்தருள வேண்டும்' என்று மஹா விநயத்துடன் அந்த ரிஷிசிரேஷ்டரைக் கேட்க, அவர் அதற்கு இசைந்தார். உடனே தௌமியரை முன்னிட்டுக்கொண்டு பாண்டவர்கள் திரௌபதி ஸ்வயம்வரத்திற்காக பாஞ்சால

தேசம் சென்றார்கள். பாஞ்சாலதேசம் சென்று ஒரு குயவன் வீட்டில் இறங்கி, இவர்கள் பிரம்மசாரிகளைப் போலவே பிக்ஷை எடுத்து ஜீவனம் செய்து வந்தார்கள். இவர்களை ஒருவராலும் கண்டு பிடிக்க முடியவில்லை.

வினா 150.—திரௌபதியை விவாகத்தில் அடைவதற்கு துருபத ராஜன் அரசர்களுக்கு என்ன பரீக்ஷையை ஏற்படுத்தினான்?

விடை.—ஒரு மத்ஸ்யம் போன்ற ஒரு குறியை உயர அமைத்து அதன் கீழ் ஒரு யந்திரம் சுற்றிக்கொண்டிருக்கும்படி அமைக்கப்பட்டிருந்தது. யாரொருவன் அங்கு வைத்திருக்கும் ஒரு பெரிய வில்லை நாணேற்றி இந்த யந்திரத்தின் வழியாய் அந்த மத்ஸ்யத்தைக் குறிவைத்து அம்பால் அடித்து விடுகிறானோ, அவனுக்கு உடனே திரௌபதியைக் கொடுப்பதாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

வினா 151.—அரசர்கள் அந்த ஸ்வயம்வரத்தில் வில்லை வளைத்த போது என்ன கதியை அடைந்தார்கள்?

விடை.—சிலர் வில்லைத் தூக்கவும் முடியவில்லை. சிலர் வளைக்க யத்தனித்தும் வில்லால் அடிபட்டுக் கீழே விழுந்தனர். கர்ணன் மாத்திரம் வில்லை வளைத்து அம்பு விடப்போகும் தருணத்தில் திரௌபதி இவர்தான் என் புருஷரோ என்று நினைக்கும் போது அம்பினுடைய நாண் கழன்று கர்ணனை கீழே தள்ளி விட்டது.

வினா 152.—இவ்வாறு எல்லா அரசரும் அவமானப்பட்டுப் போகுங்கால் யார் இந்த பரீக்ஷையில் தேறினார்கள்? எப்படி? இதனால் என்ன விளைந்தது?

விடை.—பிராம்மணர் கோஷ்டியி லிருந்து அர்ச்சுனன் எழுந்து, வில்லை வெகு சீக்கிரத்தில் நாணேற்றி அந்த மத்ஸ்யக் குறியை அடித்துவிட்டான். உடனே திரௌபதி அர்ச்சுனனுக்கு மாலையிட துருபத ராஜனும் இதற்கு இசைந்து இந்த பிராம்மணச் சிறுவனுக்கே தன் பெண்ணைக் கொடுப்பதாக தீர்மானித்தான். இதைக்கண்டு அங்கு வந்திருந்த அரசர்கள் கோபங்கொண்டு துருபதனைக் கொல்லப்போக அர்ச்சுனனும் பீமனும், அவர்களை எதிர்த்துச் சண்டைசெய்தார்கள். அப்பொழுது அர்ச்சுனனுக்கும் கர்ணனுக்கும், சல்லியனுக்

கும் பீமனுக்கும், கோரமான யுத்தமுண்டாயிற்று. இந்தச் சண்டையின் நிலையைக்கண்டு இராஜாக்களுக்கு இவர்கள் கேவலம் பிராம்மணர்கள் அல்லவென்று தோன்ற, அவர்கள் உடனே சண்டையை நிறுத்திவிட்டார்கள்.

வினா 153.—இவ்வாறு சண்டை நின்றுவிடப் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்? பின்பு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—பாண்டவர்கள் திரௌபதியை அழைத்துக்கொண்டு தாங்கள் இறங்கி யிருக்கும் குயவன் வீட்டிற்குப்போனார்கள். அங்கு குந்தியோ 'நமது பிள்ளைகள் இவ்வளவு நாழிகையாயும் ஏன் பிக்ஷையைக் கொண்டுவரவில்லை? அவர்களுக்கு வழியில் ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டதோ?' என்று துக்கித்துக்கொண் டிருந்தாள். இப்படி யிருக்குங்கால் பீமார்ச்சுனர்கள் திரௌபதியைக் கூட்டிக்கொண்டு வந்து 'தாயே நாம் ஒரு பிக்ஷைகொண்டு வந்திருக்கிறோம்' என, குந்தி உள்ளேயிருந்தபடி இவர்கள் கொண்டுவந்தது இன்னதென்று பாராது 'அப்பா அப்படியானால் அதிகநாழிகையாய் விட்டது நீங்கள் ஐந்துபேரும் அதை பங்கிட்டு உண்ணுங்கள்' என்று கட்டளையிட்டாள். இது தருமபுத்திரருக்குத் தெரிய வந்ததும் அவர் முதலில் அர்ச்சுனனுக்கே திரௌபதி பெண் சாதி என்று தீர்மானித் திருந்தபோதிலும், ஏகசக்கிர புரத்தில் வியாஸர் திரௌபதியின் பூர்வ ஜன்ம சரித்திரம் சொன்னது ஞாபகம் வர, 'நாம் ஐவரும் இவளைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டியது' எனத் தீர்மானித்தார்.

வினா 154.—இவ்வாறு தருமபுத்திரர் தீர்மானித்துக் கொண்டிருக்கையில், அவர்கள் வீட்டிற்கு யார் வந்தது? அவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—அவர்களது அம்மான் சேயாகிய கிருஷ்ண பலராமர்கள் அங்கு அவர்களைப் பார்க்கவந்தார்கள். முதலில் இவர்களைக் கண்டதுமே, இவர்கள் இன்னார் என்பது பகவானுக்கு விளங்கிவிட்டது. மேலும் பீமார்ச்சுனர் செய்து வந்த சண்டையால் அவர் எண்ணம் திடப்பட இவர்களைப் பார்த்துத் தேறுதல் சொல்ல பகவான் அங்கு அக்காலத்தில் அவஸரமாய் வந்தார். இதுவே பாண்டவர்களுக்கு முதலில் கிருஷ்ண தரிசனம் ஆன ஸமயம். இதுமுதல் கிருஷ்ணர் பாண்டவர்

களை அடிக்கடி நேரில் பார்த்து அவர்களுக்கு அப்போதைக் கப்போது வேண்டிய ஸஹாயங்களைச் செய்துவந்தார். இங்கு வந்த கிருஷ்ண ராமர்கள் வெகு அவஸரமாய்த் தமது அத்தை யாகிய குந்தியிடம் விடைபெற்றுத் துவாரகையை நோக்கிச் சென்றார்கள்.

வினு 155.—இவர்களது உண்மை நிலையை அப்பொழுது வேறு யார் எப்படித் தெரிந்துகொண்டு என்ன செய்தார்?

விடை.—அர்ச்சுனன் திரௌபதியை ஸ்வயம்வர மண்டபத்தி லிருந்து அழைத்துக்கொண்டு போனதும், துருபதன் "அர்ச்சுனனுக்காகப் பெற்ற பெண்ணை யாரோ ஒரு பிராம் மணன் அடித்துக்கொண்டு போய்விட்டானே!" என்று துக்கிப்பதை திருஷ்டத்யும்னன் கண்டு, தன் தங்கையைக் கொண்டுபோன பிராம்மணரது உண்மை நிலை யறிவதற்கு அர்ச்சுனன் பின்னே மறைவாய்ச் சென்றான். இவன் திரௌ பதியை ஒரு குயவன் வீட்டிற்குக் கொண்டுபோய் வயது சென்ற ஒரு அம்மாளிடம் அவளை ஒப்புவித்துவிட்டு, பிக்ஷை யெடுக்கச்சென்று கொண்டுவந்த சோற்றை அப்பெரிய அம்மை திரௌபதியை பாகம்போட்டு, பாதி ஒரு பிராம் மணனுக்கும் (பீமனுக்கும்) மற்றையப் பாதியை ஆறு ஸரி பாகமாக்கி ஒவ்வொன்றை மற்றையவர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கும்படி செய்ததையும், இரவில் இவ்வைந்து பிராம் மணர் பேசிக்கொண்டிருந்த யுத்த விஷயங்களையும் கண்டு திருஷ்டத்யும்னன் இவர்கள் பாண்டவர்களாய் இருக்கலாம் என்று தீர்மானித்துத் தன் தகப்பனிடம் சொல்ல துருபதன் அன்றிரவு ஸந்தோஷமாயிருந்தான். காலையில் ஒரு புரோஹி தர் மூலமாயும், இவர்கள் பாண்டவரெனத் தெளிந்து, அவர்க ளைத் தன் அரண்மனைக்கு அழைத்து அவர்கள் வாயாலேயே அவர்கள் பாண்டவர்கள் எனத் தெரிந்து கொண்டான்.

வினு 156.—இவ்வாறு இவர்கள் பாண்டவர்கள் என்ற ஸந்தோஷ ஸமாசாரம் தெரிந்தபின் துருபதனுக்கு திரௌபதி விவாஹ விஷயத்தில் என்ன தடை ஏற்பட்டது?

விடை.—'நல்ல சுபதினம் நோக்கி அர்ச்சுனன் திரௌபதியை விவாஹம் செய்துகொள்ளலாம்' என்று துருபதன் வார்த்தை

எடுப்பதற்கு முன்னமே, மஹா தர்மாத்மாவான தருமபுத்திரர் அதைத் தடுத்து "நாங்கள் ஐவரும் திரௌபதியை விவாஹம் செய்துகொள்ள வேண்டியதுதான், அர்ச்சுனன் மாத்திரம் அன்று" என்றும், குந்திதேவி, "நீங்கள் கொண்டு வந்திருப்பதை ஐவரும் ஸமமாய் அனுபவியுங்கள் என்று என் வாக்கில் வந்துவிட்டது. அது பொய்யாகக்கூடாது" என்றும் சொல்ல, துருபதனுக்கு "ஒரு பெண் ஐவரை விவாஹம் செய்து செய்துகொள்வது அதர்மமல்லவா? இந்த தர்மாத்மாவான பாண்டவர்களுக்கும் இவ்விஷயத்தில் மனம் ஏன் பிரவிருத்தித்தது?" என்ற எண்ணங்களால் மனக் குழப்பமுண்டாயிற்று.

வினு 157.—இது எவ்வாறு யாரால் நீங்கியது?

விடை.—இவர்கள் ஒரு காரியமும் செய்யமுடியாமல் தயங்கி நிற்குங்கால், வியாஸ மஹாரிஷி வந்து துருபதனை ஒரு ஏகாந்த ஸ்தலத்திற்கு அழைத்துக்கொண்டு போனுர். அங்கு பாண்டவர் ஐவரும் மஹாதேவதைகள் என்றும், பூர்வஜன்மத்தில் இவர்கள் கர்வத்தால் மனிதராகும்படி மஹாதேவரது சாபம் வந்ததென்றும், அப்பொழுது மஹாதேவரைக் குறித்து இந்தத் திரௌபதி தவம்செய்து ஐந்துதரம் பர்த்தா வேண்டுமென்று கேட்டதற்கு, அவர் இவ்வைந்து தேவதைகளையும் அவளுக்கு பர்த்தாக்களாக நியமித்தார் என்றும், இவள் இவ்வாறு தவம் செய்யுங்கால் ஒருநாள் கங்கையில் குளிக்கப் போனவிடத்தில் இவளது கண்ணீர் கங்கையில் விழுந்து பொற்றுமரையாய் மிதந்ததும், அதைக்கண்டு அப்பொழுது கங்கைக்கரைக்கு வந்திருந்த இந்திரன் அப்பொற்றுமரையின் உற்பத்தி அறியப் போனவிடத்தில் இவளைக்கண்டு இவள் மூலமாய் மஹாதேவரைத் தரிசித்ததும், அவனுக்குக் கர்வ மடங்காததால் அவரால் ஐந்தாவது தேவனுக (மஹாதேவரால் முன்னமே நான்கு தேவதைகளை அடைக்கப்பட்டுள்ள) ஒருமலைக் குகையில் அடைக்கப்பட்டான் என்றும், கடைசியில் இவ்வைவரையும் துக்கித்துக் கொண்டிருக்கும் ஸ்திரீக்குச் சிவன் பர்த்தாவாக ஏற்படுத்தினுர் என்றும், வியாஸர் துருபதனுக்குத் திரௌபதியின் பூர்வஜன்மக் கதையைச் சொன்னுர். இப்படிச் சொல்லியும் அவ்வரசன்

தேருததுகண்டு அவனுக்கு வியாஸர் திவ்யசக்ஷுஸைக்கொடுத்து பாண்டவர்கள் திரௌபதி இவர்களது உண்மையான உருவாகிய தேவதா உருவைக் காட்டினவுடன் துருபதன் மனது திருப்தியடைந்தது.

வின 158.—இதன்பின்பு திரௌபதிக்குவிவாஹம் எப்படிநடந்தது?

விடை.—விவாஹம் ஐந்துநாள் நடந்தது, ஒவ்வொருநாளிலும் ஒவ்வொருவராகப் பாண்டவர் ஐவரும் திரௌபதியை பாணிக்கிரஹணஞ் செயதுகொண்டார்கள். இக்கல்யாண மஹோத்ஸவத்தில் பாண்டவர்களது மாமன் பிள்ளைகளாகிய கிருஷ்ணராமர்கள் ஏராளமான சீர் முதலிய மரியாதைகளைச் செய்தார்கள்.

வின 159.—இவ்வாறு அரக்குமாளிகையில் இறந்து விட்டார்கள் என்று எண்ணப்பட்ட பாண்டவர்கள், திரௌபதியை விவாஹம் செய்துகொண்டார்கள் என்று கேட்டதும், திருதிராஷ்டிர ராஜன் என்ன செய்தான்?

விடை.—தனது பிள்ளைகளின் கெட்ட எண்ணங்களால், பாண்டவர்களுக்கும் திரௌபதிக்கும் சண்டை உண்டாக்கி பாண்டவர்களைக் கெடுக்க வேண்டும் என்று திருதிராஷ்டிர ராஜனுக்குத் தோன்றினபோதிலும், பீஷ்மர், துரோணர், விதுரர் முதலிய மஹான்களது நல்ல போதனைகளால் மனம் மாற அவன் பாண்டவரையும், திரௌபதி முதலியவர்களையும் ஹஸ்திஞபுரிக்கு அழைத்துவரும்படி விதுரரை துருபதராஜன் பட்டணத்திற்கு அனுப்பினான்.

வின 160.—இவ்வாறு பாண்டவர்களை அழைப்பித்த பின்பு அவர்களுக்கு திருதிராஷ்டிரன் என்ன ஏற்பாடு செய்தான்?

விடை.—ஹஸ்திஞபுரியில் திரௌபதியோடு பாண்டவர்கள் ஸுகித்திருந்தால் துரியோதனாதியர்களுக்கும் இவர்களுக்கும் சண்டை உண்டாகும் என்றுஎண்ணிப்பாண்டவர்களுக்கு ஹஸ்திஞபுரத்திற்கு அருகில் இருக்கும் காண்டவப்பிரஸ்தம் என்னும் நகரத்தை பிரதான பட்டணமாக நியமித்து அவர்களை அர்த்தராஜ்யம் ஆளும்படி திருதிராஷ்டிரன் ஏற்பாடு செய்தான்.

வின 161.—அர்த்தராஜ்யம் கிடைத்ததும் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—கிருஷ்ண பகவானை முன்னிட்டுக்கொண்டு வியாஸரால் நியமிக்கப்பட்ட சுபலக்கினத்தில் காண்டவப்பிரஸ்த நகரப் பிரவேசம் செய்து, பின்பு கிருஷ்ணபகவான் ஸஹாயத்தால் அந்த நகரத்தைப் புதிதாய் நிர்மாணம் செய்யும்படி செய் தார்கள். அது ஒரு திவ்யபட்டணமாக மாறிவிட்டபடியால் அதற்கு இந்திரப் பிரஸ்தம் என்ற பெயர் உண்டாயிற்று. இவ்வளவையும் செய்து வைத்துவிட்டு கிருஷ்ணபகவான் துவாரகைக்குப் போனுர்.

வினு 162.—இப்படிப் பாண்டவர் ஸுகமாய் இந்திரப்பிரஸ்தத் தில் வாழுங்கால் அவர்களிடம் யார் வந்து, என்ன நல்ல ஏற் பாடு செய்து வைத்தார்?

விடை.—திரிலோக ஸஞ்சாரியாயும், எங்கும் பூஜ்யராயும் உள்ள நாரதமுனிவர் இந்திரப் பிரஸ்தம் வந்தார். வந்து பாண்ட வர் ஐவருக்கும் பொதுவாய் ஒருபெண்சாதி அமைந்திருப் பதை அறிந்து, பாண்டவர்களுக்கு, பொது ஸ்திரீ நிமித்தத் தால் புருஷர்களுக்கு உண்டாகும் பிரமாதங்களை ஸுந்தோப ஸுந்தாளது கதையால் நன்கு விளக்கி, அம்மாதிரி சண்டை அவர்களுக்கு உண்டாகாதிருக்கும்படி அவர்க ளுக்கும் திரௌபதிக்கும் இருக்கும் ஸம்பந்தத்தை ஒரு வாறு ஒழுங்குப்படுத்தினுர். அந்த ஒழுங்காவது ஒவ்வொரு வருஷம் திரௌபதி ஒவ்வொரு பர்த்தாவிடத்திலிருக்கவேண் டியது: அந்தவருஷக்கடைசியில் வரிசைக்கிரமமாய் அடுத்த பர்த்தாவிடம் போகவேண்டியது. இவ்வாறு ஒரு பர்த்தா வோடு திரௌபதி யிருக்குங்கால் மற்றைய நால்வரில் யாராவது அவர்களைப் பார்க்கும்படி நேரிட்டால், அவர் 12-வருஷம் தீர்த்த யாத்திரைசெய்து ஒழுங்கிற்கு விரோ தமாய் நடந்துகொண்ட பாபத்தை தீர்த்துகொள்ள வேண் டியது" என்பதே.

வினு 163.—இந்த ஸுந்தோப ஸுந்தாள் யார்? இவர்களின் ஸ்வபாவம் என்ன?

விடை.—ஹிரண்யகசிபு வம்சத்தில் நிகும்பன் என்றொரு அஸுர அரசன் இருந்தான். அவனுக்கு ஸுந்த உபஸுந்தன் என்ற இருபிள்ளைகள் பிறந்தார்கள். இவர்கள் இருவரும்

பிறந்தது முதல் ஒருவரோடு ஒருவர் மிக அந்நியோன்யமாய் இருந்தார்கள். பார்ப்பவர்கள் யாவரும் இவர்களுக்கு தேகம் இரண்டே யொழிய மனது ஒன்றுதான் என்று சொல்லத் தக்க நிலையில் இருந்தார்கள்.

வி 164.—இவர்கள் யாரைக் குறித்து தவம் செய்து என்ன அடைந்தார்கள்?

விடை.—பெரியவர்களிடம் இருந்து உபதேசம்பெற்று விந்தியமலைச் சாரலில் பிரம்மாவைக் குறித்து, இவர்கள் கடுந்தவம் புரிந்தார்கள். தேவர்கள் எவ்வளவுதான் இவர்களது தபஸைக் கலைக்கப்பார்த்தும், அவர்களால் முடியவில்லை. பிரம்மா பிரத்தியக்ஷமாய், "என்னவரம் வேண்டும்" என்று கேட்க, இவர்கள் தமக்கு அமரத்வம் வேண்டுமென, அது தம்மால் கொடுக்க முடியாது என்று பிரம்மா மறுத்துவிட்டார். பின்பு இவர்கள் "எங்களுக்கு எந்தக் காரணத்தாலும் சாவு வரக்கூடாது. எங்களுக்குள் சண்டை வந்து நாங்கள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு சாகவேண்டுமே ஒழிய வேறு எந்தக் காரணத்தாலும் சாகக்கூடாது" என்று கேட்டுக்கொள்ள, பிரம்மா அந்த வரத்தைக் கொடுத்துவிட்டார்.

வி 165.—இவ்வரத்தைப்பெற்று இவர்கள் என்ன செய்தார்கள்? அப்பொழுது தேவதைகள் என்னசெய்தார்கள்?

விடை.—இவர்கள் அஸுரரானபடியால் நல்லவர்களை உபத்திரவப் படுத்த ஆரம்பித்தார்கள். இதையறிந்து தேவதைகள் மிகுந்த துக்கமடைந்து பிரம்மாவிடம் சென்று முறையிட்டார்கள்.

வி 166.—பிரம்மா எப்படி இந்த சகோதரர்களுள் சண்டை உண்டாக்க ஏற்பாடு செய்தார்?

விடை.—பிரம்மா, உலகத்திலுள்ள பெண்களை விட அதிக அழகோடுகூடிய பெண்ணொருத்தியைச் சிருஷ்டிக்கும்படி விசுவகர்மாவுக்குக் கட்டளையிட, அவன் உலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவிலிருந்தும் எள்ளளவு அழகை எடுத்து திலோத்தமை என்ற அப்ஸர ஸ்திரீயை சிருஷ்டித்தான்.

வி 167.—இத்திலோத்தமை ஸுந்தோப ஸுந்தார்களுக்குள் எப்படி சண்டை யுண்டாக்கி அவர்களை இறக்கும்படி செய்தாள்?

விடை.—ஸுந்தோப ஸுந்தாள் ஒருநாள் நடுப்பகலில் விந்திய மலையில் ஒரு கற்பாறையில் உட்கார்ந்துகொண்டு இருக்கையில், அங்குத் திலோத்தமை பிரம்மாவினது ஆக்ஞைப்படி பூக்கொய்துக்கொண்டு வந்தாள். அவளைக் கண்டதும், இருவரும் ஓடிவந்து அவள் கையைப் பிடித்துக்கொண்டு 'இவள் என் பெண்சாதி,' 'இவள் என் பெண்சாதி' என, இருவருக்கும் சண்டை உண்டாய்விட்டது. இச்சண்டையில் ஒருவரை ஒருவர் கொன்று விட்டார்கள்.

வினு 168.—இக்கதையைச் சொல்லி நாரதர் ஏற்படுத்திப் போன ஒழுங்குக்கு யார், யாது காரணத்திற்காக விரோதமாய் நடக்க வேண்டிவந்தது?

விடை.—அர்ச்சுனன் இதற்கு விரோதமாய் நடக்கவேண்டி வந்தது. ஒருநாள் மத்தியானம் ஒரு திருடன் ஒரு பிராம்மணரது கோதனம் யாவையும் திருடிக்கொண்டுபோக, அப்பொழுது அப்பிராம்மணர் ஓடிவந்து அரண்மனையிலிருந்த அர்ச்சுனனிடம் முறையிட்டார். பிராம்மணனைக் காப்பாற்ற, வில்லை எடுக்க யத்தனிக்கையில், அது அப்பொழுது தருமபுத்திரரும், திரௌபதியும் ஏகாந்தமாய் இருக்கும் ஒரு உள்ளில் இருப்பதாக அர்ச்சுனனுக்கு ஞாபகம் வந்தது. வில்லெடுக்கப் போனால் நாரதர்செய்த ஒழுங்கிற்கு விரோதம் வரும், வில்லெடுத்து வராமற்போனால் பிராம்மணர் அநியாயமாய்ப் பொருளிழந்து கஷ்டப்படுவார். சற்று நேரம் யோசித்து தனக்கு 12-வருஷம் தீர்த்தயாத்திரை போகும்படி நேரிட்டாலும் ஸரி, பிராம்மணனைக் காப்பாற்ற வேண்டுமென்று அர்ச்சுனனுக்குப் பட்டது.

வினு 169.—உடனே அர்ச்சுனன் என்ன செய்தான்?

விடை.—உடனே அவன் தனது கண்களை மூடிக்கொண்டு பகவானது நாமத்தை ஸ்மரணம் செய்துகொண்டு அதிவேகமாய் தர்மபுத்திரரிருக்குமிடம் சென்று தனது வில் முதலியவைகளை எடுத்துக்கொண்டு வெளிவந்து பிராம்மணனைக் காப்பாற்றினான்.

வினு 170—இதன் பின்பு அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை விஷயமாய் என்ன செய்தான்?

விடை.—தர்மபுத்திரர் முதலியோர் எவ்வளவோ விதத்தில் இது நாரதர் செய்த ஒழுங்கிற்கு விரோதமில்லை என்று காட்டி, அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை செய்யவேண்டியது அவசிய மில்லை என்று சொல்லியபோதிலும், அர்ச்சுனன் ஓரேபிடி வாதமாய் தீர்த்த யாத்திரைக்கே புறப்பட்டு, அனேக பிராம் மண உத்தமர்கள் பின்தொடர்ந்துவர வடக்கிலுள்ள அனேக திவ்ய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு கங்கோத்தரைக்கு வந்து அங்கு பிராம்மணர்களுடன் கொஞ்சகாலம் வஸித் திருந்தான்.

வி 171.—அர்ச்சுனனது தீர்த்த யாத்திரை என்னமாக முடிந் தது? முதலில் இதற்கேற்ப நடந்த விஷயமென்ன?

விடை.—அர்ச்சுனனது தீர்த்த யாத்திரை விவாஹ யாத்திரை யாகவே முடிந்தது. இவன் ஒருநாள் கங்கையில் ஸ்நானம் செய்ய முழுகி நிற்கையில் அங்கு யதிர்ச்சையாய் வந்திருந்த கௌரவன் என்னும் நாகனது பெண்ணாகிய உலுபி என் பவள், இவனது அழகைக்கண்டு மோஹித்து, அர்ச்சுனனைத் திடீரென்று நாகலோகத்திற்குக்கொண்டுபோய் தனக்கு அர்ச் சுனன்பேரில் இருந்த ஆவலை அவனுக்கு வெகு தர்மசாஸ்திர ஆதாரங்களைக்கொண்டு தெரிவிக்க, அர்ச்சுனன் ஒருநாள் அவளோடு இருந்து அவளுக்கு இராவான் என்ற பிள்ளை யுண்டாகும்படி செய்துவிட்டு மறுநாள் காலை முந்தினநாள் தான் ஸ்நானம் செய்துகொண்டிருந்த இடம் வந்து சேர்ந்து பிராம்மணர்களுடன் நடந்த விஷயங்களை ஒளிக்காது சொல்லி விட்டான்.

வி 172.—இதன்பின்பு அர்ச்சுனன் எங்கு சென்றான். அங்கு என்ன விவாஹம் நடந்தது?

விடை.—அர்ச்சுனன் கிழக்குத் திக்கை நோக்கிப் புறப்பட்டு அனேக திவ்யஸ்தலங்களைப் பார்த்துக்கொண்டு வருகையில் ஓரிடத்தில் பின்னோடு வந்த பிராம்மணர்கள் அர்ச்சுனனுக்கு ஆசீர்வாதம் செய்துவிட்டுத் தத்தம் இருப்பிடம் சென்றார் கள். இதன்பின் அவன் கிழக்கு ஸமுத்திரக்கரை வழியா கவே மணிபுரம் வந்தான். அங்கு சித்ரபவனன் என்ற அரச னிருந்தான். அவனுக்கு சித்திராங்கதை என்ற ஓரே ஒரு பெண்தான் உண்டு. அப்பெண்ணைக் கண்டு அர்ச்சுனன்

மோஹித்து அவ்வரசனிடம் தனது பெயர், குலம், ஆசை முதலியவைகளைத் தெரிவித்தான். அவன் 'உனக்குப் பிறக்கும் பிள்ளையை எனக்குக் கொடுத்து விடுவாயானால் உனக்கு என்பெண்ணை கலியாணம் செய்து கொடுக்கிறேன்' என்று சொல்ல, அதற்கு அர்ச்சுனன் இசைந்து சித்திராங்கதையை விவாஹம் செய்துகொண்டு அவளுக்கு ஒருபிள்ளை பிறக்கிற வரையில் மூன்று வருஷம் அவளிடத்தில் ஸுகமாய் இருந்துவிட்டுப் பின்பு தனது தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டான்.

வினு 173.—இதன் பின்பு அர்ச்சுனன் எங்கு தீர்த்தயாத்திரை செய்தான்? அங்கு நடந்த விசேஷம் என்ன?

விடை.—அர்ச்சுனன் தெற்கு ஸமுத்திரக்கரை வழியாய்த் தீர்த்த யாத்திரை செய்து வருகையில் அங்கு நிர்மானுஷ்யமான இடத்தில் மிக அழகான ஐந்து தடாகங்களைக் கண்டான். அங்கு பக்கத்தில் வஸித்துவந்த மஹான்களை 'இவைகள் ரிஷிகளால் இப்படி ஏன் தியாகம் பண்ணப்பட்டன' என்று கேட்க, அவர்கள் "இவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முதலை இருக்கின்றது. அது தண்ணீரில் இறங்குபவர் எல்லோரையும் இழுத்துக் கொல்லுகின்றது" என்று சொல்ல, உடனே அர்ச்சுனன் ஒரு தடாகத்திலிறங்கி ஸ்நானம் செய்ய முதலை அவன் காலைக் கவ்விக்கொண்டது. அதைத் தனது தேக பலத்தால் கரையில் அர்ச்சுனன் இழுத்துப்போட உடனே அது ஒரு திவ்ய அப்ஸர ஸ்திரீயாய் மாறவே, அவளை நோக்கி, 'நீ முதலை யாவதற்குக் காரணமென்ன' வென்று அர்ச்சுனன் கேட்டான்.

வினு 174.—இப்படிக் கேட்டதற்கு அவள் என்ன பதில் சொன்னாள்? அர்ச்சுனன் பின்பு என்ன செய்தான்?

விடை.—தாங்கள் ஐந்துபேர் அப்ஸர ஸ்திரீகள் என்றும், ஒருக்கால் ஒரு பிரம்மஞானியின் தபஸைக் கலைக்க உத்தேசிக்கையில் அவர் தங்களை முதலைகளாகப் போகும்படி சபித்தார் என்றும், அப்பொழுது அவருக்கு கிருபை வரும்படி தாங்கள் நடந்துகொண்டவுடன் தங்களை 103-வருஷங்களுக்குப் பின் ஒரு திவ்ய புருஷன் தண்ணீரை விட்டு வெளியில் போடுவான் உடனே தங்களுக்கு ஸ்வயமான ரூபம் வருமென்றும்

சொல்லி, நாரதரது உத்தரவால் இவ்வைந்து தடாகங்களில் தாங்கள் முதலைகளா யிருப்பதாகச் சொன்னாள். இதைக் கேட்டதும் அப்ஸர ஸ்திரீகளுக்கும் அங்குள்ள ரிஷீசுவரர் களுக்கும் ஒரேகாலத்தில் உபகாரம் செய்ய நினைத்து மற்றை நான்கு தடாகங்களில் உள்ள முதலைகளையும் அர்ச்சுனன் கரையில் இழுத்துப்போட, அவைகளும் அப்ஸரஸ்திரீகளாகி அர்ச்சுனனைத் துதித்துக்கொண்டு ஸ்வர்க்கம் சென்றன.

வினா 175.—இதன் பின்பு அர்ச்சுனன் எங்கே போனான்?

விடை.—சித்திராங்கதையைப் பார்ப்பதற்காக மணிபுரத்திற்கு அர்ச்சுனன் சென்று அங்கு தன் பிள்ளையாகிய பப்ரவாஹ னன் அரசாள்வதைக் கண்டான். அங்கு சித்திராங்கதையைக் கண்டு ஸந்தோஷமடைந்து, பின்பு மேற்கு ஸமுத்திரக்கரை யோரமாய் கோகரணம்முதல் ஸகல தீர்த்தங்களிலும் ஸ்நாநம் செய்துகொண்டு கடைசியாக துவாரகாபுரியின் அருகேயுள்ள பிரபாஸ தீர்த்தம் வந்து சேர்ந்தான்.

வினா 176.—இங்கு வந்ததும் அர்ச்சுனன் என்ன கேள்விப்பட் டான்? உடனே என்ன செய்தான்?

விடை.—இதுவரையில் கிருஷ்ண பகவானது தங்கையாகிய ஸுபத்திரையின் அழகைக் கேள்வியுற்று, அவளை விவாஹம் செய்து கொள்ளவேண்டுமென்று அர்ச்சுனன் எண்ணியிருந் தான். அவளைத் துரியோதனனுக்குக் கொடுப்பதாகப் பல ராமர் வாக்களித்திருப்பதைக் கேள்வியுற்றான். உடனே ஸுபத்திரையைத் தான் அடைய வேண்டும் என்கிற ஆவ லோடு கிருஷ்ணபகவானைத் துதிக்க, அவர் உடனே அவன் முன் தோன்றினார்.

வினா 177.—கிருஷ்ண பகவான் வந்து ஸுபத்திரையை அடையும் விஷயத்தில் அர்ச்சுனனுக்கு என்ன உபாயம் சொல்லிக் கொடுத்து எந்த வழியால் ஸுபத்திரையையும், அர்ச்சுன னையும் சேர்த்து வைத்தார்?

விடை.—அர்ச்சுனனைத் திரிதண்ட ஸந்நியாஸி வேஷம் போட்டுக் கொள்ளும்படி செய்து பக்கத்திலிருக்கும் ரெய்வதகபர்வதத் தின் குகை ஒன்றில் வந்திருக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு துவாரகைக்குச் சென்றார். கொஞ்ச நாளைக்குள் ரெய்வதக பர்வதத்தில் ஒரு உத்ஸவம் வர, அதற்கு ஸகல யாதவர்

களும் அங்குவந்து அர்ச்சுன ஸந்நியாஸியைக் கண்டார்கள். ஸந்நியாஸிகளிடம் அதிகப்பிரீதி வாய்ந்த பலராமர் வந்து அர்ச்சுனனை வந்தனம் செய்ய, கிருஷ்ணமூர்த்தி கலியுகஸந்நியாஸிகளை நம்பலாகாதென்று தூரவே நின்றுவிட்டார். பெரியவாளைத் தூஷியாதிருக்கும்படி கிருஷ்ணனை கையமர்த்திவிட்டு, பலராமர் துவாரகைக்கு ஸந்நியாஸியை அழைத்துப்போய், கிருஷ்ணமூர்த்தி எவ்வளவு தடுத்தும் அதைக்கேட்காது, ஸுபத்திரை முதலியவர்கள் இருக்கும் கன்னியா மடத்தருகில் ஒரு தோட்டத்தில் இவரை வைத்து, சாதுர்மாஸ்ய விருதம் முடிகிறவரையில் அப்படியே இருக்கும்படி ஏற்பாடு செய்தார். அப்பொழுது பலராமரது உத்தரவின்படி ஸுபத்திரை அர்ச்சுன ஸந்நியாஸிக்குத் தொண்டுசெய்து வந்தாள்.

வினு 178.—பின்பு கிருஷ்ணமூர்த்தி ஸுபத்திரையின் கலியாணத்தை எவ்வாறு நடத்திவைத்தார்?

விடை.—சாதுர்மாஸ்ய முடிவில் துவாரகைக்கு அருகிலுள்ள பிண்டாரக தீர்த்தத்தில் ஒரு பெரிய உத்ஸவம் நடப்பதுவழக்கம். அதற்காக அர்ச்சுன ஸந்நியாஸியும், ஸுபத்திரையும் ஒரு யாதவ ஸேனாதிபதியும் தவிர, மற்றைய எல்லா யாதவர்களும் பிண்டாரக தீர்த்தம் சென்றார்கள். அப்பொழுது இரவில் ஸுபத்திரைக்கு அர்ச்சுனன் தனது உண்மை ரூபத்தைக்காட்டி காந்தர்வ விவாஹம் செய்துகொள்ளலாமென்று சொல்ல "கிருஷ்ணமூர்த்தியில்லாது நாம் கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது" என்று ஸுபத்திரை சொன்னாள். அர்ச்சுனன் கிருஷ்ணமூர்த்தியைத் தியானம் செய்தான். கிருஷ்ணபகவான் உடனே வர, அவரது மஹிமையால் அந்த இரவிலேயே தேவேந்திரன், பிரஹஸ்பதி முதலியவர்களும் அங்கே வர, அர்ச்சுனனுக்கு விவாஹம் விதிவத்தாய் நடந்தேறியது.

வினு 179.—இப்படி விவாஹம் முடிந்த பின்பு அர்ச்சுனன் எவ்வாறு இந்திரப் பிரஸ்தத்திற்கு வந்தான்? வழியில் என்ன நடந்தது?

விடை.—கிருஷ்ண பகவான் மறைந்து போகுமுன் ஸுபத்திரைக்கு இரத ஸாரத்யம் தெரியுமென்றும், ஆகையால்

லாயத்தில் இருக்கும் ஒரு இரதத்தைத் தயார் செய்து கொண்டு ஸுபத்திரையை ஸாரதியாக வைத்துக்கொண்டு இந்திரப் பிரஸ்தம் போகலாமென்றும், பொழுது விடிவ தற்கு முன் துவாரகையின் எல்லையைத் தாண்டிவிடவேண்டு மென்றும் அர்ச்சுனனுக்கு எச்சரிக்கை செய்துவிட்டுப் போனார். அர்ச்சுனன் பகவானது உத்திரவின்படி புறப்பட்டுப் போகையில், பகவானாலேயே ஏவப்பட்ட யாதவஸேனாதிபதி ஒருவன் அர்ச்சுனனை எதிர்த்து யுத்தம் செய்வதுபோலப் பாசாங்கு செய்ய அவன் நோக்கத்தைத் தெரிந்த அர்ச்சுனன் அவன்மேலே படாது வெகு தந்திரமாய்ப் பாணங்களை வருஷித்தான். இதைக்கண்டு அந்த ஸேனாதிபதி தோல்வியடைந்தாற்போல பாசாங்கு செய்துகொண்டு அர்ச்சுனனைப் போகவிட்டான். அர்ச்சுனன் கூடிய சீக்கிரத்தில் இந்திரப் பிரஸ்தம் போய்ச்சேர்ந்தான்.

வி 180.—இந்த சமாசாரம் பலராமருக்குத் தெரிந்ததும் அவர் என்ன செய்ய யத்தனித்தார்? அது எவ்வாறு முடிந்தது?

விடை.—உடனே அரச்சுனனிடம் பலராமருக்கு அதிககோபம் வர, அவனைக் கொல்லவேண்டுமென்று அவர் ஸகல யாதவ ஸேனைகளையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார். உடனே கிருஷ்ணமூர்த்தி கலியுக ஸந்நியாஸிகளைப் பற்றிச் சொன்னவைகளைக் கேட்காததினாலல்லவா இக்கஷ்டம் வந்ததென்று பலராமருக்குத்தோன்ற, இப்பொழுதாவது கிருஷ்ணமூர்த்தி சொற்படி கேட்போம் என்று அவரோடு ஆலோசித்தார். 'அர்ச்சுனனைச் சண்டையில் கொன்றால் தமது ஸுபத்திரைக்குக் கஷ்டம். நாம் தோல்வியடைந்தால் நமக்கும் அவமானம். ஆகவே சண்டை எப்படி முடிந்தாலும் கஷ்டம் நமக்கே. ஆகையால் நமக்கு தெரிந்தே அர்ச்சுனன் ஸுபத்திரையைக் கலியாணம் செய்துகொண்டதாக, அவனுக்குச் சீர் முதலியவைகளைக் கொண்டுபோய்க்கொடுத்து, அர்ச்சுனனை நம்மோடு கூட்டிக் கொள்வதே இப்பொழுது செய்யத்தக்க காரியம்' என்று கிருஷ்ணன்சொல்ல, அதன்படியே யாதவர்கள் செய்து ஸுபத்திரைக்கு விவாஹத்தைப் பூர்த்தி செய்தார்கள்.

வி 181.—பிரம்மசரிய விரதத்தோடு தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்ட அர்ச்சுனன் அதை இப்படி விவாஹயாத்திரையாக்கினது நியாயமா?

விடை.—கதை இருக்கிறபடியே பார்த்தால் நியாயம் என்று ஸ்தாபிக்க முடியாது. பாரதம் வேத ரஹஸ்யத்தை வெளியிட வந்த நூல் எனக்கொண்டு, அர்ச்சுனனை நரனுகவும், கிருஷ்ண பரமாத்மாவை மனிதனுள் இருக்கும் பரமாத்மாவாகவும் கொண்டு, ஜீவாத்மாவுக்குக் கடைசியில் வைராக்கியம் வந்து மோக்ஷமடைவதற்குக் தக்க அதிகாரம் வரும்படி செய்யப் பரமாத்மா ஜீவாத்மாவை உலக இன்பங்களில் அலையவிட்டு வேடிக்கை பார்ப்பதை இந்த தீர்த்த யாத்திரை விவாஹ யாத்திரையானது சூசிப்பிக்கின்றதென்று கொண்டால் மாத்திரம் தான் இந்த கேள்விக்கு ஒருவாறு பரிஹாரம் சொல்லலாம். வேறு எந்த விதமாய் ஆகட்டும், கதையிருக்கிறபடி சொல்லப்போனுல் அது யுக்திக்குப் பொருந்தாததாகவே முடியும்.

விஞ 182.—இப்படி அர்ச்சுனனுக்கு ஸுபத்திரா விவாஹமானதும் கிருஷ்ணுர்ச்சுனுள் என்ன செய்தார்கள்?

விடை.—இவ்விருவரும் இந்திரப் பிரஸ்தத்திலேயே ஸுகமாய்க் கொஞ்ச காலம் வாழ்ந்திருந்தார்கள். இப்படி யிருக்கையில் வஸந்த காலத்தில் ஒருநாள் இவ்விருவரும் தங்களது ஸ்திரீகளோடு யமுனையில் ஜலக்கிரீடை செய்யவந்து கொஞ்ச நாழிகை ஜலக்கிரீடை செய்துவிட்டு யமுனைக்கரையில் ஏகாந்த ஸ்தலத்தில் இருவரும் வந்து உட்கார்ந்திருந்தார்கள்.

விஞ 183.—அப்பொழுது அவரிடத்தில் யார்வந்து என்னவேண்டுமென்று யாசித்தார்கள்?

விடை.—கிருஷ்ணுர்ச்சுனுள் இப்படி உட்கார்ந்திருக்கும்பொழுது அக்கினி பகவான் ஒரு பிராம்மண வடிவம்கொண்டு அவர்களிடம் வந்து தனக்கு வலிமை குறைந்திருக்கிறதென்பதாகவும், அதற்கு பிரம்மா பக்கத்திலிருக்கும் காண்டவ வனத்தை தான் எரிப்பதே பரிஹாரம் என்று சொன்னதாகவும், அந்த வனத்தைத் தான் முன் சிலதடவை எரிக்கப்பார்த்து முடியாமற் போனதாகவும் சொல்லிக் கடைசியாய் அவர்களை அவ்வனத்தை எரிப்பதில் தனக்கு ஸஹாயம் செய்யவேண்டுமென்று மஹா விநயத்துடன் கேட்டுக்கொண்டார்.

விஞ 184.—அக்கினி பகவானுக்கு வலிமை குறையக் காரணமென்ன?

விடை.—முற்காலத்தில் சுவேதாகி என்றொரு அரசனிருந்தான். அவன் அடிக்கடி தொடர்ச்சியாய் யக்ஞங்கள் நடத்தி வர, பிராம்மணர்களுக்கு கஷ்டம் அதிகரித்து விட்டபடியால் எல்லோரும் 'உம்முடைய யக்ஞத்திற்குவந்து ஸஹாயம்செய்வதில்லை" என்று மறுத்துவிட்டார்கள். யக்ஞ ஆசை அதிகமாக உடைய அரசன் மஹாதேவரைக் குறித்து தவம்செய்ய அவர் அவ்வரசன் முன் தோன்றினவுடன் "நீரே எனக்கு யக்ஞ விஷயத்தில் ஸஹாயம் செய்யவேண்டும்" என்று அவன் கேட்க, அதற்கு அவர் "நீ ஒருவர் ஸஹாயமுமின்றி, அக்கினியில் விடாது நெய்யை ஆஹுதியாக 12-வருஷம் கொட்டிக்கொண்டிருந்தால் என் ஸஹாயத்தை நீ அடையலாம்" என்று சொல்லி மறைந்தார். இதுகேட்டு சுவேதாகி அப்படி செய்யக் கடைசியில் சிவன் தூர்வாஸ மஹாரிஷியை அனுப்பி அவ்வரசனது கஷ்டத்தை நிவர்த்திசெய்து வைத்தார். இப்படி 12-வருஷம் விடாது நெய்யைக் குடித்தமையால் அக்கினிபகவானுக்கு வலிமை குறைந்தது.

வினா 185.—அக்கினி பகவானது எண்ணத்தை யறிந்தவுடன் கிருஷ்ணார்ச்சுனர் என்ன செய்தார்கள்?

விடை.—இவர்கள் அக்கினிபகவானுக்கு வேண்டிய ஸஹாயம்செய்வதாக ஒப்புக்கொண்டார்கள். அர்ச்சுனன் தனக்குத் தகுந்த தேர், வில், அம்பு முதலியவைகள் இல்லையென்று சொல்ல, அக்கினி பகவான் வருணபகவானிடம் சென்று ஹநுமக் கொடி வாய்ந்து நான்கு குதிரைகள் கட்டிய இரதத்தையும் காண்டீவ தனுஸையும், எப்பொழுதும் நிறைந்திருக்கும் அம்பறுத்தூணியையும் வாங்கி அர்ச்சுனனுக்கே கொடுத்துவிட்டு காண்டவ வனத்தைச்சென்று சூழ்ந்துகொண்டு எரிக்கத் தொடங்கினர். கிருஷ்ணார்ச்சுனர் சுற்றி வந்துகொண்டே வெளியில் ஓடப்பார்க்கும் ஸகல பிராணிகளையும் நெருப்பிலே தள்ளிக்கொண்டு வந்தார்கள்.

வினா 186.—இப்படி இவர்கள் அக்கினிபகவானுக்கு ஸஹாயம் செய்துகொண்டிருக்கையில் என்ன பிரமாதம் விளைந்தது?

விடை.—காண்டவ வனத்தை அக்கினி பகவான் எரிக்கிறான் என்ற செய்தியைக் கேள்வியுற்ற இந்திரன் தனது மேகங்களால் மழை பொழியும்படி செய்தான். கிருஷ்ணார்ச்சுனர் அம்

மழையை ஆகாயத்தில் சரக்கூடுபோட்டுத் தடுத்து விட்டார்கள். இதைக்கண்டவுடன் ஸகல தேவதைகளும் இவர்களோடு சண்டைக்குவர, கொஞ்சநாழிகை இவர்களுக்கும் கிருஷ்ணார்ச்சுனர்களுக்கும் கோரயுத்தம் நடந்தது. கடைசியில் தேவதைகள் தோல்வியடைந்து தத்தம் இருப்பிடம் சென்றார்கள்.

வினு 187.—இந்த நெருப்பில் ஒரு ஜந்துவும் பிழைக்கவில்லையா?

விடை.—ஆறு ஜந்துக்கள் மாத்திரம் பிழைத்தன. அவையாவன: தக்ஷகன் பிள்ளையாகிய ஒரு பாம்பு, மயன் என்ற அஸுரன், நான்கு சாரங்கக பட்சிகள் ஆகிய இவைகளே.

வினு 188.—தக்ஷகனது பிள்ளையாகிய பாம்பு எப்படிப் பிழைத்தோடிப்போயிற்று?

விடை.—நெருப்புப் பற்றி எரியும் காலத்தில் தக்ஷகன் காண்டவ வனத்திலில்லை. குருக்ஷேத்திரத்திற்கு ஒரு காரியார்த்தமாய் போயிருந்தான். அவன் பெண்சாதியும், பிள்ளையும் அவ் வனத்திலிருந்தார்கள். நெருப்பு ஸமீபத்தில் வருவதைக் கண்டு, தன் பிள்ளையைப் பிழைப்பிக்க வெண்ணி, தன் பிள்ளையை தலை முன்னதாகவும், வால் தன் வாயண்டையும் வரும்படியாகவும் விழுங்கிக்கொண்டு, தாய்ப் பாம்பு ஆகாயத்திற் கிளம்பியது. இதைக் கண்ட அர்ச்சுனன் தாய்ப் பாம்பின் தலையை அறுத்துவிட, உள்ளிருந்த சிறு பாம்பின் வால் மாத்திரம் வெட்டுண்டது. அச்சமயத்தில் இந்திரன் முதலிய தேவர்கள் காற்று, தூசி இவைகளைக் கிளப்பி மறைக்க, இச்சிறு பாம்பு தப்பி ஓடிப்போய்விட்டது. இது அர்ச்சுனனுக்குத் தெரியாது.

வினு 189.—மயாஸுரன் எப்படித் தப்பித்துக்கொண்டான்?

விடை.—இவ் வஸுரன் தன்னண்டையில் தீ வருவதைக் கண்டு காண்டவ வனத்தை விட்டு ஓட யத்தனிக்கையில், கிருஷ்ண பகவான் கண்டு, அவனைக் கொல்ல சக்கிராயுதத்தைக் கையிலெடுத்துவிட்டார். இதைக் கண்ட மயன் அர்ச்சுனன் காலில் விழுந்து தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று கெஞ்ச, அர்ச்சுனன் அவனைக் காப்பாற்றுவதாகச் சொன்னான். உடனே பகவானும் சக்கிராயுதத்தைக் கீழே வைத்து

விட்டார். ஆகவே இருவரும் மயனை தப்பிப் போகும்படி விட்டுவிட்டார்கள். (இம்மயன் தனக்கு உயிர் தந்த அர்ச்சுனனுக்குச் செய்த உபகாரத்தை ஸபா பர்வத்தில் விஸ்தரிப்போம்.)

வின 190.—நான்கு சாரங்ககப்பறவைகள் எவ்வாறு பிழைத்தன?

விடை.—நெருப்பு சுற்றி வருவதைக் கண்ட நான்கு இறகு முளைக்காத சாரங்ககக் குஞ்சுகள் அக்கினி பகவானை மனதாரத் துதித்தன. மேலும் இச் சாரங்ககப் பறவைகளின் பிதாவாகிய மண்டபாலர் என்கிற ரிஷியும் முன்னமேயே அக்கினி பகவானிடம் தன் நான்கு குஞ்சுகளையும் எரிக்காது காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார். இவ்விரு காரணத்தால் இக்குஞ்சுகளை எரிக்காது அக்கினி பகவான் விட்டுவிட்டார்.

வின 191.—ரிஷிக்குப் பறவைகள் பிறப்பானேன்?

விடை.—மண்டபாலர் என்கிற ரிஷி மஹா ஸந்நியாஸியாயிருந்து கடைசியில் தேகம் விட்டு பிதிர் லோகத்திற்குப் போனதும், அங்கு ஸுகம் கிடைக்காது கண்டு, அங்கிருந்த தேவதைகள் மூலமாய் தனக்குப் பிள்ளையில்லாததால்தான் அவ்வுலகில் ஸுகம் கிடைக்கவில்லை யென்று தெரிந்துகொண்டார். உடனே அதிசீக்கிரத்தில் குழந்தைகள் உண்டாவது பக்ஷி ஜாதியில்தான் என்று அறிந்த ரிஷி, ஒரு சாரங்ககப்பறவையாகி நான்கு குஞ்சுகளை உண்டாக்கினார். பின்பு கொஞ்ச நாள் சாரங்ககமாகவே பக்ஷிதர்மத்தை அனுஷ்டித்து விட்டுப் பின் பிதிர்லோகமடைந்தார். ஆகையால்தான் ரிஷிக்குப் பக்ஷிகள் குழந்தைகளாகப் பிறந்தன.

வின 192.—இப்படி காண்டவ தகனம் ஆனதும் என்ன நடந்தது?

விடை.—இந்திரன் முதலிய தேவதைகள் அர்ச்சுனனைக் கண்டு ஸந்தோஷித்தார்கள். அப்பொழுது அர்ச்சுனன் இந்திரனைத் தனக்கு அஸ்திர விசேஷங்களைக் கொடுக்கும்படி கேட்டான். இந்திரன் 'உனக்கு எப்பொழுது சிவகடாக்ஷம் வருமோ அப்பொழுது நான் நீ கேட்டவைகளை உனக்குக் கொடுப்பேன்' என்று சொல்லித் தன் இருப்பிடம் சென்றான். அக்கினிபகவானும் 'என் சகாயத்தால் உங்களுக்கு நினைத்தவிடம்போக சக்தி வரட்டும்' என்ற வரத்தைக்கொடுத்து விட்டு மறைந்தார். உடனே சகலதேவதைகளும் தத்தம் இருப்பிடம் சென்றார்கள். கிருஷ்ணார்ச்சுனர்களும், ஸ்திரீ ஜனங்களும் இந்திரப் பிரஸ்தம் சென்றார்கள்.

2-வது ஸபாபர்வம்.

பாண்டவர்கள்புரிந்ததவப்பயனாகி யவதரித்துப்பகைத்துமேன்மேன்
மூண்டவினைமுழுவதுவுமுனைதோறு முரண்முருக்கிமுகில்புகாமல்
காண்டவமுங்கனல்வயிற்றுக் கனறணியநுகருவித்துக்காக்குமாறே
பூண்டருளெம்பெருமானைப் போற்றுவாரெழுபிறப்புமாற்றுவாரே.

வினா 1.—காண்டவ வனத் தீயிலிருந்து காப்பற்றப்பட்ட மயாஸுரன் எப்படித் தன் நன்றியறிதலைக் காட்டத் தொடங்கினான்?

விடை.—மயன் தனக்கு உயிர் தந்த அர்ச்சுனனிடம் வந்து தனக்கு இருக்கும் ஸந்தோஷத்தைத் தெரிவித்து, தன்னால் இயன்ற மட்டும் பாண்டவர்களுக்கு ஏதாவது ஒரு நன்மை செய்ய எண்ணுவதாகச் சொன்னான். அர்ச்சுனன் தனக்கு ஒரு உபகாரமும் தற்காலம் வேண்டாம் என்றும், தன்னிடத்தில் மயனுக்கு அப்பொழுது இருக்கும் நன்றியறிதல் எப்பொழுதும் இருக்கவேண்டும் என்றும் மறுமொழி சொன்னான். மேன்மேலும் மயன் உபகாரம் ஏதாவது செய்தே தீரவேண்டும் என்று வற்புறுத்த, அப்பொழுது அர்ச்சுனன் கிருஷ்ணனுக்கு பிரியமானது எதுவோ அதைச் செய்' என்று மயனுக்கு உத்தரவு செய்தான்.

வினா 2.—கிருஷ்ணமூர்த்தி மயாஸுரனை என்ன செய்யும்படி ஏவினார்?

விடை.—மஹாத்மாவாயும், அர்ச்சுனன் தமயனும் உள்ள தருமபுத்திரர் இருந்து அரசாளத் தகுந்ததாயும், தேவாஸுர சிற்ப சாஸ்திர விசித்திரங்கள் அமைந்து அற்புதங்கள் நிறைந்ததாயும் உள்ள ஒரு திவ்ய ஸபையை இந்திரப் பிரஸ்தத்தில் உண்டாக்கும்படி கிருஷ்ணபகவான் மயனை ஏவினார்.

வினா 3.—இப்படிக் கிருஷ்ண பகவான் உத்தரவு செய்த பின்பு என்ன செய்தார்?

விடை.—இதன் பின்பு பாண்டவர்களில் தன்னைவிட வயதில் சிறியவரை ஆசீர்வதித்து ஸமான வயதுள்ளவர்களை ஆலிங்கனம் செய்துகொண்டு தன்னைவிட பெரியோரிடம் இருந்து



திரௌபதி மான ஸம்ரக்ஷணம்

—160-ம் பக்கம் பார்க்க

மஹா விநயத்துடன் விடைபெற்று கிருஷ்ணபகவான் துவாரகாபுரியை நோக்கிச் சென்றார்.

வி 4.—மயாஸுரன் எங்கிருந்து ஸபைக்குவேண்டிய ஸாமான்களைக் கொண்டுவந்து எவ்வளவு நாளில் ஸபையைக் கட்டி முடித்தான்?

விடை.—கைலாஸகிரிக்கு வடக்கே மைநாக மலைக் கருகில் பிந்து ஸரஸின் கரையோரமாக அநேக விசேஷ விலை யுயர்ந்த கற்களை விருஷபர்வன் என்கிற அஸுரராஜன் வீட்டின் அருகாமையில் மயன், முன்னொருக்கால் தானவர்கள் யாகஞ்செய்யுங்கால், சேர்த்துவைத்திருந்தான். அவைகளை வடக்கே சென்று தருமபுத்திரரது ஸபைக்காக எடுத்துக்கொண்டு வந்து தனக்கு ஊழியக்காரரா யிருக்கும் கிங்கரர்கள் என்கிற அஸுரர்களது ஸஹாயத்தால் 14-மாதத்தில் ஒரு விசித்திர ஸபையை இந்திரப்பிரஸ்தத்தில் கட்டி முடித்தான்.

வி 5.—இந்த ஸபையிலடங்கிய முக்கிய விசித்திரங்கள் என்ன?

விடை.—இச்சபையில் சிலவிடங்களில் கீழேபோட்டுள்ள பளிங்குக் கற்களால் பார்ப்பவர்களுக்கு தண்ணீர் ஓடுவதுபோல் தோன்றும். சில விடங்களில் நல்ல குளத்தை உண்டாக்கிவைத்து அதன் படிகளில் பளிங்குக் கற்கள் அமைத்திருத்தலால் அங்கு தண்ணீராவது பள்ளமாவது இருப்பதாகப் பார்ப்பவர்களுக்குத் தோன்றுதிருக்கும். வேறு சில விடங்களில் சுவரில் கண்ணாடிகளின் மூலமாயாவது, திரைகளின் மூலமாயாவது, சித்திரங்கள் மூலமாயாவது வாசல் இருக்குமிடத்தில் இல்லாதது போலவும், இல்லாதவிடத்தில் இருப்பதுபோலவும் தோன்றும்படி செய்திருந்தது. ஆகையால் இந்த ரகஸியங்களை அறியாது உள்ளே செல்லும் ஜனங்கள் உள்ளே போகமுடியாமலும், வெளியே வரமுடியாமலும் தத்தளிக்க வேண்டியதுதான். இதுபோல இன்னும் அனேக விசித்திரங்களோடு கூடி இருந்தது இந்த மயஸபை.

வி 6.—இவ்வாறு மயன் ஸபையைக் கட்டி முடித்ததும் தருமபுத்திரர் என்ன செய்தார்?

விடை.—மஹாப் பிராம்மணர்களுக்கு ஒரு சுபதினத்தில் வயிறார போஜனமிட்டு, அன்று ஒரு சுபலக்கினத்தில் பிராம்மண சிரேஷ்டரால் ஆசீர்வதிக்கப் பெற்று, இந்த ஸபையில்

யுதிஷ்டிரர் பிரவேசித்தார். இந்த ஸபையில் இருக்குங் கால் அனேக மஹாரிஷிகள் அங்குவந்து தருமபுத்திரருக்கு சாஸ்திர ரகஸியங்களை உபதேசித்தருளினர். அனேக சிற்றரசர்களும், ஸ்நேகித ராஜாக்களும் தருமபுத்திரரிடம் வந்து காத்துக்கிடந்தனர். இவ்வாறு மேலான பதவியில் தருமபுத்திரர் மயனாற் செய்யப்பட்ட அந்த விசித்திர ஸபை யிலிருந்துகொண்டு மனுநெறி வழுவாது செங்கோல் செலுத்தி வந்தார்.

வினா 7.—இவ்வாறு பாண்டவர்கள் கோலாஹலமாய் மய ஸபை யில் வஸிக்கும்பொழுது யார் இவர்களைப் பார்க்கவந்து, என்ன சொன்னார்?

விடை.—ஸகல சாஸ்திரங்கள், கலை ஞானங்கள் முதலியவைகளில் கரை கண்டவரும், ஸதா ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்பவரு மான நாரதர் பாண்டவர்களைப் பார்க்க இந்திரப் பிரஸ்தத் திற்கு வந்தார். உடனே யுதிஷ்டிரர் முதலியவர்கள் எழுந்து ரிஷிக்கு மரியாதைசெய்து அவரை ஒரு உயர்ந்த ஆஸனத்தி லிருத்திவிட்டுப் பாண்டவர் முதலியவர்கள் தத்தமக்குத் தகுந்த கீழான ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள். உடனே நாரதர் இராஜ்யத்தின் செழிப்பு முதலியவைகளைப்பற்றி மிகுந்த ஆவலோடு யுதிஷ்டிரரை விசாரித்தார். இதன் பின்பு தருமபுத்திரர் "இந்த ஸபையைப்போல வேறு ஸபை எங்கே யாவது கண்டதுண்டா?" என்று நாரதரை மஹா விநயத் தோடு கேட்டார்.

வினா 8.—இதற்கு நாரதர் என்ன பதில் சொன்னார்?

விடை.—"மனுஷ்ய லோகத்தில் இதைப்போன்ற விசித்திரமான ஸபை நான் எங்கும் கண்டதில்லை. ஆனால் லோகபாலர்கள், பிரம்மா, இந்திரன் முதலியவர்களது ஸபைகள் வேண்டு மானால் இதற்கு கொஞ்சம் மேற்பட்டதெனச் சொல்லலாம்" என்று சொல்லி அவர்களது ஸபைகளை நாரதர் யுதிஷ்டிரருக்கு வர்ணிக்கத் தொடங்கினார்.

வினா 9.—இவ்வாறு நாரதர் வர்ணித்துக்கொண்டு வருங்கால் யுதிஷ்டிரரது மனதில் பற்றிய முக்கிய விஷயங்கள் எவை? யுதிஷ்டிரர் முடிவில் என்ன செய்தார்?

விடை.—இந்திர ஸபையில் ஸூரிய வம்சத்தரசராகிய ஹரிச்சந்திரர் இருக்கிறார் என்பதும், யம ஸபையில் பாண்டு மஹாராஜா இருக்கிறார் என்பதும் யுதிஷ்டிரர் மனதில் நன்றாய் பதிய, கடைசியில் யுதிஷ்டிரர் நாரதரை நோக்கி 'என் தகப்பனார் ஏன் இன்னும் பிதிர்லோகத்தில் யமஸபையில் இருக்கிறார்? ஹரிச்சந்திரன் போன்ற அரசர்கள் மாத்திரம் ஏன் இந்திர ஸபையில் இருக்கவேண்டும்? இவர்களைப்போல என் பிதாவும் இந்திர ஸபைக்குப் போகவேண்டுமானால் நான் என்ன செய்யவேண்டும்" என்று கேட்டார்.

வினா 10.—இதற்கு நாரதர் என்ன பதில் சொன்னார்?

விடை.—"ஹரிச்சந்திரன் முன்பு இராஜஸூய யக்ஞம் செய்து தனது சொத்துக்களைத் தானஞ்செய்து சகலரையும் திருப்தி செய்தமையால், இந்திர ஸபையில் இப்பொழுது ஸுகத்தை அனுபவிக்கிறான். இப்படி ஸுகம் அனுபவிக்கும் ஹரிச்சந்திரனது பதவியைக்கண்ட உனது தகப்பனை பாண்டு, உன்னையும் இராஜஸூய யக்ஞம் செய்யச் சொல்லி தனக்கும் அப்பதவி கிடைக்கும்படி செய்யவேண்டும் என்று என்னைக் கேட்டுக்கொண்டான்" என்று நாரதர் மறுமொழி சொல்லி திரிலோக ஸஞ்சாரத்திற்குப் புறப்பட்டார்.

வினா 11.—இப்படி நாரதர் சொல்லிப் போனதும் யுதிஷ்டிரர் என்ன தீர்மானம் செய்தார்?

விடை.—யுதிஷ்டிரருக்கு அந்த யாகஞ்செய்தால் நலம் என்று தோன்ற, தனது தம்பிமார், மந்திரிமார் முதலியவர்களோடு ஆலோசனை செய்தார். அவர்களும் இதை அங்கீகரித்தார்கள். பின்பு தௌமியர், வியாஸர், இவர்களோடு தருமபுத்திரர் கலந்து ஆலோசித்தார். இவர்களும் இதை அங்கீகரித்தார்கள். இவ்வளவு முடிந்தபின்பும் தருமபுத்திரருக்கு ஒருவித ஸ்திரம் வராததால் கிருஷ்ணபகவானைத் துவாரகையிலிருந்து ஒரு தூதன்மூலமாய் வரவழைத்து அவரோடு ஆலோசித்துப் பார்த்தார். இதன்பின்பு தருமபுத்திரர் இராஜஸூய யாகம் செய்வதாகத் தீர்மானித்தார்.

வினா 12.—பாண்டவர்கள் இராஜஸூய யாகஞ் செய்வதற்கு என்ன முக்கியமான தடை இருந்தது?

விடை.—இந்த யாகஞ் செய்ய வேண்டுமானால், பரதகண்டத்திலிருந்த அரசர் யாவரும் பாண்டவர்களுக்கு ஸ்நேகிதர்களாகவாவது அல்லது அவர்களால் ஜயிக்கப்பட்டவர்களாகவாவது இருந்து யக்ஞத்தில் தருமபுத்திரருக்கு மரியாதைகள் செய்ய வரவேண்டும். ஜராஸந்தனைத் தவிர வேறு பரதகண்டத்தரசர் யாவரும் ஒருவாறு தருமபுத்திரருக்கு இணங்கிவிடுவார்கள். இவன் மாத்திரம் ஒரு வழிக்கும் வரமாட்டான். ஆகையால் ஜராஸந்தன் உயிரோடிருப்பதே இந்த இராஜஸூய யக்ஞத்திற்கு ஒரு பெரியதடையாய் இருந்தது.

வினா 13.—ஜராஸந்தனைக் கொன்று இந்த முக்கிய தடையை நிவர்த்தி செய்வதற்கு கிருஷ்ணபகவான் என்ன உபாயம் சொன்னார்?

விடை.—தாமும், பீமனும், அர்ச்சுனனும் மகத தேசாதிபதி ஜராஸந்தன் பட்டணமாகிய கிரிவ்ரஜம் என்கிற பட்டணத்திற்கு ஸ்நாதகப்பிராமணர் வேஷம் தரித்துப்போய் அவனை தங்கள் மூவரில் ஒருவரோடு யுத்தம் செய்யும்படி கேட்டுக் கடைசியில் கொன்று திரும்பலாம் என்று உபாயம் சொல்லிக் கொடுத்தார்.

வினா 14.—ஜராஸந்தனைக் கொன்றேதான் தீரவேண்டுமென்று ஏன் தருமபுத்திராதிகள் எண்ணினார்கள்?

விடை.—அவன் துராத்மா. அவன் நரபசு யாகம் செய்வதற்காக அனேக அரசரைப் பலிகொடுக்க எண்ணி தனது பட்டணத்தருகிலிருந்த ஒரு மலைக் குகையில் அடைத்துப்போட்டிருந்தான். ஆகையால் அவனைக் கொன்றால் அனேக அரசரைப் பிழைப்பித்து பாண்டவர்கள் அவர்களைத் தமக்கு வசப்படுத்திக்கொள்ளலாம். ஆதலால், யாவரும் ஜராஸந்தனைக் கொன்றே தீரவேண்டும் என்று எண்ணினார்கள்.

வினா 15.—ஜராஸந்தனுக்கு இப்பெயர் வரக் காரணமென்ன?

விடை.—இவன் தகப்பன் பிருகத்ரத ராஜாவுக்கு இரண்டு அழகிய மனைவிகள் இருந்தார்கள். இவர்கள் இருவரிடத்திலும் இவருக்கு குழந்தைகள் உண்டாக, இவர்கள் கொஞ்ச காலத்திற்கெல்லாம் பிள்ளை பெற்றார்கள். பெற்றதும், ஒருத்திக்கு ஒரு குழந்தையின் வலது பாதியும், மற்றவளுக்கு அதே குழந்தையின் இடது பாதியும் பிறந்தன. இதைக் கண்ட

அரசனும் அவன் மனைவிகளும் மிக துக்கித்துவிட்டு இவ்விரு பாதிகளையும் தம்மூர் குப்பைமேட்டில் எறிந்து விடும்படி செய்தார்கள். இப்படி இருக்கையில், அந்தவழியே மனுஷ்ய மாம்ஸம் புஜிக்கும் ஜரை என்கிற ஒரு இராக்ஷஸி போக, இவ்விரு பாகங்களையும் சேர்த்துத் தின்னக் கொண்டுபோவோம் என்று எண்ணி இவைகளைச் சேர்க்க, இவை ஒரு பலம் வாய்ந்ததும், மஹா கனமானதுமான குழந்தையாக அது உறக்கக் கத்தியது. இதைக்கேட்டு அரசன் முதலியோர் வெளிவர, அவரிடம் இக்குழந்தையை ஒப்புவித்துவிட்டு ஜரை மறைந்துபோனாள். இவ்வாறு ஜரை என்கிற இராக்ஷஸியால் சேர்க்கப்பட்டு உண்டானமையால் இப்பிள்ளைக்கு ஜராஸந்தனென்று பெயர் வந்தது. இவனுக்கு 10,000 யானை பலமுண்டு.

வின 16.—பிருகத்ரத ராஜாவுக்கு இவ்வாறு முதலில் பிள்ளை பிறப்பானேன்?

விடை.—இவ் வரசன் பிள்ளை வேண்டுமென்கிற ஆசையால் அனேக யக்ஞம் முதலியவைகள் செய்தும் பயன்படாதிருக்கையில், கௌதம வம்சத்தில் பிறந்த சண்டகௌசிகர் என்கிற மஹாரிஷி தன்னூருக்கு வந்து ஒரு மாமரத்தடியிலிருப்பதாகக் கேள்விப்பட்டார். உடனே தனது பெண்சாதி இருவர்களோடும் அரசன் ரிஷியை அடிபணிந்து தனது எண்ணத்தை வெளியிட, அப்பொழுது அந்த ரிஷியின் மடியில் அம் மாமரத்திலிருந்து ஒருபழம் விழுந்தது. இதை மந்திரித்து ரிஷி அரசனிடம் கொடுத்துப் பிள்ளை உண்டாவதற்காக அவன் பெண்சாதிக்குக் கொடுக்கும்படி சொன்னார். அரசன் இரு பெண்சாதிகளிடத்திலும் ஒரே மாதிரி இருந்தமையால் ஒரு பழத்தில் பாதியை ஒருத்திக்கும், மற்றொரு பாதியை மற்றொருத்திக்கும் கொடுத்தான். இதனால் இவ்வாறு விசித்திரமாய் இவர்களுக்குப் பிள்ளை பிறந்தது.

வின 17.—கிருஷ்ணார்ச்சுன பீமர்கள் எவ்வாறு ஜராஸந்தன் பட்டணம் போனார்கள்? அவன் யாரோடு சண்டை செய்வதாக ஒப்புக்கொண்டான்?

விடை.—ஸ்நாதக பிராம்மணர் வேஷம் தரித்து இம்மூவரும் கிரிவ்ரஜம் சென்று, விரோதிகளாகையால், கோட்டைவாசல்

வழி போகாது, கோட்டைமதில் ஏறிக்குதித்து, ஜராஸந்தனது அரண்மனையின் கொல்லை வாசல் வழியாகப் பிரவேசித்தார்கள். இவர்களைக் கண்டதும் ஸந்தேகத்தோடு ஜராஸந்தன் பிராம்மணருக்குரிய மரியாதைகள் செய்து என்ன வேண்டும் என்று கேட்க, அப்பொழுது இவர்கள் தமது பெயர் முதலியவைகளை வெளிப்படையாய்ச்சொல்லி, தம்முள் ஒருவரோடு நீ யுத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். உடனே ஜராஸந்தன் பீமனோடு சண்டை செய்வதாக ஒப்புக்கொண்டான்.

வினு 18.—இப்படி பீமனை இவன் தேடி எடுக்கக் காரணம் என்ன?

விடை.—அர்ச்சுனனைக் கண்டதும், அவன் சிறு பிள்ளை எனத் தோன்ற அவனை விட்டுவிட்டான். கிருஷ்ண பகவானிடம் இவன் பதினெட்டுத்தடவை தோல்வியடைந்திருந்தமையால் இவர் தன்னைக் கொன்றுவிடுவார் என்கிற பயத்தால் கிருஷ்ண பகவானையும் தள்ளிவிட்டான். ஆகையால் இவன் பீமனோடு போர்புரிவதாக ஒப்புக்கொண்டான்.

வினு 19.—இவர்கள் சண்டை எவ்வாறு நடந்தது? இது என்னமாய் முடிந்தது?

விடை.—இவர்கள் சாப்பாடு, தூக்கம், ஒழிவு முதலியவைகள் இல்லாது 14-நாள் யுத்தம்செய்ய, 14-ம் நாள் இரவில் ஜராஸந்தன் களைப்படைந்தான். கிருஷ்ணபகவானது உத்திரவுப்படி பீமன், ஜராஸந்தன் தனக்குக்கொடுத்த ஆயுதங்களை எறிந்துவிட்டு அவனோடு முஷ்டி யுத்தம் செய்யத்தொடங்கினன். இப்படிக் கொஞ்சநாழிகை செய்தபின்பு பீமன் ஜராஸந்தனைக் காலைப் பிடித்துக்கொண்டு வெகு வேகமாய் அநேகம்தரம் சுழற்றி அவன் தேகத்தை முறித்து எறிந்து அவனைக் கொன்றுவிட்டு கர்ச்சனை செய்தான்.

வினு 20.—இதன் பின்பு இவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—மறுநாட்காலையில், ஜராஸந்தனது இரதத்தைக் கொண்டு வந்து அதில் மூவரும் ஏறிக்கொண்டார்கள். உடனே கருட பகவான் அதன்கொடியில் வந்துட்கார அந்த இரதத்தை கிருஷ்ணபகவான் நடத்த அது பட்டணத்தில் ஒரு மைதானத்தில் வந்து நின்றது. அப்பொழுது ஜராஸந்தனது பிள்ளையாயும், ஸத்தாயுமுள்ள ஸஹதேவன் பகவானைச் சரண

மடைய, பகவான் அவனுக்கே அப்பட்டணத்தைக் கொடுத்து தருமபுத்திரரது இராஜஸூய யாகத்திற்கு வரும்படி சொல்லி விட்டு, ஜராஸந்தன் சிறையில் வைத்திருந்த அரசர்கள் எல்லோரையும் விடுவித்து, அவர்களையும் கூட அழைத்துக் கொண்டு இவர்கள் இந்திரப்பிரஸ்தம் சென்றனர். தருமபுத்திரர் இவ்வரசர்களுக்குத் தகுந்த மரியாதைசெய்து அனுப்பி விட்டு ஸுகமாய் வஸித்திருந்தார்.

வினா 21.—இவ்வாறு இராஜஸூய யாகத்திற்கு முக்கிய தடையாகிய ஜராஸந்தனைக் கொன்ற பிறகு பாண்டவர்கள் யாக விஷயமாக என்ன ஏற்பாடு செய்தார்கள்?

விடை.—தருமபுத்திரரது தம்பிமார்கள் நால்வரும் மற்றைய அரசர்களை ஜயித்து இராஜஸூய யாகத்திற்கு வரும்படியாக அழைக்க நான்கு திக்கிலும் திக்கு விஜயம்செய்யப் புறப்பட்டார்கள். இதில் அர்ச்சுனன் வடக்கு திக்கையும், பீமன் கிழக்குதிக்கையும், ஸஹாதேவன் தெற்கு திக்கையும், நகுலன் மேற்கு திக்கையும் நோக்கி, தருமபுத்திரரது அனுமதியின் பேரில் சென்றார்கள்.

வினா 22.—அர்ச்சுனனது திக்கு விஜயத்தில் நடந்த விசேஷங்கள் என்ன?

விடை.—போகும் வழியில் அநேக சிற்றரசர்களை ஜயித்துக் கொண்டு அர்ச்சுனன் நரகாஸுரனது பிள்ளை பகதத்தன் அரசாளும் பட்டணம் வர, அவன் இவனோடு சிலகாலம் சண்டை செய்து இவனது பராக்கிரமத்தைக் கண்டு இவன் இஷ்டப்படி செய்வதாக ஒப்புக்கொண்டான். இதன் பின்பு வடக்கே மலைப் பிரதேசத் தரசர்களை தன் வசப்படுத்திக் கொண்டு, கிம்புருஷலோகம் சென்று அவர்களை வென்று, உத்தரகுருகண்டம் சென்றான். அது சிறந்த கண்டமாதலால் அதில் மனிதர் சென்றால் உயிர் தரிப்பதரிது. அப்படியிருக்க அர்ச்சுனன் அங்கு செல்ல, வாயில்காப்பவர் அக்கண்டத்தின் ஸ்வபாவத்தைச்சொல்லி அர்ச்சுனனைத் திரும்பிப் போகும்படி சொன்னார்கள். பின்பு அர்ச்சுனன் வந்த காரியத்தைச் சொல்ல, தருமபுத்திரரது நன்னடத்தைக்காக அக்கண்டத்தார் அநேக தெய்வீகமான ஆடையாபரணங்கள் கொடுக்க, அவைகளைப் பெற்றுக்கொண்டு வரும் வழி

யில் பாக்கி யிருந்த சில காட்டு ராஜாக்களை வென்று, தரும புத்திரரிடம் தான் கொண்டுவந்தவைகளை ஸமர்ப்பித்தான்.

வினு 23.—பீமஸேனனது திக்கு விஜயத்தில் நடந்த விஷயம் என்ன?

விடை.—முதலிய பீமன் பாஞ்சால தேசம் சென்று, ஸமாதான வழியால் அரசர்களை வசப்படுத்தி, சில சிற்றரசர்களை வென்று, கடைசியில் சேதி தேசத் தரசன் சிசுபாலனிடம் வர, அவனும் ஸமாதானமாய் தருமபுத்திரருக்கு வேண்டியது செய்வதாக வாக்களிக்க பீமனும் 30-நாள் அவனிடம் ஸுகமாய் இருந்தான். இதன் பின்பு போகும் வழியில் இருந்த சிறு தேசாதிபதிகளை வென்று ஜராஸந்தன் பிள்ளையிடம் வந்து அவனிடமிருந்து மரியாதைகளைப் பெற்று அங்க தேசாதிபதியாகிய கர்ணனை வென்றான். இவ்வாறு அனேக இராஜாக்களை ஜயித்து, அவர்களிடமிருந்து தான் பெற்று வந்த பரிசுகளைத் தருமபுத்திரர் பாதங்களில் பீமன் ஸமர்ப்பித்து விட்டான்.

வினு 24.—ஸஹாதேவனது திக்கு விஜயத்தில் நடந்த விசேஷமென்ன?

விடை.—முதலில் தந்தவக்கிரன், குந்திபோஜன், அவந்தீ நகரத்திலிருந்த விந்தானுவிந்தாள், பீஷ்மகராஜா, கிஷ்கிந்தா நகரத்தில் அரசாண்டு வந்த மைந்தத்துவிதாள், முதலிய இராஜாக்களை எளிதில் ஸஹாதேவன் வென்றான். இதன் பின்பு இவன் மாஹிஷ்மதீ பட்டணம் போனான். அங்கு அரசாண்டு வந்த நீலராஜனுக்கு அக்கினி பகவான் ஸகாயமாக வர ஸஹாதேவனது ஸேனைகளுக்கு தாபம் அதிகரித்துவிட்டது. இதைக் கண்டு அவன் அக்கினியைத் துதிசெய்ய அவர் இவனிடம் வந்து தான் பரீக்ஷை செய்ததாகவும் தருமபுத்திரரது நல்ல எண்ணம் தனக்கு தெரியும் என்பதாகவும், தான் அப்பட்டணத்தைக் காக்கும்வரை அதை ஒருவராலும் ஜயிக்க முடியாதென்பதாகவும் சொல்லி, அக்கினி பகவான் ஸஹாதேவனுக்கும், நீல ராஜாவுக்கும் ஸ்நேகம் செய்து வைக்க, பின்பு ருக்மிமுதலிய அரசர்களை ஸஹாதேவன் வென்றான். இதன் பின்பு தெற்கு ஸமுத்திரக்கரையை அடைந்து இலங்கையில் அரசாண்டு வந்த விபீஷணருக்கு தூதரை அனுப்ப, மிகுந்தஸந்தோஷமாய் அவர் பரிசுகள் அனுப்பினார்.

இவ்வாறு தெற்கிலுள்ளவர்கள் யாவரையும் வென்று ஸஹா தேவன் இந்திரப்பிரஸ்தம் சென்று தருமபுத்திரர் அடிபணிந்து நின்றான்.

வினா. 25.—மாஹிஷ்மதி பட்டணத்தில் அக்கினி பகவான் காவலிருந்ததற்கு காரணம் என்ன?

விடை.—நீலராஜனது பெண்ணைக் கண்டு அக்கினி பகவானுக்கு ஆசை வர, அந்த அரசன் அரண்மனையில் யார் என்ன செய்தாலும் ஹோமகுண்ட நெருப்புப் பற்றாதிருந்தது. தற்செயலாய் நீலராஜன் பெண் வந்து அக்கினியை ஊதிப் பார்த்தாள். உடனே அக்கினி பற்றிக்கொண்டது. இதைக் கண்டதும், அக்கினிபகவானை இப்பெண் கல்யாணம் செய்து, கொள்ள ஒத்துக்கொள்ளவே, அக்கினி பகவான் பிராம்மண வடிவங் கொண்டு இப்பெண்ணோடு விளையாடி வந்தார். இப்படி யிருக்கையில் அரசன் கண்டு இப் பிராம்மணனை தண்டிக்க யத்தனிக்க, உடனே அக்கினி பகவான் தன் ரூபத்தைக் காட்டினார். அரசன் வியந்து தன் பெண்ணை அக்கினி பகவானுக்கு விவாஹம் செய்துகொடுக்க, அன்று முதல் அரசனது வேண்டுகோளின்படி அப்பட்டணத்தை அக்கினி பகவான் காத்துவந்தார். இதை அறியாது அங்கு படையெடுத்துச்சென்றவர்கள் நெருப்பால் எரிக்கப்பட்டு மாளுவது வழக்கம். தெரிந்தவர்கள் அப்பட்டணத்தருகில் கூட வருவதில்லை.

வினா. 26.—நகுலனது திக்கு விஜயத்தில் நடந்த விசேஷம் என்ன?

விடை.—அநேக சிற்றரசர்களை ஜயித்துக்கொண்டு நகுலன் மேற்கே துவாரகை அருகில் வந்து கிருஷ்ண பரமாத்மாவுக்கு தூதரை அனுப்ப, அவர் யாதவ பரிவாரங்களோடு எதிர் கொண்டு வந்து நகுலனுக்குத் தகுந்த மரியாதைகள் செய்தனுப்பினார். இவன் பின்பு மத்திர தேசாதிபதியும், தனது மாமனுமான சல்லியராஜனை தன் வசப்படுத்திக் கொண்டு, அனேக மிலேச்ச ராஜாக்களை ஜயித்து இவன் இந்திரப் பிரஸ்தம் வந்து சேர்ந்தான்.

வினா. 27.—இவர்கள் இவ்வாறு வந்த பின்பு என்ன நடந்தது?

விடை.—கொஞ்ச காலம் கழிந்த பின்பு மந்திரிமார் முதலிய பெரியோர்கள் இராஜஸூயயாகஞ் செய்யவேண்டிய காலம்

வந்ததென்று தருமபுத்திரருக்குச் சொன்னார்கள். இப்படியிருக்கையில் அநேக பரிசுகளை எடுத்துக்கொண்டு கிருஷ்ண பகவான் இந்திரப் பிரஸ்தம் வந்து சேர்ந்து இராஜஸூய யாகத்தைக் தொடங்கும்படி உத்திரவுகொடுத்தார். உடனே பாண்டவர்கள் யாகத்திற்கு வேண்டிய ஸம்பாரங்களைச் சேகரித்தார்கள். அவர் அழைத்துவிட்டு வந்திருந்த அரசர்கள் யாவரும் யாக வைபவத்தைக் கண்டு களிக்க இந்திரப்பிரஸ்தம் வந்து கூடினார்கள். அவரவர்களுக்குத் தகுந்த மரியாதைகளைத் தருமபுத்திரர் செய்து அவரவர்களுக்குத் தகுந்த விடுதிகளை நியமித்தார். துரியோதனுதியர், பீஷ்மர், விதுரர் முதலியவர்கள், யாதவாள் எல்லோரும் வந்து கூடிவிட்டார்கள். இவர்கள் ஸந்நிதானத்தில் தருமபுத்திரர் யாகத்தை ஆரம்பித்தார்.

வினு 28.—இவ்வாறு யாகம் ஆரம்பித்து நடந்து வருங்கால் விக்கினம் போன்றது என்ன நடந்தது?

விடை—சேதி தேசாதிபதியான சிசுபாலனுக்குக் கடைசி நாள் கிருஷ்ண பகவானிடம் கோபம் உண்டாக, அவன் அவரை பலவிதமாக வைதான். இது நிரம்பவும் அதிகமாய்ப் போகும் வரையில் பொறுத்திருந்து, கடைசியில் சிசுபாலன் வரம்புகடந்து போனவுடன், பகவான் தமது சக்கிரத்தை எடுத்து சிசுபாலனது தலையை அறுத்தார். உடனே சிசுபாலனது தேகத்திலிருந்து ஒரு திவ்ய தேஜஸ் புறப்பட்டு கிருஷ்ண பரமாத்மாவின் தேகத்துட் பிரவேசித்தது. அப்பொழுது தருமபுத்திராதிகள் சிசுபாலனது பிள்ளையைச் சேதி தேசாதிபதியாகப் பட்டாபிஷேகம் செய்து, இராஜஸூய யாகத்தை மேல் நடத்த ஆரம்பித்து நிர்விக்கினமாய் செய்து முடித்தார்கள்.

வினு. 29.—இம்மாதிரியாய் இச்சிசுபாலனுக்கு கிருஷ்ண பகவானிடம் கோபம் உண்டாவானேன்?

விடை.—கடைசி நாள் ஸபையோருக்கு அக்ர பூஜை செய்ய வேண்டி வர, யாருக்கு ஸபையில் முதலில் அர்க்கியத்தை ஸமர்ப்பிப்பது என்கிற ஸந்தேகம் தருமபுத்திரருக்கு வந்தது. கிருஷ்ணபகவானே அதை வாங்கத் தகுந்தவர் என்று பீஷ்மர் சொல்ல, அதன்படி அவர் முதல் முதலில் அர்க்கியத்தை

பகவானுக்கு ஸமர்ப்பித்தார். கிருஷ்ணபகவானை இடையன் என்று எண்ணியிருந்த சிசுபாலனுக்கு இது அதிக கோபத்தை உண்டாக்கியது. மேலும் இவன் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணியிருந்த ருக்மணிதேவியை, அவள் இஷ்டத்தின்படி கிருஷ்ணபகவான் தூக்கிக்கொண்டு நடந்து விட்டார் என்ற கோபம் இவனுக்கு முன்னமேயே இருந்தது. ஆகவே அதிககோபத்தோடு பகவானை சிசுபாலன் நாக்கில் நரம்பில்லாது வையத்தொடங்கினன்.

வினு 30.—சிசுபாலன் வசவுகளை வெகுநாழிகை வரையில் கிருஷ்ண பகவான் ஏன் பொறுத்திருந்தார்? பின்பு ஏன் அவனைக் கொன்றார்?

விடை.—சிசுபாலனது தாயார் கிருஷ்ண பரமாத்மாவே தன் பிள்ளையைக் கொல்லப்போகிறவர் என்று அறிந்து, அவரிடம் "என் பிள்ளை உமக்கு என்ன அபராதம் செய்தாலும் நீர் பொறுத்தருள வேண்டும்" என்று வரங்கேட்டிருந்தாள். இதற்கு கிருஷ்ண பகவான், "ஸம்ஹரிப்பதே தகுதி என்று சொல்லத்தகுந்த குற்றங்கள் 100 இவன் செய்கிறவரையில் நான் இவனை பொறுத்துக் கொள்ளுகிறேன்" என்று வாக்களித்திருந்தார். இதன்படி வரம்புகடந்து சிசுபாலன் போகிற வரையில் பொறுத்திருந்த பகவான், அவனுக்குச் சீக்கிரத்தில் நற்கதி அளிக்கவேண்டுமென்று அவன் வரம்பு கடந்ததும் அவனைக் கொன்றார்.

வினு 31.—சிசுபாலனது தாயாருக்கு கிருஷ்ண பரமாத்மா தன் பிள்ளையைக் கொல்லப்போகிறார் என்று எப்படித் தெரிய வந்தது?

விடை.—சிசுபாலன் பிறந்தவுடன் அவனுக்கு மூன்று கண்ணும் நான்கு கையும் ஏற்பட்டது. அவன் கழுதை கத்துவது போல் கத்த தாயார் தகப்பனுருக்கு அடங்காத் துக்கமுண்டாய் விட்டது. உடனே ஒரு அசரீரி வாக்கு "இவன் சீக்கிரத்தில் சாகமாட்டான், ஆனால் இவனைக் கொல்ல ஒரு பலவானன புருஷன் வளருகிறான்" என்று சொல்ல, தாயார் "என் பிள்ளையைக் கொல்லுகிறவனை அறியும் வழி என்ன?" என்று கேட்டாள். அதற்கு அசரீரி "நீ யாருடைய மடியில் இப்பிள்ளையை வைத்த உடன், இவனது அதிக கைகளும்,

கண்களும் மறைந்து போகின்றனவோ அவனே இவனை கொல்லுகிறவன்" என்று சொல்லி மௌனமாய் விட்டது. இதுமுதல் தாயார் யார் வந்தாலும் அவர்களது மடியில் எல்லாம் இக்குழந்தையை வைப்பது வழக்கம். இப்படி யிருக்கையில் கிருஷ்ணபகவான் சேதி தேசம்வர, அவரது மடியிலும் இக்குழந்தை வைக்கப்பட்டது. உடனே குழந்தையின் அதிகமான கண்களும், கைகளும் மறைய, பகவானே தன் பிள்ளைக்கு விரோதி என்று சிசுபாலன் தாயார் அறிந்து கொண்டாள்.

வினு 32.—இத் துராத்மாவான சிசுபாலனுக்கு பகவானது தேகத்துள் புகும்படியான பாக்கியம் எப்படி வந்தது?

விடை.—இச்சிசு பாலனது நிஜரூபம் வைகுண்டத்தி லிருக்கும் துவாரபாலக ரூபம். இவனுக்கும் இவனது ஸஹாவுக்கும் ஸனகாதியோகிகள் சாபத்தால் பூமியில் மூன்று ஜன்மம் ஹரித் துவேஷிகளாய் பிறக்க வேண்டிவர, இவர்கள் ஹிரண்யாக்ஷன், ஹிரண்ய கசிபு; இராவணன், கும்பகர்ணன், சிசுபாலன் தந்தவக்கிரனுக வரிசையாய்ப் பிறந்து ஒவ்வொரு ஜன்மத்திலும் பகவானிடம் துவேஷரூப பக்தியைச் செய்தார்கள். ஆகையால் இவர்கள் பகவானுலேயே கொல்லப்பட்டுக் கடைசியில் சிசுபால தந்தவக்கிரர்களாகி கிருஷ்ணனுல் உயிரிழந்து அவருட் பிரவேசித்தார்கள். (இவ்விஷயத்தின் விஸ்தாரத்தை பாகவத வினு விடையில் காண்க.)

வினு 33.—இதன் யாகம் முடிந்தவுடன் தருமபுத்திரரது மனம் எவ்வாறிருந்தது? ஏன்?

விடை.—தருமபுத்திரரது மனம் சிசுபாலவதத்தை நினைந்து குழம்பிக் கொண்டிருந்தது. நாரதர் முன்னமே இந்த யாகத்தைப் பற்றி சொல்லிமுடிக்குங்கால், இதற்கு ஏதாவது நடுவில் தடைகள் வந்தால் ஸகல க்ஷத்திரியர்களும் நாசமடையும்படியான யுத்தமுண்டாகும் என்று சொல்லியிருந்த வார்த்தை ஞாபகத்தில்வர, தருமபுத்திரரது கஷ்டம் அதிகரித்து விட்டது. இதைப்பற்றி வியாஸரிடம் கேட்டதில் அவர் "இந்த சின்னங்களுடைய பலன் 13-வருஷம் இருக்கும், அதன் கடைசியில் க்ஷத்திரியருக்கே உனது மூலமாய் நாசம் வந்தாலும் வரும். இதற்காக நீ துக்கப்பட்டு பிரயோஜனமில்லை" என்று சொல்லிப்போனுர். இதைக்கேட்டு தருமபுத்திரருக்குத் துக்க

மதிகரித்தது. கடைசியாக இதைத் தடுப்பதற்கு தான் யாருக்கும் ஹிதத்தையே செய்வதாக இவர் சபதம் செய்து கொண்டார்.

வி 34.—இந்த யாகம் முடிந்ததும் யார்யார் ஊருக்குச் சென்றார்கள்? யார் யார் இந்திரப் பிரஸ்தத்திலேயே இருந்தார்கள்?

விடை.—கிருஷ்ண பகவான், பீஷ்மர் முதலிய ஸகல இராஜாக்கள் தருமபுத்திரரால் தகுந்த மரியாதை செய்யப்பட்டுத் தத்தம் இருப்பிடம் சென்றார்கள். ஆனால் துரியோதனன், சகுனி இவ்விருவர் மாத்திரம் இந்திரப்பிரஸ்தத்தில் சிலகாலம் தங்கி இருந்தார்கள்.

வி 35.—இவர்கள் இங்கு இருக்கையில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—துரியோதனனும், சகுனியும் ஒருவரது ஸஹாயமுமின்றி மயஸபையைச் சுற்றிப்பார்க்கப் போனார்கள். போனவிடத்தில் இவர்கள் தண்ணீரில்லாத விடங்களில் துணிகளைத் தூக்கிக்கொண்டும், தண்ணீர் நிறைந்த தடாகங்களில் தெரியாது விழுந்தும், கதவில்லா விடங்களில் பிரமித்து முட்டிக்கொண்டும் தத்தளித்தார்கள். இந்நிலையைக்கண்ட பீமன் முதலிய ஸாதாரண ஜனங்களும் ஸ்திரீகளும் வயிறு வெடிக்கச் சிரித்தார்கள். ஆனால் தர்மாத்மாவான தருமராஜர் மாத்திரம் சிரிக்காது இவர்கள் படுந்துயரத்திற்கு இரங்கி இவர்களுக்குப் புதிய வஸ்திரங்களை அழைப்பித்துக் கொடுத்தார். இதைக்கூட வாங்கிக்கொள்ளாது அதிக கோபத்தோடும் வெட்கத்தோடும் ஒருவரோடும் சொல்லிக்கொள்ளாது, இவ்விருவரும் ஹஸ்தினாபுரம் போய்ச்சேர்ந்தனர்.

வி 36.—இவர்கள் ஊர்போய்ச் சேர்ந்ததும் என்ன ஆலோசனை செய்தார்கள்?

விடை.—தருமபுத்திரரது இராஜஸூய வைபவத்தைக்கண்டு வயிற்றெரிச்சல் துரியோதனனுக்கு அதிகரிக்க, தருமபுத்திரரது வைபவங்களை அபகரியாது தான் உயிர் தரிப்பது அஸாத்தியமென்று சகுனி, கர்ணன் முதலிய துராத்மாக்களோடு இவன் கலந்து பேசினான். சகுனி தனது மருமகன் படுங் கஷ்டத்தைக்கண்டு தான் தருமபுத்திரரை சூதாட்டத்தில் வென்று அவரது வைபவங்களை துரியோதனனுக்குக்

கொடுப்பதாகச் சொன்னுன். இதன் பின்பு தருமபுத்திரரை சூதாட அழைக்கவேண்டியதற்குத் தகுந்த உபாயங்களைச் செய்யத் தொடங்கினுர்கள்.

வினு 37.—இவர்கள் என்னென்ன செய்தார்கள்? அவைகள் எவ்வாறு முடிந்தன?

விடை.—புதிதாய் ஸபை நிர்மாணம்செய்து அதைப் பார்ப்பதற்கு பாண்டவரை அழைப்பதுபோல அழைத்து அவர்களைச் சூதாடும்படிசெய்து இராஜ்யம் முதலிய வைபவங்களைப் பறித்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு ஸபையை திருதிராஷ்டிரனது அனுமதியின்பேரில் கட்டத்தொடங்கினுர்கள். விதுரர் துரியோதனுதியரது எண்ணப்படி விடக்கூடாதென்று தடுத்துச் சொல்லியும் திருதிராஷ்டிரனுக்கு பிள்ளைகளது வார்த்தை ஹிதமாகப்பட, ஸபை கூடிய சீக்கிரத்தில் கட்டி முடிந்தது. உடனே விதுரரையே திருதிராஷ்டிரன் பாண்டவரை அழைக்கும்படி ஏவினுன்.

வினு 38.—விதுரர் இந்திரப் பிரஸ்தம் சென்று என்ன செய்தார்? கடைசியில் என்ன நேரிட்டது?

விடை.—பாண்டவரிடம் உண்மையை உள்ளபடி விதுரர் சொல்ல தருமபுத்திரர் 'யார் யார் என்னேடு சூதாடப்போகிருர்கள்" என்றுகேட்டார். விதுரர், சகுனி முதலிய மோசக்காரர்களே என்றும், அவர்கள் சதியாலோசனை செய்திருக்கிருர்கள் என்றும் வெளியிட்டார். தருமராஜர் இப்பொழுது திருதிராஷ்டிரரது உத்தரவுப்படி நான் ஹஸ்தினுபுரி வரவேண்டியதுதான். நானுக புரட்டான சூதாட ஒருநாளும் விரும்பமாட்டேன். என்னை யாராவது சூதாட அழைத்தால், என் விரதப்படி தடுத்துப்பேசவும் மனம்வராது. கடவுள் விடும் வழிப்படியே யாகட்டும்" என்று கடவுளிடம் பாரத்தைப் போட்டு தனது தம்பிமார் திரௌபதி, உறவினர் முதலியவர்களோடு ஹஸ்தினுபுரிக்கு விதுரரை முன்னிட்டுக் கொண்டு புறப்பட்டார்.

வினு 39.—பாண்டவர்கள் ஹஸ்தினுபுரி வந்ததும் என்ன செய்தார்கள்?

விடை.—இங்கு பாண்டவர்கள் வந்ததும் தமது உறவினர் எல்லோரையும் கண்டு தண்டனிட்டு மரியாதைகள் செய்து

விட்டுத் தமக்குவிட்டிருந்த விடுதிகளில் சென்று அன்று இரவை ஸுகமாய்க் கழித்தனர். மறுநாட் காலையில் ஸகல அரசர்களும் நிறைந்திருக்கும் புதியஸபையில் பாண்டவர்கள் வந்து பெரியோர்களுக்கு மரியாதை செய்துவிட்டு உட்கார்ந் தார்கள்.

வினு 40.—இப்படிப் பாண்டவர்கள் வந்து உட்கார்ந்ததும், சகுனி என்ன செய்தான்? தருமபுத்திரர் கடைசியில் என்ன செய்தார்?

விடை.—தருமபுத்திரர் தம்மால் இயன்றமட்டும் சொல்லிப் பார்த் தும் சகுனி விடாமல் சூதாட அழைப்பதைக் கண்டு, அதற்கு இசைந்தார். உடனே துரியோதனன் தான் பந்தயம் வைப்பதாகவும், சகுனி தனக்காக சூதாடுவதாகவும் சொல்ல, இது நியாயமில்லை என்று முதலில் தடுத்தபோதிலும், தரும புத்திரர் கடைசியில் ஒப்புக்கொண்டார். சூதாட்டம் ஆரம் பித்தது.

வினு 41.—சூதாட்டம் எவ்வாறு நடந்தது? யார் யார் என்ன அபிப்பிராயப் பட்டார்கள்?

விடை.—சகுனி மோசக்காரனுதலால், எல்லா ஆட்டங்களிலும் தானே ஜயித்துவந்தான். இதில் தருமபுத்திரர் ஸகல ஸொத்துக்களையும் இழந்துகொண்டு வந்தார். இதைக்கண்டு துரியோதனுதியர், திருதிராஷ்டிரன், கர்ணன் முதலிய துராத் மாக்கள் ஆனந்தித்தனர். பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரர், விகர்ணன் முதலிய சுத்தாத்மாக்கள் இதிலிருந்து ஏதாவது பிரமாதம் உண்டாய் விடுமோ என மனங்குழம்பி னுர்கள்.

வினு 42.—இவர்களில் யார் முதலில் தமது அபிப்பிராயத்தைப் பயப்படாது எப்படி வெளியிட்டார்? இவரது புத்திமதி பிரயோசனப் பட்டதா?

விடை.—விதுரர் ஒருவர்தான் இந்த ஆபத்துக்காலத்தில் தன் மனத் தில் உள்ளவற்றை ஒளிக்காது வெளிக்காட்டினுர். சூது முத லியவைகள் போன்றவை அபாயகரமானவை என்றும், அப் பொழுது ஆடும் சூதால் மிகுந்த பிரமாதம் விளையலாம் என் றும், அதற்கு முக்கியகாரணம் துரியோதனன் என்றும், அவ

ளுல் உண்டாகப்போகிற பிரமாதத்தைத் தடுக்க அவனை அவ சியம் கொல்லவேண்டும் என்றும், பலர் ஸுகம் அடைய ஒரு வனைக் கொல்லுவது சாஸ்திர விருத்தமல்ல வென்றும், இச் சூதாட்டத்தால் பாண்டவர்களைச் சகுனி முதலியோர் அவ மரியாதை செய்து அவர்களைக் கோப மூட்டிவிட்டால் பாண்டவர்களை வெல்லவல்லார் ஸபையில் ஒருவரும் இல்லை என்றும், விதுரர் தமது அபிப்பிராயத்தை நன்ருக வெளி யிட்டார். உடனே துரியோதனன் எழுந்து, விதுரரை நம் பிக்கைத் துரோகி அவரைக் காப்பாற்றுவது பாம்பிற்கு பாலிட்டு வளர்ப்பதுபோலத் தமக்கே விபரீதமாய் முடியும் என்றுசொல்லி விதுரரை வெகுவாகத் தூஷித்தான். தம் சொல் பயன் படாதது கண்டு விதுரர் திருதிராஷ்டிரனை நோக்கித் தமது அபிப்பிராயத்தை வற்புறுத்திச் சொல்லி விட்டு மௌனமாய் இருந்தார்.

வினு 43.—இதன் பின்பு சூதாட்டம் என்னமாய் விருத்தி யடைந் தது? எப்படி முடிந்தது?

விடை.—சகுனி ஸகலத்தையும் தருமபுத்திரரிடம் இருந்து வெகு தந்திரமாய் வென்ருன். உடனே அவர் சூதாட்ட ஆவேசத் தில் முதலில் தனது தம்பிமாரையும், கடைசியில் தன்னையும் பந்தயம் வைத்துப் பார்த்தார். அப்பொழுதும் சகுனியே வென்ருன். இதன் பின்பு ஒன்றையும் பந்தயம் வைக்கத் தோன்ருது தருமபுத்திரர் விழித்துக்கொண்டிருக்கையில், சகுனி, திரௌபதி ஒருத்தியிருக்கிருளே என்று ஞாபகப்படு த்த, அவர் திரௌபதியையும் பந்தயம்வைத்தாடித் தோற்ருர்.

வினு 44.—இப்படி திரௌபதியைத் தருமபுத்திரர் தோற்றதும் துரியோதனுதியர் என்னசெய்ய முயன்றனர்?

விடை.—துரியோதனன் விதுரரை நோக்கி "திரௌபதியை ஸபைக்குக் கொண்டுவந்து அடிமைத்தொழில் அவள் செய்ய வேண்டும் என்று கட்டுப்பாடுசெய்யுங்கள்" என்று சொல்ல, விதுரர் "திரௌபதி அடிமையாவதற்குக் காரணமில்லை, ஏனெ னில் தருமபுத்திரர் தாம் தோற்ற பின்புதான் அவளைப் பந்த யம் வைத்தார்" என்று சொல்லி, துரியோதனுதியரைத் தூஷித்து விட்டு, வாயைமூடிக்கொண்டு ஸபையிலேயே உட் கார்ந்துவிட்டார். பின்பு துரியோதனன் பிரதிகாமி என்ற

ஸூதஜாதி வேலைக்காரனை ஏவவே, அவன் சென்று திரௌபதியை ஸபைக்கு வரும்படி அழைத்தான். அவள் தான் தீண்டத்தகாத நிலையிலிருப்பதாகவும், தான் உண்மையில் தோல்வி அடைந்தவளா இல்லையா என்பதை அறிய வேண்டும் என்பதாகவும், இவனிடம் சொல்லியனுப்பினாள். துர்புத்திகளான துரியோதனாதியர் இவ்வாறு திரௌபதியை அவமானப்படுத்த வேண்டுமென்று எண்ணங்கொண்டார்கள்.

விு. 45.—இந்தக் கெட்ட எண்ணத்தை இவர்களுக்கு எவ்வாறு யார் பூர்த்திசெய்வித்தது?

விடை.—முன் சொல்லியவைகளை பிரதிகாமி ஸபையில் வந்து சொல்லத் துரியோதனன் தனது தம்பியான துச்சாஸனனை ஏவினான். அவன் விரைவில் சென்று திரௌபதியின் தலைமயிரைப் பற்றி அவளை ஸபைக்கு இழுத்துவந்து, யாவரும் பார்த்துப் பரிதபிக்கும்படியான நிலையில் நிறுத்தி வைத்தான்.

விு. 46.—ஸபைக்கு வந்ததும், திரௌபதி ஸபையோரை என்ன கேள்வி கேட்டாள்? அங்கிருந்தவர்கள் அப்பொழுது என்ன பதில் உரைத்தனர்?

விடை.—தருமபுத்திரர் முன்பு என்னைப் பந்தயம் வைத்துப் பின்பு தம்மை பந்தயம் வைத்துக்கொண்டாரா, அல்லது தம்மை வைத்துத் தோற்றபின்பு என்னை வைத்துத் தோற்றாரா? அப்படி முன்பு வைத்துத்தோற்றது உண்மையாகில் நான் அடிமைதான், இல்லாவிடில் என்னை அடிமைப்படுத்த துரியோதனாதியருக்கு என்ன அதிகாரம்?" என்று ஸபையோரை நோக்கித் திரௌபதி கேட்டாள். விதுரர், விகர்ணன் முதலிய தர்மாத்மாக்கள் திரௌபதி அடிமையாகவில்லையென்று உரக்கத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். கர்ணன் முதலிய துராத்மாக்கள் திரௌபதி எப்படியானாலும் தமக்கு ஊழியக்காரி என்றனர். பீஷ்மர் முதலிய சிலர் இவ்விஷயத்தில் தர்மாதர்ம விவேகமின்றித் தமது அபிப்பிராய குழப்பங்களை வெளியிட்டனர். தருமபுத்திரர் மாத்திரம் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு மௌனமாயிருந்தார்.

வினு. 47.—இப்படி யிருக்க பாண்டவர்களுக்குள் என்ன விசேஷம் நடந்தது ?

விடை.—பீமன் முதலிய தம்பிமார்களுக்குக் கோபம் அதிகரித்த போதிலும், தமயன் இருக்கும் பொறுமையை நோக்கித் தாமும் அவருக்கு உட்பட்டு அடங்கியிருந்தனர். திரௌபதி அடிக்கடி கேள்விகேட்க ஸபையோர் அவளைக் கவனியாது இருக்கக் கண்டு பீமனுக்குக் கோபம் அதிகரித்தது. தருமபுத்திரரது கையை எரித்துவிட ஸஹாதேவனை நெருப்பு எடுத்து வரும்படி பீமன் கட்டளையிட, அர்ச்சுனன் இதை யறிந்து பீமஸேனனது கோபம் அடங்கும்படி செய்தான்.

வினு. 48.—இப்படி ஸபை முழுவதும் திரௌபதியினது கேள்விக்கு பதில் சொல்லமுடியாது தத்தளிக்குங்கால் துச்சாஸனன் என்ன விபரீத காரியத்தைச்செய்ய யத்தனித்தான்? அவன் யத்தனம் எவ்வாறு முடிந்தது ?

விடை.—தான் இதுவரை செய்த அவமானம் போதாதென்று துச்சாஸனன் திரௌபதியை ஸபையில் நிர்வாணமாய் நிறுத்தி வேடிக்கை பார்க்கவேண்டுமென்று துராக்கிரகம் கொண்டு அவளது புடவையை வெகு அவஸரமாய் அவிழ்க்கலாயினன். இவன் எவ்வளவுதான் புடவையை இழுத்து மலை போல் குவித்தபோதிலும் மேல்மேலும் திரௌபதிக்கு விசேஷப்புடவைகள் உண்டாகிவரக் கடைசியில் கை ஓய்ந்து துச்சாஸனன் கீழேவீழ்ந்தான். இதை நோக்கியதும் ஸபையோர் எல்லோருக்கும், திரௌபதி அடிமையல்லவென்றும், துரியோதனாதியர் துராத்மாக்கள் என்றும் நன்ருய் விளங்கியது.

வினு 49.—இவ்விசித்திர விஷயம் நடக்கக் காரணம் என்ன ? இதனுல் என்ன விளங்குகிறது ?

விடை.—துச்சாஸனன், தனது புடவையை அவிழ்க்க இழுக்கும் பொழுது, தன்மானம் கெட்டுப்போகிறதே என்ற எண்ணத்துடன் திரௌபதி தனது புடவையை கெட்டியாகப்பிடித்து பார்த்தாள். கடைசியில் தன்னுல் முடியாதென்பது கண்டு தனது இருகைகளையும் தலைமேல் வைத்துக்கொண்டு தெய்வத்தின்மேல் பாரத்தைப்போட்டு மனதுருகி கிருஷ்ண பரமாத்மாவைத்: துதித்தாள். இந்த உண்மையான பக்தி

யின் விசேஷத்தால் இவளது மானங்கெடாத வண்ணம் விசித்திரப் புடவைகள் கிருஷ்ண பரமாத்மாவால் அளிக்கப் பட்டு துச்சாஸனன் இழுக்க இழுக்க வந்துகொண்டேயிருந் தன. இதனுல் ஸர்வம் கடவுளது அதீனம் என்ற உள்ளத் துறவுவாய்ந்த மஹான்களுக்கும் வரும் மலைபோன்ற துக்கங் கள் கடவுளது அருளால் ஸூரியனைக் கண்ட பனிபோல் பறந்தோடிப்போம் என்பது எளிதில் விளங்கும்.

வின 50.—இவ்வாறு திரௌபதியை துச்சாஸனன் துகிலுரியுங் கால் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—தருமபுத்திரர் முன்போலப் பொறுமையோடு மௌனமாய் இருந்தார். பீமன், துரியோதனன், துச்சாஸனன் முதலிய தம்பிமார் 100-பேர்களைக் கொல்லுவதாகவும், அர்ச்சுனன் கர்ணனைக் கொல்லுவதாவும், நகுலன் சௌபாலர்களைக் கொல்லுவதாகவும், ஸஹாதேவன் சகுனியைக் கொல்லுவ தாகவும் கொடிய சபதம் செய்தார்கள்.

வின 51.—இவைகள் எவ்வாறு முடிந்தன? ஏன்?

விடை.—அப்பொழுது திருதிராஷ்டிரனது ஸபை முதலிய இடங் களில் அபசகுனங்கள் உண்டாக, விதுரரும். காந்தாரியும் திருதிராஷ்டிரனுக்கு புத்திமதிகள் சொன்னுர்கள். அப்பொ ழுது அவனுக்கு புத்தி தெளிந்திருந்தமையால் தனது பிள்ளை களை வெகுவாகத் திட்டித் திரௌபதியை அருகிலழைத்து வேண்டிய வரங்களைக் கேட்டுக்கொள்ளும்படி இடங்கொடுத் தான். திரௌபதி தனது பதிகளாகிய பாண்டவர் ஐவரும் அடிமைத்தனத்திலிருந்து நீங்கி ஸுகம் அடையும்படிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எல்லாரையும் மீட்க, திருதிராஷ்டிரனது அனுமதியின் பேரில் இந்திரப்பிரஸ் தத்தை நோக்கி பாண்டவர்கள் தமது இரதங்களில் ஏறிச் சென்றுர்கள்.

வின 52.—திருதிராஷ்டிரனுக்கு எவ்வளவு நாழிகை இந்தப் புத்தி இருந்தது? புத்திமாறியதும் இவன் என்னசெய்தான்?

விடை.—துரியோதனனேடு கொஞ்சநாழிகை பேசியதும், திருதி ராஷ்டிரனுக்கு புத்திமாறித் தனது பிள்ளைகளிடம் அபி மானம் விருத்தியாக, ஊருக்குப் போய்க்கொண்டிருக்கும் பாண்டவரைத் திரும்ப அழைத்து மறுபடியும் சகுனியோடு

சூதாடும்படி ஏவினான். காந்தாரி, விதுரர் முதலியவர்கள் என்ன சொல்லியும் இச்சமயத்தில் இவன் காதில் ஏறவில்லை.

வினா 53.—இம்மறு சூதாட்டத்தில் பந்தயம் என்ன வைத்தார்கள்? அது என்னமாய் முடிந்தது?

விடை.—இந்த சூதாட்டத்தில் தோற்றவர்கள் 12-வருஷம் வனவாஸமும், 1-வருஷம் அஜ்ஞாதவாஸமும் (ஜனங்கள் நிறைந்த பட்டணத்தில் உருமாறிவஸித்தலும்) செய்து திரும்பி வரவேண்டுமென்றும், 13-ம் வருஷத்தில் எப்பொழுதாவது அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் மறுபடியும் வனவாஸ அஜ்ஞாதவாஸாதிகள் ஒழுங்காய் பூர்த்தியாகிறவரையில் செய்தே தீரவேண்டும் என்றும் தீர்மானித்து மறு சூதாட ஆரம்பித்தார்கள். இதிலும் சகுனி ஜயிக்கப் பாண்டவர்கள் முன்செய்த நிபந்தனைக்குட்பட வேண்டிவந்தது.

வினா 54.—பாண்டவர்கள் வனவாஸம் செல்லுங்கால் நடந்த விஷயங்கள் என்ன?

விடை.—பாண்டவர்கள் தமது இராஜ உடமைகளை உதறி எறிந்துவிட்டு ரிஷி உருக்கொண்டு மிகுந்த வணக்கத்தோடு புறப்பட்டார்கள். திரௌபதியும் ரிஷி பத்தினி உருக்கொண்டு இவர்கள் பின்னே தொடர்ந்து சென்றாள். குந்தியைப் பாண்டவர்கள் விதுரரிடம் ஒப்புவித்துவிட்டு அவளது துக்கத்தை ஒருவாறு ஆற்றிவிட்டு வனம்நோக்கிச் செல்ல, அனேகம் பிராம்மணோத்தமர்களும், நகரவாஸிகளும் பாண்டவர்களை விட்டு நகரத்திலிருக்கப் பொறுக்காது அவர்கள் பின்னே சென்றார்கள். அப்பொழுது ஹஸ்தினாபுரம், புருஷனை இழந்த பூவைபோல ஒளி மழுங்கிக்கிடந்தது.

வினா 55.—இவ்வாறு பாண்டவர்கள் மனங்கொதிக்க வனம் சென்றதும், யார் திருதிராஷ்டிராரிடம் வந்து என்ன சொன்னார்? அவர் பின்பு என்ன செய்தார்.

விடை.—நாரத மகா முனி வந்து திருதிராஷ்டிரரிடம் அவரது பிள்ளைகள் பதினான்காவது வருஷம் இருந்தவிடம் தெரியாது பாண்டவர்களால் நாச மடையப் போகிறார்கள் என, திருதிராஷ்டிரரும் அப்பொழுது மாத்திரம், தாம் செய்தது தப்பிதம் என்று எண்ணித் துக்கிக்கத் தொடங்கினார்.

கிராத ரூபியான பரமசிவனும், வில்லி ரூபமான பார்வதியும்.

103-ம் பக்கம் பார்க்க.]

3-வது ஆரண்ய பர்வம்.

இரணியமகனுமுன்ன ரிழையுரைக்கேதங்கண்ட
தரணியன்மகனுமற்ற யானையுஞ்சரணென்றேத்தி
முரணியசிறியோர்வெஃக முதன்மைகொண்மாதுங்கண்ட
பிரணவப்பொருளையின்றும் பேணுவார்காணுவாரே.

வினு 1.—பாண்டவர்களோடு காட்டிற்கு சென்றவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—பாண்டவர்களைப் பிரிந்து இருக்க மனம்வராத நகர வாஸிகளும், பிராம்மணோத்தமர்களும் அவர்களோடு வெகு தூரம் செல்ல, தருமபுத்திரர் அவர்களை பட்டினத்திற்குத் திரும்பிப்போய் தம் தாயாகிய குந்திக்குத் தேறுதல் சொல்லும்படி விநயத்தோடு ஏவ, நகரவாஸிகள் யாவரும் ஹஸ்தினபுரிக்குத் திரும்பிவிட்டார்கள். பிராம்மணோத்தமர்கள் மாத்திரம் பாண்டவர்களை விடாது காட்டிற்குத் தொடர்ந்து சென்றனர்.

வினு 2.—பிராம்மணோத்தமர்கள் விஷயத்தில் பாண்டவர்கள் எவ்வாறு நடந்துகொண்டார்கள்? அதற்கு அவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—தம் கூடவேவரும் மஹான்களை நோக்கி, தம் காட்டிற்குப் போவதாகவும், தமக்கு அவ்வளவு பிராம்மணர்களை ஆராதிக்கும் வழி தோன்றவில்லை என்பதாகவும், ஆகையால் அவர்கள் வேறு எவ்விடமாவது சென்று வாழ்ந்திருப்பது நலம் என்பதாகவும் தருமபுத்திரர் மஹா துக்கப்பட்டுக் கொண்டு சொன்னார். அப்பொழுது அந்த ஸங்கத்தில் இருந்த பிராம்மணர்களுள் பெரியவரான சௌனகர் பாண்டவர்களை சாஸ்திர பூர்வமாய் ஸமாதானம் செய்தார். பாண்டவர்கள் படும் தர்ம ஸங்கடத்தை நோக்கி ஸூரியனது நாம விசேஷங்களைச் சொல்லி, அதை ஜபம்செய்து அதன் மூலமாய் அந்தப் பிராம்மணர்களை விட்டுவிடாது பாதுகாத்துக்கொண்டு

வனவாஸம் செய்வதற்கு வேண்டிய வஸ்துவை ஸம்பாதிக்கும் படி பாண்டவர்களை சௌனகர் ஏவினர்.

வினு 3.—ஸூரிய பகவான் தருமபுத்திரருக்கு என்ன உபகாரம் செய்தார்? அதன் விசேஷம் என்ன?

விடை.—அக்ஷய பாத்திரம் என்ற ஒரு திவ்ய செப்புப்பாத்திரத்தை ஸூரியன் தருமபுத்திரரிடம் கொடுத்தார். அந்தப் பாத்திரத்திலிருந்து எவ்வளவு போஜனங்கள் வேண்டுமானுலும் வெளிவரும். ஆனல் கடைசியாய் திரௌபதி சாப்பிட்டுவிட்டால் அதன் பிறகு அதிலிருந்து அன்றையதினம் ஒன்றும் வெளிவரமாட்டாது. இதை வைத்துக்கொண்டு தருமபுத்திரர் ஸகல பிராம்மணர்களை ஒழுங்கு தவறுது, வனவாஸம் 12-வருஷம் முடியும் வரையில் ஆராதித்து வந்தார். இவ்வளவு சிறந்த உபகாரத்தை ஸூரிய பகவான் பாண்டவர்களுக்கு நல்ல தருணத்தில் செய்தார்.

வினு 4.—இவ்வளவும் எங்கு நடந்தது? பின்பு பாண்டவர்கள் எங்குச் சென்றூர்கள்?

விடை.—முன்சொன்ன காரியங்கள் யாவும் கங்கைக்கரையில் முதல் நாள் பாண்டவர்கள் தங்கிய ஆலமரத்தடியில் நடந்தது. மறுநாள் ஸூரியனிடம் அக்ஷயபாத்திரம் பெற்று, பிராம்மணர்கள் எல்லோருக்கும் போஜனம் அளித்த பின்பு, பாண்டவர்கள் காம்யக வனத்திற்கு பிராம்மணர்கள் சூழ்ந்துவரப் புறப்பட்டுப் போனர்கள்.

வினு 5.—இங்கு இப்படி இருக்க ஹஸ்தினுபுரத்தில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—பாண்டவர்கள் காடுசென்ற பின்பு திருதிராஷ்டிரன் தன் தம்பியாகிய விதுரரை அழைத்துத் தனக்கு அப்பொழுது எது செய்தால் நன்மையாய் இருக்கும் என்று கேட்க, அவர் தான் முன்சொன்னபடி துரியோதனனைக் கொல்ல வேண்டுமென்றும், தருமபுத்திரருக்குப் பட்டாபிஷேகம் செய்துவிடவேண்டுமென்றும், பயப்படாது தமது நிஜ அபிப்பிராயத்தை வெளியிட்டார். இதைக் கேட்டதும், விதுரர் தனக்கு விரோதி என்ற கெட்ட எண்ணம் வர, திருதிராஷ்டிரன் அவரைப் பலவாறு நன்றிகெட்டவன் என்று வைது, தன் ஊரைவிட்டுக் காட்டுக்கு போகும்படி கட்டளையிட்டான்.

வினா 6.—விதுரர் எங்கே சென்றார்? பின்பு திரும்பிவந்தாரா என்ன?
விடை.—இதைக்கேட்டதும் மனம் கோணாது விதுரர் தருமபுத்திரர் இருக்கும் காம்யகவனம் சென்று நடந்த விஷயங்களைச் சொல்லி, தருமபுத்திரரால் மரியாதை செய்யப்பெற்று ஸுகமாய்ச் சிலகாலம் வாழ்ந்திருந்தனர். இப்படி இருக்கையில் திருதிராஷ்டிரனுக்கு நல்லபுத்தி வர, தான் தன் தம்பி விஷயத்தில் செய்தது பெரிய அநியாயம் என்று தோன்றிற்று. உடனே ஸஞ்சயனை அழைத்து விதுரரைத் திரும்பி அழைத்துவரும்படி ஏவினான். ஸஞ்சயன் காம்யக வனஞ் சென்று நடந்த விஷயங்களைச் சொல்லி யுதிஷ்டிரர் அனுமதியின் பேரில் விதுரரைஹஸ்தினாபுரிக்கு அழைத்துவந்தான்.
வினா 7.—விதுரர் திரும்பிவந்ததைக் கேள்வியுற்றதும் துரியோதனாதியர் என்ன செய்ய யத்தனித்தார்கள்? இதை யார் எவ்வாறு தடுக்க யத்தனித்தார்?
விடை.—விதுரர் வந்ததைக் கேள்வியுற்ற துரியோதனாதியர் ஆலோசனைசெய்து கடைசியில் பாண்டவர்களைக் கொன்றுவிடுவது நலம், 'இல்லாவிடில் இந்த விதுரன் எப்படியாவது நமது இராஜ்யத்தை அவர்களிடம் சேர்ப்பித்துவிடுவான்' என்று தீர்மானித்து அவர்களைக் கொல்லத் தயாராய்த் துரியோதனாதியர் புறப்பட்டார்கள். இதைத் தமது ஞானக் கண்ணால் அறிந்த வியாஸர் திருதிராஷ்டிரனிடம் வந்து அவன் பிள்ளைகளைச் சண்டைக்குப் போகாது தடுத்துவிட்டால்தான் அவர்கள் பிழைப்பார்கள், இல்லாவிடில் அவர்கள் பாண்டவர்களால் இறப்பார்கள், என்று உறுதியாய்ச் சொல்லி துரியோதனாதியரைப் படை எடுத்து காட்டிற்குச் செல்லாது தடுக்க யத்தனித்தார். மேலும் வியாஸர், திருதிராஷ்டிரனுக்கு, முன்காலத்தில் ஸுரபி என்கிற காமதேனு தனது கன்றுகளுள் கஷ்டப்படும் கன்றிற்காக இந்திரனிடம் சென்று அழுத உபாக்கியான மூலமாய்த் தனக்கு அப்பொழுது கஷ்டப்படும் பாண்டு புத்திரர்களிடம் இருந்த ஆசையை வெளியிட்டு, துரியோதனாதியரைப் பாண்டவர்களோடு சிநேகம் செய்துகொள்ளும்படி வியாஸர் திருதிராஷ்டிரனுக்கு புத்திமதி கூறினார்.

வினா 8.—இப்படி வியாஸர் சொல்லிப் போனவுடன் யார்வந்து துரியோதனாதியருக்கு என்ன புத்திமதி கூறினார்?

விடை.—மைத்திரேயர் என்ற மஹாரிஷி தருமபுத்திரரைக் காம்யக வனத்தில் ஸந்தித்துப் பேசிவிட்டு, துரியோதனன் ஸபைக்கு வந்து வியாஸர் சொல்லியபடியே பாண்டவர்களது பலத்தைப்பற்றி விஸ்தாரமாய்ச் சொல்லி, பீமன், பகன் ஜராஸந்தன் கிம்மீராஸுரன் முதலியவர்களைக் கொன்ற பிரபாவத்தை எடுத்துக்காட்டி, பாண்டவர்களோடு அவசியம் துரியோதனுதியர் ஸந்திசெய்து கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினர்.

வினு 9.—இதைத் துரியோதனன் அங்கீகரித்தானு? இதனுல் என்ன பிரமாதம் விளைந்தது?

விடை.—துரியோதனன், மஹாரிஷி மிகுந்த ஆவலோடு புத்திமதி கூறுங்கால் அதைக் கவனியாது தனது துடையைத் தட்டிக் கொண்டிருக்க, ரிஷி அதிக கோபத்தோடு "உனது துடையை யுத்தத்தில் பீமன்கதையால் அறுத்துத் தள்ளட்டும்" என்று சபித்துவிட்டு, மேல்விஷயங்களை விதுரர் எடுத்துச் சொல்லுவார் என்று சொல்லி மைத்ரேயர் தாம் வந்த வழியை நோக்கிச் சென்றார்.

வினு 10.—மைத்திரேயர் கோபித்துக்கொண்டு சென்றதும், விதுரர் என்ன சொன்னுர்? இதனுல் என்ன பிரயோஜனம் உண்டாயிற்று?

விடை.—கிம்மீரன் என்ற அஸுரன் பாண்டவர்களை காட்டில் ஸந்தித்ததும், அவர்களில் பீமனே தனது ஸகோதரனுகிய பகாஸுரனைக் கொன்றவன் என்று அறிந்து அவனோடு இவன் சண்டைசெய்ததும், கொஞ்சநேரம் கோரயுத்தம் செய்தபின்பு பீமன் கிம்மீரனைக் கொன்றதுமாகிய இந்த விசித்திரக் கதையைச்சொல்லி, துரியோதனனது கெட்ட எண்ணப்படி ஒன்றும் நடவாதபடி விதுரர் தகுந்த ஏற்பாடுகள் செய்தார்.

வினு 11.—இப்படிப் பாண்டவர்கள் காம்யக வனத்தில் வஸிக்குங்கால் அவர்களைப்பார்க்க யார் வந்தது? அங்கு என்ன நடந்தது?

விடை.—கிருஷ்ண பர்மாத்மாவும், அவரைச்சேர்ந்த பரிவாரங்களும் பாண்டவர்கள் சகுனி இவர்கள் ஆடிய மாயச்சூதில் தோற்று காட்டில் கஷ்டப்படுகிறுர்கள் என்று கேள்வியுற்று மிக வருத்த

மடைந்து, பாண்டவர்களைத் தேற்ற காம்யக வனம் வந்தார்கள். இவர்கள் வந்து, சீக்கிரத்தில் துரியோதனாதியரை ஹதம் செய்தால்தான் நலமென்று சொல்ல, அர்ச்சுனன் பகவானது பூர்வச்செயல்களைச் சொல்லி அவரை ஸமாதானப்படுத்தினான். உடனே திரௌபதி வந்து பீமன், அர்ச்சுனன் முதலியவர்களது பல வைபவங்களை எடுத்துச்சொல்லி, அவர்கள் பல விசேஷங்கள், தன்னை ஸபையிலிழுத்துவந்து கொடிய அவமானம் செய்யத் துச்சாஸனன் விஷயத்தில், உபயோகப் படாததை நினைத்து மனமுருகிக் கதறினாள். அப்பொழுது விரோதிகள் யாவரும் சீக்கிரத்தில் இறக்கத் திரௌபதிக்கு நல்ல காலம் வரும் என்று கிருஷ்ணபகவான் தேற்ற அப்பொழுது தான் துரோணரையும், சிகண்டி பீஷ்மரையும், பீமன் துரியோதனனையும், அர்ச்சுனன் கர்ணனையும் கொல்லப் போகிறதாக திருஷ்டத்யும்னன் சபதம் செய்தான்.

வினா 12.—இவ்வளவு மன உருக்கத்தோடு பாண்டவர்களைத் தேற்றிய கிருஷ்ண பகவான் பாண்டவர்கள் சூதாடி அவமானப் படுங்கால் எங்கிருந்தார்? ஏன் வரவில்லை?

விடை.—இராஜஸூய யாகம் முடிந்து கொஞ்ச நாளானதும் பகவான் துவாரகைக்குப் போனார். அங்கு முன்னமேயே ஸௌபவவிமானத்தில் ஏறிக்கொண்டு படை எடுத்துவந்த ஸால்வராஜா துவாரகையை அழிக்கயத்தனித்துத் தோல்வியடைந்து அப்பொழுதுதான் ஓடிப்போயிருந்தான். கிருஷ்ண பகவான் வந்ததும் ஸங்கதியை அறிந்து ஸால்வராஜனை துரத்திச்சென்று அவனோடு வெகுகாலம் யுத்தம்செய்து அவன் பிரயோகித்த மாயைகள் எல்லாவற்றையும் நீக்கிக் கடைசியில் அவனது விமானத்தை அழித்து அவனைக் கொன்று துவாரகைக்குத் திரும்பினார். அப்பொழுதுதான் பாண்டவர்களுக்கு வந்த ஆபத்தைக் கேள்விப்பட்டு உடனே காம்யக வனத்திற்குவந்து அவர்களை ஸந்தித்தார். இதனால் தான் சகுனி மாயச்சூதாடுங்கால் கிருஷ்ணபகவான் வர முடியவில்லை.

வினா 13.—பின்பு கிருஷ்ண பகவான் என்ன செய்தார்? பாண்டவர்கள் எங்குச் சென்றார்கள்? அங்கு அவர்களைப் பார்க்க யார் வந்தது?

விடை.—சாஸ்திரப்படி பாண்டவர்களிடம் விடைபெற்று, ஸுபத் திரையையும், அபிமன்யுவையும் கூட்டிக்கொண்டு கிருஷ்ண பகவான் துவாரகை நோக்கிச்சென்றார். உடனே பாண்ட வரும் காம்யக வனத்திலிருந்து, அர்ச்சுனனது அபிப்பிரா யப்படி துவைத வனத்திற்குச் சென்றார்கள். அவர்களைப் பார்க்க மார்க்கண்டேய மஹாமுனி வந்து தருமபுத்திரரை சாஸ்திரோக்த வசனங்களால் தேற்றினர். அவரோடுகூட இந்த ரிஷிகளும் தருமபுத்திரரை தேற்றினர்கள்.

வினு 14.—இவ்வாறு மார்க்கண்டேயர் வந்து போனதும் பாண்ட வர்கள் என்ன செய்தார்கள்? அது எவ்வாறு முடிந்தது?

விடை.—பாண்டவர்களும், திரௌபதியும் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு தாங்கள் பட்டகஷ்டத்தையும், தாங்கள் நடந்து கொண்ட விதத்தையும்பற்றி வெகுவாக ஸம்பாஷித்தார் கள். இதில் திரௌபதி முதலில் தருமபுத்திரரை ஆண்மை யற்றவரென்றும், மிகுந்த கஷ்டம் வந்தவிடத்தும் கோபத் தைக் காட்ட சக்தியற்றபேதை என்றும், வெகுவாகத் தூஷித்து, சிற்சில ஸமயங்களில் கோபத்தைக் காட்டாமல் எப்பொழுதும் சாந்தமாகவே இருந்தால் கிரஹஸ்தனுயிருப்ப வன் மிகுந்த ஹீனஸ்திதிக்கு வருவதற்கு இடம் உண்டாகும் என்றும் ப்ரஹலாத பலி ஸம்வாதத்தால் திரௌபதி நிரூ பித்தாள். இதைக்கேட்டு "கோபம் சண்டாளம்" "சாந்தம் ஸர்வா த்த ஸாதகம்" என்பதைப்பற்றி தருமபுத்திரர் வெகு விஸ்தாரமாய் திரௌபதிக்கு புத்திமதி உரைத்தார். இதைக் கேட்டதும் திரௌபதி 'திவ்யயக்ஞாதி கிருதுக்கள் செய்து கஷ்டம்வந்த விடத்திலும் ஸதாதருமத்தில் இருக்கும் உமக்கு மஹா அதர்மமான சூதாட்டத்தில் புத்தி செல்லு வானேன்? மேலும் இவ்வளவு தர்மாத்மாவான உமக்கு இந்த மஹத்தான கஷ்டம் வருவானேன? கொடிய துரியோ தனுதியர் ஸுகமாய் வாழுவானேன்? தெய்வச்செயல் ஏன் இவ்வளவு விபரீதமாய் இருக்கிறது? என்று கேள்விகேட் டாள். வேதவாக்கியங்களில்நம்பி நாம் ஸத்விருத்தியில் இருக் கவேண்டும் என்றும், அதன்பலன்களை உத்தேசித்து மனம் வருந்தல்கூடாது என்றும், ஸுகதுக்கங்கள் அனுபவிப்போர் மனதைப் பொறுத்தனவே ஒழிய வெளி வஸ்துக்களி லிருந்து ஜனிப்பவை யல்லவென்றும் ஸத்துக்களுக்கு ஈசுவரச்

செயலால் உண்டாகும் துக்கங்கள் தோற்றமாத்திரமே ஒழிய உண்மையில் ஸுகங்களே என்றும், அஸத்துக்கள் அனுபவிக்கும் ஸுகம் யாவும் துக்கமே ஒழிய வேறில்லை என்றும், தருமபுத்திரர் ஸுகதுக்க ரகஸியத்தை எடுத்துக் காட்டினர். திரௌபதி இதை அங்கீகரிக்காது, "எல்லாம் ஈசன்செயல் என்று சும்மா முயற்சி இல்லாமல் இருந்து விடலாமா? நமக்குக் கஷ்டம் வருங்கால் அதை நிவர்த்திக்க உபாயம்தேடாது அது துக்கரூபமாய் வரும் ஸுகம் என்றிருந்தால் ஸதா நாம் கஷ்டத்திலிருக்க வேண்டியது தான்" என்று மறுமொழி கூறினள். இப்படித் திரௌபதி தரும புத்திரரிடம் பயனில்லாச் சொற்களை சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது பீமன் முன்வந்து, உம்மிடத்தில் ஸகல குணங்களும் பொருந்தி இருக்கின்றன. அதனல் எங்களுக்குப் பலம் யாவும் குறையாதிருக்கின்றன. இவ்வளவு நல்ல விஷயங்கள் அமைந்திருந்தும் இவைகளை உபயோகிக்கத்தகுந்த கஷ்ட காலம் வருங்கால் ஏன் நீங்கள் எங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும்படி ஏவாதிருக்க வேண்டும்? நீர் உமது கஷ்டத்தை நிவர்த்தி செய்து கொண்டு உமது பிரஜைகளுக்கு நன்மை செய்யத்தக்க நிலையை அடையாவிட்டால் உமக்கு அபகீர்த்தியே நிச்சயமாய்வரும். ஆகையால் இப்பொழுதே படை எடுத்துச்சென்று துரியோதனுதியரை வென்று இராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொள்ளும்" என்று தனது அபிப்பிராயத்தை வெளியிட்டான். இதற்குத் தருமபுத்திரர், "நான் என்னமோ விதிவசமாக அதர்மமான சூதாட்டத்தில் புகுந்துவிட்டேன், இப்பொழுது நாம்படும் கஷ்டத்திற்கெல்லாம் நான்தான் காரணம் என்பதற்கு ஸந்தேகமே இல்லை. அப்படி இருந்தும் இனிமேலும் அதர்மத்தை செய்வது நன்றன்று. ஆகையால் நான் ஸபையில் செய்துவந்த பிரதிக்ஞைக்கு விரோதமாய் இப்பொழுது துரியோதனுதியரைக் கொல்லுவது தகாதகாரியம்" என்று மறுமொழி கூறினர். பீமன் இதற்கு "நீர் செய்த பிரதிக்ஞை மிக அஸாத்தியமானது, இதை நம்மால் நிறைவேற்ற முடியாது. நம்முள் ஒருவரை எப்படியாவது நமது விரோதிகள் 13 வது வருஷத்தில் நிச்சயமாய்க் கண்டுபிடித்துவிடுவார்கள். நாமோ இப்பொழுது 13–மாஸம் காட்டில் வாஸம் செய்தாய்விட்டது.

இப்பொழுதே நாம் படை எடுத்துச் சென்று துரியோதனுதியரைக் கொல்லலாம்" (வருஷம் என்பதற்கு சிலஸந்தர்ப்பங்களில் மாஸம் என்ற அர்த்தமும் உண்டு) என்றும் பீமன் சொன்னதும், தருமபுத்திரருக்கு பீஷ்மர் முதலிய பெரியவர்கள், கர்ணன் முதலிய வில்லாளிகள் நிறைந்த துரியோதன ஸைந்யத்தை எவ்வாறு வெல்வது என்ற ஏக்கமுண்டாயிற்று.

வினு 15.—இவ்வாறு ஏக்கமடைந்த தருமபுத்திரரை யார்வந்து எவ்வாறு தேற்றியது? பின் என்ன நடந்தது?

விடை.—இந்த ஸமயத்தில் வியாஸர் தருமபுத்திரரிடம் வந்து "பிரதிஸ்மிருதி" என்ற மந்திரத்தை உபதேசித்து இதை அர்ச்சுனனுக்கும் உபதேசித்து அவனைத் தபஸுக்கு அனுப்பி, மஹாதேவர் முதலிய ஸகல தேவதைகளிடத்திலிருந்தும் அஸ்திர விசேஷங்களை ஸம்பாதித்து வரும்படி செய்யச் சொன்னுர். தருமபுத்திரர் துக்கந்தெளிந்து இந்த விஷயங்களை அர்ச்சுனனிடம் சொல்ல, அவன் இந்த மந்திரத்தைப் பெற்றுக்கொண்டு, எல்லாரிடத்தும் விடைபெற்றுத் தபஸுக்காக வடக்கு நோக்கிச் சென்றுன்.

வினு 16.—வடக்கே சென்ற அர்ச்சுனன் யாரைக்கண்டான்? பின் என்னென்ன நடந்தது?

விடை.—வடக்கே செல்லுங்கால் இந்திரகீல மலைச்சாரலுக்கு வரும்பொழுது 'இங்கே நில்லு' என்ற அசரீரிவாக்கு உண்டாக, உடனே அர்ச்சுனன் நின்று சுற்றுமுற்றும் பார்த்தான். அப்பொழுது ஒரு மரத்தடியில் ஒரு ஸந்நியாஸியைக் கண்டான். இவர் தம்மால் இயன்றமட்டும் அர்ச்சுனனை வில், அம்பு இவைகளை எறிந்துவிடும்படி செய்யப்பார்த்தும் முடியாதது கண்டு, தமது உண்மையான இந்திர ரூபத்தைக்காட்டி அர்ச்சுனனைச் சிவனைக்குறித்துத் தவம்செய்யும்படி ஏவி மறைந்தார். உடனே அர்ச்சுனன் தவவடிவம் பூண்டு அங்கேயே சிவனைக் குறித்துக் கொடிய தவம் செய்யத் தொடங்கினுன்.

வினு 17.—இவ்வாறு கொடுந்தவம் அர்ச்சுனன் செய்யுங்கால், அதற்கு என்ன விக்கினம் வந்தது?

விடை.—அர்ச்சுனன் சிறந்த அஸ்திரங்களைப்பெற்று சிறந்த வில்லாளியாகத் தவம் செய்யச்சென்றுன் என்ற ஸமாசாரத்தைக்

கேள்வியுற்ற துரியோதனன் தனது தோழனான மூகாஸுரனை ஏவி, அர்ச்சுனனைக் கொல்லும்படி அனுப்பினான். இவன் ஒரு பெரிய காட்டுப்பன்றி உருக்கொண்டு அர்ச்சுனன் தவம் செய்யும் இடத்திற்கு அருகிலுள்ள ஒரு பெரும்புதரில் ஒளித்துக்கொண்டு அவன்மேல் பாய்ந்து அவனைக் கொல்லும் தருணத்தில் இருந்தான்.

வின 18.—இந்தத்தடை எவ்வாறு, யாது காரணத்தால் நிவர்த்தியாயிற்று?

விடை.—இப்படி இருக்கையில் ஸகல ரிஷி சிரேஷ்டர்களும் பரமசிவனிடம் சென்று, அர்ச்சுனனது தபோக்கினியால் தமக்கு கஷ்டம் பொறுக்கமுடியவில்லை என்று முறையிட, பரமசிவன் அர்ச்சுனனுக்கு அனுக்கிரஹித்து, அவனைத் தவத்தை நிறுத்தும்படி செய்வதாக ஒப்புக்கொண்டார். இதற்காகவே பரமசிவன் வேடரூபந்தரித்து பார்வதியை வேடச்சியாக்கி நான்கு வேதங்களையும் நான்கு நாய்களாக்கிக்கொண்டு வேட்டைக்குப் புறப்படும் வேடன்போல, அர்ச்சுனன் தவம்செய்யுமிடம் வந்து மூகாஸுரனாகிய பன்றியைக்கண்டு, அதைச் சங்கரிக்க ஒரு அம்பை எய்தார். இதற்குள் அர்ச்சுனனும் பன்றி தன்னைக் கொல்லக் காத்திருப்பதைக்கண்டு அதைக் கொல்லத் தானும் ஓர் அம்பு எய்தான். இவ்விரண்டு அம்புகளாலும் மூகாஸுரன் உயிர்நீங்கி விழுந்தான்.

வின 19.—இவ்வாறு பன்றி இறந்ததால் என்ன விபரீதம் உண்டாயிற்று?

விடை.—வேட்டை ஒழுங்குப்படி, ஒருவன் அம்பு எய்து கொல்லக் குறிவைத்த ஜந்துவின்பேரில் வேறொருவன் அம்பெய்தல் அநியாயம். இந்த ஒழுங்கின்படி வேடனுக்கும், அர்ச்சுனனுக்கும் தர்க்கமுண்டாயிற்று. இதில் ஒருவரை ஒருவர் இகழ்ந்து பேசும்படி நேரிட, இந்த தர்க்கம் கடைசியில் போராய் முடிந்தது.

வின 20.—இப்போரின் விசேஷம் என்ன? அது எவ்வாறு முடிவு பெற்றது?

விடை.—அர்ச்சுனன் போடும் அம்புகள் யாவும் வேடன்மேல் தைக்காது அவன் அருகில்போய் கீழே விழத்தொடங்கி

விட்டன. ஆனால் வேடன்விடும் பாணங்களோ அர்ச்சுனன் மேல் நன்றாய்த்தாக்கி அவனுக்கு மிகுந்த துன்பத்தை உண்டாக்கின. இதைக் கவனியாது அர்ச்சுனன் சண்டைசெய்யும்பொழுது அவனுக்கு அக்கினிபகவானால் கொடுக்கப்பட்ட அக்ஷய அம்பறாத்தூணியில் பாணம் ஒன்றுகூட இல்லாமல் முடிந்துபோய்விட்டது. இப்படியானதால் அதிகக் கோபத்தோடு அர்ச்சுனன் தன் காண்டீவ தனுவின் நாணை அவிழ்த்துவிட்டு வேடனைச் சிரவில் அடிக்க அவன் தனது தனுவை இழக்கும்படி நேரிட்டது. இதன் பின்பு இருவரும் மல்லயுத்தம் செய்யக் கடைசியில் அர்ச்சுனனுக்கு சிரமம் வந்துவிட்டது. அப்பொழுது அர்ச்சுனன் சண்டையை நிறுத்திவிட்டு மனதில் பரமசிவத்தைத் தியானித்து ஒரு மண்விக்கிரகத்தைச் செய்து, பூஜைசெய்து புஷ்பம் முதலியவைகளைச்சாத்திக் கண்ணை விழித்துநோக்க, அவைகள் யாவும் வேடன் தலையில் இருப்பதைக்கண்டு, அர்ச்சுனன் சிவமே வேட உருவோடு வந்ததாக அறிந்து, தெண்டனிட்டுத் தான்செய்த அபராதத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். உடனே அவன்முன்பு ஸகல தேவதைகளும் தோன்றினார்கள்.

வினு 21.—இப்படி அர்ச்சுனன் சிவனைத் தரிசித்தபின்பு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—சிவன், அர்ச்சுனன் செய்த திவ்ய யுத்தத்தைக்கண்டு மகிழ்ந்து அவனுக்குப் பாசுபத அஸ்திரத்தைக் கொடுத்து, அதைத் தகுந்த பலவான் விஷயத்தில்தான் பிரயோகிக்க வேண்டும், அப்படி இன்றி பலஹீனர்மேல் பிரயோகித்தால் பிரபஞ்ச முழுவதையும் அது அழித்துவிடும் என்ற பிரயோகக்கிரமத்தை சொல்லிச் சிவன் மறைந்தார். உடனே அங்கு இருந்த ஸகல தேவதைகளும் தங்கள் தங்களுக்குரிய முக்கிய அஸ்திரங்களை அர்ச்சுனனுக்கு அநுக்கிரஹித்து மறைந்தனர்.

வினு 22.—இவ்வாறு அர்ச்சுனன் ஸகல அஸ்திரங்களையும் பெற்ற பின்பு என்ன செய்தான்? ஏன்?

விடை.—இந்திரனது வேண்டுகோளின்படி அர்ச்சுனன் இந்திரலோகம் சென்று, அங்கு இந்திரனோடு ஐந்துவருஷம் வாஸம் செய்து வந்தான். இந்திரனுக்கு மஹா பலசாலிகளாகிய

நிவாத கவசாள், காலகேயர்கள் என்ற ஜாதியார்கள் விரோதிகளாய் இருந்ததால், அவர்களைக் கொல்லுவதற்காக அர்ச்சுனனை இந்திரன் இந்த ஸமயத்தில் தனது லோகத்திற்கு அழைத்தான்.

வினு 23.—அர்ச்சுனன் இந்திரலோகத்தில் வஸிக்குங்கால் என்ன விபரீதம் நடந்தது? காரணம் என்ன? அது எவ்வாறு அர்ச்சுனனுக்கு நன்மையாய் முடிந்தது?

விடை.—அர்ச்சுனன் இந்திர ஸபையில் ஒருநாள் இருக்குங்கால் அவன் முன்பு எல்லா அப்ஸர ஸ்திரீகளும் நர்த்தனம் செய்து வர, அப்பொழுது தனது பூரு வம்சத்திற்குத் தாய்போன்றவளாகிய ஊர்வசியை அர்ச்சுனன் கண்கொட்டாது மிகுந்த விநயத்தோடு நோக்கினான். இந்நோக்கத்தைக் காமநோக்கு என்று விபரீத அர்த்தம் செய்துகொண்டு, இந்திரன் ஊர்வசியை அர்ச்சுனனோடு ஓர் இரவு ஸங்கித்திருக்கும்படி அனுப்ப, அவன் தனது எண்ணத்தை வெளியிட்டு மிகுந்த ஆவலோடு தன்னிடம் வந்த ஊர்வசிக்கு வந்தன வழிபாடுகள் செய்தான். தனது எண்ணம் பூர்த்தியாகாதது கண்ட ஊர்வசி, அர்ச்சுனனுக்கு நபும்ஸக ரூபம் (பேடி ரூபம்) வந்து, ஸ்திரீகள் மத்தியில் அவன் நாட்டியம் கற்பிப்போனாக வஸித்து மானங்கெட்டுத் திரியவேண்டும் என்று சபித்தாள். இது இந்திரனுக்குத் தெரியவே அர்ச்சுனனது மனோதிடத்தை மெச்சி, ஊர்வசியை அழைத்துப் பேடிரூபம் முதலியவைகள் ஒரு வருஷம் மாத்திரம் இருக்கும்படி சாபத்தை மாற்றுவித்தான். (இந்தச் சாபம் எப்படி அர்ச்சுனனுக்கு நன்மையாக முடிந்தது என்பதை விராடபர்வத்திற் காண்க.)

வினு 24.—நிவாதகவச காலகேயர்களை அர்ச்சுனன் எவ்வாறு வென்றான்?

விடை.—அர்ச்சுனன் இந்திர ஸாரதியாகிய மாதலியால் நடத்தப்பட்ட இரதத்தில் ஏறிக்கொண்டு, நிவாதகவசர்கள் இருக்கும் பட்டணத்திற்கு வந்து தனது காண்டீவதனுஸால் பாணவருஷம் செய்யத்தொடங்கினான். முதலில் அர்ச்சுனனோடு அவர்கள் எதிர்த்துச் சண்டை செய்வது அஸாத்தியம் என்று கண்டு, அனேக மாயா வித்தைகளை முன்னிட்டுக்கொண்டு மறைந்து சண்டை செய்யத் தொடங்கினார்கள்.

அர்ச்சுனனும் தன்னால் இயன்றமட்டும் அவர்களது மாயா வித்தைகளை வீணாக்கிக் கடைசியில் இந்திரனால் கொடுக்கப்பட்ட வச்சிராயுதத்தைப் பிரயோகம் செய்து நிவாத கவசர்களது மாயைகளைச் சின்ன பின்னமாக்கி அவர்கள் எல்லோரையும் கொன்றான். பின்பு இந்திர லோகத்திற்குத் திரும்பி வருங்கால் ஹிரண்யபுரம் வந்து அங்கு வசித்திருந்த காலகேயாதி இராக்ஷஸர்களை மிகுந்த கஷ்டத்தோடு ருத்திராஸ்திரப் பிரயோகம்செய்து வதம் செய்தான்.

வினு 25.—இவ்வாறு அர்ச்சுனன் தேவகாரியமாய் இந்திரலோகத்திலிருக்கிறான் என்ற செய்தி தருமபுத்திராதிகளுக்கு எவ்வாறு தெரியவந்தது? பின்பு அவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—இந்திரன் லோமசர் என்ற முனிவரை அழைத்து, அர்ச்சுனன் தன் லோகத்தில் இருக்கிறான் என்றும், நிவாதகவசாதி ராக்ஷஸர்களைக் கொன்றபின்பு திரும்பிவருவான் என்றும், அதற்குள் அவர்கள் அர்ச்சுனனை எண்ணி வருந்துவதைவிட்டுத் தீர்த்த யாத்திரை செய்து புண்ணியம் ஸம்பாதித்தல் நலம் என்றும் யுதிஷ்டிரரிடம் சொல்லும்படி ஏவினான். அவர் வந்து இந்திரன் சொன்னபடி யுதிஷ்டிரரிடம் சொல்ல யுதிஷ்டிரரும் தமது தம்பி விஷயமான துக்கம் நீங்கித் தீர்த்தயாத்திரை செய்வதாகத் தீர்மானித்தார்.

வினு 26.—அர்ச்சுனனது மேன்மையைக் கேள்வியுற்ற திருதிராஷ்டிரன் கதி என்னமாயிற்று?

விடை.—தனது பிள்ளைகள் செய்த துஷ்காரியங்களுக்காகக் கூடிய சீக்கிரத்தில் அவர்கள் அர்ச்சுனன் முதலிய பாண்டவ வீரர்களால் இறப்பார்கள் என்றும், அர்ச்சுனனே தனது குலத்திற்கு யமன் என்றும் திருதிராஷ்டிரனுக்குத் தோன்ற அவன் மனமுடைந்து துக்கக்கடலில் ஆழ்ந்தான்.

வினு 27.—லோமசர் இந்திரலோகத்திலிருந்து யுதிஷ்டிரரிடம் வரும் முன், பாண்டவர்கள் எங்கு, எவ்வாறு காலங்கழித்தனர்?

விடை.—பாண்டவர்கள் அர்ச்சுனன் தவஞ்செய்யச் சென்ற சில காலத்திற்கெல்லாம் காம்யக வனம் வர, அங்கு அர்ச்சுனனது

பிரிவை ஸகிக்கமுடியாது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர்கள் இருக்குமிடம் பிரகதசுவர் என்ற மஹரிஷி வர அவரிடம் இவர்கள் தமது குறைகளை எடுத்துரைத்தனர். அப்பொழுது இந்த ரிஷி பாண்டவர்களது துக்கத்தை மாற்ற அவர்களைவிடத் தனிமையாய் அதிகக் கஷ்டப்பட்ட நளனது சரித்திரத்தைச் சொல்லி முடித்தார்.

வினு 28.—இந்த நளன் யார்? இவனுக்கு விவாஹத்தை நடத்த யார் முயற்சி செய்தது? ஏன்?

விடை.—இந்த நளன் நிஷத தேசாதிபதி. ஓர் அன்ன பக்ஷி இவனது அழகை விதர்ப்பதேசாதிபதியின் குமாரத்தியான தமயந்தி இடமும், அவளது அழகை நளனிடமும் சொல்லி இருவருக்கும் ஒருவர்மேல் ஒருவர்க்குக் காதல் உண்டாகும்படி செய்தது. ஒருநாள் இப்பட்சியைத் தாதிமார்கள் நளனது உத்தியான வனத்தில் பிடித்து நளனிடம் கொண்டுவந்து கொடுக்க அவன் இதைக் கொல்லாது விடுதலை செய்ததால் அப்பட்சி நளனுக்கு இந்த உபகாரத்தைச் செய்தது.

வினு 29.—தமயந்தியின் ஸ்வயம்வரத்திற்கு நளன் போகையில், இவனது எந்த சிறந்தகுணம், எவ்வாறு வெளிவந்தது?

விடை.—தேவகாரியம் ஸாதிக்கும் விஷயத்தில் தனது காரியத்தை கவனியாது இருத்தல் என்கிற அவனது சிறந்த குணம் வெளிப்பட்டது. போகும் வழியில் இந்திரன், அக்கினி, வாயு முதலிய தேவதைகள் தமயந்தியைக் கல்யாணம் செய்து கொள்ள எண்ணி வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் நளனை நோக்கி, 'எமது மேன்மை முதலியவைகளை தமயந்தியிடம் தெரிவித்து அவளை எங்களுள் ஒருவரைக் கல்யாணம் செய்துகொள்ள இசையும்படி செய்யவேண்டும். அதற்காக நீ எங்களுக்குத் தூதுசெல்லவேண்டும்' என, நளன் மனங் கூசாது தான் ஆசை வைத்திருந்த பெண்ணினிடம் தூதாகப் போய்த் தன்னால் ஆனமட்டும் தேவர்களுக்காக மன்றாடிப் பார்த்தான். தமயந்தி நளனையே கல்யாணம் செய்துகொள்ளுவதாகப் பிடிவாதமா யிருப்பதைக் கண்டு, நளன் தேவர்களிடம் நடந்த விஷயங்களை ஒளியாது சொல்லிவிட்டான். தேவர்களும் தமது சக்தியால் இவன் சொல்வது உண்மையென்றும், இவன் மனங் கூசாது தமயந்தியினிடம் தமது மேன்

மையை எடுத்துரைத்தான் என்றும் தெரிந்து கொண் டார்கள்.

வினு 30.—இவ்வாறு நளன் நடந்துகொண்டதால் இவனுக்கு என்ன சிறப்பு உண்டாயிற்று?

விடை.—தேவர்களின் ஸந்தோஷத்தால் நளனுக்குச் சிறந்த சக்தி கள் உண்டாயின. அக்கினியின் அனுக்கிரகத்தால் நளனுக்கு அரிசி காய் கறி முதலியவைகளைக் கையால் தொட்டவுடன் உண்ணத்தக்க நல்ல பக்குவ பதார்த்தங்களாக மாற்றும் சக்தி வந்தது. வாயுவின் அனுக்கிரகத்தால் குதிரை நடத் துய் வழியும், அசுவஹ்ருதயம் என்கிற குதிரைகளின் ஸ்வ பாவம் அறியும் வித்தையும் கிடைத்தன. இது போலவே ஒவ்வொரு தேவதையிடத்திலிருந்தும் நளன் திவ்ய சக்திகளை அடைந்தான்.

வினு 31.—தமயந்தி ஸ்வயம்வரத்தில் என்ன விசேஷம் நடந்தது? தமயந்தி நளனை எவ்வாறு அறிந்து மாலையிட்டாள்?

விடை.—ஸ்வயம்வர மண்டபத்தில் இந்திரன் முதலிய நான்கு தேவதைகளும் நளன்போல் ரூபங்கள் எடுத்துக்கொண்டு நளன் அருகில், தமயந்தியின் உறுதியைச் சோதிக்க உட்கார் ந்தார்கள். தமயந்தி ஸ்வயம்வர மாலை எடுத்துவரும்பொழுது ஐந்து நளர்கள் உட்கார்ந்திருப்பதைக் கண்டு முதலில் மயக்க முற்றுள். அதன்பின் கண் இமைத்தல், கால் நிலத்தில் பதிதல் முதலிய இலக்ஷணங்களால் உண்மையான நளனைக் கண்டுபிடித்து அவனுக்கு மாலையிட்டாள். இதன் பின்பு நளன் நிஷதபுரி சென்று ஸுகமாய் வாழ்ந்திருக்கையில் இவ னுக்கு இந்திரஸேனன், இந்திரஸேனை என்ற இரண்டு குழந்தை கள் உண்டாயின.

வினு 32.—தேவதைகள் தமது இருப்பிடம் செல்லுங்கால் யார் எதிரே வந்தது? அதனுல் என்ன விபரீதம் விளைந்தது?

விடை.—தேவதைகள் தமது இருப்பிடம் செல்லுங்கால் எதிரே கலி (சனி பகவான்) தலைவிரிகோலமாய்த் தமயந்தியை கல்யா ணம் செய்துகொள்ள வேண்டுமென்று ஓடிவந்து கொண்டி ருந்தான். இவன், தேவதைகளிடமிருந்து காரியம்முடிந்து போய்விட்டது என்று அறிந்ததும் இவனுக்கு அடங்காக்

கோபம் உண்டாயிற்று. உடனே, இவன் ‘நளனைப் பிடித்துத் திண்டாட்டம் ஆட்டுவித்தும் அவனைத் தமயந்தியை விட்டுப் பிரித்தும் கஷ்டப்படுத்துகிறேன்’ என்று கொடிய பிரதிக்ஞை செய்தான்.

வினா 33.—கலி புருஷன் எவ்வாறு நளனைப் பிடித்துக்கொண்டான்? கலி புருஷன் பிரவேசம் ஆனதும் நளன் என்ன செய்தான்?

விடை.—ஒருநாள் ஸந்தியாவந்தனம் செய்யப் போகுங்கால் காலை நன்றாய்க் கழுவாது உட்கார இந்த அசுத்த ஸமயம் பார்த்துக் கலிபுருஷன் நளனைப் பிடித்துக்கொண்டான். உடனே அவனுக்குப் புத்திமாற, அடுத்த இராஜ்யத்திலிருந்த புஷ்கர ராஜனோடு சூதாடித் தனது ஸொத்துக்கள் எல்லாவற்றையும் தோற்றுவிட்டான். ஆகையால் நளன் இராஜ்யத்தைவிட்டு வெளியே போகவேண்டிவர, தனது குழந்தைகளை விதர்ப்ப தேசம் அனுப்பிவிட்டு தமயந்தியையும் அங்குபோகும்படி சொல்லிப் பார்த்தான். அவள் அங்குச் செல்லாது நளனோடே காட்டிற்குப் புறப்பட்டாள்.

வினா 34.—கலிபுருஷன் எவ்வாறு இவர்களை வழியில் கஷ்டப்படுத்தினான்? கடைசியில் இவர்களை எவ்வாறு பிரித்தான்?

விடை.—போகும்வழியில் இவர்களுக்கு ஒருவரும் பிச்சையிடாதபடி ஜனங்களது மனதை மாற்றிவிட, இவ்விருவரும் பசி தாகங்களால் மிகவருந்தினார்கள். இவ்வளவு சிரமத்தோடு காட்டின் வழியாய்ப்போகையில் ஒரு அன்ன பட்சி உருவமாய் கலிபுருஷன் இவர்கள்முன் தோன்ற, அதை அறியாது தமயந்தி அந்தப்பட்சி தனக்கு வேணுமென்றாள். உடனே நளன் தமயந்தியின் புடவையின் ஒரு பாகத்தைத் தான் சுற்றிக்கொண்டு தனது ஆடையை அன்னத்தின்மேல் போட்டு அதைப் பிடிக்கப்பார்க்க, அந்தப்பட்சி ஆடையைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் பறந்துபோய்விட்டது. இவ்வாறு ஆடை இழந்து இவர்கள் போகையில், விதர்ப்பம் போகும் வழியைக்கண்டு நளன் தமயந்தியை தகப்பன் வீடு செல்லும்படி தன்னால் இயன்றமட்டும் சொல்லிப்பார்த்தான். தமயந்தி கேட்கவில்லை. அன்றிரவு அவர்கள் அருகிலிருந்த ஒரு

பாழ் மண்டபத்தில் தங்கினார்கள். நடு ராத்திரியில் நளன் எழுந்து, தமயந்தியின் புடவையைக் கிழித்துக்கொண்டு, தமயந்தி காலையில் எழுந்து தகப்பன் வீடுபோவாள் என்கிற எண்ணத்துடன், அவளைத் தனிமையாய்க் காட்டில் விட்டு விட்டு ஓடிப்போனான்.

வினு 35.—காலையில் தமயந்தி கதி என்னமாயிற்று?

விடை.—காலையில் எழுந்ததும் தன் புருஷனைக்காணாது புலம்பிக் கொண்டே போகையில் வழியிலிருந்த ஒரு மலைப்பாம்பு அவளைப்பிடித்து விழுங்கத்தொடங்கியது.

வினு 36.—இவளை யார் இதிலிருந்து தப்புவித்தது? தப்புவித்தவன் கதி என்னமாயிற்று? ஏன்?

விடை.—இவளது அழுகுரலை ஒரு வேடன் கேட்டு ஓடிவந்து அம் பெய்து பாம்பைக்கொன்று இவளை விடுவித்தான். உடனே வேடன் தமயந்தியின் அழகைக்கண்டு மோஹித்து அவளை பெண்டாளவேண்டும் என்று கிட்டப் பிதற்றிக்கொண்டுவரவே, தமயந்தியின் கோபாக்கினியால் அவன் சாம்பலாய் விழுந்து இறந்தான்,

வினு 37.—பின்பு இவள் கஷ்டப்பட்டு எந்த ஊருக்குச் சென்றாள்?

விடை.—வழியில் ஒரு வர்த்தகக்கூட்டத்தைக் கண்டு அத்துடன் சேர்ந்துபோனாள், இராத்திரி ஒரு மலைச்சாரலில் அது தங்கி யது. அன்றிரவு காட்டு யானைக்கூட்டங்கள் வந்து அனே கரை அழிக்கத் தமயந்தி மாத்திரம் பிழைத்து, பின்பு மிகுந்த கஷ்டங்களை அடைந்து கடைசியில் தனது சிற்றம்மை இராணி யாக வாழும் சேதி நகரம் சென்று அங்கு அரண்மனையில் ஓர் ஸைரந்திரியாக அமர்ந்தாள்.

வினு 38.—காட்டில் நடு ராத்திரியில் தமயந்தியை விட்டுப் பிரிந்த நளனது கதி என்னமாயிற்று?

விடை.—நளன் காட்டு மார்க்கஞ் செல்லுகையில் ஒரு காட்டுத்தீ எரிவதைக்கண்டு அதன் அருகில் சென்றான். அங்கு கார்க் கோடகன் என்ற பாம்பு தீயில் அகப்பட்டுத் தத்தளிப்பதைக் கண்டான். பாம்பு நளனுக்குத் தகுந்த உபகாரம் செய்வ தாகச்சொல்ல, அவன் அதை நெருப்பிலிருந்து வெளியே எடுத்து விட்டான். அது வெளியே வந்ததும் அவனைக்

கடிக்கவே, நளன் தனது அரச உருவம் இழந்து ஒரு கரி முண்டமாக மாறினான். உடனே பாம்பு கலி நீங்கியதும் அவன் நினைத்தபோது வந்து, இந்த ரூபத்தை அவனுக்கு மாற்றுவிப்பதாக வாக்களித்துவிட்டு மறைந்தது.

வி 39.—பின்பு நளன் என்னசெய்தான்?

விடை.—இந்த உருவோடு அயோத்தியா பட்டணத்தில் ருதுபர்ணனிடம் பாஹுகன் என்கிற பெயர் வைத்துக்கொண்டு ஸாரதியாகவும், சமையற்காரனாகவும் அமர்ந்து, வாயு அக்கினி முதலிய தேவதைகளிடமிருந்து பெற்ற சக்தியால் தனது வேலையை அரசன் பார்த்து திருப்தி யடையும்படி செய்தான்.

வி 40.—தமயந்தியின் தகப்பன், தமயந்தி இருக்குமிடத்தை எவ்வாறு கண்டுபிடித்தான்?

விடை.—தனக்கு வேண்டியவனான ஸுதேவன் என்கிற பிராம்மணனை அனுப்பி விதர்ப்பதேசாதிபதி, தமயந்தியைத் தேடச் சொன்னான். இவன் எல்லாவிடங்களிலும் தேடிக்கொண்டு வருகையில் தமயந்தியை சேதிதேசத்தில் கண்டு அவளை அவள் தகப்பனிடம் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

வி 41.—இதன் பின்பு நளனைக் கண்டுபிடிக்க தமயந்தி என்ன ஏற்பாடுகள் செய்தாள்? அவை என்னமாய் முடிந்தன?

விடை.—ஸுதேவனைத் தமயந்தி அழைத்து "நீர் ஒவ்வொரு இராஜஸபைக்கும் சென்று 'தன் பெண்சாதியை நடுக்காட்டில் பாதி ராத்திரியில் காப்பதற்கு வகையறியாது ஒரு புருஷன் விட்டுப்போவது நியாயமா?' என்கிற கேள்வியைக் கேளும். இதற்கு யார் தகுந்த பதில் சொல்லுகிறார்களோ அவர்தான் என் புருஷன். அவரை இவ்வாறு நீர் சீக்கிரத்தில் கண்டுபிடித்து வாரும்" என்று ஏவினாள். பிராம்மணன் இவ்வாறு இராஜஸபைதோறும் சொல்லி வந்தான். அயோத்தி வந்து அங்கும் இதைச்சொல்லி ஸபையைவிட்டு வெளியே வருகையில், பாஹுகன் வெகு அவஸரமாய் வெளிவந்து பிராம்மணரை நோக்கி "காட்டில் தான் கஷ்டப்படுங்கால் பெண்சாதியுங் கஷ்டப்படுவானேன் என்றும், அவளைத் தனிமையாய் விட்டுப்போனால் அவள் தன் தகப்பன் வீடுசென்று ஸுகமாய் இருப்பாள் என்றும் எண்ணி அவன் விட்டுப் போயிருக்கலாம். ஆகையால் அது நியாயம்தான்" என்றான்

இதைத் தமயந்தியிடம் பிராம்மணர் வந்து சொல்ல, பாஹுகன்தான் நளன் என்று தமயந்தி தீர்மானித்தாள்.

வினு 42.—நளன் தன்னிடம் வருவதற்குத் தமயந்தி என்ன ஏற்பாடுகள் செய்தாள்? அதனுல் என்ன நடந்தது?

விடை.—ஸுதேவபிராமணர் மூலமாய் ருதுபர்ணனுக்கு மாத்திரம் தனக்கு இரண்டாம் ஸ்வயம்வரம் அடுத்த நாள் காலையில் நடக்கப்போகிறது என்கிற ஸமாசாரத்தைத் தமயந்தி தெரிவிக்க ஏற்பாடுகள் செய்தாள். இதைக் கேட்டதும் ருதுபர்ணன் தேரைத் தயார்செய்யும்படி பாஹுகனுக்குக் கட்டளையிட அவன் பார்வைக்கு இளைத்தனவாயும் ஓடுவதில் வாயுவுக்கு ஸமானமாயும் உள்ள குதிரைகளை எடுத்துப் பொறுக்கி தேரில்கட்டித் தேரைக் கொண்டுவந்து நிறுத்த, ருதுபர்ணன் விதர்ப்பதேசம் நோக்கிப் புறப்பட்டான்.

வினு 43.—போகும் வழியில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—போகும் வழியில் கிளைகள் படர்ந்து தழைத்திருந்த வன்னி மரம் தோன்ற அதன் அருகே அரசன் தேரை நிறுத்தச் சொன்னுன். உடனே அரசன் அந்த மரத்திலிருக்கும் இலை, காய், பூ, பழம் இவ்வளவு என்று கணக்குச் சொன்னுன். அது ஸரியாய் இருப்பதை நளன் மரத்தருகில் சென்று எண்ணித் தெரிந்துகொண்டு மிகுந்த ஆச்சரியப்பட்டான். உடனே ருதுபர்ணன் தனக்கு சூதாட்ட ரகஸியம் (அக்ஷ ஹ்ருதயம்) தெரியும் என்றும், தான் அதை பாஹுகனுக்குச் சொல்லிக் கொடுப்பதாகவும், அதற்குப் பதிலாகப் பாஹுகன் தனக்குத்தெரிந்த அசுவஹ்ருதயத்தைச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றும் ஏற்பாடுசெய்து பாஹுகனுக்கு சூதாட்ட ரகஸியத்தைச் சொல்லிக்கொடுத்தான். இதை நளன் கற்றுக் கொண்டதும் அவனிட மிருந்த கலி புருஷன் அங்கேயே நீங்கிப் போனுன். உடனே நளன் இரதத்தில் ஏறிக்கொண்டு விதர்ப்ப நகரம் போய்ச் சேர்ந்தான்.

வினு 44.—பாஹுகன்தான் நளன் என்பதைத் தமயந்தி எவ்வாறு பரிசோதித்தறிந்தாள்? பின்பு என்ன நடந்தது?

விடை.—முதலில் ஒரு தாதியை அனுப்புவித்து பாஹுகனைப் பார்த்து அவனேடு, நளன் தன்னைக்காட்டில் விட்டுப்போன விஷயத்தைப்பற்றிப் பேசிவரச்சொன்னுள். பின்பு பாஹுக

ணிடம் தனது குழந்தைகளை அனுப்பிப்பார்த்தாள். பின்பு பாஹுகன் சமைக்கும் விதத்தைப் பார்த்துவரச் சொன்னாள். கடைசியாக அவன் சமைத்த பதார்த்தங்களின் ருசியையும் பார்த்து பாஹுகன்தான் நளன் எனத் தீர்மானித்துக் கொண்டு அவரை ராஜ ஸபைக்குத் தமயந்தி அழைத்துவரச் சொன்னாள். ஸபையிலே கார்க்கோடகன் வந்து நளன் ஸ்வ ரூபத்தை மாற்றிவிட, காட்டில் கட்டியிருந்த பாதிப்புடவை யோடு மாத்திரம் நளன் வெளியானான். அன்று நளனும், தமயந்தியும் ஒருவரை ஒருவர் கண்டு ஆனந்தித்தார்கள்.

வின 45.—இதன் பின்பு நளன் என்ன செய்தான்?

விடை.—நளன் தனது பெண்சாதி, குழந்தைகள், தனது பரிவாரங்கள் முதலியவைகளோடு கூடிக்கொண்டு நிஷதபுரி சென்று புஷ்கரனை சூதாட்டத்தில் வென்று, இழந்த தனது இராஜ்யத்தை மீட்டுக்கொண்டு ஸுகமாய் வாழ்ந்திருந்தான்.

வின. 46.—இந்த உபாக்யானம் சொல்லி முடிந்தவுடன் பிரஹுதசுவர் என்னசெய்தார்?

விடை.—தருமபுத்திரருடைய வேண்டுகோளின்படி அவருக்கு இந்த ரிஷி சூதாட்டத்தைச் சொல்லிக்கொடுக்க, தருமபுத்திரர் சூதாட்டத்தில் சகுனியையும் வெல்லும்படியான தேர்ச்சியை அடைந்தார். இதன் பின்பு பிரஹுதசுவர் யாத்திரார்த்தம் புறப்பட்டுப் போனார்.

வின 47.—பிரஹுதசுவர் சென்றதும் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—பாண்டவர்கள் அர்ச்சுனனது பிரிவுக்கு ஆற்றாமையால் மிகக் கஷ்டப்படுங்கால், நாரத மஹாமுனி வந்து புலஸ்தியருக்கும் பீஷ்மருக்கும் முன் காலத்தில் தீர்த்த மஹத்துவங்களைப் பற்றி நடந்த ஸம்வாதத்தைச் சொல்லிப் பாண்டவரைத் தீர்த்த யாத்திரை செய்யச்சொன்னார். பின்பு தௌம்யரும் ஸகலதீர்த்தங்களை வர்ணித்தார். இந்த ஸமயத்தில் லோமசர் பூமிக்கு வந்து பாண்டவரிடம் அர்ச்சுனனது செய்தியைச் சொல்லி, இந்திரன் அவர்களை அர்ச்சுனன் வரும் வரையில் தீர்த்த யாத்திரை செய்து புண்ணிய விசேஷங்களை ஸம்பாதிக்கச் சொன்னதாக வெளியிட்டார். இவைகளை யெல்லாம் கேட்டதும் தருமபுத்திரர் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட,

15

லோமசரும் தீர்த்த யாத்திரையால் தேவர்கள் அடைந்த பலனையும், அது இல்லாததால் அஸுரர்கள் அடைந்த கேட்டையும் சொல்லி, அதே மாதிரி பாண்டவர்களுக்கு நன்மையும், துரியோதனுதியருக்குக் கேடும் விளையும் என்று பலவாறு தேற்றிக்கொண்டு பாண்டவர்கள் பின்னே தாமும் புறப்பட்டார்.

வினு 48.—இவர்கள் எங்கெந்த முக்கியமான தீர்த்தங்களுக்குச் சென்ருர்கள் ? அங்கு இருந்த விசேஷங்கள் என்ன ?

விடை.—சில தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்தபிறகு பாண்டவர்கள் அகஸ்திய ஸம்பந்தமான பிரம்மஸரஸ் என்கிற தீர்த்தம் வர, அங்கு லோமசர், அகஸ்தியர் லோபாமுத்திரை என்கிற மிகுந்த அழகிய பெண்ணை ஒரு அரசனிடம் பிறக்கும்படி செய்து, பின்புதான் அவளை கல்யாணம் செய்துகொண்டதை யும், பின்பு அவளைத் திருப்தி செய்வதற்காக இரண்டு அரச ரிடம் சென்றும் பணம் கிடையாதது கண்டு இல்வலன் என் கிற அஸுரனிடம் சென்றதையும், அவன் தன் தம்பி வாதாபியை ஆடாக்கிக் கறிசமைக்க அதை அகஸ்தியர் உண்டு வாதாபியை உடனே ஜீரணமாக்கிக் கொன்றதையும் விஸ்தாரமாய்ச் சொன்னுர். இதன் பின்பு அகஸ்தியரது மகிமையை விஸ்தாரமாய்க் கேட்கவேண்டும் என்று தர்ம புத்திரர் சொன்னுர். தேவேந்திரன் விருத்திராஸுரனை ததீசிமஹரிஷி எலும்பால் ஆக்கப்பட்ட வச்சிராயுதத்தால் கொல்ல, அவனைச்சேர்ந்தவர்கள் கடலுள் ஒளித்துக்கொண்டு இரவில் வந்து ஜனங்களை கஷ்டப்படுத்தினதையும், அகஸ்தி யரைக் கடலைக்குடிக்கும்படி செய்து தேவர்கள் அஸு ரர்களை வென்றதையும், இவ்வாறு அகஸ்தியரால் வற்றிய கடல் ஸகர சக்கிரவர்த்தியின் பிள்ளைகளால் அசுவமேதக் குதிரை தேடிவருங்கால் வெட்டப்பட்டதையும் அதன் முடிவில் அவர்கள் யாவரும் கபில வாஸுதேவரது கோபாக் கினியால் இறந்ததையும், அவர்களைக் கரை ஏற்ற பகீரதனது பிரயத்தனத்தால் கங்கை வந்ததையும் லோமசர் விஸ்தார மாய்ச் சொன்னுர்.

வினு 49.—இதன் பின்பு பாண்டவர்கள் எங்குச் சென்ருர்கள் ? அங்கு இருந்த விசேஷம் என்ன ?

விடை.—அவர்கள்கௌசிகிநதி சென்று காசியபராசிரமத்தைக்காண லோமசர், ரிசிய சிருங்கர் காசியபரது வம்சத்தில் பிறந்ததையும், அவரை லோமபாத ராஜனது நாட்டிலிருக்கும் வேசியர் வந்து தமது இராஜ்யத்திற்கு அழைத்துப்போனதையும், அவர் நாட்டில் உள்ளே அடி வைத்ததும் மழை தாரை தாரையாய்ப் பொழிந்ததையும், பின்பு லோமபாதர் தனது பெண்ணாகிய சாந்தையை அவருக்கு விவாகம்செய்து கொடுத்ததையும் விஸ்தாரமாய் எடுத்துரைத்தார்.

வின 50.—இதன் பின்பு பாண்டவர்கள் எங்குச் சென்றார்கள்? அங்கு என்ன நடந்தது?

விடை.—பாண்டவர்கள் மஹேந்திர மலை சென்று அங்கு பரசுராமரது சிஷ்யரைக் கண்டார்கள். அவரிடமிருந்து பரசுராமர் கூடிய சீக்கிரத்தில் அங்குள்ள ஸந்நியாஸிகளுக்கு தரிசனம் கொடுக்கப் போகிறதாக பாண்டவர்கள் தெரிந்துகொண்டு, அதுவரையில் அங்கிருந்து பரசுராமரைத் தரிசிப்பதாகத் தீர்மானித்தார்கள். இதன் மத்தியில் அகிருதவ்ருணரிடமிருந்து பாண்டவர்கள் பரசுராமரது தகப்பனாரான ஜமதக்னி பிறந்த விதத்தையும், அவருக்கு பரசுராமர் உண்டானதையும், பின்பு தன் தாயாருடைய பாதிவிருத்யத்திற்கு குறைவுவரத் தன் தகப்பனாரது உத்திரவின்படி பரசுராமர் தனது தாயைக் கொன்றதையும், பின்பு தன் தாயைப் பிழைப்பிக்க வேண்டும் என்று கேட்க அவர் தாயை அடைந்ததையும், கடைசியாய் கார்த்தவீரியார்ச்சுனனது பிள்ளைகளால் ஜமதக்னிரிஷி இறந்ததையும், இதனால் பரசுராமர் க்ஷத்திரியர் மேல் கோபங்கொண்டு அவர்கள் வம்சத்தை 21-தடவை வேரறுத்து தனது தகப்பனாருக்கு பிதிர்தர்ப்பணம் செய்ததையும், கடைசியில் பூமியைக் காசியபருக்கு தானம் செய்துவிட்டு மஹேந்திரமலையில் தபஸுசெய்து கொண்டிருப்பதையும், தெரிந்துகொண்டார்கள். இந்தக் கதை முடிந்ததும் பரசுராமர் இவர்கள் கண் முன்தோன்ற அவரைத் தரிசித்துவிட்டு பாண்டவர்கள் வேறு தீர்த்தங்களுக்குப் புறப்பட்டார்கள்.

வின 51.—இப்படிப் பரசுராமரைத் தரிசித்ததும் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்? பின் என்ன நடந்தது?

விடை.—அகஸ்திய தீர்த்தம் முதலிய தீர்த்தங்களுக்குப்போய் கடைசியாய் ப்ரபாஸதீர்த்தம் வந்து சேர்ந்தார்கள். இங்கு கிருஷ்ணபகவான், பலராமர் முதலிய யாதவகுலத்தோர் யாவரும் பாண்டவரை ஸந்தித்து, அவர்களுக்கு வந்த துக்கங்களைத் தமக்கு வந்தவைகளாகப் பாராட்டி, உடனே துரியோதனாதியரைக் கொல்லக் கிளம்பத் தருமபுத்திரர் அவர்களை ஸமாதானப்படுத்தி ஊருக்கு அனுப்பிவிட்டார்.

வினா 52.—பிரபாஸ தீர்த்தத்தை விட்டுப் பாண்டவர்கள் எங்கு சென்றார்கள்? அங்கிருந்த மஹாத்வமென்ன?

விடை.—இதன் பின்பு பாண்டவர்கள் நர்மதா நதி தீரம் சென்றார்கள். இங்கு சியவனரிஷி அருகாமையிலுள்ள குளக்கரையில் தபஸு செய்யுங்கால் அவர் மேல் இவ்வாறு புற்று மூடியது என்பதையும், அங்குவந்து சரியாதி இராஜன் தண்டிறங்க அவனது பெண்ணாகிய ஸுகந்யை விளையாடி வருங்கால் புற்றுள் இருந்த சியவனரது கண்ணை மின்மினி என்றெண்ணி ஒரு குச்சியால் குத்தியதையும், ரிஷியின் சாபத்தால் அரசனது பரிவாரங்களெல்லாருக்கும் வயிறு ஊதியதையும், அரசன் தன் பெண் செய்த அபராதத்தைக் கண்டுபிடித்து ரிஷியின் வேண்டுகோளின்படி ஸுகந்யையை அவருக்குக் கொடுத்ததையும், இதன்பின்பு அசுவநீ தேவதைகள் வந்து இவளது கற்பை பரீக்ஷித்ததையும், கடைசியில் சியவனரும் அசுவனீ தேவதைகளும் அக்குளத்துள் முழுகி ஒரே மாதிரியான யௌவன புருஷராக எழுந்திருக்க, ஸுகந்யை தனது கற்பின் மஹாத்வத்தால் சியவனரைக் கண்டுபிடித்ததையும், இந்த உபகாரத்திற்காக சியவனர் அசுவனி தேவதைகளுக்கு யாகங்களில் ஹவிர்ப்பாக முண்டாக்க சரியாதி ராஜாவுக்கு ஒரு புதிய யாகம்செய்து வைத்ததையும், அதைத் தடுக்க வந்த இந்திரனது கையை அசையாதிருக்கும்படி செய்து அசுவனி தேவதைகளுக்கு சியவனர் ஹவிர்ப்பாகம் கொடுத்ததையும் மதன் என்கிற ஒரு அஸுரனை சிருஷ்டித்து இந்திரனைக்கொல்ல யத்தனிக்க அவன் புதிய ஹவிர்ப்பாகத்தை ஒப்புக்கொண்டதையும், லோமசர் விஸ்தாரமாய்ச் சொன்னார்.

வினா 53.—பின்பு பாண்டவர்கள் எந்த மஹாத்வமுடைய தீர்த்தத்திற்குப் போனார்கள்?

விடை.—மாந்தாதா தானே யாகம் செய்த யமுனு நதிக் கரையை அடைந்தார்கள். மாந்தாதா, பிள்ளையை உண்டாக்கும் சக்தியை உடைய மந்திரித்த தீர்த்தத்தைத் தாக மிகுதியால் குடித்த யுவனுசுவ ராஜாவின் இடது விலாப்புற மிருந்து வெளிவந்து, இந்திரனது கட்டை விரலைச் சப்பிக்கொண்டு வளர்ந்தான் என்கிற கதையை இங்கு லோமசர் விஸ்தரித்தார். அவ்விடத்திலேயே ஸோமகர் 100 பிள்ளைகளை அடைவதற்காக, ரித்விஜர் என்ற அவரது புரோஹிதர் அரசனுக்கிருந்த ஜந்து என்ற பிள்ளையை ஹோமம் செய்யக் கடைசியில் அவர் நரகத்தில் கஷ்டப்பட்டார் என்றும், இதைக் கண்ட:ஸோமகர் தமது புரோஹிதரோடு கஷ்டப்பட்டு கடைசியில் ஸ்வர்க்க மடைந்தார் என்றும் உள்ள கதையையும் லோமசர் சொன்னுர்.

வின 54.—இதன் பின்பு பாண்டவர்கள் எங்கே சென்ருர்கள்? அந்தத் தீர்த்தத்தின் மஹத்வம் என்ன?

விடை.—யமுனு நதியில், உசீனரன் என்று பெயர்பெற்ற சிபிச்சக்கிரவர்த்தி விசேஷயாகம்செய்த தீர்த்தத்திற்கு வந்தார்கள். இங்கு இந்திரன் வல்லூறு ரூபமாய் புரு ரூபமான அக்கினியை துரத்திவர, புரு சிபியின் மடியில் வந்து விழுந்து சரண மடைந்த தென்றும், வல்லூறு வந்து தான் பசியாலிறப்பதாகவும் தனக்குப் புருவே தகுந்த ஆகாரம் என்றும் சொல்லிக் கடைசியில் புருவின் கனத்திற்கு ஸமானமான சிபியது மாம்ஸத்தால் தான் திருப்தி யடைவதாக வல்லூறு சொல்லிய தென்றும், உடனே சிபி தனது மாம்ஸத்தை அறுத்துப் போடவே புரு கனமாகிக்கொண்டு வருவதைக் கண்டு தானே தராசில் ஏறும்பொழுது இந்திரனும், அக்கினியும் தமது உருவத்தை வெளிப்படுத்தி சிபிக்கு வரமளித்தனர் என்றும் லோமசர் சொல்லி முடித்தார்.

வின 55.—இதன் பின்பு பாண்டவர்கள் எந்தத் தீர்த்தம் சென்ருர்கள்? அங்கு லோமசர் என்ன கதையைச் சொன்னுர்?

விடை.—பாண்டவர்கள் அரிச்சந்திர தீர்த்தம் சென்ருர்கள். அங்கு லோமசர், ஸத்யத்திற்காக அரிச்சந்திரன் பட்ட பாட்டை விஸ்தாரமாக எடுத்துச்சொன்னுர்.

வினு 56.—அரிச்சந்திரன் யார்? இவன் யாரை எவ்வாறு மணம் புரிந்து கொண்டான்? இவனுக்கு எத்தனை பிள்ளைகள்?

விடை.—இவன் ஸூரியவம்சத்தரசன். இவன் அயோத்திமா நகரில் அரசாண்டுவந்தான். கன்னபுரி யரசனது குமாரத்தி சந்திரமதியினது அழகைக் கேள்வியுற்று, இவன் அவளை மணம்புரிய வேண்டுமென்கிற விருப்பத்துடன் அவளது ஸ்வயம்வரத்திற்குப் புறப்பட்டான். அப்பொழுது, 'சிவ பெருமானுல் அவளுக்குக் கொடுக்கப்பட்ட இரகஸிய வஸ்துவை யார் பார்த்து அறிகிறுர்களோ அவர்தான் சந்திரமதிக்கு ஏற்பட்ட புருஷனுவார்' என்ற விசேஷ ஸமாசாரத்தையும் அவன் கேள்விப்பட்டான். ஸ்வயம்வர மண்டபத்தில் அரசன் சந்திரமதியைக் கண்டதும் அவள் கழுத்தில் திருமங்கல்யம் இருப்பதைக்கண்டு முன் கல்யாணமான பெண்ணை மறுபடியும் கல்யாணம் செய்துகொள்வது நியாயமல்லவே என்று அரிச்சந்திரன் வாய்விட்டுச் சொன்னுன். அப்பொழுது சந்திரமதி தனது கழுத்திலிருந்த இரகஸியமான தாலி இவன் கண்ணில் பட்டதைக் கண்ணுற்று, இவனே நமக்குத்தகுந்த நாயகனெனத் தீர்மானித்து மணமாலையை ஆகாயத்திலெறிய, அது அரிச்சந்திரன் கழுத்தில் வந்து விழுந்தது. பின்பு இவர்கள் விவாஹம் வெகுகோலாஹலமாய் நடந்தேறியது. இவர்களுக்கு லோஹிதாஸன் என்ற ஒரு அருமைப் பிள்ளை உண்டானுன்.

வினு 57.—இவ்வரசனை விசுவாமித்திர மஹரிஷி கஷ்டப்படுத்தக் காரணம் என்ன?

விடை.—இந்திர ஸபையில் வஸிஷ்டர், விசுவாமித்திரர் முதலிய மஹரிஷிகள் கூடி இருக்குங்கால் 'பூமியில் ஸத்யம் முதலிய நற்குணங்களில் சிறந்தவன் யார்?' என்கிற கேள்வி பிறந்தது. அப்பொழுது தனது சிஷ்யனுன அரிச்சந்திரனே சிறந்தவன் என்றும், அவனுக்கு ஸமானமானவர் உலகில் வேறெருவர் இல்லை என்றும் வஸிஷ்டர் வெகுவாகப் புகழ்ந்து பேசினுர். இதை ஸஹியாத விசுவாமித்திரர், முன்னமே வஸிஷ்டரிடமிருந்த துவேஷத்தால், அரிச்சந்திரனை வெகுவாகப் பழித்துரைக்க இருவருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. முடிவில் வஸிஷ்டர் 'அரிச்சந்திரன்

எந்தக் கஷ்டத்திலாவது ஒரு பொய் சொன்னால் நான் எனது பிராம்மணயத்தை விட்டுப் பறையரது தர்மத்தை மேற்கொள்ளுகிறேன்' என்றும், விசுவாமித்திரர் அப்படி எந்த கஷ்ட திசையிலும் ஒரு பொய்கூடச் சொல்லாமல் அரிச்சந்திரன் இருந்தால் எனது தபஸில் பாதி அவனுக்குக் கொடுக்கிறேன் என்றும் இந்திரன்முன்பு கொடிய சபதம் செய்துக் கொண்டார்கள். உடனே அரிச்சந்திரனது உண்மை உரைக்கும் உறுதியைச் சோதிக்க விசுவாமித்திரர் பூமிக்குப் புறப்பட்டார்.

வினா 58.—முதலில் அரிச்சந்திரனைக் கஷ்டப்படுத்த விசுவாமித்திரர் எவ்வாறு தொடங்கினார்?

விடை.—முதலில் சில பிராம்மணர் மூலமாய் தனக்கு யாகத்திற்கு வேண்டிய பொருளுதவி செய்வதாக அரசனிடமிருந்து வாக்குறுதியைப் பெற்றுக்கொண்டு, பின்பு விசுவாமித்திரர் அரசனிடம் சென்று பொருள் வேண்டுமென்று சொல்லி அரசனால் கொடுக்க முடியாததாகிய ஏராளமான பொருள் கேட்க, அவன் அதைக்கொடுக்க யத்தனம் செய்தான். அப்பொழுது தமக்குவேண்டாம் என்று சொல்லிவிட்டு, ரிஷி போய் துஷ்ட மிருகங்களை சிருஷ்டித்து இவன் இராஜ்யத்துப் பயிர்களை அழிக்கும்படி ஏவினார். இவ்வாறு அழிக்கவந்த கொடிய பிராணிகள் எல்லாவற்றையும் அரசன் வேட்டையாடிக் கொல்ல, ரிஷி ஒரு மாயப்பன்றியைச் சிருஷ்டித்து அனுப்பினார். அதையும் அரசன் வென்று ஒரு தடாகம் அமைந்த சோலையில் வந்து தண்டிறங்கினான்.

வினா 59.—இந்தப் பன்றியால் என்னவிபரீதம் அரசனுக்கு உண்டானது?

விடை.—இது சென்று ரிஷியினிடம் நடந்த செய்தியைச்சொல்ல, அவருக்கு அடங்காக் கோபமுண்டாயிற்று. அப்பொழுது அவரிடமிருந்து அழகுள்ள புலைச்சியர் இருவர் உண்டாக, ரிஷி அரசனைக் காமவலையில் சிக்கும்படி செய்து அவனைத் தம்மிடம் இழுத்து வரும்படி அவர்களை ஏவினார். இவர்கள் அரசனிடம் சென்று பாட அவன் 'உங்களுக்கு வேண்டுவதென்ன' என்று கேட்டான். அதற்கு அவர்கள் 'உம்மைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்றனர்.' அரசன் இதற்கு இசையாதது கண்டு, உடனே இவர்கள் அரசனைப்

பழிக்க, அவன் கோபங்கொண்டு இவர்களை தனது வேலைக் காரர் மூலமாகத் துரத்தியடித்தான். இதைக் கேள்வியுற்ற கௌசிகருக்குக் கோபாவேசம் வர, அரசனிடம் வந்து தமது பெண்களை வருத்தப்படுத்தியதற்காக அவன் தலையில் உதைத் தார். உடனே அரசன் மிகுந்த பொறுமையோடு 'எனது இராஜ்யத்தைக் கேட்டாலும் கொடுப்பேன், இந்தத் தகாத காரியத்தை நான் செய்யமாட்டேன்' என, கௌசிகர் 'கொடுத்துவிடு' என்றார். அரசன் கூசாது தனது இராஜ்யம் முழுவதையும் கொடுத்துவிட்டான்.

வினு 60.—இவ்வாறு இராஜ்ய மிழந்ததும் இவனுக்கு வேறு என்ன கஷ்டமுண்டாயிற்று? அதைத் தீர்ப்பதற்கு அரசன் என்ன ஏற்பாடு செய்தான்?

விடை.—இப்படி அரசன் இராஜ்யம் முழுவதையும் கொடுத்து விட்டபின்பு, கௌசிகர் 'நான் முன் கொடுத்து வைத்திருந்த பொருளை நீ இன்னும் எனக்குக் கொடுக்கவில்லை, அதை எனக்குக் கொடு' என்று கேட்டார். அப்பொழுது அரசன் தான் அவஸரத்தில் செய்த தப்பிதத்தைக்கண்டு, அந்தப் பொருளைக் காசிநகரம்சென்றதும் கொடுத்துவிடுவதாக வாக் களித்தான். அதை அவனிடம் இருந்து வாங்குவதற்காக கௌசிகர் நக்ஷத்திரீகன் என்ற கொடிய விடாமுண்டனை அரச னோடு காசிக்குப்போய் வரும்படி அனுப்பி, அரிச்சந்திரனைத் தன்னால் கூடியவரையில் கஷ்டப்படுத்தும்படி அவனுக்கு உத்தரவும் கொடுத்தார். சற்று நாழிகைக்கு முன் பரிவாரங் களோடு இருந்த அரசன் இப்பொழுது பாதசாரியாய் சந்திர மதி, லோகிதாக்ஷன், நக்ஷத்திரீகன் முதலியவர்களைக் கூட்டிக் கொண்டு ஒரு எளியவன்போல் காசி நோக்கிப் புறப்பட்டான்.

வினு 61.—காசிப்பட்டணம் போகும் வழியில் அரிச்சந்திரனுக்கு என்ன கஷ்டங்கள் உண்டாயிற்று?

விடை.—கௌசிகர், போகும் வழியெல்லாம் முள்ளும் கல்லுமா யிருக்கும்படி செய்ய, நல்ல ஸ்திதியிலிருந்த அரசன் முதலி யோர் மிகுந்த வருத்தமடைந்தார்கள். இதுபோதாதென்று வெயில் தாபம் அதிகரிக்கும்படியாகவும், வழியில் மரமே இல்லாதிருக்கும்படியாகவும் ஏற்பாடு செய்தார். இவ்வாறு இவர்கள் கஷ்டப்படுங்கால் நக்ஷத்திரீகன் இவர்களை மிகக்

கஷ்டப்படுத்தி, கடைசியில் தன்னால் நடக்க முடியவில்லை என்று அரசன் தோளில் ஏறிக்கொண்டான். அவன் தோளில் இருந்து படுத்தும் பாட்டைப் பொறுமையோடு ஸஹித்துக்கொண்டு அவனை அரசன் வெகுதூரம் தூக்கிக்கொண்டு சென்றான். இரவில் கௌசிகர் காட்டுத்தீ, புயல்காற்று, துஷ்ட மிருகம் முதலியவைகளால் அரசனை வருத்தி, அவன் அதிகக் கஷ்டப்படுங்கால் எதிரே தோன்றி 'நீ எனக்கு இப்பொருள் கொடுக்கவில்லை என்கிற ஒரு பொய் சொல்லிவிடு. உனக்கு ஸகல துக்கங்களும் நீங்கிப்போம், இராஜ்யமும் திரும்பி வந்துவிடும்' என்று சொல்லி அடிக்கடி ஆசை காட்டிப் பார்த்தார். இவைகள் ஒன்றிற்கும் அரிச்சந்திரன் இசையவில்லை. இவ்வளவு கஷ்டத்தையும் பொறுத்துக் கொண்டு அரசன் காசிபட்டணம் வந்துசேர்ந்தான்.

வினா 62.—காசிப்பட்டணம் வந்ததும் அரசன் எவ்வாறு கௌசிகர் கடனைத் தீர்த்தான்? உடனே வேறு என்ன கஷ்டம் வந்தது?

விடை.—காசிபட்டணம் சென்றதும் காலகண்டன் என்கிற கொடிய பிராம்மணனுக்குத் தனது சந்திரமதியையும், பிள்ளையையும் விற்று கௌசிகருக்குக் கொடுக்கவேண்டிய பொருளை நக்ஷத்திரீகனிடம் ஒப்புவித்தான். இதைப் பெற்றுக்கொண்டு 'நான் கஷ்டப்பட்டதற்குக் கூலி எங்கே' என்று நக்ஷத்திரீகன் கேட்டான்.

வினா. 63.—இவ்வாறு இரக்கமின்றிக் கேட்ட நக்ஷத்திரீகனை எவ்வாறு அரிச்சந்திரன் திருப்தி செய்வித்தான்?

விடை.—இந்த ஸங்கதியைக் கேட்டதும் அந்நகரத்தில் மயானம் காக்கும் வீரபாகு என்ற பறையனிடம் தான் அடிமைப்பட்டு நக்ஷத்திரீகனுக்கு வேண்டிய பொருளை வாங்கிக்கொடுத்து அவனைக் கௌசிகரிடம் அனுப்பிவிட்டான். இதன் பின்பு மஹாராஜனான அரிச்சந்திரன் வீரபாகுவுக்காக அன்று முதல் இரவில் சுடலைக் காக்கத்தொடங்கினான்.

வினா 64.—காலகண்டனிடம் அடிமையான சந்திரமதியின் பாடு என்னமாயிற்று? இது கடைசியில் என்ன விபரீதமாய் முடிந்தது?

விடை.—காலகண்டனும், அவன் பெண்சாதியாகிய காலகண்டியும் ஈவு இரக்கமின்றி சந்திரமதியையும், அவள் பிள்ளையையும் கஷ்டப்படுத்தி வந்தார்கள். இப்படி இருக்கையில் ஒரு நாள் லோகிதாக்ஷனைக் காலகண்டி சில பிள்ளைகளோடு ஸமித்துக் கொய்துவரும்படி அனுப்பினுள். அவன் சென்று காட்டில் ஸமித்து ஒடித்துக்கொண்டிருக்கையில் ஒருகொடிய ஸர்ப்பம் தீண்டி இறந்தான். இந்த ஸங்கதியைப் பிள்ளைகள் சந்திரமதியிடம் சொல்ல, அவள் தன் பிள்ளையைத் தேடிப்பார்க்க வேண்டுமென்று எவ்வளவோ நயமாய்க் கேட்டும் காலகண்டி அவளுக்குக் காட்டுக்குப்போக அனுமதி கொடுக்கவில்லை, இரவில் காலகண்டன், காலகண்டி இருவர்களும் நித்திரை செய்யப்போகையில் ஸகல வேலைகளையும் முடித்துவிட்டு அவர்களிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு சந்திரமதி பிள்ளையைக்காணப் பயமின்றி காட்டை நோக்கிப் புறப்பட்டாள்.

வினு 65.—சந்திரமதிபோய்ப் பிள்ளையை எவ்வாறு அடக்கம் செய்யப்பார்த்தாள்? அதற்கு என்ன தடை நேரிட்டது?

விடை.—பிள்ளைகள் சொன்னவிடத்தைக் குறிப்பாய் வைத்துக் கொண்டுபோய் அன்று நடு இராத்திரியில் சந்திரமதி பாம்பு கடித்து இறந்துகிடக்கும் தன் சிறுவனைக்கண்டு மனம் பதைத்து கொஞ்சகாலம் வாய்விட்டலறினுள். அதன் பின்பு வழியில் அகப்பட்ட சுள்ளிகளைப்பொறுக்கி எடுத்துக்கொண்டு சுடலை அடைந்து ஒரு சிதை உண்டாக்கித் தனது அருமைக் குழந்தையை அதில் வைத்து நெருப்பை மூட்டினுள். உடனே அங்குக் காவல்காத்திருந்த அரிச்சந்திரன் ஓடிவந்து 'எங்களுக்குச் சேரவேண்டிய பணமும், ஒரு முழத் துண்டும் எங்கே? அதைக் கொடுக்காது யார் இராத்திரியில் பிணம் எரிப்பது?' என்று அதட்டிக்கொண்டு சிதையைக் கலைத்து குழந்தையின் தேகத்தை வெளியே இழுத்து எறிந்து விட்டான்.

வினு 66.—இந்தத் தடையை நிவர்த்திசெய்யச் சந்திரமதி என்ன ஏற்பாடு செய்தாள்? அதிலிருந்து என்ன விபரீதம் விளைந்தது?

விடை.—தான் மிகுந்த ஏழை என்றும், தன்னுல் பணமும், ஆடையும் கொடுக்க முடியாதென்றும், தனக்கு இனுமாய்ப்

பிணம்சுட அனுமதி யளிக்கவேண்டுமென்றும் சந்திரமதி சுடல்க்காப்போனை கெஞ்சிக் கேட்டுப்பார்த்தாள். அவன் இவள் கழுத்திலிலங்கும், பரமசிவனால் அனுக்கிரகிக்கப் பட்ட தாலி இருப்பதைக்கண்டு, 'உன் கழுத்தில் பிரகாசிக் கும் தாலியை எனக்குக் கொடு. இந்தப் பணம் எனது எஜ மானனைச் சேர்ந்தது, ஆகையால் நான் இதை அவசியமாய் வாங்கியே தீரவேண்டும்' என்றான். சந்திரமதி 'என் கழுத் துத் தாலி அரிச்சந்திர ராஜனைத் தவிர வேறொருவரது கண் ணிலும் படமாட்டாதே. இப்பறையன் கண்ணில் ஏன் விழுந்த தென்று வாய்விட்டலற அப்பொழுதுதான் தன்னுடைய குழந்தை இறந்தான் என்று அரசனுக்குத் தெரிய வந்தது. அவனும் வெகுநாழிகை துக்கித்துவிட்டு, சந்திரமதியைக் கால கண்டனிடமிருந்து பணத்தையும் ஒரு முழத்துண்டையும் வாங்கிவர அனுப்பிவிட்டு, தான் குழந்தையை காத்துக் கொண்டிருந்தான். வெகு பரபரப்போடு சந்திரமதி ஓடும் பொழுது திருடர்களால் கொல்லப்பட்ட காசிராஜன் குழந் தையை வழியில் கண்டு தன்குழந்தை என்று எண்ணி வழி யிலேயே உட்கார்ந்து துக்கிக்கத் தொடங்கினாள். கொஞ்ச நாழிகைக் கெல்லாம் குழந்தையைத் தேடிக்கொண்டு வந்த அரசன் சேவகர்கள், இங்கு வந்து இவள்தான் பிள்ளையைக் கொன்றவள் என்கிற பெரும்பழி சுமத்தி இவளை அரசனிடம் கொண்டுபோய் விட்டார்கள்.

வினா 67.—அரசன் என்ன தண்டனை இவளுக்கு விதித்தான்? யார் அந்தத் தண்டனையை நடத்தும்படி நேரிட்டது?

விடை.—அரசனுக்கு இவளைப் பார்த்ததும் இந்தப்பெண் கொலை யாளி யல்லவென்று தோன்றியபோதிலும், அடுத்திருந்தவர் களது துர்ப்போதனைகளால் இவளைக் கொல்லத்துணிந்து, இவளைக் கொல்லும்படி வீரபாகுவினிடம் ஒப்புவித்தான். அவன் இவளை அரிச்சந்திரனிடம் ஒப்புவிக்கக் கடைசியாய் அரிச்சந்திரனே தனது கபடமற்ற பெண்சாதியைக் கொல் லும்படி நேர்ந்தது.

வினா 68.—அரிச்சந்திரனுக்கு என்ன தடை உண்டாயிற்று? அவன் பின்பு என்ன செய்தான்? உடனே என்ன விசித்திரம் நடந்தது?

விடை.—தன் எஜமான் உத்திரவின்படி அரிச்சந்திரன் சந்திரமதியை வெட்டத் தொடங்குகையில் விசுவாமித்திரர் ஓடிவந்து இத்தருணத்தில் ஒரு பொய் சொல்லிவிடு, உனக்கு ஸகல ஸுகமும் உண்டாகும்' என்று வேண்ட, அரசன் 'என் அருமைப் பெண்சாதியை வெட்டினுலும் வெட்டுவேனே ஒழிய நான் ஒருநாளும் பொய்யுரைக்க மாட்டேன்' என்று மன உறுதியோடு தன் கத்தியை உயர்த்தி சந்திரமதி கழுத்தில் போட்டான். அது உடனே அவள் கழுத்தில் ஒரு பூமாலையாய் விழுந்தது. உடனே ஸகல தேவர்களும் பரமசிவனை முன்னிட்டுக்கொண்டு அரிச்சந்திரனுக்குத் தரிசனம் கொடுக்க அம்மயானம் கைலாஸமாகவே மாறியது. லோகிதாக்ஷனும் காசிராஜன் பிள்ளையும் உயிருடன் எழுந்து வந்தார்கள்.

வினு 69.—இதன் பின்பு அரிச்சந்திரன் என்ன செய்தான்? அவன் ஸபையில் என்ன நடந்தது?

விடை.—பரமசிவன் உத்தரவின்படி இந்திரனது ஸகாயத்தால் அவன் இராஜ்யத்தில் மறுபடியும் அரசாளத் தொடங்கினுன். உடனே விசுவாமித்திரர் வந்து தன் சபதப்படி அரிச்சந்திரனுக்கு தான்செய்த தவத்திற் பாதியை வெகு ஸந்தோஷத்தோடு தாரைவார்த்துக் கொடுத்தார். இதன் பின்பு அருகிலிருந்த வஸிஷ்டரிடம் சென்று தான்செய்த பிழையைப் பொறுக்கவேண்டும் என்று விநயத்துடன் கேட்டுக்கொண்டு விசுவாமித்திரர் தபோவனம் சென்றுர்.

வினு 70.—இதன் பின்பு பாண்டவர்கள் எந்தத்தீர்த்த விசேஷத்திற்குச் சென்றுர்கள்?

விடை.—உத்தாலகரிஷி ஆசிரமத்தருகிலிருக்கும் தீர்த்தம் சென்றுர்கள். இங்கு, லோமசர் உத்தாலகரது பிள்ளையாகிய சுவேதகேதுவும் அவரது பேரனுகிய அஷ்டாவக்கிரரும் ஜனக ஸபை சென்று அஷ்டாவக்கிரரது தகப்பனுரை தர்க்கத்தில் வென்று ஸமுத்திரத்துள் அழுத்தி வைத்திருந்த பந்தி என்ற ஜனக ஸபை வித்வானை தர்க்கத்தில் அஷ்டாவக்கிரர் வென்று தன் தகப்பனுரை அடைந்த விசேஷக் கதையைச் சொன்னுர்.

வினு 71.—இவ்வாறு தீர்த்தயாத்திரையின் கடைசியில் பாண்டவர்கள் எங்குச் சென்றுர்கள்?

விடை.—வடக்குத் திக்கிலிருக்கும் கந்தமாதன பர்வதத்தை நோக்கிப் பாண்டவர்கள் சென்றுர்கள். போகும் வழியில் திரௌ

பதிக்குக் கஷ்டம் தோன்ற, கடோற்கசனை அவர்கள் வரவழைத்து அவளைத் தூக்கிச்செல்லும்படி ஏவ, அவனும் அவ்வாறே செய்தான். மற்றைய பாண்டவர்களை கடோற்கசனோடு வந்த இராக்ஷஸர்கள் தூக்கிச்சென்றார்கள். இவர்கள் கந்தமாதன பர்வதம் வந்து சிலநாள் அங்கு வஸித்தார்கள்.

வினு 72.—அங்கு என்ன விசேஷம் நடந்தது? அது எவ்வாறு முடிந்தது?

விடை.—அங்கு அர்ச்சுனனைக் காணவேண்டும் என்கிற ஆவலோடு பாண்டவர்களும், திரௌபதியும் இருக்கையில் ஒரு இளம் காற்று ஆயிரதளங்கள் அமைந்த ஒரு தாமரைப் புஷ்பத்தை திரௌபதி முன் கொண்டுவந்து போட்டது. அவள் பீமஸேனனிடம் அந்தப் புஷ்பம் வேண்டும் என்கிற தனது இஷ்டத்தைத் தெரிவித்தாள். உடனே பீமன் புஷ்பம் கொண்டு வருவதற்காக அது வந்த திக்கைநோக்கிப் புறப்பட்டான்.

வினு 73.—இவ்வாறு பீமன் புஷ்பங் கொண்டுவரப் போனவிடத்தில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—தனது தம்பி பீமன் வருவதையறிந்த கதலீ வனத்திலிருந்த ஹனுமார் அவனுக்கு நன்மைசெய்ய எண்ணி அவன் வரும் வழியை மறித்துக்கொண்டு நின்றார். பீமன் ஹனுமாரிடம் வந்து சிங்கநாதம் செய்ய, அவர் கவனியாதவர்போல் அசிரத்தையாய்க் கண்ணைவிழித்துப் பார்த்து 'நீ இதோடு நிற்கவேண்டியது தான், மேலேபோக உன்னால் முடியாது. என்னோடு ஸுகமாய்க் கொஞ்சகாலம் இருந்துவிட்டு மீளே திரும்பிப் போ' என்றார். உடனே பீமனுக்கும், ஹனுமாருக்கும் ஒரு தர்க்கம் உண்டாயிற்று.

வினு 74.—இந்தத் தர்க்கம் எப்படி முடிந்தது?

விடை.—இதன் முடிவில் ஹனுமார் தனக்கு எழுந்திருக்க முடியவில்லை என்றும், தன்னை வேண்டுமானால் தாண்டிக்கொண்டு போகலாம் என்றும் சொன்னார். பீமன் இதற்கு இசையவில்லை. அதன் பின்பு அவர் தாம் கிழவர் என்றும், தமது வாலைத்தூக்கி வேறோரிடத்தில் வைத்துவிட்டுப் போகலாம் என்றும் சொல்ல அவன் தனது இடது கையால் வாலை அசைத்தான். அது அசையாதது கண்டு தனது முழுப் பலத்தோடு தூக்கிப்பார்த்தான். உடனே தனது ஹீனஸ்திதியை

அறிந்து 'நீர் யார்' என்று மஹா வினயத்தோடும், பக்தியோடும் பீமன் கேட்டான். அதற்கு ஹனுமார் தனது பிறப்பு, தான் இராமருக்காகப் பட்டபாடுகள் முதலியவைகளை ஆதியோடந்தமாகச் சொன்னார். உடனே பீமன் தனது தமயன் காலில் அடியற்ற மரம்போல் விழுந்து மஹா விநயத்தோடு எழுந்து நின்றான்.

வினு 75.—இவ்வாறு நின்ற பீமனுக்கு ஹனுமார் என்ன சொன்னார்?

விடை.—பீமனுக்கு ஹனுமார் கிருத யுகத்தில் ஜாதி பேதமே இல்லை என்றும், அவரவர்கள் தமது தர்மத்தைத் தாமே நடத்திவந்தார்கள் என்றும், திரேதா யுகத்தில் தர்மம் கால்வாசி குறைந்தபடியால் யாகாதிக் கிருதுக்கள் ஏற்பட்டன வென்றும், நான்கு வர்ணங்கள் ஏற்பட்டு தர்மங்கள் நன்றாய் நடந்து வந்தன வென்றும், துவாபர யுகத்தில் தர்மம் பாதியாய் விட்டது என்றும், வேதங்கள் நான்காய்ப் பிரிந்தன வென்றும், கர்மாக்கள் அதிகரித்தன என்றும், ஸ்மசான வைராக்யாதி ஆபாஸ வைராக்கியங்களாம் ஸன்னியாஸ முண்டாயின என்றும், கலியுகத்தில் தர்மத்தில் கால்பாகந்தான் இருக்கும் என்றும், இதனால் ஜனங்களுக்கு பலம் குறையும் என்றும், ஸகல வியாதிகளும் அவர்களைப் பீடிக்கும் என்றும், கர்மாக்கள் நஷ்டமாகும் என்றும், எடுத்துரைத்தார். பின்பு பீமனுக்கு ஹனுமார் தமது விசுவரூபத்தைக் காட்டினார். இதன் பின்பு நான்கு வர்ணத்தாரது தர்மங்களையும் விஸ்தாரமாய் எடுத்துச்சொல்லிப் பீமனைக் கட்டிக்கொண்டு அவனது சிரமத்தைத் தீர்த்து வைத்தார். அதன்பின்பு தாம், யுத்த ஸமயங்களில் அர்ச்சுனனது கொடியில் வந்திருந்துக்கொண்டு தமது அட்டஹாஸம் முதலியவைகளால் எதிரி ஸேனையை பயப்படுத்துவதாக வாக்களித்தார். கடைசியில் ஹனுமாரிடமிருந்து ஸௌகந்திகத் தாமரை ஓடை இருக்கும் இடத்தைத் தெரிந்துகொண்டு பீமன் குபேரனது இருப்பிடம் வந்து சேர்ந்தான்.

வினு 76.—அங்கு வந்து பீமன் என்னசெய்தான்? அங்கு என்ன பிரமாதம் விளைந்தது?

விடை.—அங்குள்ள புஷ்பங்களைப் பறிக்க யத்தனிக்கையில் அவ்வோடையைக் காத்துவந்த இராக்ஷஸர்களிடம் தனது

காரியத்தை பீமன் சொல்லிவிட்டு நிர்ப்பயமாய் தாமரைகளைப் பறிக்கத் தொடங்கினன். அப்பொழுது இராக்ஷஸர்களுக்கும் பீமனுக்கும் பிரமாத யுத்தமுண்டாயிற்று. அதில் குபேரனது ஸேவகர் தோல்வியடைந்து எஜமானனிடம் ஸமாசாரத்தைத் தெரிவிக்க அவர் பீமனுக்குப் புஷ்பம் பறிக்க அனுமதி கொடுத்துவிட்டார்.

வின 77.—இங்கு இவ்வாறிருக்க தர்மபுத்திராதிகள் என்னசெய்தார்கள்?

விடை.—தர்மபுத்திரர் இருக்குமிடத்தில் அனேக அபசகுனங்கள் உண்டாகத் திரௌபதியினிடமிருந்து பீமன் போன இடத்தை அறிந்துகொண்டு எல்லோரும் கடோற்கசன் முதலிய இராக்ஷஸரது ஸகாயத்தால் ஸௌகந்திகத் தாமரை ஓடை வந்து, பீமன் செய்த கோரயுத்தத்தைக் கண்டு மகிழ்ந்து குபேரனது உத்திரவின்பேரில் அங்கேயே இவர்கள் அர்ச்சுனன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

வின 78.—இங்கிருந்து பாண்டவர்கள் எங்குச் சென்றார்கள்? அங்கு என்ன விபரீத முண்டாய் என்னமாய் முடிந்தது?

விடை.—பாண்டவர்கள் பதரிகாசிரமம் சென்று வஸிக்குங்கால் ஒருநாள் பீமன் வெளியில் போயிருக்கும் தருணத்தில் தருமபுத்திரர், நகுலன், ஸகாதேவன், திரௌபதி இவர்களை ஒரு இராக்ஷஸன் தூக்கிக்கொண்டுபோய்விட்டான். இவன் பெயர் ஜடாஸுரன். இவன், வெகுநாளாகப் பிராம்மண உருவத்தோடு பாண்டவர்களது ஆயுதம் முதலியவைகளை ஸமயம் பார்த்துக் கொள்ளை கொள்ளவேண்டும் என்கிற எண்ணத்தோடு, கூடவே வந்து கொண்டிருந்தான். இப்பொழுது ஸமயம் வாய்த்ததும் இவ்வாறு செய்யக் கொஞ்ச நாழிகையில் பீமன் வந்து சேர்ந்தான். தனது ஸஹோதரர் முதலியவர்களைக் காணாது பீமன் அட்டஹாஸம் செய்ய இராக்ஷஸன் பயத்தால் தான் எடுத்துப்போனவர்களைக் கீழேவிட்டுவிட்டான். உடனே பீமனுக்கும் ஜடாஸுரனுக்கும் பெரிய யுத்தம் உண்டாகக் கடைசியில் ஜடாஸுரன் பீமனால் ஸம்ஹரிக்கப்பட்டான்.

வின 79.—இதன் பின்பு பாண்டவர்கள் எந்த ஸ்தலங்களுக்குச் சென்றார்கள்? பின்பு என்ன நடந்தது?

விடை.—நரநாராயணுள் ஆசிரமத்தைவிட்டு வடக்கே உள்ள கைலாஸம், மைனுகம் முதலிய மலேகளைப்பார்த்துக்கொண்டு மறுபடியும் கந்தமாதனம் வந்து அரிஷ்டஸேனர் என்ற ரிஷியின் ஆசிரமத்தில் வஸித்தார்கள். அங்கு சில சிறந்த புஷபங்கள் வர திரௌபதி பீமனே அவைகளைப்போன்ற புஷ்பங்களேக் கொண்டுவரும்படி ஏவினுள். உடனே பீமன் குபேரனது அரண்மனே அருகில் சென்று தனது சங்கத்தை ஊத அங்குக் காவலாய் இருந்த யக்ஷராக்ஷஸ கந்தர்வர்கள் சண்டைக்கு வந்தார்கள். அவர்கள் தோல்வி அடைந்தவுடன் மணிமான் என்ற குபேரனது ஸ்நேகிதனுகிய இராக்ஷஸாதிபதி யுத்தத்திற்குவர கோரயுத்தம் ஆரம்பித்தது. இதையறிந்த பாண்டவர்கள் ஆயுதபாணிகளாக திரௌபதியை அரிஷ்டஸேனரிடம் விட்டுவிட்டு பீமனுக்கு ஸஹாயமாக வந்தார்கள். இதில் மணிமான் இறந்தான். தருமபுத்திரர் சண்டையை நிறுத்திவிடும்படி சொல்லிக்கொண்டிருக்கையில் குபேரனுக்கு யுத்தத்தில் அனேகம் பேர் மாண்டுபோனது தெரியவர அதிக கோபத்தோடு தனது இரதத்திலேற்றிக்கொண்டு வந்தான். பாண்டவர்களேக் கண்டதும் அவனுக்குக் கோபந்தணிய பீமனேப் புகழ்ந்து பேசினுன்.

வினு 80.—இவ்வளவு கஷ்டம் வந்தும் தன் கோபத்தைப்பாராட்டாது இருந்ததற்கு குபேரன் என்ன காரணம் சொன்னுன்? கடைசியில் அவன் என்ன சொன்னுன்?

விடை.—'ஒருகாலத்தில் குசாவதியில் ஒரு தேவ ஸபை கூடியது. அதற்கு எனது இராக்ஷஸர் முதலிய பரிவாரங்களோடு நான் போனேன். வழியில் யமுனேக்கரையில் அகஸ்தியர் தபஸு செய்துகொண்டிருந்தார். அப்பொழுது என்னுடன் ஆகாயத்தில் வந்து கொண்டிருந்த இராக்ஷஸாதிபதியாகிய மணிமான் என்ற என் ஸ்நேகிதன் அகஸ்தியர்மேல் உமிழ்ந்தான். உடனே அகஸ்தியர் மிகுந்தகோபத்தோடு மணிமானுக்கு மனிதனுல் சாவுவரட்டும் என்றும், இவ்வாறு மணிமானது பரிவாரங்கள் இறப்பதைக்கண்டதும் என் பாபம் நீங்கும் என்றும், மணிமான் முதலிய இராக்ஷஸர்களது ஸந்ததிகளே இச்சாபம் தொடராது என்றும் எடுத்துரைத்தார்' என்று குபேரன் சொன்னுன். கடைசியில் பீமன் செய்தது மாத்திரம் அநியாயம் என்றும் அதற்காகத் தருமபுத்திரர்

பீமனைக் கண்டிக்கவேண்டும் என்றும் அவன் சொல்லி முடித்தான்.

வினா 81.—இவ்வாறு பாண்டவர்கள் ஸுகமாய் கந்தமாதன பர்வதத்தில் வஸித்துக்கொண்டிருக்கையில் யார் வந்து சேர்ந்தார்கள்? பின் என்ன நடந்தது?

விடை.—மாதலியால் நடத்தப்பட்ட இந்திரனது இரதத்தில் அர்ச்சுனன் இந்திரலோகத்திலிருந்து பாண்டவரிடம் வந்து சேர்ந்தான். எல்லாருக்கும் தகுந்தபடி மரியாதைகள் செய்தபின்பு, தான் பரமசிவன் முதலிய தேவர்களிடமிருந்து அஸ்திர விசேஷங்களைப் பெற்றுக்கொண்ட மாதிரியை எடுத்துச் சொன்னான்.

வினா 82.—இவ்வாறு அர்ச்சுனன் சொல்லி முடித்ததும் பாண்டவர்களிடம் யார் வந்து என்ன சொன்னார்கள்? அதன்மேல் என்ன நடந்தது?

விடை.—இந்திரன் தனது இரதத்தில் ஏறிக்கொண்டு வந்து தன் லோகத்தில் அர்ச்சுனனால் நடத்தப்பட்ட திவ்யகாரியங்களை ஒருவாறு சுறுக்கிச் சொல்லிவிட்டுத் தனது லோகம் சென்றான். பின்பு தருமபுத்திரர் அர்ச்சுனனிடமிருந்து நிவாதகவச காலகேயாளோடு அவன் செய்த யுத்தத்தை விஸ்தாரமாகத் தெரிந்துகொண்டார். அதன் பின்பு அர்ச்சுனன் தான் தேவதைகளிடமிருந்து பெற்ற அஸ்திரங்களை எல்லாருக்கும் காண்பித்து, அவைகளை உபயோகிக்கும் விதம் தேவர்களிடம் இருந்து தான் அறிந்தபடி அவர்களுக்கு எடுத்துரைத்தான்.

வினா 83.—அர்ச்சுனன் இவ்வாறு வந்து சேர்ந்தபின்பு பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—நான்கு வருஷம் அர்ச்சுனனோடு பாண்டவர்கள் குபேரனது உத்தியான வனங்களில் கிரீடித்துக்கொண்டு வந்தார்கள். இதன் பின்பு பாண்டவர்கள் கந்தமாதன பர்வதத்தை விட்டுக் கீழே இறங்க யத்தனிக்கையில் லோமசர் அவர்களுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லிவிட்டு ஸ்வர்க்கத்தை நோக்கிச்சென்றனர். வருகிற வழியில் அனேக இடங்களைத் தரிசித்துக்கொண்டு பாண்டவர்கள் யமுனாநதிக் கரையில் உள்ள ஒரு மலையருகில் வந்து சேர்ந்தார்கள்.

வினு 84.—அங்கு என்ன விசேஷம் நடந்தது? அது எவ்வாறு முடிந்தது?

விடை.—அங்கு பீமன் காட்டுவழியாய் விளையாடிக்கொண்டு வெகு உல்லாஸமாய் வருகையில் ஒரு பெரிய மலைப்பாம்பைக்கண்டு அதைப்பிடிக்க அருகே போனுன். அப்பொழுது அந்தப் பாம்பிற்கு முன்னமே இருந்த அனுக்கிரஹப்படி, இவன் அதன் சுற்றில் அகப்பட்டு உடனே மூர்ச்சைபோய் தனது பலம் முழுவதையும் இழந்துவிட்டான்.

வினு 85.—இந்தப் பாம்பு யார்? இவர் ஏன் பாம்பானூர்? யார் இவருக்கு இவ்வாறு அநுக்கிரஹித்தது?

விடை.—இந்தப்பாம்புதான் பாண்டவரது மூதாதைகளுள் ஒருவராகிய நகுஷராஜா. இவர் 100-அசுவமேதயாகம் செய்து இந்திர பதவிக்குத் தகுந்தவராக இவருக்கு இந்திரப்பட்டம் கிடைத்தது. அங்குச்சென்றும் இவருக்குக்காமம் தீராதிருந்ததால் உடனே இந்திராணியைப் பெண்டாளவேண்டும் என்ற கெட்ட எண்ணம்வர, வழக்கப்படி ஸப்தரிஷிகள் சிவிகை தூக்க நகுஷன் இந்திராணி வீடுநோக்கிச் சென்றுன். போகும்பொழுது அவன் 'ஸர்ப்ப ஸர்ப்ப' (வேகமாய்ப் போகட்டும்) என்று ஸப்தரிஷிகளை மதியாது அதட்ட, அவர்களுள் அகஸ்தியருக்குக் கோபம் வந்தது. அவர் 'நீ மலைப்பாம்பாய்ப் போகக்கடவாய்' என்று சபித்தார், அப்பொழுது நகுஷன் அகஸ்தியருக்குத் தயவு வரும்படியாய் நடந்து கொண்டபடியால் அவர், நீ இந்த மலைப்பாம்புருவில் எதைப் பிடித்த போதிலும் அதற்கு உள்ள பலம் எல்லாம் போய்விடட்டும். கடைசியில் ஒரு மஹானிடமிருந்து ஆத்மஞான விஷயங்களை நீ அறிந்து சாபத்தினின்றும் நீங்குவாய்' என்று அனுக்கிரஹித்தார்.

வினு 86.—இவ்வாறு பலமிழந்து தத்தளிக்கும் பீமனை யார், எவ்வாறு விடுவித்தது? பாம்பின் கதி என்னவாயிற்று?

விடை.—இவ்வாறு கஷ்டப்படும் பீமனை தருமபுத்திரர் தாம் தேடிக்கொண்டுவரும் வழியில் கண்டார். உடனே பாம்பை நோக்கிப் பீமனை விட்டுவிடவேண்டும் என்று கேட்க அது ஆத்மஞான விஷயமாய் அனேகம் கேள்விகள் கேட்டது. அப்பொழுது தருமபுத்திரர் எல்லாவற்றிற்கும் தகுந்த

விடைகொடுக்க உடனே பாம்பு பீமனை விட்டுவிட்டு நகுஷ ரூபந்தரித்து ஸ்வர்க்க லோகம் சென்றது.

வி 87.—நகுஷனாகிய மலைப்பாம்பு தருமபுத்திரரைக் கேட்ட முக்கிய கேள்விகளும் அதற்கு அவர் கொடுத்த விடைகளும் என்ன? அதன் பின்பு என்ன நடந்தது?

விடை.—பிராமணன் யார்? ஸத்யம், தர்மம், தயை, தபஸ், முதலிய நற்குணங்கள் வாய்ந்தவன் சூத்திரனாகிலும், அவனே பிராமணன். நாம் அவசியம் அறியவேண்டியதென்ன? ஸுக துக்க ரகிதமாய், தம்மை அடைந்தவருக்கு துக்க நிவர்த்தி செய்யும் தன்மை வாய்ந்த பரம்பொருளே நாம் அவசியம் அறியவேண்டிய வஸ்து. இதன் பின்பு தருமபுத்திரர் நகுஷனை அநேக கேள்விகள் கேட்டு தனக்கிருந்த ஸந்தேகங்களை நிவர்த்தி செய்துகொண்டார். இதன்பின்பு பாண்டவர்கள் துவைத வனத்தை அடைந்து அங்கு சிலகாலம் வஸித்துக் கடைசியில் காம்யகவனத்தில் பிரவேசித்தார்கள்.

வி 88.—அங்கு யார் பாண்டவர்களைப்பார்க்க வந்தது? அப்பொழுது என்ன விசேஷம் நடந்தது?

விடை.—கிருஷ்ணபகவான் தமது பட்டஸ்திரீகள், ஸுபத்திரை, அபிமன்யு ஆகிய இவர்களோடு பாண்டவர்களைப்பார்க்க வந்தார். அதன்பின்பு மார்க்கண்டேய மஹாமுனியும் அங்கு தற்செயலாய் வந்து சேர அவரை அரிய விஷயங்களைப்பற்றிப் பேசும்படியாக யாவரும் வேண்டிக்கொண்டார்கள்.

வி 89.—மார்க்கண்டேயர் முதலில் எவ்வெவ்விஷயங்களைப் பற்றிச் சுருக்கமாய் எடுத்துரைத்தார்?

விடை.—ஸுகம் மனிதனது புத்தியை மயக்கி உண்மை அதில் படாதவண்ணம் செய்யும் தன்மை உடையது, துக்கமோ அவ்வாறின்றி மனிதனது அஞ்ஞானம், துரபிமானம் முதலிய கெட்டகுணங்களை வேரோடு அறுத்து மனத்தை சுத்தி செய்யும் தன்மையை யுடையது. உள்ளத்துறவுடையவர்களுக்கு அஸாத்தியமானது ஒன்று மில்லை, வைவஸ்வத மனுவின் சரித்திரம், யுகங்களின் ஸ்வபாவங்கள், யுகப்பிரளயம், அதில் தாம் வடபத்திரசாயியான பகவானது வயிற்றில் 14 லோகங்களையும் கண்ட அற்புதக்காட்சி, அப்பொழுது பகவான் தமது ஸ்வரூபத்தை வெளியிட்ட வைபவம், கலி

யுக தர்மம், அதன்பின் கிருத யுகம் வரும்விதம், இராஜதர்மம் ஆகிய இவ்விஷயங்களைப்பற்றி மார்க்கண்டேய மஹாமுனி விஸ்தாரமாய்த் தருமபுத்திரருக்கு எடுத்துரைத்தார்.

வினு 90.—இதன் பின்பு எந்த அரிய விஷயத்தைப்பற்றி மார்க்கண்டேயர் எவ்வாறு பேசினூர்?

விடை.—உள்ளபடி தானம் செய்தல் எவ்வாறிருக்கவேண்டும் என்பதை, நாரதருக்கும் யயாதியின் பேரர்களாகிய **அஷ்டகர்** முதலியவருக்கும் நடந்தஸம்வாதமூலமாய் நன்குவிளக்கினூர்.

வினு 91.—எந்த ஸந்தர்ப்பத்தில் நாரதருக்கும் யயாதி பேரர்களுக்கும் ஸம்வாதம் ஏற்பட்டது?

விடை.—விசுவாமித்திர வம்சத்தில் பிறந்த யயாதி பேரனுகிய அஷ்டகன் ஒரு அசுவமேதயாகம் செய்தான். அதைப்பார்க்க யயாதியின் மற்றப்பேரப்பிள்ளைகளாகிய பிரதர்த்தனன், வஸுமனஸ், சிபி என்பவர்கள் வந்திருந்தார்கள். யாகத்தின் முடிவில் நால்வரும் ஒரு இரதத்தில் ஏறிக்கொண்டு போகையில் எதிரே நாரதர் வரக்கண்டு அவரையும் தமது இரதத்தில் ஏற்றிக்கொண்டார்கள். இக்காலத்தில்தான் நாரதருக்கும், இவர்களுக்கும் ஸம்வாதம் உண்டாயிற்று.

வினு 92.—'நாங்கள் நால்வரும் புண்ணிய விசேஷத்தால் ஸ்வர்க்கமடையப்போகிறோம். யார் எங்களுள் புண்யம் குறைந்து முதலில் பூமியில் விழப்போகிறூர்கள்?' என்று கேட்ட யயாதி பேரனுக்கு நாரதர் என்ன மறுமொழி சொன்னூர்? இதனுல் நாம் என்ன தெரிந்துகொள்ள வேண்டியது?

விடை.—'அஷ்டகன் முதலில் விழுவான். ஏனெனில், இவன் ஒரு காலத்தில் என்னை ஊருக்கு வெளியில் இரதத்தில் ஏற்றிக்கொண்டு போகையில் நான் அனேகவர்ணபேதங்களையுடைய பசுக்களைக் கண்டேன். அப்பொழுது இவன், இவைகள் தான் தானங்கொடுத்த பசுக்கள் என்று பெருமை பாராட்டினூன். ஆகையால் இவன் முதலில் ஸ்வர்க்கத்திலிருந்து விழுவான்' என்றூர். இதனுல், நாம் தானம்செய்யுங்கால் அதைப்பற்றிக் கர்வமடையாதிருக்கவேண்டும் என்பது விளங்கும்.

வினு 93.—'மீதி இருக்கும் மூவரில் எவன் முதலில் கீழே விழுவான்' என்ற பேரனுக்கு நாரதர் என்ன மறுமொழி சொன்னூர்? இதனுல் நாம் என்ன தெரிந்துகொள்ள வேண்டியது?

விடை.—'பிரதர்தனன் முதலில் விழுவான். ஏனெனில் இவன் வீட்டில் நான் சிலநாள் வஸித்துக்கொண்டிருக்கையில் நாங்களிருவரும் ஒருநாள் இரதத்தில் ஏறிக்கொண்டு வெளியே புறப்பட்டோம். போகும்வழியில் ஒரு பிராமணன் வந்து அரசன் ஒரு குதிரை வேண்டும், என்று யாசித்தான். அரசன் அரண்மனைக்குப்போனதும் குதிரையைத் தருவதாகச் சொல்லிப்பார்த்தான். பிராமணன் கேளாது தனக்கு அப்பொழுதே ஒரு குதிரை அவசியம் வேண்டுமென்று கேட்க, தேரில் கட்டியிருந்த ஒரு குதிரையை அவிழ்த்துக் கொடுத்தான். இதே மாதிரியாக வேறு மூன்று பிராமணர்கள் வர, அவர்களும் பிடிவாதமாய் இருந்தது கண்டு ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு குதிரையைக் கொடுத்துவிட்டு அவன் தானே இரதத்தை இழுக்கத்தொடங்கினான். இழுக்கும்பொழுது "பிராமணர்கள் கேட்கத்தகுந்த வஸ்து இனி என்னிடம் ஒன்றுமில்லை" என்று சொல்லி அரசன் தனது அசிரத்தையைக் காட்டினான். இதனால்தான் அவன் இரண்டாவதாகப் பூமியில் விழுவான்' என்று நாரதர் சொன்னார். எவ்வளவு சிறந்த தானத்தைச் செய்தபோதிலும் கொஞ்சம் அசிரத்தை இருக்குமாயின் அது கெட்டுப்போகும் என்பது இதனால் விளங்கும்.

வின 94.—'மீதி இருக்கும் இருவரில் எவன் முதலில் ஸ்வர்க்கத்திலிருந்து விழுவான்' என்று கேட்ட பேரனுக்கு நாரதர் என்ன பதில்சொன்னார்? இதனால் நாம் என்ன தெரிந்துகொள்ளவேண்டியது?

விடை.—'வஸுமனஸ் கீழே விழுவான். ஏனெனில், இவன் ஒரு காலத்தில் யாகம் செய்து ஒரு அழகிய இரதத்தை வரவழைத்தான். அதை நான் புகழ்ந்து பேசினேன். அப்பொழுது இவன், 'இது தங்களதே' என்றான். இவ்வாறு நான் வேறு மூன்று ஸமயங்களில் அந்த இரதத்தைப் புகழ்ந்து பேசியும், அரசன் 'இது தங்களதே' என்று வாய்வார்த்தையாய்ச் சொன்னானே ஒழிய இரதத்தை எனக்குக் கொடுக்கவில்லை. இதனால் தான் இவன் மூன்றாவதாக விழுவான்' என்று நாரதர் மறுமொழி சொன்னார். இதனால், யாசிப்போர் நோக்க மறிந்து செய்யாத தானம் பிரயோஜன மில்லை என்பது விளங்கும்.

வினு 95.—'நாரதர்' சிபி ஆகிய இருவருள் யார் முதலில் கீழே விழுவார்கள்?' என்று கேட்ட குபேரனுக்கு நாரதர் என்ன மறுமொழி சொன்னர்? இதனால் நாம் என்ன தெரிந்து கொள்ளவேண்டியது?

விடை.—"நான் முதலில் கீழே விழுவேன். சிபி ஸ்வர்க்கத்தில் நெடுங்காலம் வாழுவான். ஏனெனில், சிபி வீட்டிற்கு ஒரு நாள் ஒரு பிராம்மணன் போஜனம் வேண்டும் என்று வந்தான். சிபி தான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டதற்கு, பிரா மணன் 'உன் பிள்ளையைக்கொன்று கறி சமைத்து எனக்குச் சோறிட வேண்டு' மென்று கேட்டான். உடனே சிபி அவ் வாறே செய்து ஸாமான்களை எடுத்துக்கொண்டு அதிதியைத் தேடிப்புறப்பட்டான். போகும் வழியில் அந்த அதிதி அரண்மனையுட் புகுந்து தனது ஸொத்துக்கள் எல்லாவற்றை யும் கொளுத்தி நாசம் செய்வதாகச் சிபி கேள்விப்பட்டான். இப்படி செய்துகொண்டிருக்கும் பிராமணனிடம் சென்று கோ பங் கொள்ளாது சிபி 'சாப்பாடு தயாராய் இருக்கிறது' என்று மஹாவிநயத்துடன் சொல்ல, அவர் 'நீயே அதைப் புஜி' என, அரசன் மனங்கலங்காது அதைப் புஜிக்கத் தொடங்கினன். உடனே பிராம்மணர் அரசனது கையைப் பிடித்துக்கொண்டு அவனது பொறுமையைக் கொண்டாடி அவனை வெகு மரி யாதைசெய்து மறைந்தார். பிரம்மாவே அரசனது குணத் தைப் பரிசோதிக்க இவ்வுருக்கொண்டு வந்தது. இம்மாதிரிச் சிறந்த தானத்தைச் செய்ததால் சிபி நெடுங்காலம் ஸ்வர்க்கத் தில் வாழுவான்" என்று நாரதர் சொன்னர். இதனால், தானம் செய்யுங்கால் எவ்வளவு கஷ்டம் வந்தபோதிலும் மனங்கலங்காது பொறுமையோடு தைரியமாய்த் தானம் செய்தல்வேண்டும் என்பது விளங்கும்.

வினு 96.—இதன் பின்பு என்ன அரிய விஷயத்தைப்பற்றி மார்க் கண்டேயர் என்ன கதை சொன்னர்?

விடை.—'ஒவ்வொருவனும் அவனவனது தர்மத்தை ஒழுங்காய் நடத்தவேண்டியது. ஒருவனது தர்மம் தாழ்ந்ததாய் இருந்த தினல் அவனுக்கு ஒரு தாழ்வுமில்லை. அதை நன்ருய் நடத் தாமல் போனல்தான் அவனுக்குத் தாழ்வு. மேலான தனது தர்மத்தை அரைகுறையாய்ச் செய்பவனை விடத் தாழ்ந்த

தனது தர்மத்தை ஸரியாய்ச் செய்பவன் சிறந்தவன்' என்கிற விஷயத்தைபற்றி கௌசிக பிரம்மசாரி தர்மவியா தனிடம் உபதேசம் பெற்ற கதையைச் சொன்னார்.

வி௵ 97.—கௌசிகப் பிரம்மசாரி யார்? இவன் ஸ்வபாவம் என்ன? அது எவ்வாறு வெளிவந்தது?

விடை.—அவன் காட்டில் சென்று ஹடயோகாதிகள் பழகிக்கொண்டு தவம்செய்து வந்த ஒரு பிரம்மசாரி; அவன் மகா கோபமும் கர்வமும் நிறைந்தவன். அவன் ஒருநாள் மரத்தடியில் யோகாப்பியாஸம் செய்துகொண்டு இருக்கையில் அவனுக்கு நேர மேலே இருந்த கொக்கு ஒன்று அவன் தலையில் எச்சமிட்டது. இதனால் அவனுக்கு அடங்காக் கோபம் உண்டாக அந்த கொக்கைக் கண்விழித்து அண்ணாந்து பார்த்தான். உடனே கொக்கு சாம்பலாய் விழுந்தது. இதைக்கண்டதும் கௌசிகப் பிரம்மசாரிக்கு அநியாயமாய் ஒரு உயிர்ப் பிராணியைக் கொன்றுவிட்டோமே என்ற துக்கம் ஒரு பக்கமும், தனது தபஸ் இவ்வளவாவது பலித்ததே என்ற கர்வமொருபக்கமும் பாதிக்கத் தொடங்கின.

வி௵ 98.—இந்த கர்வம் எவ்வாறு வெளிவந்து எவ்வாறு பங்கமடைந்தது?

விடை.—இப்படிக் கொக்கை எரித்துவிட்டு மத்தியான்ன ஸமயத்தில் அருகிலிருந்த கிராமத்துள் பிக்ஷைக்குச்சென்று ஒரு வீட்டு வாசலில் 'பவதீ பிக்ஷாந்தேகி' (தாயே பிக்ஷையை யாசிக்கிறேன்) என்று சொல்லிக்கொண்டு நின்றான். அங்கு வெகு நாழிகை கௌசிகன் காத்திருக்கவேண்டி வந்தது. அதன் பின்பு அந்த வீட்டு எஜமானியம்மாள் இவனுக்கு பிக்ஷை கொண்டுவந்து போட்டாள். அவளை இவன் வெகு கோபமாய்க் கண்விழித்துப் பார்த்தான். அதற்கு அவள் 'என் கணவனே எனக்கு சிறந்த தெய்வம். அவர் பசியோடிடிருப்பதைக் கண்டு அவருக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்துவிட்டுப் பின்பு உமக்குப் பிக்ஷை கொண்டு வந்தேன். பிராமணர்களை நான் அவமதிப்பவள் என்று நீங்கள் எண்ணிவிடக்கூடாது. என்னை மன்னிக்கவேண்டு'மென்று நயமாய்ச்சொன்னாள். இப்படிச் சொல்லியும் கோபம் தணியாது கௌசிகன் மறுபடியும் அந்தப் பதிவிருதையை வெருட்டி நோக்கினான். அப்பொழுது அவள் 'நான் கொக்கல்ல அய்யா.

என்னை ஏன் இப்படி எரிப்பவர்போல் நோக்குகிறீர். எனக்கு உமது யோகமும் தெரியாது, உமது தபஸும் தெரியாது. நான் ஆராதிக்கும் தெய்வம் எனது கணவனே. இந்த ஆராதனையால்தான் நீர் காட்டில் செய்தகாரியம் எனக்குத் தெரியவந்தது. கோபம் சண்டாளம். இவ்வாறு இதை நீர் விட்டுவிடாது வைத்து வளர்ப்பீராகில் உமக்கு கேடுண்டாகிக் கடைசியில் உமது தபஸு யாவும் கெட்டுப்போகும்' என்று புத்திமதி கூறினுள்.

வினு 99.—இந்த புத்திமதியைக் கேட்டதும் கௌசிகன் ஸ்திதி என்னமாயிற்று? பதிவிருதை என்ன சொன்னுள்?

விடை.—கௌசிகனுக்கு தனது அறியாமை விளங்கியதும், வெட்கமுண்டாகித் தலைகுனிந்துவிட்டான். கேவலம் இந்தப் பதிவிருதைக்கு உள்ள ஞானதிருஷ்டியும், சாந்தமும், தான் தபஸ்வியாயினும் தனக்குக் கிடைக்கவில்லையே என்ற எண்ணம் அவன் மனதைப் பாதிக்கத்தொடங்கியது. உடனே மஹா விநயத்துடன் 'அம்மணீ, இன்னும் உனக்கு இந்த விஷயத்தில் தெரிந்தவைகளை நான் கேட்டு நல்லவழிக்கு வரும்படி வெளியிடு' என்று கௌசிகன் கேட்டான். பதிவிருதை 'ஐயா எனக்கு இவ்விஷயங்களைப்பற்றி அதிக மாய்த் தெரியாது. உமக்கு மேல்தெரியவேண்டுமானுல் மிதிலா நகரத்தில் தர்மவியாதன் என்ற ஒரு கசாப்புக்காரனிருக்கிருன், அவனை அடுத்துக்கேட்டால் அவன் உமக்குத் தகுந்தபடி விடைகொடுப்பான்' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் சென்றுள்.

வினு 100.—இதன் பின்பு கௌசிகன் என்ன செய்தான்? அங்கு என்ன விசித்திரத்தைக் கண்டான்?

விடை.—பதிவிருதா ஸ்திரீயினது மேன்மையை அறிந்த கௌசிகன் தர்மரகஸியங்களை நன்கு உணர மிதிலா நகரம் தர்மவியாதனிடம்போவதாக எண்ணித் தனது கர்வம் முதலியவைகளை அடக்கத் தீர்மானித்தான். அப்படியே இவன் மிதிலா நகரம் செல்ல அங்கு ஒரு கசாப்புக்கடையில் வியாதன் வியாபாரம் செய்துகொண்டிருப்பதை ஜனங்கள் மூலமாய்க் கேட்டறிந்து கௌசிகன் அங்குப்போய் ஒதுங்கி ஓரிடத்தில் நின்றுன். இதையறிந்த தர்ம வியாதன் தனது இடம்விட்டு

எழுந்து பிராம்மணனுக்குத் தகுந்த மரியாதைகள் செய்து விட்டு 'நீர் ஒரு பதிவிருதா ஸ்திரீயிடமிருந்து வருகிறவர். நீர் என்ன எண்ணத்தோடு இங்கு வந்திருக்கிறீர் என்பதும் எனக்குத் தெரியும்' என்று சொல்லிவிட்டு, அவரை ஒரு ஆஸனத்தில் உட்காருவித்தான். அதன் பின்பு தர்மவியாதன் தன் வேலையைப் பார்க்கப் புகுந்தான். பிராம்மணன் 'இந்த பாபத்தொழிலைச் செய்யும் வியாதனுக்கு இந்த ஞான திருஷ்டி எவ்வாறு வந்ததென்று வியந்துகொண்டிருந்தான்.

வின 101.—பின்பு தர்மவியாதன் எவ்வாறு என்ன விஷயங்களைக் கௌசிகனுக்கு உபதேசித்தான்?

விடை.—தன் வேலை முடிந்த பின்னர் பிராம்மணரை தன் வீட்டிற்கு அழைத்துப்போய் கௌசிகனுக்கு, ஸ்வதர்மாசரண ரகஸியம், தர்மம் ஸ்வரூபம் அதிஸூக்ஷ்மம், ஆகையால் தர்மா தர்ம விவேகம் வருதல் மிகக் கஷ்டம், மாம்ஸ பக்ஷணத்தின் உண்மையான நிலை, கர்மம், மறுபிறப்பு, தேவாஸுரஸம்பத், மனோநிரோதம், திரிகுண ஸ்வரூபம் ஆகிய அரிய விஷயங்களை எடுத்துச் சொன்னான். இதன் பின்பு தனது குலதர்மமாகிய கசாப்புத்தொழிலை ஸரியாய்ப்பார்ப்பதும், தனது தாய் தந்தையரைப் பேணுவமே தான் செய்யும் தபஸ். இதனால் தான் பதிவிரதை சொன்னதை அறியும்படியான சக்தி தனக்குவந்தது என்று வியாதன் சொல்லி தனது கிழவரான தாய்தந்தையரை கௌசிகனுக்குக் காட்டினான். இந்த உபதேசத்திற்கே ஆர்ண்ய பர்வத்தில் வியாதகீதை என்று பெயர்.

வின 102.—இந்த திவ்ய கதையைச் சொன்னதும் மார்க்கண்டேயர் மற்றெந்த திவ்ய கதையைச் சொன்னார்?

விடை.—ஸ்கந்தர் எவ்வாறு பரமசிவனிடம் உண்டாகி அக்கினியில் ஸம்பந்தப்பட்டு கங்கையில் முளைத்திருந்த சரவணத்தில் கிருத்திகா நக்ஷத்திரங்களால் வளர்ந்தார் என்றும், அவர் எவ்வாறு தேவஸேனாதிபதிபட்டம் பெற்று சூரபத்மா முதலிய அஸுர சிரேஷ்டர்களை ஸம்ஹரித்தார் என்றும், பின்பு அவருக்கு எவ்வாறு விவாஹம் நடந்தது என்றும் சொல்லி மார்க்கண்டேயர் கடைசியில் ஸ்கந்த ஸ்தோத்திரத்தை சொல்ல ஸகலரும் எழுந்து அது முடிந்ததும் தமது ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள்.

வினு 103.—இதன் பின்பு என்ன விசேஷம் நடந்தது? பின்பு பாண்டவர்கள் எங்குச் சென்றார்கள்?

விடை.—இவ்வாறு புருஷர்கள் எல்லாரும் ஸத்கதா சிரவணம் செய்து வருகையில் மஹா கர்வங்கொண்ட ஸத்தியபாமை திரௌபதியை நோக்கி 'அம்மா, நீ எவ்வாறு உனது ஐந்து புருஷர்களையும் திருப்திப்படுத்தி அவர்களை வசப்படுத்தி இருக்கிறாய்? என்னால் ஆனமட்டும் கிருஷ்ணனை வசப்படுத்தப் பார்த்தும் என்னால் முடியவில்லை. சில ஸமயங்களில் நான் வசப்படுத்திவிட்டேன் என்று எண்ணிக் கர்வப்பட்டால் அதற்குப் பங்கம் உடனே வந்துவிடுகிறதே!' என்று கேட்டாள். அதற்கு திரௌபதி பதிவ்ருதா ஸ்திரீகள் எவ்வாறு வீடு முதலியவைகளை மேல்ப்பார்வை பார்த்துக்கொண்டும், கணவன் யாருக்கிட்ட வேலையையும் தாமே செய்துகொண்டு வந்தால், அவர்களுக்கு புருஷர்கள் அனுகூலமாய் இருப்பார்கள் என்றும், மருந்து, மாயம், நகை போட்டுக்கொண்டு அழகுகாட்டி மயக்கல், கோபம், முதலிய அமார்க்கங்களால் கணவனை வசப்படுத்த எண்ணுதல் தீராத் துக்கத்திற்கு இடமாகும் என்றும், விஸ்தாரமாக ஸ்திரீ தர்மத்தை ஸத்தியபாமைக்கு எடுத்து வெளியிட்டுத் தனது மனோ தர்மத்தை ஸத்தியபாமா நன்றாய் அறியும்படி திரௌபதி காட்டினாள். இதன் பின்பு பாண்டவர்கள் காம்யகவனம் விட்டு துவைதவனம் சென்று அங்கு ஒரு ஏரிக்கரையில் வஸிக்கத் தொடங்கினார்கள்.

வினு 104.—இவர்கள் இருக்கும் நிலை திருதிராஷ்டிரனுக்கு எவ்வாறு தெரியவந்தது? அவன் என்னசெய்தான்?

விடை.—பாண்டவர்கள் துவைதவனத்தில் வஸிக்குங்கால் அவர்கள் காற்று, மழை, வெயில் முதலியவைகளில் அடிபட்டு மெலிந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இதை அங்கு வந்திருந்த சில பிராம்மணர்கள் அறிந்து தாம்போகும்வழியைத் திருதிராஷ்டிர ராஜனிடம் தெரிவித்தார்கள். அவன் இதைக்கேட்டு ஸபையில் மிகுந்த வருத்தமடைந்து பிரலாபித்தான்.

வினு 105.—இதைத் துரியோதனாதியர் கேட்டதும் என்ன செய்தார்கள்?

விடை.—பாண்டவர்களது நிலையைக் கேள்விப்பட்டதும் துரியோதனாதியருக்கு மிகுந்த ஸந்தோஷ முண்டாயிற்று. அவர்க

ளது துக்கத்தை அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு வர, எல்லாரும் அவ்வாறு செய்யத்தக்க உபாயத்தை ஆலோசித்தார்கள். கடைசியில் தாம் எல்லாரும் தமது பெண்சாதிகளோடு துவைத வனத்திலிருக்கும் ஏரிக்குப்போய் அங்கு ஜலக்கிரீடை முதலியவைகளைச் செய்து விலையுயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்து ஸுகமாயிருந்தால் அருகிலிருக்கும் பாண்டவர்களுக்குக் கஷ்டம் அதிகமாகும் என்றும், அங்குப்போவதற்கு அங்கு அப்பொழுது மேய்ந்துகொண்டிருக்கும் தமது பசுக்கூட்டங்களை மேல் பார்வையிடப் போகிறோம் என்ற வியாஜத்தை வைத்துக் கொண்டு புறப்பட்டால் அரசன் சீக்கிரத்தில் அனுமதிகொடுப்பான் என்றும் தீர்மானித்தார்கள். இதன்படி அரசனிடம் விடைபெற்று யாவரும் துவைத வனம் வந்து ஸுகிக்கத் தொடங்கினார்கள்.

வினா 106.—கெட்ட எண்ணத்தோடு வனம் வந்த துரியோதனாதியருக்கு யாது காரணத்தால் என்ன கேடு விளைந்தது?

விடை.—இவர்கள் பசுக்கூட்டங்களை நன்றாய்ப்பார்த்து ஆனந்தித்துவிட்டு, பாண்டவர்கள் தங்கி இருக்கும் ஏரிக்கரையண்டை வந்து ஜலக்கிரீடை முதலியவைகள் செய்து காலங்கழித்துப் பாண்டவர்களது துக்கத்தை அதிகப்படுத்தவேண்டுமென்கிற எண்ணத்துடன் வர, அங்கு இவர்களுக்கு முன்னமேயே குபேர பட்டணத்திலிருந்து சித்திரசேனன் என்ற ஒரு கந்தர்வராஜன் ஜலக்கிரீடைக்காக வந்திருந்தான். இதனால் கந்தர்வர்களுக்கும் துரியோதனாதியருக்கும் யுத்தம்நேரிட, அதில் கந்தர்வர்கள் துரியோதனாதியர்களை தோல்வியடையும்படி செய்து அவர்களோடு வந்த பெண்களையும் ஒழுங்கின்றிப் பரபுருஷர்களோடு வரிந்துகட்டி, அவர்கள் எல்லாரையும் சிறைபிடித்துக்கொண்டு போனார்கள்.

வினா 107.—இவர்களை யார் இந்நிலையிலிருந்து எவ்வாறு காப்பாற்றியது? பின்பு இவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—இவ்வாறு முக்கியமானவர்களை சித்திரஸேனன் சிறைப்படுத்திக்கொண்டு போனதும், துரியோதனாதியரது ஸேவகர்கள் அருகிலிருந்த தருமபுத்திரரிடம் வந்து முறையிட, அவர் கருணாநிதியாகையால் துரியோதனாதியரைச் சிறைமீட்டு

அழைத்துவரும்படி பீமார்ச்சுனர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் முதலில் துரியோதனுதியருக்கு ஸகாயம் செய்ய இசையாததுகண்டு தருமபுத்திரர் 'நம்முள் சண்டை வருமாயின் நாம் ஐந்துபேரும் 100-பேர்களுமாகப் பிரியலாம், வெளியிலிருந்து ஒருவன் நம்மோடு சண்டைக்கு வருவானுயின் நாம் 105 - பேர்களாகத்தான் இருக்கவேண்டு' மென்று புத்திமதி கூறினுர். உடனே பீமார்ச்சுனர்கள் சீக்கிரத்தில் சென்று கந்தர்வர்களோடு சண்டையிட்டு துரியோதனுதியரை விடுவித்து, தருமபுத்திரர் முன்பு கொண்டுவந்து நிறுத்தினுர்கள். அவர்கள் வெட்கத்தால் தலைகுனிந்தவராய் தருமபுத்திரரது நயவாக்கியங்களைக் கேட்டுக்கொண்டு மிகுந்த துக்கத்தோடும் அவமானத்தோடும் ஹஸ்தினுபுரியை அடைந்தனர்.

வினு 108.—ஹஸ்தினுபுரம் சென்றதும் துரியோதனன் நிலை என்னமாய் இருந்தது? அதை எவ்வாறு அவனது ஸ்நேகிதர்கள் மாற்றத் தலைப்பட்டார்கள்?

விடை.—துரியோதனனுக்கு அடங்காத் துக்கம்வர, அவன் சாப்பிடாது ஆகாரமின்றி இறப்பதாகத் தீர்மானித்து வெகு துக்கத்தோடு ஓர் இடத்தில் உட்கார்ந்தான். உடனே கர்ணன், தான் ஸகல இராஜாக்களையும் ஜயித்து வருவதாகவும் அதன் பின்பு அவனுக்கு இராஜஸூய யாகத்தை நடத்திவைப்பதாகவும் சொல்லி, திக்கு விஜயத்திற்குப் புறப்பட்டு ஸகல இராஜாக்களையும் வென்று, கர்ணன் துரியோதனனிடம் திரும்பி வந்தான். இந்த வேலைகளாலும் இராஜஸூய யாகம் செய்யப் போகிறோம் என்ற எண்ணத்தாலும், துரியோதனன் ஒருவாறு தனது துக்கத்தை மறந்திருந்தான்.

வினு 109.—இராஜஸூய யஜ்ஞம் நடந்ததா இல்லையா? வேறு என்ன நடந்தது?

விடை.—துரியோதனன் பிராமணர்களைக் கூப்பிட்டு யோஜிக்குங்கால் அவர்கள், தகப்பனுராவது, தமையனுராவது இருக்கிற அரசர்கள் அதைச் செய்யக்கூடாதென்று சொல்லி அதற்கு ஸமானமாகிய வைஷ்ணவ யாகம் ஒன்றைச்செய்யும்படி சொல்ல, இந்த யாகம் தான் நடந்தது. இதற்கு துரியோதனன் பாண்டவர்களை அழைக்கத் தூதனை அனுப்புவித்திருந்

தான்.* பாண்டவர்கள் தமது பிரதிக்கினையை காப்பாற்றுவதற்காக யாகத்திற்கு வரவில்லை. யாகம் நன்றாய் நடந்தது.

வி 110.—இதன் பின்பு பாண்டவர்கள் எங்குச் சென்றார்கள்? ஏன்?

விடை.—துவைத வனத்திலிருந்து பாண்டவர்கள் காம்யகவனத்திற்குப் போனார்கள். இதற்குக்காரணம் பின்வருமாறு: ஒரு நாள் தருமபுத்திரர் தூங்கிக்கொண்டிருக்கையில் துவைத வனத்து மான்களில் சில அவரது ஸ்வப்பனத்தில் வந்து தமது குடும்பம் குறுகிப்போய் விட்டதென்றும், அதற்காகத் தம்மை வேட்டை யாடாது வேறு காட்டிற்குப் பாண்டவர்கள் சென்றால் நலம் என்றும் பிரார்த்தித்தன. தருமபுத்திரர் எழுந்தவுடன் கூடிய சீக்கிரத்தில் காம்யகவனத்திற்குப் போகப் புறப்பட்டார்.

வி 111.—இங்கு யார் பாண்டவர்களைப் பார்க்க வந்து, எந்த அரிய விஷயத்தைப்பற்றி எவ்வாறு பேசினார்கள்?

விடை.—இராஜ்யமிழந்து 11-வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் தருமபுத்திரரை காம்யவனத்தில் வியாஸர் பார்க்க வந்தார். வந்தவர் தருமபுத்திரரைத் தேற்றுவதற்காகச் சுத்த மனதோடு தானம் செய்தால் சிறந்த பதவி கிடைக்குமென்ற விஷயத்தில், முத்கலரிஷி உஞ்ச விருத்தியிலிருந்த போதிலும் அதிதிகளை ஒழுங்காய் சுத்த மனதோடு பூஜித்து வந்தார் என்றும், அவரை தூர்வாஸ மஹரிஷி அநேகம் தரம் திடீரென்று அதிதியாக வந்து பரிசோதித்து அவரது சாந்த நிலையை வெளிப்படுத்தினார் என்றும், அவரை ஸ்வர்க்கம் அழைத்துப் போவதற்கு வந்த தேவதூதரிடமிருந்து ஸ்வர்க்க ஸுகங்கள், அங்கிருந்து புண்யம் குறைந்த காலத்தில் கீழே விழுதல், ஆகிய ஸ்வர்க்கத்தின் நிஜஸ்வரூபத்தை அறிந்து, அவர் அதை வேண்டாது மேலான மோக்ஷமாகிய பரமபதத்தை அடைந்தார் என்னும், கதையை விஸ்தாரமாக எடுத்துரைத்தார். அதன் பின்பு கூடிய சீக்கிரத்தில் இராஜ்யம் வந்து அவர்கள் ஸுகமடைவார்கள் என்று பாண்டவர்களைத் தேற்றிவிட்டு, வியாஸர் தமது இருப்பிடம் சென்றார்.

வி 112.—இதன் பின்பு என்ன காரியமாக யார் பாண்டவர்களைப் பார்க்கவந்தது? ஏன்?

விடை.—தூர்வாஸ மஹரிஷி தமது சிஷ்யக் கூட்டங்களோடு, திரௌபதி சாப்பிட்டுவிட்டு அக்ஷயபாத்திரத்தைக் கவிழ்த்த பின்பு, போஜனார்த்தம் பாண்டவர்களிடம் வந்துசேர்ந்தார். இவர் ஒருநாள் துரியோதனன் வீட்டிற்குப்போக, அங்குத் துரியோதனனைப் படுத்தாத பாடெல்லாம் படுத்தினார். துரியோதனன் பொறுமையோடு அவருக்கு மரியாதை செய்து வர அவர் திருப்தியடைந்து, துரியோதனனுக்கு வேண்டிய வரனைக் கொடுப்பதாகச் சொன்னார். துரியோதனனுக்குப் பாண்டவர்களை அழிக்கவேண்டும் என்ற எண்ணமிருந்ததால் முன் காட்டியபடி பாண்டவரிடம் அதிதியாகப் போகவேண்டும் என்று அவன் கேட்டுக்கொள்ள தூர்வாஸ மஹரிஷியும் அவ்வாறே செய்தார்.

வினு 113.—பாண்டவர்கள் எவ்வாறு அந்த அகாலவேளையில் இவர்களுக்கு போஜனமிட்டார்கள்?

விடை.—ரிஷியையும், சிஷ்யக் கூட்டங்களையும் கண்டதும் தருமபுத்திரர் அவர்களை அருகிலிருந்த நதியில் நீராடிவரும்படி அனுப்பிவிட்டார். திரௌபதிக்கு இவர்களுக்குச் சோறிடும் வகைதோன்றவில்லை. அப்பொழுது கிருஷ்ண பரமாத்மாவாகிய பரம்பொருளைத் தியானித்தாள். உடனே அவர் வெகு பசியோடு வருவதுபோல் அங்குவந்து, தமக்குப் புஜிக்க அன்னம் வேண்டுமென்று திரௌபதியைக் கேட்டார். சோறுண்டாக்கும் வகையறியாத திரௌபதி மனங்கலங்கித் தான் இருக்கும் கஷ்டஸ்திதியைச் சொல்ல, பகவான் அக்ஷய பாத்திரத்தை உடனே கொண்டுவரச்சொல்லி அதில் ஒரு கீரையும், சோறும் ஒட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு அவைகளை எடுத்துக் கொஞ்சம் ஜலத்தோடு சேர்த்து ஸர்வாந்தர்யாமியாகிய கடவுள் திருப்தியடையட்டு' மென்று சொல்லிக் கொண்டு குடித்துவிட்டார். உடனே ஆற்றில் நீராடி எழுந்திருக்கும் ரிஷியும், ரிஷி சிஷ்யர்களும், பூர்ண திருப்தியை அடைய, வயிறு நிறம்பி யிருந்ததால் நடந்து கரையேற முடியாது தத்தளித்தனர்.

வினு 114.—இந்த ரிஷி முதலியவர்களது கதி என்னமாயிற்று? பாண்டவர்கள் பின்பு என்ன செய்தார்கள்?

விடை.—இப்படித் திடீரென்று தமது வயிறு நிறம்பி இருப்பதைக் கண்ணுற்ற ரிஷிக்கு ' அநியாயமாய்த் தருமபுத்திரரைப் போஜ

னம் சித்தம் செய்யும்படி சொல்லி வந்துவிட்டோமே. இவர் நமக்காக எவ்வளவு நஷ்டத்தை யடையப்போகிறார்' என்று வருத்தமுற்று யோஜனை செய்தார். அதன் பின்பு தருமபுத்திரர் கிருஷ்ணபக்தர் என்ற ஞாபகம்வர, மிகவும் பயந்து தமது சிஷ்யர்களோடு ஓடிப்போய்விட்டார். ஆகையால் கிருஷ்ண பகவானது வேண்டுகோளின்படி இவர்களை அழைக்க வந்த ஸகாதேவன், இவர்களை எங்குதேடியும் காணாது திரும்பி வந்து தருமபுத்திரரிடம் ஸங்கதியைச் சொல்லிவிட்டான். பாண்டவர்கள் தூர்வாஸரால் கேடு வருமே என்ற பயம் நீங்கி ஸுகமாய் அங்கு வஸித்திருந்தார்கள்.

வினா 115.—இங்கு ஸுகமாய் வஸிக்குங்கால் இவர்களுக்கு என்ன ஆபத்து வந்தது?

விடை.—பாண்டவர்கள் ரிஷிகளது காவலில் திரௌபதியை வைத்துவிட்டு வேட்டையாடி பிராம்மணர்களுக்கு வேண்டிய ஆகாரங்களைத் தினம் கொண்டுவரப்போவது வழக்கம். அப்படிப் போயிருக்கும் ஒருநாளில் அங்குப் பாண்டவர்களது தங்கை துச்சலையின் புருஷனாகிய ஜயத்ரதன் என்ற ஸிந்துதேசாதிபதி வர, தனியே யிருக்கும் திரௌபதியைக் கண்டு அவன் மோஹித்தான். தன்னை யின்றமட்டும் திரௌபதியைத் தன் பெண்சாதியாகும்படி கேட்டுக்கொண்ட போதிலும், அவள் இசையாதது, கண்டு அவளை ஜயத்ரதன் பலவந்தமாய் தனது இரதத்தில் ஏற்றி வைத்துக்கொண்டு தன் இராஜ்யத்தை நோக்கிச்சென்றான். இவனைத் தடுக்க முடியாமல் தௌம்யர் முதலிய பிராம்மணர்கள் தத்தளித்தார்கள்.

வினா 116.—திரௌபதியை யார் எவ்வாறு மீட்டுக்கொண்டு வந்தது? ஜயத்ரதன் கதி என்னமாயிற்று?

விடை.—பாண்டவர்கள் வந்ததும் தௌம்யர் முதலியவர்கள் நடந்த ஸங்கதியைச் சொல்ல, அவர்கள் உடனே ஜயத்ரதன் போனவழியை நோக்கிப்போனார்கள். அங்கு ஜயத்ரதன் திரௌபதியைக் கொண்டுபோவதைக்கண்டு, அவனைத் தோற்கடிக்க, அவன் ஓடத் தலைப்பட்டான். உடனே அவனைப் பீமன் சென்று பிடித்துவந்து மூர்ச்சை போகும்படி அடித்து, ஐந்து குடுமிவைத்துப் பாண்டவர்களது அடிமையென்று அவனைச் சொல்லும்படிசெய்து, தருமபுத்திரரது

காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கும்படி செய்தான். தருமபுத்திரர் சுத்த மனதோடு அவனை உடனே விடுவித்து 'இம்மாதிரி காரியம் இனிமேல் செய்யாதே' என்று புத்திமதி கூறி அனுப்பிவிட்டார்.

வினு 117.—அவமானப்பட்ட ஜயத்ரதன் என்ன செய்தான்?

விடை.—விடுபட்டதும் இவன் கங்கோத்தரை சென்று பரமசிவனைக் குறித்துத் தபஸு செய்தான். அவர் பிரத்யக்ஷமாகி 'என்னவரம் வேண்டு' மென்று கேட்க, இவன் 'எனக்குப் பாண்டவர்களை ஜயிக்கும் சக்தி வேண்டு' மென, பரமசிவன் அந்தச் சக்தி ஒருவனுக்கும் வராது என்றும், அவர்கள் பரம்பொருளாகி லோகபாலனார்த்தம் அநேக திவ்ய அவதாரங்கள் செய்தருளிய கிருஷ்ணபகவானது அருள் பெற்றவர்கள் என்றும் எடுத்துக்காட்டி, 'உனக்கு அவர்களை ஒருநாள் தடுக்கும் சக்தி வரட்டும்' என்று அனுக்கிரஹித்துப்போனார். இதைப் பெற்றுக்கொண்டு இக்கொடியவன் தனது இராஜ்யத்தை அடைந்தான்.

வினு 118.—திரௌபதிக்கு வந்த ஆபத்தால் துக்கமடைந்திருந்த பாண்டவர்களை யார் எவ்வாறு தேற்றினார்?

விடை.—அப்பொழுது தருமபுத்திரரைப் பார்க்க மார்க்கண்டேய மஹாமுனி வர, அவரிடம் தமக்குவந்த ஆபத்தை எடுத்துரைத்து, வெகுவாகத் தருமபுத்திரர் துக்கித்தார். அவர் இராமர் ஸீதையை இழந்து, பட்டபாடுகள் அடங்கிய இராமாயணக் கதையைச் சுருக்கி சொல்லி, தருமபுத்திரரது துக்கத்தை மாற்றினார்.

வினு 119.—இராமாயண கதையின் சுருக்க மென்ன?

விடை.—ஸூரிய வம்சத்தரசராகிய தசரதர் செய்த புத்திர காமேஷ்டி மூலமாய் பரம்பொருள் இராம பரத லக்ஷ்மண சத்துருக்கினராய் அவதரித்ததும், இராம லக்ஷ்மணர்கள் விசுவாமித்திரர் பின்சென்று, வில்வித்தை கற்று, தாடகை முதலிய இராக்ஷஸ குலத்தவரைக் கொன்றதும், இராமர் சிவதனுசை ஒடித்து ஸீதையைக் கல்யாணம் செய்துகொண்டதும், பிதிர்வாக்கிய பரிபாலனத்திற்காக அவர் ஆரண்யம் சென்றதும், ஸகோதர வாஞ்சையோடு வந்த பரதனுக்கு அவர் தமது பாதுகைகளைக் கொடுத்ததும், பின்பு பஞ்ச

வடியில் இருக்குங்கால் அவர் மாயமாய் வந்த மானைப்பிடிக்கப் போய்ஸீதையை இழந்து பரிதபித்ததும், குற்றுயிராய் இருந்த ஜடாயுவிடமிருந்து அவர் ஸீதைபோன வழியை அறிந்து ஸுக்ரீவனோடு ஸ்நேகம் செய்து வாலியை மறைந்து பாணம் விட்டுக் கொன்றதும், பின்பு ஹனுமார் விஸ்தாரமான ஸமுத் திரத்தைத்தாண்டி ஸீதை இராவணனது அசோகவனத்தில் கஷ்டப்படுவதை அறிந்து வந்து ஸ்ரீராமரிடம் சொன்னதும், வானர ஸேனையோடு இராமர் ஸேதுக்கரை வந்ததும், இரா வணன் தம்பியாகிய விபீஷணர் என்கிற பகவத் பக்தர் இராம ரைச் சரணமடைந்ததும், நளன் என்ற வானரம் இராமரது ஏற்பாட்டின்பேரில் ஸேதுபந்தம் செய்ய வானரர்கள் இலங்கை சேர்ந்ததும், அங்கதன் இராவணனிடம் தூது சென்றதும், இராவண ஸேனையோடு வானரஸேனைகள் விசித்திர யுத்தம் செய்ததும், லக்ஷ்மணர் இந்திரஜித்தையும், இராமர் இராவண னையும் கொன்ற விசித்திரமும் ஸீதை தனது பரிசுத்த நிலை யைப் பலர் அறிய அக்கினிப் பிரவேசம் செய்ததும், யுத்தத்தி லிறந்த வானரர்கள் பிழைத்தெழுந்ததும், விபீஷணருக்கு இலங்கையைக் கொடுத்ததும், இராமர் அயோத்திக்குத் திரும்பிவந்து பட்டாபிஷேகம் செய்துகொண்டதுமே இராமா யண கதையின் சுருக்கம். (இக்கதையின் விஸ்தாரத்தை இராமா யண வினாவிடையில் காண்க.)

வினா 120.—இந்த இராமாயணத்தைச் சொல்லிய பின்னர் மார்க் கண்டேயர் எந்த விஷயத்தைக் குறித்து என்ன சொன்னார்?

விடை.—திரௌபதியைப் போன்ற கஷ்டகாலங்களிலும் தப்பி வந்து மேன்மை யடைந்த பதிவிருதைகள் யாரையாவது கேட்டதுண்டா என்று கேட்ட யுதிஷ்டிரருக்கு மார்க்கண் டேயர் ஸாவித்திரி தனது கணவனான ஸத்யவானை யமனிடம் இருந்து மீட்டுவந்து எவ்வாறு மேன்மை யடைந்தாள் என்ற விஷயத்தை விஸ்தாரமாய்ச் சொன்னார்.

வினா 121.—இந்த ஸாவித்திரி யார்? இவள் கல்யாண விஷயத் தில் என்ன தடை ஏற்பட்டது? அப்பொழுது இவள் என்ன செய்தாள்?

விடை.—மத்திர ஸேனாதிபதியாகிய அசுவபதி என்பவருக்கு இவள் ஸரஸ்வதியின் அனுக்கிரகத்தால் பிறந்த பெண். இவளுக்குப்

பருவம் வந்து தகுந்த நாயகன் அகப்படாததுகண்டு, அவளைச் சில பரிவாரங்களோடு நாயகனைத் தேடிவரும்படி அரசன் அனுப்பினான். இவள் போய்த் திரும்பி வந்ததும், அரசன் ஸபைக்கு நாரதர் வந்து ஸாவித்திரிக்கு தக்க நாயகன் யார் என்று விசாரித்தார். அப்பொழுது ஸாவித்திரி தான் காட்டில் இராஜ்யமுமிழந்து, கண்களுமிழந்து கஷ்டப்படும் துயமத்ஸேனர் என்ற ஓர் அரசனிருக்கிறார் என்றும், அவரது புத்திராகிய ஸத்தியவானே தனக்குத் தகுந்த நாயகன் என்றும் மறுமொழி கூறினாள். நாரதர் 'ஸத்யவானுக்கு காலம் சீக்கிரத்தில் முடியப்போகிறது ஆகையால் வேறு நாயகனைத் தேடிக்கொள்' என்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தும் ஸாவித்திரி மனம் மாறவில்லை. இதைக் கண்டு நாரதர் ஸாவித்திரியின் மன உறுதியை மெச்சிக்கொண்டு விவாஹத்திற்கு உத்திரவு கொடுத்து மறைந்தார். உடனே கூடிய சீக்கிரத்தில் விவாஹமும் நடந்தேறியது.

வினு 122.—ஸத்தியவானுக்கு முடிவுகாலம் எவ்வாறு வந்தது? ஸாவித்திரி இதற்கு என்ன ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தாள்?

விடை.—கல்யாணம் முடிந்ததும் ஸாவித்திரியும் ஸத்யவானும் கொஞ்சகாலம் ஸுகித்து வருகையில் ஸத்தியவானது முடிவு நாள் வந்து விட்டது. அதற்குமுன் நான்கு நாள் முதல் கொண்டே, ஸாவித்திரி பட்டினி இருந்து மஹாசுத்தையாய் இருந்தாள். அந்த முடிவுநாள் இரவு தனது விருதத்தை முடிப்பதாக இவள் எல்லாரிடத்தும் சொல்லி யிருந்தாள். அன்றுமாலை ஸத்யவான் வழக்கம் போலவே கைக்கோடரியை எடுத்துக்கொண்டு ஸமித்து வெட்டக் காட்டிற்குப் புறப்பட்டான். ஸாவித்திரியும் தனது புருஷன், மாமனார், மாமியார் முதலியவர்களிடம் விடைபெற்று, ஸத்யவானோடு அன்று காட்டிற்குப் போனாள். காட்டிற்சென்று வெகு நாழிகை வேலைசெய்த பின்னர் ஸத்யவானுக்கு ஒரு மாதிரியான தலைவலி வர, அவன் வந்து ஸாவித்திரியின் மடியில் தலைவைத்துப் படுத்துக்கொண்டான். கொஞ்ச நாழிகைக் கெல்லாம் ஒரு கறுத்த மேனியையும், சிவந்த கண்ணையும், கையில் பாசக்கயிற்றையும் உடையவனாக ஒரு புருஷன்

ஸாவித்திரி கண்ணில் பட, அவள் எழுந்து அவனுக்கு வந்தனம்செய்து நின்ருள். வந்தவன் தான் யமன் என்று சொல்லி ஸத்தியவானது உயிரைக் கவர்ந்துகொண்டு ஸாவித்திரிக்குத் தேறுதல்சொல்லித் திரும்பிப்போகச் சொல்லிவிட்டு தான் யமபட்டணம் நோக்கிப் புறப்பட்டான்.

வி௵ 123.—இவ்வாறு தனது கணவனது உயிரைக் கவர்ந்து சென்ற யமன் செல்ல ஸாவித்திரி என்ன செய்தாள்? இவள் பிரயத்தனம் எவ்வாறு முடிவு பெற்றது?

விடை.—ஸாவித்திரி யமனை விடாது தொடர்ந்து செல்ல, அவளது பாதிவிருத்தியத்திற்கு மகிழ்ந்து கணவனது உயிரைத் தவிர வேறு எதையும் கேட்டுக்கொள்ள யமன் அனுமதிகொடுத்தான். உடனே அவள் வரிசையாய் தன்மாமனுர் குருட்டுத்தனம் நீங்கி இராஜ்யம் பெறவேண்டும் என்பதுபோன்ற ஸாதாரணமான வரங்களை முதலில் கேட்டாள். யமன் இவைகளை கொடுத்தபோதிலும், ஸாவித்திரி அவனைப் பின்னும் தொடர்ந்து சென்று தனது பிதாவுக்கு அனேகம் பிள்ளை உண்டாக வேண்டுமென்று கேட்டாள். தனக்குத் தன் கணவன் அருகிலிருக்கிறவரை கஷ்டம் தோன்ருது என்று சொல்லிக் கொண்டே யமனை விடாது பின்தொடர்ந்து, அவனைத் துதித்து, அரிய சாஸ்திர விஷயங்களை எடுத்துச்சொல்லிக் கடைசியில் தனக்கு அனேகம் பிள்ளைகள் உண்டாக வேண்டுமென்றும் ஸாவித்திரி கேட்க, யமன் தான் கொடுக்கும் வரத்தின் ஸ்வரூபத்தை அறியாது கொடுத்துவிட்டான். பின்பு ஸாவித்திரி ஸத்தியவானது உயிரை யாஜித்து, அதை யுக்திபூர்வகமாய்த் தர்க்கித்து யமனிடம் இருந்து பெற்றுக்கொண்டு ஸத்தியவான்தேகம் இருக்கும் இடம்வரவே, அவன் உயிர்த்து எழுந்தான். ஸத்தியவானைக் கூட்டிக்கொண்டு வெகு மெதுவாய் ஸாவித்திரி தன் ஆசிரமம் வந்து சேர்ந்தாள்.

வி௵ 124.—ஆசிரமம் வந்ததும் அவள் அங்கு என்ன விநோதத்தைக் கண்டாள்? எல்லாரும் என்ன செய்தார்கள்?

விடை.—இவள் வந்ததும் மாமனுருக்குக் கண்தெரிவதைக்கண்டாள் அங்குள்ள ரிஷிகள் இந்த விசித்திரங்களுக்கு என்ன காரணம் என்று ஸாவித்திரியைக் கேட்க அவள் நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் சொன்னுள். இந்த ஸ்திரீ தனது நாயகன்

மாமனார், தகப்பனார் ஆகிய இவர்களுக்கு ஏககாலத்தில் செய்த உபகாரத்தைக்கண்டு ஸகல ரிஷிகளும் அவளை வியந்து பேசினர்.

வினு 125.—இவ்விரு கதையையும் சொல்லி முடித்த பின்பு மார்க்கண்டேயர் எவ்வாறு பாண்டவர்களைத் தேற்றினார்?

விடை.—இராமருக்கு ஆபத்து வந்து அது எவ்வாறு மங்களமாய் முடிவுபெற்றதோ அதுபோலப் பாண்டவர்களுக்கு வந்த ஆபத்து அவர்களுக்கு நன்மையாகவே முடியும் என்றும், திரௌபதியைப் போன்ற பதிவிரதா சிரோமணிகளது மேன்மை (ஸீதையின் மேன்மைபோல்) எந்நாளும் மாறாதிருக்கும் என்றும், அவர்கள் தமது நாயகன் முதலிய தம்மைச் சேர்ந்தவர்களுக்கு ஸாவித்திரியைப்போல் நன்மை புரிவார்கள் என்றும் சொல்லிப் பாண்டவர்களை மார்க்கண்டேயர் தேற்றினார்.

வினு 126.—இவ்வாறு காம்யகவனத்தில் வஸிக்கையில் தருமபுத்திரர் மனதில் என்ன கஷ்டம் உண்டாயிற்று? இதை யார் எவ்வாறு நிவர்த்தி செய்ய ஒப்புக்கொண்டது?

விடை.—கர்ணன் அர்ச்சுனனைக் கொன்றுவிடுவானே என்ற பயம் அடிமுதல் தருமபுத்திரர் மனதில் இருந்தது. இதையறிந்து இந்திரன் தனது பிள்ளையாகிய அர்ச்சுனனைக் காப்பாற்றுவதற்காக கர்ணனிடம், அவனோடு பிறந்த கவசம், கர்ணகுண்டலம் ஆகிய இவைகளை, யாசித்துப் பெற்றுக்கொள்வதாகத் தீர்மானித்தான்.

வினு 127.—இவ்விஷயம் கர்ணனுக்குத் தெரியவந்ததா? எப்படி? கர்ணன் என்ன தீர்மானம் செய்தான்?

விடை.—கர்ணன் தகப்பனாராகிய ஸூர்ய பகவான் பிராமண உருக்கொண்டு கர்ணனுக்கு இந்திரனது தீர்மானத்தைத் தெரிவித்து அவன் உடன்பிறந்து அவனுக்குத் தோல்வி வராதிருக்கும்படி செய்யும், கவச கர்ணகுண்டலங்களை இந்திரனுக்குக் கொடுக்கக்கூடாது என்ற புத்திமதி கூறினார். கொடையில் சிறந்த கர்ணன் இதற்கு ஒப்பவில்லை. உடனே ஸூர்யன் 'நீ இந்திரனிடம் இருந்து சத்துருக்களைக் கொல்லும்படியான ஒரு சக்தி ஆயுதத்தை வாங்கிக்கொண்டு இவைகளைக்கொடு' என்று சொல்லி மறைய, கர்ணன் அவ்வாறு செய்வதாய்த் தீர்மானித்தான்.

வி 128.—இந்திரன் எவ்வாறு வந்து என்ன செய்தான்?

விடை.—இந்திரன் ஒரு கிழப்பிராமணன் உருக்கொண்டு கர்ணனிடம் வந்து கவசம், கர்ண குண்டலம் ஆகிய இவைகளைத் தனக்குத் தரவேண்டுமென்று கேட்டான். உடனே இவைகளால் தனக்கு உள்ள மேன்மைகளையும், இவைகளைக் கொடுத்துவிட்டால் தனக்கு உண்டாகும் தீங்குகளையும் எடுத்துக் கர்ணன் சொல்லி, இந்திரனைத் தனது தானத்திற்கு பதில் இரு பெரிய விரோதியைக் கொல்லத்தக்க ஒரு ஆயுதம் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். இந்திரன் அவ்வாறே ஒரு சிறந்த பகைவனை மாத்திரம் கொல்லத்தக்க இந்திர சக்தியை கர்ணனுக்குக் கொடுத்துவிட்டு கர்ணனது கவசத்தையும், குண்டலங்களையும் வாங்கிக்கொண்டான். இந்திரனது அனுக்கிரகத்தால் கர்ணன் இவைகளை இழந்தும் முன்போலவே விளங்கினன்.

வி 129.—முன் சொல்லியபடி திரௌபதிக்கு வந்த கஷ்டம் நிவர்த்தியானதும் பாண்டவர்கள் எங்குச் சென்றார்கள்? அங்கு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—பாண்டவர்கள் காம்யகவனம் விட்டு துவைதவனம் சென்றார்கள். அங்கு ஒரு ரிஷியின் நெருப்புண்டாக்கும் கருவியாகிய அரணிக்கட்டைகள் ஒரு மானின் கொம்புகளில் அகப்பட்டுக்கொள்ள அது அவைகளைக்கொண்டு ஓடிப்போய்விட்டது. ரிஷி வந்து இதைப் பாண்டவர்களிடம் சொல்ல அவர்கள் அந்த மான் போனவழியே வெகு விரைவாய்ச் சென்றார்கள். மான் சில காலம் கண்ணில் பட்டும் சில காலம் மறைந்தும் இவர்களை காட்டில் வெகுதூரம் அலைத்து இழுத்துப்போக, இவர்களுக்குத் தாகம் அதிகரித்துவிட்டது. உடனே நகுலன் ஒரு மரத்தில் ஏறிச் சுற்றுமுற்றும்பார்க்கத் தூரத்தில் ஒரு செழிப்பான சோலையைக்கண்டான். அங்கு இருக்கும் தண்ணீரைக் கொண்டு வருவதற்காக நகுலன் புறப்பட்டுச் சென்றான்.

வி 130.—அந்தச் சோலையில் பாண்டவர்களுக்கு என்ன ஆபத்து நேரிட்டது? ஏன்?

விடை.—போன நகுலன் அங்குத் தண்ணீர் இருப்பதைக்கண்டு குடிக்க யத்தனிக்க அக்குளத்தைக் காத்துவரும் கொக்குரூபமான யக்ஷன் ஒருவன் அசரீரிபோல் 'நான் கேட்கும் கேள்வி

களுக்குத் தகுந்த பதில் சொல்லிய பின்புதான் இந்தக் குளத்து நீரை நீ குடிக்கவாவது வெளியே எடுத்துப்போக வாவது செய்யலாம். அதற்கு முன் நீ யதைத் தொடாதே' என்று சொன்னுன். நகுலன் இதைக் கவனியாது தண்ணீரைக் குடிக்க, உடனே கரையில் வந்து இறந்து விழுந்தான். நகுலன் வராதது கண்டு தருமபுத்திரர் ஸகாதேவனை அனுப்ப அவனும் யக்ஷனது சொல்லைக் கவனியாது தண்ணீர் குடித்தமையால் கரையில் இறந்து விழுந்தான். இதுபோலவே அர்ச்சுனனும் பீமனும் முறையே அக்குளக்கரைக்குப்போய் இறந்து விழுந்தார்கள்.

வினு 131.—இவ்வாறு போன தம்பிமார் ஒருவரும் திரும்பி வராதது கண்டு யுதிஷ்டிரர் என்ன செய்தார்?

விடை.—இவர் மனங்கலங்கிக் குளக்கரைவர, அங்குத் தமது தம்பிகளிருக்கும் நிலையைக்கண்டார். முதலில் துக்கமேலிட்டதால் கொஞ்சம் பிரலாபித்துவிட்டு, இவர்கள் இறக்கக் காரணம் என்ன இருக்கலாம் என்றும் யோசித்தார். தண்ணீர் காரணமாயிருக்கும் என்று அவருக்குத் தோற்றவில்லை. அவர் உடனே தாமும் இறப்போம் என்று தண்ணீரில் விழுந்தார். அப்பொழுது வழக்கப்படி அசரீரி வாக்குண்டாகத் தருமபுத்திரர் கொக்காகிய யக்ஷனைக் கண்டார். அவன் அவரது தம்பிமார் தனது கேள்விக்குப்பதில் சொல்லாது தண்ணீரைக் குடித்ததால்தான் தானே அவர்களைக் கொன்றுவிட்டதாகச் சொன்னுன். இதைக்கேட்டதும் தருமபுத்திரர் யக்ஷனைக் கேள்விகளைக் கேட்கும்படி சொல்ல, அவன் கேட்ட கேள்விகள் எல்லாவற்றிற்கும் மனக்கலக்கமின்றி விடைகொடுத்தார்.

வினு 132.—யக்ஷன் கேட்ட சில கேள்விகளும் அதற்குத் தருமபுத்திரர் கொடுத்த விடைகளும் எவை?

யக்ஷன் :—எதனுல் ஒருவன் படித்தவனுகிறுன்?
தருமபுத்திரர் :—வேதங்களைப் படித்தலால்.

ய :—எதனுல் ஒருவன் மேன்மையை அடைகிறுன்?

த :—ஸந்நியாஸத்தால்.

ய :—எதனுல் ஒருவன் புத்திமானுகிறுன்?

த :—பெரியோர்க்குப் பணிவிடை செய்தலால்.

ய :—பிராமணர்களுக்கு என்ன கெட்டகுணம் இருக்கும்?

த :—பரநிந்தை.

ய :—வாயுவைவிட வேகமானது எது ?
த :—மனஸ்.
ய :—இறப்பவர்களுக்குத் தகுந்த ஸ்நேகிதர் யார் ?
த :—அவர்கள் செய்த தர்மமே.
ய :—மதங்களின் முடிவான பயன் என்ன ?
த :—மனோ விசாலம்.
ய :—கீர்த்தியைத் தாங்கி நிற்பவை எவை?
த :—தானமும் தர்மமும்.
ய :—ஸுகம் எதனால் உண்டாகும் ?
த :—நன்னடக்கையால்.
ய :—சிரேஷ்டமான தனம் யாது ?
த :—அறிவு.
ய :—சிரேஷ்டமான ஸுகம் யாது ?
த :—கிடைத்தவரையில் திருப்தி யடைவதே.
ய :—சிறந்த தர்மம் எது ?
த :—அஹிம்ஸை.
ய :—ஸுகம் கொடுக்கும் நிரோதம் யாது ?
த :—மனோ நிரோதம்.
ய :—ஒருநாளும் நீங்காத ஸங்கம் யாது ?
த :—ஸத்ஸங்கம்.
ய :—எதை விட்டால் நம்மை எல்லாரும் விரும்புவார்கள் ?
த :—கர்வத்தை.
ய :—எதை விட்டால் துக்க நிவர்த்தி ?
த :—கோபத்தை.
ய :—எதை விட்டால் ஒருவன் தனவானாவான் ?
த :—ஆசையை.
ய :—எதைவிட்டால் ஸுகமுண்டு ?
த :—பணத்தாசையை.
ய :—எதனால் ஸ்நேகிதர்கள் விரோதிகளாவார்கள் ?
த :—பணத்தாசையால்.
ய :—ஒருவன் எதன்படி நடக்கவேண்டும் ?
த :—சிஷ்டாசாரப்படி.
ய :—ஸந்யாஸத்தின் லக்ஷணம் என்ன ?
த :—ஸ்வதர்மாசரணம்.

ய :—மனோநிரோதத்தின் லக்ஷணம் என்ன ?

த :—அகக்கரண புறக்கரணத் தண்டம்.

ய :—திதிக்ஷையின் லக்ஷணம் என்ன ?

த :—விரோதிகளிடத்திலும் துவேஷ மின்மை.

ய :—வெட்கத்தின் லக்ஷணமென்ன ?

த :—கெட்டகாரியத்தை மறுபடியும் செய்யாமை.

ய :—அறிவு என்றால் என்ன ?

த :—பரம்பொருளை அறிதல்.

ய :—சாந்தம் என்றால் என்ன ?

த :—சித்த ஸமாதானம்.

ய :—தயை என்றால் என்ன ?

த :—பிராணிகளுக்கு நன்மைசெய்ய எண்ணுதல்.

ய :—கபடமற்றதென்றால் என்ன ?

த :—மனம் சலியாதிருத்தல்.

ய :—ஜயிக்க முடியாத விரோதி யார் ?

த :—கோபம்.

ய :—ஸ்திரமான வியாதி எது ?

த :—பிறர் பொருளை விரும்பல்.

ய :—யார் நேர்மையானவர்கள் ? யார் திருடர்கள் ?

த :—முறையே, பூத தயை உடையோர், பிராணிகளை வருத்துவோர்.

ய :—அஞ்ஞானமென்றால் என்ன ?

த :—சாஸ்திர ஞானமின்மை.

ய :—சோம்பல் என்றால் என்ன ?

த :—சாஸ்திரவிஷயத்தில் மனம் செல்லாமை.

ய :—துக்கம் என்றால் என்ன ?

த :அஜ்ஞானம்.

ய :—பொறுமை என்றால் என்ன ?

த :—காமக்ரோதாதிகளை அடக்கல்.

ய :—உண்மையான கர்மானுஷ்டானம் எது ?

த :—சித்தசுத்தி.

ய :—பிறப்பு, படிப்பு, நன்னடக்கை, வேதாத்தியயனம் இவைகளுள் எது பிராம்மணனுக்கு முக்கியமானது ?

த :—நன்னடக்கை.

ய :—எது ஆச்சரியகரமானது?

த :—உலகில் ஒவ்வொருநாளும் ஜனங்கள் இறந்துபோய்க்கொண்டே இருக்கிறார்கள். உயிரோடிருக்கிறவர் இதைப்பார்த்துக் கொண்டிருந்தும் தாம் மாத்திரம் இறவாது இருக்கவேண்டும் என்றும் எண்ணுகிறார்கள். இதுதான் மிகவும் ஆச்சரியமானது.

ய :—எது மோக்ஷத்துக்கு வழி?

த :—வேதங்கள் பலவாறாய் இருக்கின்றன. தர்க்கத்தால் பயனில்லை. ரிஷிகளது அபிப்பிராயங்கள் பேதப்பட்டிருக்கின்றன. மதவிஷய உண்மைகளோ இரகஸியமாக இருக்கின்றன. ஆகையால் சிஷ்டாசாரமே மோக்ஷமார்க்கம்.

ய :—எது விசேஷமான ஸங்கதி?

த :—அக்ஞானாந்தகாரம் நிறைந்த உலகமாகிய கொப்பரையில், ஸூரியன் என்கிற நெருப்பை இராப்பகலாகிய விறகுகளால் மூட்டி, மாஸங்கள், ருதுக்களாம் கரண்டிகளால், காலன் என்ற சமயற்காரன் பிராணிகளைச் சமைத்துக்கொண்டே இருக்கிறான். இதுதான் விசேஷமான ஸங்கதி.

வினா 133.—இவ்வாறு தருமபுத்திரர் யக்ஷனது கேள்விகளுக்கெல்லாம் பதில் சொன்னதும், யக்ஷன் என்ன செய்தான்?

விடை.—தருமபுத்திரர் சொன்னவிடைகளைக்கேட்டு யக்ஷகன் மகிழ்ந்து, இறந்த தம்பிகளுள் யாராவது ஒருவனை எழுப்பிக் கொண்டு போகும்படி தருமபுத்திரருக்கு உத்திரவு கொடுத்தான்.

வினா 134.—தருமபுத்திரர் யாரை எழுப்பிக்கொள்ள விரும்பினார்? ஏன்? அவர் எப்படித் தமது உறுதியைக்காட்டினார்?

விடை.—நகுலனை அவர் எழுப்பிக்கொள்ள விரும்பினார். இப்படி நகுலனைத்தேடி எடுத்ததற்குக் காரணம் என்ன என்று யக்ஷன் கேட்க, தருமபுத்திரர் 'என் தகப்பனாருக்கு இரண்டு பெண்சாதிகள். அவர்களுள் நான் ஒருத்திக்கு மூத்த பிள்ளை, நகுலன் மற்றைப் பெண்சாதிக்கு மூத்தபிள்ளை. ஆகையால், நகுலனை நான் தர்மப்படி எழுப்பிக்கொள்ள வேண்டியது' என, யக்ஷன், 'பீமனையாவது அர்ச்சுனனையாவது எழுப்பிக் கொள்ளும், அவர்கள் உமக்கு நேரான தம்பிகள், நகுலன் சிற்றம்மையின் பிள்ளை' என்று எவ்வளவோ சொல்லியும்,

தருமபுத்திரர் தர்மத்திலிருந்து விலகாது நகுலனையே எழுப்பி விடவேண்டும் என்று உறுதியாய் இருந்தார்.

வினு 135.—இப்படி தருமபுத்திரர் உறுதியாய் இருக்க என்ன விசேஷம் நடந்தது ?

விடை.—இவரது உறுதிக்கு யக்ஷன் மெச்சி, அவர் தம்பிமார் நால்வர்களையும் எழுந்து வரும்படி செய்தான். இதன் பின்பு யக்ஷன் தனது உண்மை ரூபமாகிய யமதர்ம ரூபத்தைக் காட்டிப் பாண்டவர்களை ஆசீர்வதித்து, அவர்களது வனவாஸம் 12-வருஷங்களும் முடிந்தன என்று சொல்லி, அவர்களுக்கு அக்ஞாத வாஸம் (மறைந்தவாஸம்) செய்யத் தகுந்த இடம் விராடபட்டணம் என்று தெரிவித்து, அவர்கள் எப்படிப்பட்ட வேஷம் தரித்தாலும் ஸரி, அவர்களை இனி ஒரு வருஷம் வரையில் ஒருவராலும் கண்டுபிடிக்க முடியாமலிருக்கட்டும் என்று அனுக்கிரஹித்து விட்டு யமதர்மன் மறைந்தான்.



திரௌபதி விராட ஸபையில் பிரவேசித்தல்

—93-ம் பக்கம் பார்க்க

4-வது விராட பர்வம்.

அங்கையினேமி சங்குவாடண்டோ டடற்சராசனந் தரித்தருள்வோன்
சங்கையின்மறைக ளாயிரங்களுக்குஞ் சாற்றுதற்கரிய தத்துவத்தோன்
கங்கையினறலுங் காளியன்முடியுங் காளிந்திக்கரையு மேகமழும்
பங்கயமலர்க ளிரவுநற்பகலும் பணிந்துபாடுது மவன்புகழே.

வினா 1.—இவ்வாறு யமதர்மராஜன் சொல்லி மறைந்ததும் தரும புத்திரர் எவ்வாறு அக்ஞாதவாஸம் செய்வதாக ஒப்புக் கொண்டார்?

விடை.—தாம் பிராம்மண வேஷம் பூண்டு கங்கபட்டர் எனப் பெயர் வைத்துக்கொண்டு விராடராஜனிடம் சூதாடி இனிமையான வார்த்தைசொல்லி அவனைச் சந்தோஷப் படுத்துவதாகவும், அவ்வரசன் அதிக சந்தோஷப்பட்டு 'நீர் இதற்கு முன்பு எங்கிருந்தீர்' என்று கேட்டால் 'நான் யுதிஷ்டிரராது ராஜஸபையில் இருந்தேன். அவருக்கும் எனக்கும் அதிக பேதம் இருப்பதாக எண்ணி ஒருவரும் சரிவர அங்கு நடந்து கொள்ளவில்லை. நாங்கள் இருவரும் அவ்வளவு பிராண ஸ்நேகிதராய் இருந்தோம் என்று சொல்லுவேன்' என, தருமபுத்திரர் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

வினா 2.—பீமன் எவ்வாறு காலங்கழிப்பதாகச் சொன்னான்?

விடை.—'வல்லபன் என்கிற சமயற்கார வேஷம் பூண்டு, அரசன் பாகசாலையில் வேலைக்கமர்ந்து எனது திறமையை நன்றாய்க் காட்டிப் பாகசாலைக் கதிபதியாவேன். மேலும் எனது தேக பலத்தால் சமையலுக்கு வேண்டிய விறகு முதலியவைகளை நான் சுமந்து வருவேன். காட்டிலுள்ள புலி, கரடி, முதலிய கொடிய மிருகங்களோடும் அரசன் முன்பு சண்டையாடி, அவனை சந்தோஷப் படுத்துவேன். மல்லகஜட்டிகளோடு மல்ல யுத்தம் செய்து ஜயம் பெறுவேன். "நீ முன்பு எங்கு இருந்தாய்" என்று அரசன் கேட்டால் "நான் இத்தொழில்களைச் செய்துக்கொண்டு யுதிஷ்டிரரிடம் இருந்தேன்" என்று சொல்லுவேன். என் விஷயத்தில் நீங்கள் கவலைப்படவேண்டாம்' என்று பீமன் சொன்னான்.

வினா 3.—அர்ச்சுனன் எவ்வேஷம் பூண்டு அக்ஞாதவாஸம் செய்வதாகச் சொன்னான்?

விடை.—இந்தச்சமயத்தில் இந்திர லோகத்தில் ஊர்வசி தனக்குக் கொடுத்த சாபம் அர்ச்சுனனுக்கு ஞாபகம் வர, 'நான் பிரகந்நளே என்கிற பெயரோடு கூடிய ஒரு பேடி உருக்கொண்டு விராடராஜன் அந்தப்புறத்திலுள்ள பெண்களுக்குக் கதை சொல்லுதல், பாட்டுக் கற்பித்தல், நாட்டியங் கற்பித்தல் முதலிய தொழில்களால் அரசனையும், அவன் பெண்சாதி முதலியவர்களையும் திருப்திப்படுத்துவேன். "நீ முன்பு எங்கு இருந்தாய்" என்று யாராவது கேட்டால் "திரௌபதியிடம் வேலைக்காரியாய் இருந்தேன் என்று சொல்லி ஒருவரும் அறியாத வண்ணம் நான் மறைந்து வாஸம் பண்ணுவேன்' என்று அர்ச்சுனன் எடுத்துரைத்தான்.

வினு 4.—நகுலன் எப்படி ஒருவரும் அறியாதபடி விராடநகரத்தில் ஒருவருஷம் வாஸம் செய்யப்போகிறதாகச் சொன்னுன்?

விடை.—'நான் தாமக்கிரந்தி எனப் பெயர் வைத்துக்கொண்டு விராடராஜனது குதிரைகளை நன்ருய்ப் பாதுகாத்துக்கொண்டு ஒருவருஷ காலத்தைத் தள்ளி வருவேன். அப்பொழுது யாராவது என்னைப்பற்றி விசாரித்தால் நான் தருமபுத்திரரது குதிரைகளை மேற்பார்வை யிட்டுக்கொண்டிருந்தவன் என்று சொல்லி என்னை எவராலும் கண்டுபிடிக்க முடியாதபடி ஜாக்கிரதையாய் ஒரு வருஷம் முடிகிறவரையில் இருப்பேன்' என்ருன்.

வினு 5.—ஸகாதேவன் எவ்வாறு காலங்கழிக்கப் போகிறதாகச் சொன்னுன்?

விடை.—'நான் தந்திரிபாலன் என்கிற பெயரோடு விராடராஜனது பசுக்கூட்டங்களை ஒழுங்காய்ப் பாதுகாத்து வருவேன். அப்பொழுது என்னைப்பற்றி யாராவது விசாரித்தால், நான் தருமபுத்திரரது கோதனத்தை ரக்ஷித்து வந்த கோபாலத் தலைவன் என்று மறுமொழி சொல்லி என்னை ஒருவரும் அறியாத வண்ணம் ஒரு வருஷத்தை எளிதில் கழிப்பேன்' என்று எடுத்துரைத்தான்.

வினு 6.—திரௌபதி எவ்வாறு தனது உண்மை உருவைக் காட்டாது ஒரு வருஷம் காலங்கழிக்கப்போகிறதாகச் சொன்னுள்?

விடை.—'அந்தப்புரத்தில் பூமுடித்தல், சந்தனம் கரைத்தல், தலை பின்னல் முதலிய தொழிலைச் செய்யும் தாதிப் பெண்ணாக வேஷம் தரித்து, நான் ஸைரந்திரி என்னும் பெயர் பூண்டு விராடராஜன் பெண்சாதியாகிய ஸுதேக்ஷ்ணாதேவி இடம் வேலைக்கு அமருவேன். என்னைப்பற்றி அவள் கேள்விகள் கேட்டால், நான் திரௌபதியின் தாதி என்று சொல்லுவேன். ஒவ்வொரு வருஷம் என் பாதிவிருத்தியத்திற்குப் பங்கம் வாராது இருப்பதற்காக நான் இராஜபத்தினியிடம் எனக்கு பர்த்தாக்கள் ஐந்து கந்தர்வர்கள் என்றும், அவர்கள் எங்கும் உலாவிக்கொண்டிருப்பார்கள், என்னைத் துராசையோடு பார்த்தவர்களை உடனே தவறாது கொல்லுவார்கள் என்றும் சொல்லி பயப்படுத்துவித்து, ஸுகமாய் ஒருவருஷம் ஒருவருக்கும் தெரியாது விராட பட்டணத்தில் வாழ்வேன்' என்று திரௌபதி கூறினாள்.

வி௵ 7.—இவ்வாறு பாண்டவர்கள் ஒரு வழியாய்த் தீர்மானித்த பிறகு யார் எவ்வாறு இவர்களுக்குப் புத்திமதி கூறினது? பின்பு என்ன நடந்தது?

விடை.—பாண்டவர்களது குருவாகிய தௌம்யர் இராஜஸேவை செய்யவேண்டிய விதத்தை நன்றாய் எடுத்துச்சொல்லி, 'அகலாது அணுகாது தீக்காய்வார்போல, மன்னரைச் சேர்ந்தொழுகுவார்' என்ற பொருளை, நன்கு விளக்கிக் காட்டினார். அதன் பின்பு தௌம்யர் பாண்டவர்களை விராட நகரத்திற்கு அனுப்பிவிட்டு அவர்களது அக்னி ஹோத்திராக்கினியை துருபதராஜனது பட்டணத்திற்கு எடுத்துச்சென்றார்.

வி௵ 8.—இவ்வாறு தௌம்யர் சென்றதும், விராடநகரப் பிரவேசம் செய்யுமுன் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—தௌம்யர் சென்றதும், பாண்டவர்கள் தமது ஆயுதங்கள் எல்லாவற்றையும் விராட பட்டணத்தின் வெளியில் மயானத்திலிருக்கும் வன்னிமரத்தில் வைத்துக்கட்டி அதன் முன்பு ஒரு பிணத்தையும் கட்டிவிட்டார்கள். இதனால் ஒருவரும் ஆயுதங்களைத் தொடமாட்டார்கள் என்கிற தைரியம் அவர்களுக்கு வந்துவிட்டது. அதன் பின்பு பிறர் அறியாது தங்களை ஒருவரை ஒருவர் விராடபட்டணத்தில் அழைத்துக் கொள்ள முறையே தமக்கு ஜயன், ஜயந்தன், விஜயன், ஜயத்

ஸேனன், ஜயத்பாலன் என்ற ஸங்கேதப் பெயர்களையும் அவர்கள் ஏற்படுத்திக்கொண்டார்கள். இது முடிந்ததும் விராட பட்டணம் புகுமுன் யுதிஷ்டிரர் ஜகத்மாயையாகிய துர்க்கா தேவியைத் துதிக்க அவள் பிரத்யக்ஷமாகிப் பாண்டவர்களுக்கு ஜயம் கூடிய சீக்கிரத்தில் வரும் என்று அனுக்கிரகித்து மறைந்தாள்.

வினா 9.—பாண்டவர்கள் விராட நகரத்தில் எவ்வாறு பிரவேசித்தனர்? அங்கு என்ன நடந்தது?

விடை.—பாண்டவர்கள், தருமபுத்திரர்முதல் வரிசையாய்க் கொஞ்ச நாழிகைக்கு ஒவ்வொருவராக விராடநகரத்துள் பிரவேசித்தார்கள். கடைசியாய்த் திரௌபதி விராட நகரதில் பிரவேசித்தாள். இவர்களைக்கண்டதும் அரசனும், அவன் மனைவியும் வெகுமரியாதை செய்து அவரவர்கள் மனத்தின்படி அவரவர்களை வேலை செய்துகொண்டு தம்மிடத்தில் இருக்கும்படி உத்திரவு கொடுத்தார்கள். பாண்டவர்கள் தாம் எண்ணியபடி விராட நகரத்தில் ஸுகமாய் வஸிக்கத் தொடங்கினர். ஸைரந்திரியை, அவளுக்குக் கந்தர்வரது காவல் இருக்கிறது என்று உணர்ந்து, அரசன்கூடக் கண்ணெடுத்துப் பார்க்கப் பயந்திருந்தான். திரௌபதி தனது கற்புக்குக் குறைவுவராது அங்கு வாழ்ந்து வந்தாள். பாண்டவர்கள் தத்தமக்குக் கிடைத்தவைகளை மற்றவர்களுக்கும் இரகஸியமாய்க்கொடுத்து ஸுகமாய் வாழ்ந்து வந்தார்கள்.

வினா 10.—இப்படிப் பாண்டவர்கள் வாழ்ந்து வருகையில் விராட பட்டணத்தில் என்ன விசேஷம் நடந்தது? அதில் யாருடைய சக்தி வெளிவந்தது?

விடை.—நான்காவது மாதம் விராட நகரத்துச் சிவன்கோயிலில் உத்ஸவம் வந்தது. அக்காலத்தில் ஜீமூதன் என்கிற மல்லனது அதிகாரத்துக்குட்பட்டு அனேக மல்லர்கள் இராஜஸபைக்கு வந்தார்கள். ஜீமூதனோடு எதிர்த்து மல்ல யுத்தம் பண்ண ஒருவருக்கும் மனம் துணியவில்லை. அப்பொழுது விராடராஜன் வேண்டுகோளின்படி வல்லபன் (பீமன்) என்கிற மடைப்பள்ளி அதிகாரி ஜீமூதனை எதிர்த்தான். வல்லபன் வெகு விசித்திரமான யுத்தவரிசைகளை எல்லாம் ஸபையார் மகிழும்படி காட்டிவிட்டு, கடைசியில் ஜீமூதனைக்

கொன்றான். இதனால் பீமனது பலம் எல்லாருக்கும் தெரிய வந்தது.

வினா 11.—பீமன் அன்று முதல் என்ன செய்யவேண்டி வந்தது? மற்றையவர்கள் பின்பு என்ன செய்தார்கள்?

விடை.—இவனுக்குப் பலத்தில் நிகர் ஒருவரும் இல்லை என்று அரசன் இவனை காட்டிலிருந்து பிடித்துவந்த யானை, புலி, சிங்கம் முதலியவைகளோடு, சண்டை செய்யும்படி ஏவ, பீமன் அவ்வாறே அவைகளோடு விசித்திர யுத்தம்செய்து, அரசனை ஸந்தோஷப்படுத்தினான். இது போலவே தம்மால் கூடிய வரையில் மற்றையவர்களும் தமது வேலைகளை ஒழுங்காய்ச் செய்து தமது எஜமானர்களைத் திருப்திப்படுத்தினார்கள். இவைகளைப் பார்த்திருந்த திரௌபதிக்கு மிகுந்த துக்கமுண்டாக அதை அவள் வெளியில் காட்டிக்கொள்ளாது பெருமூச்சு மாத்திரம் விட்டுக்கொண்டிருந்தாள்.

வினா 12.—இவ்வாறு பாண்டவர்கள் வாழ்ந்து வருங்கால் அவர்களுக்கு எப்படி கஷ்டம் யாரால் வந்தது?

விடை.—இவ்வாறு பாண்டவர்கள் 10 மாஸம் விராட நகரத்தில் கஷ்டமின்றிக் காலங்கழித்து விட்டார்கள். இந்த ஸமயத்தில் ஸுதேக்ஷ்ணாதேவியின் ஸகோதரனும், விராடராஜன் ஸேனாதிபதியாயும் இருந்த கீசகன் என்ற துராத்மா தற்செயலாய் திரௌபதியைக் கண்டு விட்டான். உடனே அவனுக்கு அவளிடம் ஆசை உண்டாக அவளருகே சென்று தனது ஆசையை வெளியிட்டான்.

வினா 13.—திரௌபதிக்கு வந்த இந்தக் கஷ்டத்தை யார் எவ்வாறு ஏன் அதிகப்படுத்திவிட்டார்கள்?

விடை.—திரௌபதி தன்னால் இயன்றமட்டும் நயமாயும், பயமாயும் தன் வார்த்தைகளால் கீசனைத் தடுக்க, அவன் தனது ஸகோதரியான ஸுதேக்ஷ்ணையிடம் சென்று தன் ஆசையைத் தெரிவித்தான். அவள் ஸைரந்திரியின் புருஷர்களாகிய கந்தர்வர்களின் மஹத்துவத்தை எடுத்துச்சொல்லிக் கீசகனைத் தனது ஆசையை அடக்கும்படி சொன்னாள். கீசகன் மாறாததுகண்டு அவனிடம் ஸைரந்திரியைத் தான் தனிமையாய் அனுப்புவதாகச் சொல்லி, ஸகோதர வாஞ்சையால் ஸுதே

க்ஷூணு தேவி ஸைரந்திரியை அழைத்துக் கீசகன் வீடுசென்று மதுவாங்கிவரும்படி ஏவினுள். அவள் எவ்வளவோ காரணங்களோடு மறுத்துச்சொல்லியும் இராஜபத்தினி கேட்காது பிடிவாதமாய் இருக்க, கடவுள்மேல் பாரத்தைப்போட்டுவிட்டு மதுவாங்கிவரப் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு கீசகன் வீட்டை நோக்கித் திரௌபதி புறப்பட்டாள். இவ்வாறு ஸுதேக்ஷூணுதேவி ஸகோதர வாஞ்சையால் திரௌபதியின் கஷ்டத்தை அதிகப்படுத்தினுள்.

வினு 14.—மதுவாங்கி வரப்போன திரௌபதியின் கதி என்னமாயிற்று? அங்கு என்னென்ன நடந்தது?

விடை.—கீசகன் வீட்டை நோக்கிப் புறப்பட்ட திரௌபதி, போகும் வழியில் ஸூரியபகவானைத் துதிக்க அவர் ஒரு இராக்ஷஸனை திரௌபதியைக் காப்பாற்றும்படி ஏவினுர். அவன் மறைந்துகொண்டே திரௌபதியின் பின்னே புறப்பட்டான். திரௌபதி கீசகன் வீடுசென்றதும், தான் வந்த காரியத்தைத் தெரிவித்து சீக்கிரம் மதுவைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டாள். கீசகன் திரௌபதியை நயமாய் முதலில் தன் வசம் செய்யப்பார்த்து முடியாததுகண்டு, அவளது வலது கையைப்பிடித்தான். அவள் அதைத் தனது கற்பின் பலத்தால் திமிரிக்கொண்டு. வெளியே ஓட ஆரம்பிக்கக் கீசகன் அவளது மேல்துணியின் நுனியைப் பிடித்துக்கொண்டான். உடனே தன் கற்பின் மகிமையால் கீசகனைத் திரௌபதி கீழே தள்ளிவிட்டு தனக்கு வந்த ஆபத்தைத் தெரிவித்துக்கொள்ள தருமபுத்திரர் வீற்றிருக்கும் விராடராஜன் ஸபையை நோக்கி, வெகு பதட்டத்தோடு ஓடி வந்தாள். பின்னே வெறிகொண்டு ஓடிவந்த கீசகன் இராஜஸபை வாயிலில் ஸகலரும் பார்த்துக்கொண்டிருக்கையில் திரௌபதியின் கூந்தலை பற்றி இழுத்து அவளைக் காலால் உதைக்க அவள் மூர்ச்சை அடைந்து கீழே விழுந்தாள்.

வினு 15.—இப்படிச்செய்த கீசகனுக்கு என்ன ஆபத்து வந்தது?

விடை.—ஸூரிய பகவானுல் அனுப்பப்பட்ட இராக்ஷஸன் கீசகன் திரும்புகையில் அவனைக் காற்றின் பலத்தைப்போன்ற பலத்தை வைத்து இடிக்க ஸபையிலிருந்தோர் ஸகலரும் மகிழ்ச்சி அடையும்படி கீசகன் அடியற்ற மரம்போல்விழுந்து

மூர்ச்சை போனான். கொஞ்ச நாழிகையானதும் கீசகன் எழுந்து மிகுந்த வெட்கத்தோடு தனது அரண்மனைக்கு ஓடிப் போனான்.

வினு 16.—மூர்ச்சை தெளிந்து எழுந்ததும், திரௌபதி என்ன செய்தாள்? ஸபையில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—இவ்வாறு கீசகன் செய்ததைக் கண்டதும் ஸபையில் அப்பொழுது இருந்த பீமனுக்குக் கோபம் அதிகரிக்க, அவன் அருகிலிருந்த பச்சை மரத்தைப் பார்த்தான். இந்தக் குறிப்பை அறிந்த யுதிஷ்டிரர் பீமனைக் கையமர்த்திவிட்டு 'விறகுக்காக இராஜஸபையிலிருக்கும் பச்சை மரத்தை ஏன் பார்க்கிறாய்? உனக்கு வேண்டுமானால் ஊருக்கு வெளியிலிருக்கும் மரங்களைப்பார்த்துக்கொள்' என்று இரண்டு பொருள்படும்படி சொன்னார். இதன் இரகஸியத்தை அறிந்துகொண்டு பீமன் கோபத்தை அப்பொழுது அடக்கிக்கொண்டான். உடனே திரௌபதி தனக்கு வந்த கேட்டையும் தனது பர்த்தாக்களது வைபவத்தையும், அவர்கள் அப்பொழுது அசட்டையாய் இருப்பதையும், விராடராஜனது ஆண்மையற்ற குணத்தையும் பற்றி வெகுவாக இராஜஸபையில் விஸ்தரிக்கத் தொடங்கினாள். இவைகளைக்கண்ட யுதிஷ்டிரர், அதிகமாய்ப் பேசுவது பெண்களுக்கு அழகல்ல என்றும் அவளது பர்த்தாக்கள் ஏதாவது செய்யத்தக்க ஸமயம் இன்னும் வரவில்லை என்றும், ஆதலால் அந்தப்புரம் உடனே அவள் செல்லவேண்டும் என்றும் சொல்லத் திரௌபதி தனது பர்த்தாக்களை நொந்துகொண்டு அந்தப்புரம் சென்றனள்.

வினு 17.—இதன் பின்பு கீசகன் விஷயத்தில் திரௌபதி என்ன பிரயத்தினம் செய்தாள்?

விடை.—கீசகனை உயிரோடு வைத்திருந்தால் தனது கற்பிற்குக் கேடு வரும் என்கிற பயம் திரௌபதியின் மனதில் குடிகொண்டது. வெகு நாழிகை யோசனை செய்த பிறகு இக்காரியத்தை முடிக்கவல்லவன் பீமன் என்று அவளுக்குத் தோன்றியது. இரவில் ஸகலரும் தூங்கிக்கொண்டிருக்கையில் திரௌபதி மடைப்பள்ளியில் புகுந்து, தூங்கிக்கொண்டிருந்த பீமனை எழுப்பித் தனக்கு வந்த கஷ்டங்களையும்,

அப்பொழுது வந்திருக்கும் கஷ்டத்தையும் வெகுவாக எடுத்துச்சொன்னுள். பீமன் உடனே கீசகனைக் கூடியசீக்கிரத்தில் கொல்லுவதாகத் தீர்மானித்தான்.

வினு 18.—கீசகனைக்கொல்லும் விஷயத்தில் பீமன் திரௌபதிக்கு என்ன உபாயம் சொன்ஞன்?

விடை.—திரௌபதி கீசகனது ஆசையைப் பூர்த்திசெய்து வைப்பதாக ஒப்புக்கொண்டு, அதற்குத்தகுந்த இடம் இராஜகுமாரிகள் நாட்டியம் பழகும் ஊருக்கு வெளியில் இருக்கும் நாடகசாலையே என்று சொல்லி, அங்கு கீசகனை இரவில் வரவழைத்தால், அப்பொழுது தான் திரௌபதிக்குப் பதிலாக நாடகசாலையில் இருந்துவரும் கீசகனை அன்றிரவே கொல்லுவதாகத் திரௌபதிக்கு பீமன் தனது எண்ணத்தை வெளியிட்டான். திரௌபதியும் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டாள்.

வினு 19.—திரௌபதி பின்பு என்ன செய்தாள்?

விடை.—பீமன் சொல்லியவாறே திரௌபதி கீசகனைத் தன் வசம் செய்ய, அவன் அன்றிரவே ஊருக்கு வெளியிலிருக்கும் நாடகசாலை யண்டை வருவதாகச் சொல்லிப் போஞன். நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் திரௌபதி பீமனிடம் சொல்ல, அவன் அன்றிரவு திரௌபதியையும் கூட அழைத்துக்கொண்டு நாடகசாலை வந்து திரௌபதியை முன் கதவின் ஓரத்தில் நிறுத்திவிட்டு, தான் அங்குப் போட்டிருக்கும் கட்டிலில் படுத்துக்கொண்டு கீசகனது வரவை எதிர்பார்த்திருந்தான்.

வினு 20.—கீசகன் அங்கு எவ்வாறு வந்தான்? பின்பு என்ன நடந்தது?

விடை.—இரவு எப்பொழுது வரப்போகிறதென்று எதிர் பார்த்திருந்த கீசகன், மிகுந்த ஆவலோடு நாடகசாலை வந்து அங்கு இருட்டாயிருப்பது கண்டு மெதுவாய் கட்டிலருகில் சென்று, திரௌபதியை அழைத்தான். உடனே பீமன் திரௌபதியினது குரலை வகித்து பதில்கொடுக்க, கீசகனுக்கு ஆசை அதிகரித்தது. உடனே கீசகன் படுத்திருக்கும் பீமனது கையை மிகுந்த ஆவலோடு பிடிக்க அது மிகக்கடினமாய் இருப்பதைக்கண்டு திகைத்தான். இதுதான் ஸமயம் என்று பீமன் கட்டிலை விட்டெழுந்து கீசகஞேடு யுத்தம்

செய்யத் தொடங்கினன். இருவரும் வெளியில் சப்தம் கேட்காது சண்டையிடக் கடைசியில் பீமன் கீசகனைக் கொன்முன். உடனே அவனது தலையையும் கைகால்களையும், முறித்து அவனது வயிற்றில் அடைத்து அவனது தேகத்தை ஒரு பிண்டமாக்கிச் சாலையிலிருந்த ஒருவிளக்கைக் கொண்டுவந்து பீமன் திரௌபதிக்கு கீசகனது நிலையை காட்டினன்.

வின 21.—இவ்வாறு கீசகன் இறந்ததும் என்ன நடந்தது?

விடை.—பீமன் திரௌபதியை இவ்வாறு திருப்திப்படுத்திவிட்டு தன் மடைப்பள்ளிக்குச் சென்முன். திரௌபதி அருகிலிருந்த காவலாளர்களை அழைத்துத் தனது கற்பைக் கெடுக்க வந்த கீசகன் தனது பர்த்தாக்களான கந்தர்வர்களால் பட்ட பாட்டைக் காண்பித்தாள். அவர்களும் ஸைரந்திரி சொல்லுவது உண்மை என்று நம்பினர்கள். இந்த ஸங்கதியை உடனே உபகீசகர்கள் என்ற கீசகன் தம்பிமார்கள் கேள்விப்பட்டு நாடகசாலை வந்து தமது தமயன் நிலையைக்கண்டு பரிதபித்தனர்.

வின 22.—இவர்கள் வந்ததும் அருகே இருந்த திரௌபதிக்கு என்ன கஷ்டம் வந்தது?

விடை.—உபகீசகர்கள், அருகே ஒரு தூணில் சாய்ந்துகொண்டு எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த திரௌபதியைக் கண்ட உடனே அவர்களுக்கு அவளை அவமானப்படுத்த வேண்டுமென்று தோன்றிற்று. விராடராஜன் பலமற்ற அரசனுகையால் அவனிடமிருந்து ஸைரந்திரியையும், கீசகனது தேகத்தோடு கட்டி எரித்துவிட அனுமதியைப் பெற்றுக் கொண்டு வந்து உபகீசகர்கள் ஸைரந்திரியின் தலைமயிரை இழுத்து கீசகனது பாடைக் கம்பில் கட்டி அவளையும் மயானத்திற்கு இழுத்துச் சென்றனர்.

வின 23.—இந்த கஷ்டம் திரௌபதிக்கு எவ்வாறு நீங்கியது?

விடை.—மயானத்திற்குப்போகும் வழியில் திரௌபதி 'ஏ ஜயா, ஜயந்தா, விஜயா, ஜயத்ஸேனு, ஜயத்பாலா! என்னை இத்தருணத்தில் கைவிட்டு விடக்கூடாது' என்று கந்தர்வர்களை அழைப்பதுபோலப் பாண்டவர்களை அவர்களது ஸங்கேதப் பெயர்களைச்சொல்லி அழைத்தாள். இதை மடைப்பள்ளியில் இருக்கும் பீமன் கேட்டதும் அவன் தனது உருவை

ஒருவாறு மாற்றிக்கொண்டு தேகந்தெரியாது எழுந்து விரைவில் கோட்டை மதில் முதலிய தடைகளைத் தாண்டிக் குதித்து சீக்கிரத்தில் மயானம் வந்தான். அவன் வரும்பொழுது வழியிலிருந்த ஒரு பனைமரத்தைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு விரைவாய் வருவதைக் கண்ட உபகீசகர்கள் பயந்து ஸைரந்திரியை விட்டுவிட்டு நாலாபக்கங்களிலும் ஓடத்தலைப்பட்டனர். பீமன், உபகீசகர்கள் 105 பேர்களில் ஒருவரையும் ஊருக்குள் போகவிடாமல் தனது பனைமரத்தால் ஓங்கி அடித்து யமபுரம் அனுப்பி, திரௌபதியைத் தேற்றி அவளை அந்தப்புரம் போகச் சொல்லிவிட்டுத் தான் மடைப்பள்ளியை அடைந்தான்.

வினு 24.—இவ்வாறு ஸகல கஷ்டங்களும் நீங்கித் திரௌபதி அரண்மனைக்கு வந்ததும் அங்கு என்ன நடந்தது?

விடை.—இப்படி கீசகனும், உபகீசகர்களும் மாண்ட ஸங்கதி அரசனுக்குத் தெரியவர, அவனுக்கு ஸைரந்திரியை இனிமேல் இங்கு வைத்திருக்கக் கூடாது என்ற எண்ணம் வந்தது. அதை ஸுதேக்ஷணையிடம் தெரிவித்தான். இதற்குள் திரௌபதி அரண்மனையில் புகுந்தாள். அப்பொழுது மடைப்பள்ளி வாயிலில் இருக்கும் பீமனைக் கண்டதும் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு, சற்று நேரம் கந்தர்வர்களை வாயாரத் துதித்தாள். உள்ளே போகும்பொழுது பிரகன்னளையும், இராஜகுமாரிகளும் இவளது க்ஷேமத்தை விசாரித்தார்கள். அந்தப்புரம் சென்றதும் அரசனது எண்ணத்தை ஸைரந்திரியிடம் ஸுதேக்ஷணாதேவி வெளியிட்டாள். இதைக்கேட்டதும் திரௌபதி தான் இன்னும் 13-நாள் தான் அங்கு இருக்கப் போகிறதாகவும், அதன் பின்பு தன் பர்த்தாக்கள் தன்னை அழைத்துப்போவார்கள் என்பதாகவும், அதுவரையில்பொறுத்திருந்தால் அவர்களுக்கு கந்தர்வர்கள் நன்மையையே செய்வார்கள் என்பதாகவும் சொல்லி விராடராஜன் அந்தப்புரத்தில் திரௌபதி ஸுகமாய் வாழ்ந்திருந்தாள்.

வினு 25.—இப்படிப் பாண்டவர்கள் மறைந்து வாஸம் செய்யுங்கால் அவர்களைத் துரியோதனாதியர் எவ்வாறு கண்டுபிடிக்க முயன்றனர்? அவரது பிரயத்தனம் என்னமாயிற்று?

விடை.—துரியோதனாதியர்கள் 13-வது வருஷாரம்பமுதல் எவ்வளவோ தூதரையும், வேவுகாரரையும் அனுப்பிப் பாண்டவர்களைக் கண்டுபிடிக்க முயன்றனர். என்ன செய்தும் பாண்டவர்களையாவது பாண்டவர்கள் மறைந்து வாஸம் செய்யும் இடத்தையாவது அவர்களால் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டது. இவர்களில் விராடபட்டணம் போய்வந்த வேவுகாரர்கள் மாத்திரம் பாண்டவர்கள் இருக்கும் இடத்தை அறிய முடியாத போதிலும், கீசகன் ஒரு ஸ்திரீ நிமித்தமாய் தனது தம்பிமார் 105—பேர்களோடு மாண்ட அதிசய ஸமாசாரத்தை மாத்திரம் கொண்டுவந்தார்கள்.

வினா 26.—இவ்வாறு வேவுகாரரை அனுப்புவித்த செய்தி முடிந்ததும் துரியோதன ஸபையில் என்ன விஷயத்தைப்பற்றி யார் யார் என்னென்ன பேசினார்கள்?

விடை.—கர்ணனும் சகுனியும் ‘இன்னும் அதிக ஸாமர்த்தியமுடைய வேவுகாரர் மூலமாய் பாண்டவர்களைக் கூடிய சீக்கிரத்தில் கண்டுபிடிக்கவேண்டும்’ என்றனர். ‘வேவுகாரர் நன்றாய்த் தேடட்டும். ஆனாலும் கஷ்டங்கள் அறியாத பாண்டவர்கள் வனவாஸ அக்ஞாதவாஸ பாதைகளால் அவசியம் இறந்தேயிருப்பார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது’ என்று துராத்மாவான துச்சாஸனன் சொன்னான். ‘பாண்டவர்கள் இறந்திருக்கமாட்டார்கள். அவர்கள் இருக்கும் இடத்தை பிராம்மண தூதர்கள் வித்தாள் மூலமாய் சீக்கிரம் கண்டுபிடிக்க முயலவேண்டும்’ என்றார் துரோணர். பீஷ்மர் ‘பாண்டவர் மஹாத்மாக்களாகையால் அவர்கள் இறந்திருக்கவேமாட்டார்கள். அவர்கள் சூதாட்டத்தில் ஏற்பட்ட நிபந்தனைப்படி நடந்தாய்விட்டது. இனிமேல் அவர்களைக் கண்டுபிடித்துக் காட்டிக்கனுப்புவது ஸரியன்று. அவர்கள் இருக்கும் தேசத்தில் ஸகல சுபக்குறிகளும் காணப்படும். அசுபக்குறியே இருக்கமாட்டாது. அப்பட்டணத்திலுள்ளவர்கள் தமது தர்மத்தை விட்டு விலகாது, ஸன்மார்க்கத்தைப் பின்பற்றுபவராய் சண்டை, சச்சரவு, வியாதி, அகாலமிருத்யு, முதலியவைகளால் வருந்தாது எப்பொழுதும் ஸுகமாய் வாழ்வார்கள். ஆகையால் அவர்கள் விஷயத்தில் நீ சீக்கிரமாக நியாயமாய் நடந்து கொண்டால் தான் உனக்கு நலம்’ என்று புத்திமதி கூறினார். கிருபாசாரியார்

பீஷ்மர் சொல்லியது யாவும் ஸரி என அங்கீகரித்தார். இவர்கள் இவ்வாறு பாண்டவர்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்க திரிகர்த்த தேசாதிபதியாகிய ஸுசர்மா என்பவன் தான் அதுவரையில் கீசகனால் அனேகந் தரம் தோல்வியடைந்திருப்பதாகவும், இப்பொழுது கீசகன் இறந்துவிட்டதால், தான் மறுபடியும் விராட நகரத்தை நோக்கி படையெடுத்துப்போய் அதைப் பிடித்துத் துரியோதனனது இராஜ்யத்தை விஸ்தாரப் படுத்துவதாகவும் சொன்னான். இதைக் கேட்டதும் துரியோதனனுக்கு முன்னமேயே பீஷ்மர் பாண்டவர்களிருக்கும் இராஜ்யத்தை வர்ணித்ததற்கும், விராட நகரத்தின் செழிப்பிற்கும், ஏதோ பொருத்தம் இருக்கிறதாகத் தோன்றினமையால், அங்கு ஒருவேளை படையெடுத்துச்சென்றால் பாண்டவர்களையும் கண்டு பிடிக்கலாம் என்று தோன்ற அவன் ஸுசர்மா சொன்னதை ஒப்புக்கொண்டு, விராட நகரத்தின்மேல் படையெடுத்துச் செல்லுவதாகத் தீர்மானித்தான்.

வினு 27.—விராட நகரத்தின் மீது துரியோதனுதியர் எவ்வாறு படை யெடுத்துச்சென்று எவ்வாறு விராடராஜனைப் போருக்கழைத்தனர்?

விடை.—திரிகர்த்த தேசாதிபதிகள் தமது படைகளோடு முதலில் விராட நகரத்தின் தெற்கே சென்று, அங்குள்ள பசுக்கூட்டங்களைக் கவர்ந்து விராட நகரத்தவரை வலுவில் சண்டைக்கு இழுத்தனர். துரியோதனுதியர், பீஷ்மர் முதலியோர் தாம் செய்து கொண்டுவந்த ஏற்பாட்டின்படி மறுநாள் விராட பட்டணத்தின் வடபக்கத்திலிருந்த பசுக்கூட்டங்களைக் கவர்ந்து சண்டை உண்டாக்கினர்.

வினு 28.—தெற்கே வந்த திரிகர்த்த தேசாதிபதிகளை எதிர்த்து யார் போருக்குச் சென்றது? இந்த யுத்தம் எவ்வாறு முடிந்தது? ஏன்?

விடை.—தெற்கு திக்கைநோக்கி விராடராஜன், கங்கபட்டர், வல்லவன், தாமக்கிரந்தி, தந்திரிபாலன் முதலியவர்களது ஸகாயத்தோடு, போருக்குப் புறப்பட்டான். அங்குச் சண்டை இரவிலும் அகோரமாய் நடந்தது. அதில் கடைசிக் காலத்தில் திரிகர்த்த தேசாதிபதிகள் விராடராஜனை ஓடிவந்து பிடித்துக்கொண்டு போய் தமது தேர்க்காலோடு கட்டிவிட,

விராடராஜன் ஸேனை வெருண்டோடத் தொடங்கியது. இதைக்கண்ட கங்கபட்டர், வல்லவன், தாமக்கிரந்தி, தந்திர பாலன் ஆகிய மூவரையும் அரசனுக்கு ஸகாயமாய்ப் போர் செய்யச்சொல்ல, அவர்கள் வெகு அடக்கமாய்ச் சண்டை செய்து விராடராஜனை விடுவித்து திரிகர்த்த தேசாதிபதி யாகிய ஸுசர்மாவைச் சிறைபிடித்துவர, ஸுசர்மாவினது சேனை சின்னாபின்னமாகி நான்கு பக்கங்களிலும் சிதறி ஓடிப்போயிற்று. சொஞ்சநாழிகைக்குப் பின்பு கங்கபட்டரது வேண்டுகோளின்படி, வல்லவன் ஸுசர்மாவைக் கட்டவிழ்த்து விட அவன் வெட்கி ஓடிப்போனான். விராடராஜன் அன்றிர வையும் மறுநாட்காலையையும் அங்கு சோலைகளில் கழித்து விட்டு, மறுநாள் நடுப்பகலில் தன் பட்டணத்திற்குப் போவதா கத் தீர்மானித்தான். மறுநாள் பொழுதுவிடிந்ததும் பாண்ட வர்களது ஒரு வருஷ அக்ஞாதவாஸம் முடிவுபெற்றது.

வினா 29.—இவ்வாறு இவர்கள் யாவரும் தெற்குப் பாகத்தில் ஸந் தோஷமாய் இருக்கையில் பட்டணத்துள் நடந்த விஷயம் என்ன?

விடை.—மறுநாட் காலையில் துரியோதனாதியர் விராடபட்டணத் திற்கு வடக்கு பக்கத்திலிருக்கும் பசுக்கூட்டங்களைக் கவர்ந் தனர். உடனே கோபாலர்கள் ஓடிவந்து, ஊரிலிருந்த விரா டராஜன் குமாரனாகிய உத்தரனிடம் முறையிட்டார்கள். அப்பொழுது உத்தரன் ஸ்திரீகள் மத்தியில் இருந்ததால், அவனுக்கு அதிகக் கர்வமுண்டாக 'எனக்கு ஒரு தகுந்த ஸாரதி மாத்திரம் இருந்தால், கௌரவஸேனை முழுவதையும் ஒரு நொடிப்பொழுதில் தோல்வியடையும்படி செய்து பசுக் களை மீட்டுக்கொண்டு வருவேன்' என, இதைக்கேட்டுக்கொ ண்டிருந்த ஸைரந்திரி உத்தரையை அழைத்து பிரகந்நளைக்கு ஸாரத்யம் தெரியும் என்று சொன்னாள். இதை உத்தரை தனது தமயன் உத்தரனுக்குச் சொல்ல, அவன் இதற்கு இசைந்து பிரகந்நளையை ஸாரதியாகக் கொண்டு வடக்கு நோக்கிப் புறப்பட்டான்.

வினா 30.—கௌரவ ஸேனையைக் கண்டதும் உத்தரன் நிலை என்ன மாயிற்று? பிரகந்நளை என்ன செய்தாள்?

விடை.—அலைமோதிக் கொண்டிருக்கும் ஸமுத்திரத்தைப்போலத் தோன்றிய கௌரவ ஸேனையைக் கண்டதும், உத்தரனுக்கு அதிக பயம் உண்டாக, அவனுக்கு 'சண்டையில் சென்று வீணாய் உயிரிழப்பதை விட, உயிர் பிழைத்து ஸுகமாய் வாழலாம்' என்று தோன்றியது. பிரகந்நளை இதைக் கவனியாது 'க்ஷத்திரியனுக்கு இது தகாது' என்று சொல்லிக் கொண்டே தேரை யுத்தகளத்தருகில் கொண்டு போனாள். உடனே உத்தரனுக்குப்பயம் அதிகரிக்க, அவன் தேரிலிருந்து குதித்துப் பட்டணம் நோக்கி ஓட ஆரம்பித்தான்.

வினு 31.—இவ்வாறு உத்தரன் ஓட ஆரம்பித்ததும் பிரகந்நளை அவனை எவ்வாறு தேற்றி என்ன செய்தாள்?

விடை.—அவனைப் பிரகந்நளை பின் தொடர்ந்து சென்று, பிடித்து தேர்த்தட்டில் கொண்டுவந்து உட்காரவைத்துப் பலவாறாகத் தேற்றப்பார்த்தாள். அவன் அதிக பயத்தோடிருப்பதைக் கண்டு, தேரை மயானத்திலிருந்த வன்னிமரத்திற்கு அருகில் கொண்டுபோய், உத்தரனை மரத்தின்மேலுள்ள ஆயுதங்களிருந்த காண்டீவ தனுஸை எடுத்துத் தன்னிடம் கொடுக்கும்படி பிரகந்நளை கேட்டாள். உத்தரன் பின்னும் தேறாது பயந்து நடுங்குவதைக்கண்டு, தமக்கு அக்ஞாதவாஸகாலம் அன்றோடு தீர்ந்தது என்று தெரிந்து கொண்டவனாய், தான் பாண்டவர்களுள் அர்ச்சுனனென்றும், தனது ஸகோதரர்களும் திரௌபதியும் விராடநகரத்தில் பல வேலைகள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் எடுத்துச்சொல்லி தனது பத்துப்பேர்களையும், அவைகள் தனக்கு வந்ததற்குக் காரணத்தையும் பிரகந்நளையாகிய அர்ச்சுனன் எடுத்துக்கூற, உத்தரனுக்கு ஒருவாறு தைரியம் வந்தது. உடனே உத்தரனை ஸாரதியாக வைத்துக்கொண்டு அர்ச்சுனன் பசுக்கூட்டங்களை மீட்கப் புறப்பட்டான்.

வினு 32.—இவ்வாறு அர்ச்சுனன் செய்துகொண்டிருக்கையில் துரியோதனாதியர் கூட்டத்தில் என்ன நடந்தது?

விடை.—கர்ணன், பிரகந்நளை உத்தரனைப் பிடிக்க ஓடுகையில் அவள் அர்ச்சுனன் என்று தெரிந்து துரியோதனனிடம் சொல்ல, அவன், தான் வந்த காரியம் முடிந்தது, பாண்டவர்களுள் ஒருவனை 13-வது வருஷம் முடிவதற்குமுன் கண்டு பிடித்தாய்விட்டது. ஆகையால் பாண்டவர்களை மறுபடியும்

முன் ஏற்பாட்டின்படி காட்டிற்கு அனுப்பிவிடலாம் என்று ஸந்தோஷித்தான். இதைக்கேட்ட பீஷ்ம துரோண கிருபர்களாகிய மஹாத்மாக்கள் யாவரும் கணக்கிட்டுப் பார்த்து, அன்று ஸூரிய உதயத்தோடு 13-வருஷங்கள் முடிந்துவிட்டன என்று சொல்ல, துரியோதனன் ஒன்றும் பேச முடியாமல் தத்தளித்தான். அதற்குள் அர்ச்சுனன் உத்தரனை ஸாரதியாக வைத்துக்கொண்டு சண்டைக்கு வர யாவரும் யுத்தத்திற்கு ஸித்தமானார்கள்.

வி௵ 33.—யுத்தம் எவ்வாறு நடந்து எவ்வாறு முடிவுபெற்றது?

விடை.—அர்ச்சுனன், பீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமன் முதலியவர்களை எதிர்த்து, முறையே சண்டைக் காரம்பித்து ஒவ்வொருவரையும் தோல்வி அடையும்படி செய்து வருகையில், துரியோதனன் பயந்து பசுக்கூட்டங்களை ஓட்டிக்கொண்டு, ஹஸ்தினாபுரியை நோக்கிச்சென்றான். அர்ச்சுனன் கர்ணனை இரண்டுதரம் தோல்வியடையும்படி செய்து, பீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமா ஆகிய இவர்களையும் வென்று, பசுக்களைத் தேடிப்பார்த்தான். பின்பு பசுக்களைத் துரியோதனன் வெகுதூரத்தில் ஓட்டிப்போவதாகக் கேள்வியுற்று அவனைத் தொடர்ந்துசென்று ஜயித்து பசுக்களைத் திருப்பிவருகையில் துரியோதனனுடைய ஸேனைகள் அர்ச்சுனனை எதிர்த்து சண்டையிடவந்தன. அர்ச்சுனன், பசுக்களது இரு பக்கங்களில் ஊர்வரையில் சரக்கூடுபோட்டு மறைக்க, பசுக்கூட்டங்கள் அதனுள் விளையாடிக்கொண்டு ஊர் போய்ச்சேர்ந்தன. துரியோதனாதியர்கள், அர்ச்சுனனும் பசுக்களும் போவதைப் பார்த்திருந்தபோதிலும் சரக்கூட்டைச் சின்னபின்னமாக்க முடியாது தயங்கி நின்றனர். பசுக்கள் ஊரை நோக்கிச்சென்றதும், அர்ச்சுனன் மறுபடியும் கௌரவவீரர்களோடு சண்டை செய்து, அவர்களைத் தோல்வியடையும்படி செய்தான். இவ்வாறு கௌரவ ஸேனையைச் சின்ன பின்னப் படுத்திவிட்டு, இருவரும் ஒருசோலையில் வந்து தங்கினார்கள்.

வி௵ 34.—நகரப் பிரவேசம் செய்யவேண்டியதற்கு இவர்கள் என்ன ஏற்பாடு செய்தார்கள்? பின் என்ன நடந்தது?

விடை.—அர்ச்சுனன் உத்திரனை நோக்கி ' நீயே கௌரவர்களைவென்றதாக ஊருக்குத் தூதரிடம்சொல்லி அனுப்பிவிடு. நான்

வென்றதாகச் சொல்லவேண்டாம்' என உத்திரனுக்கு இவ்வாறு செய்ய மனம் வராதபோதிலும், அர்ச்சுனனது வேண்டுகோளிற்கு இசைந்து, தூதரை அனுப்பி விராடராஜனுக்கு ஸங்கதியைத் தெரிவித்தான். உடனே, பட்டணம் அலங்காரமாக, யாவரும் உத்தரனது வரவை வெகு ஆவலோடு எதிர் பார்த்திருந்தனர்.

வினு 35.—இவ்வாறு ராஜன் தனது அருமைக் குமாரனை எதிர் பார்த்திருக்கையில் ஸபையில் ஏன் என்ன விபரீதம் நடந்தது.

விடை.—அரசனுக்கு ஸந்தோஷம் அதிகரித்ததால், சொக்கட்டானைக் கொண்டுவரச்சொல்லி, கங்கபட்டரைச் சூதாடவரும்படி அழைத்தான். கங்கபட்டர், அதிக சந்தோஷத்தோடு கூடியவன், சூதாடினுல் ஏதாவது விபரீதம் விளையும் ஆகையால் தாம் சூதாட வருவதில்லை என்றூர். பின்பு அரசன் கட்டாயப்படுத்த, இருவரும் சூதாட உட்கார்ந்தனர். சூதாடிவருகையில் அரசன் 'என் பிள்ளை கௌரவர்களை வென்றுவிட்டானே' என்று சொல்லிக்கொண்டு ஆட, கங்கபட்டர் 'பிரகந்நளையை ஸாரதியாய் வைத்திருக்கும்போது அவனுக்குத் தோல்வி ஏன் உண்டாகும் என்று சொல்லிக்கொண்டு சொக்கட்டான் காயை உருட்டினுர். உடனே 'என்ன இந்தப் பிராமணன் என் பிள்ளையையும், ஒரு பேடியையும் ஸமமாய்க் கூறுகிறுன்' என்று அரசனுக்குப்பட, அவனுக்குக் கோபமுண்டாயிற்று. அப்பொழுது தன் கையிலிருந்த சொக்கட்டான் காயால் கங்கபட்டரது முகத்தில் வெகு வேகமாய் அரசன் இடித்தான். அது கங்கபட்டரது நெற்றியில் பட, உடனே இரத்தம் தாரை தாரையாய்ப் பெருகத் தொடங்கிற்று. அதைக் கீழே விழாது, தன்கையில் ஏந்திக்கொண்டு, அருகிலிருந்த ஸைரந்திரியைநோக்க அவள் தனது கணவனது உட்கருத்தை அறிந்து கொண்டு, ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து இரத்தம் கீழே விழாது அதில் ஏந்தினுள்.

வினு 36.—உத்திரன் இராஜ ஸபைக்கு வந்ததும் என்ன நடந்தது? ஏன்?

விடை.—உத்தரனும், அர்ச்சுனனும் ஸபை வாசலில் இருந்துகொண்டு, அரசனுக்கு தமது வரவைத் தெரிவிக்க, அரசன் இருவரையும் தன் முன் கொண்டுவந்து விடும்படி வேலைக்

காரனை ஏவினன். யுதிஷ்டிரர் வாயில் காப்போனிடம் சென்று உத்தரனை மாத்திரம் உள்ளேவிடும்படி கட்டளையிட, அவனும் அவ்வாறே செய்தான். உத்திரன் வந்து தகப்பனரை அடி பணிந்துவிட்டு, கங்கபட்டரிடம்போக, அவர் நெற்றியிலிருந்து இரத்தம் வருவதையும், ஸைரந்திரி அவருக்கு பணிவிடை செய்வதையும் கண்டு, இந்த அபராதம் செய்தவர் தன் தகப் ஞர் எனக்கண்டு, கங்கபட்டரை சீக்கிரம் ஸமாதானப் படுத்த வேண்டும் என்று தகப்பனரை மிகக்கடிந்து பேசினன். உடனே கங்கபட்டர் யாரோ பெரியவர் என்று அரசனுக்குத் தோன்ற, அவன் தணிந்துபேசி கங்கபட்டருக்கு ஸந்தோஷ முண்டாக்கினன்.

வின 37.—பிரகந்நளை எப்பொழுது ஸபைக்கு வந்தாள்? பிரகந் நளையை ஏன் உள்ளே விடக்கூடாது என்று தருமபுத்திரர் ஏற்பாடு செய்தார்?

விடை.—அர்ச்சுனன் முன்னமேயே 'யுத்தகாலங்கள் தவிர மற் றைய காலங்களில் என் தமையனை யார் இரத்தம் வந்து கீழே விழும்படி காயப்படுத்துகிறார்களோ, அவர்களை நான் உடனே கொல்லுவேன்' என்று சபதம் செய்திருக்கிறன். இது விராட ராஜன் தம்மைக் காயப்படுத்தியவுடன், கங்கபட்டருக்கு ஞாப கம் வர, பிரகந்நளை ஸபைக்குவந்து இரத்தம் ஒழுகும் தன் னைப் பார்த்தால் விராடராஜனைக் கொல்லப் போவாள் என்று எண்ணி தன் இரத்தம் அடங்கும் வரையில் அவளை ஸபை வாயிலில் நிறுத்திவைத்துப் பின்பு உள்ளேவரும்படி செய்தார்.

வின 38.—அதன் பின்பு என்ன நடந்தது?

விடை.—கங்கபட்டரது இரத்தம் நின்ற உடனே, வாயிலிலிருந்த பிரகந்நளையைக் காவலாளி உள்ளே விட்டான். பிரகந்நளை வந்ததும், உத்தரன் தான் கௌரவ ஸேனையைக் கண்டு பயந் தோடுங்காலத்தில், ஒரு திவ்ய புருஷன் தன்முன் தோன்றி, தன்னை தைரியப்படுத்தி தேரில் ஸாரதியாக வைத்துக் கொண்டு, கௌரவஸேனைகளை சின்னபின்னப் படுத்தி பசுக் கூட்டங்களை மீட்டுவந்து மறைந்து போனன் என்று சண் டைக் கதையை விஸ்தாரமாய்ச் சொன்னன்.

வின 39.—இது முடிந்ததும் பாண்டவர்கள் எவ்வாறு வெளி வந்தனர்?

விடை.—மறுநாட் காலையில் பாண்டவர்கள் ஐவரும், திரௌபதியும், மங்கள ஸ்நானம் செய்து, ஆடையாபரணம் அணிந்து, விராடராஜன் ஸபைக்கு ஸூரியோதயத்திற்கு முன்னர்வந்து, அங்கிருந்த சிங்காதனங்களில் உட்கார்ந்தார்கள். விராட

ராஜன் வந்து, தான் உட்கார இடமில்லாதது கண்டு 'நீங்கள் யார்?' என்று கேட்க, அர்ச்சுனன் எழுந்து தங்களது குல கோத்திரம் பெயர் முதலியவைகளை விஸ்தாரமாய்ச் சொன்னுன். கீசகனையும், உபகீசகர்களையும் எளிதில் கொன்றது பீமன் என்பதையும், மற்றையவர்கள் இன்ன இன்ன வேஷத்தோடு இவ்வொரு வருஷகாலம் அவனுக்கு இன்ன இன்ன வேலைகள் செய்து வந்தார்கள் என்பதையும், முறையே அரசனுக்கு அர்ச்சுனன் வெளியிட்டான். இதன் பின்பு அரசன் தன்னை தென்புற மாடுபிடிச்சண்டையில் காப்பாற்றியது பீமன் என்று தெரிந்துகொண்டான்.

வினு 40.—இவ்வாறு பாண்டவர்கள் தன்னிடம் வேலை செய்தார்கள் என்று தெரிந்ததும் அரசன் என்ன செய்தான்?

விடை.—இந்தவிஷயங்களை அரசன் கேட்டதும், தனக்குப் பாண்டவர்களோடு ஸம்பந்தம் ஏற்படவேண்டுமென்று அவனுக்குத் தோன்ற, அர்ச்சுனனுக்கு உத்தரையைக் கொடுத்து விவாஹம் நடத்துவதாகச் சொன்னுன். ஆனுல் அர்ச்சுனன் இதை ஒப்புக்கொள்ளவில்லை.

வினு 41.—ஏன் அர்ச்சுனன் இதை ஒப்புக்கொள்ளவில்லை? விராடராஜன் மனதை அர்ச்சுனன் எவ்வாறு திருப்திசெய்துவைத்தான்?

விடை.—தான் இதுவரை, உத்தரையை தனது பெண்ணுகவே பாவித்து, உபாத்தியாயர் ஸ்தானத்திலிருந்து ஸஹஜமாய் இருந்து விட்டதால், தன்னுல் அவளைப் பெண்சாதியாகக் கருதல் முடியாது என்று அர்ச்சுனன் மறுத்து விட்டான். விராடராஜனைத் திருப்தி செய்வதற்காக, தனது பிள்ளை அபிமன்யு (ஸுபத்திரையின் பிள்ளை) வுக்கும் உத்தரைக்கும் கல்யாணம் நடத்துவதாக ஒப்புக்கொண்டான். இதைத் தருமபுத்திரர் ஒப்புக்கொள்ள, உத்தரையும் ஒப்புக்கொள்ள, உத்தரைக்கும், அபிமன்யுவுக்கும், கிருஷ்ண பரமாத்மாவின் ஸந்நிதானத்தில், விராட பட்டணத்தில் வெகு கோலாஹலமாய் விவாகம் நடந்தது.

வினு 42.—இந்த விவாஹத்தின் முக்கியச் சிறப்பு என்ன?

விடை.—இதனுல் அபிமன்யுவுக்கு பரீக்ஷித்து ராஜன் பிறந்தான். இவன் மூலமாய், உலகத்தில் யாவரும் அறிய, பாகவதம் என்ற அரிய நூல் வெளிவந்தது. இப்பரீக்ஷித்திற்கு ஜனமேஜய மஹாராஜன் பிறந்தான். இவன் மூலமாய், இம்மஹாபாரதமே வெளிவந்தது. இச் சிறந்த காரியங்கள், இக்கல்யாணத்தால் உண்டானமையால் இக்கல்யாணம் மஹாபாரதத்தில் மிகச் சிறந்தது.

கிருஷ்ண விச்வரூப அவஸரம்.

201-ம் பக்கம் பார்க்க.]

5-வது உத்தியோகபர்வம்.

மீனமாகியுங் கமடமதாகியும் மேருவை யெடுக்குந்தா
ளேனமாகியு நரவரியாகியு மெண்ணருங் குரளாயுங்
கூனல்வாய்மழுத் தரித்தகோவாகியு மரக்கரைக்கொலைசெய்த
வானநாயக னாகியுநின்றமான் மலரடிமறவேனே.

வினா 1.—இவ்வாறு பாண்டவர்கள் வெளி வந்ததும், விராடராஜன் ஸபையில் மேல் நடக்கவேண்டிய காரியத்தைப்பற்றி யார் யார் என்னென்ன சொல்லக் கடைசியில் என்ன தீர்மானம் ஏற்பட்டது.

விடை.—விராடராஜன் ஸபையில், பாண்டவர்கள் வெளிவந்து விளங்குகிறார்கள் என்று கேள்விப்பட்டதும், அவர்களது ஸ்நேகிதர்களாகிய யாதவாள் முதலியவர்கள் எல்லோரும் துருபத ராஜனும், அங்குவந்து கூடினார்கள். கிருஷ்ணபகவான், கூடிய சீக்கிரத்தில் துரியோதனனுக்கு ஒரு தூதனை அனுப்பி, தருமபுத்திரரது, இராஜ்ய பாகத்தைச் சீக்கிரம் கொடுத்துவிடும்படி தெரிவிக்கவேண்டும் என்று தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். பலராமர், எப்பொழுதும் துரியோதனனிடம் பக்ஷபாதியாகையால், அவனைக்கொஞ்சம் தாங்கிச் சில வார்த்தைகள் சொல்ல, உடனே இவர்கள் தம்பியாகிய ஸாத்யகி என்பவன் பலராமரை நடு ஸபையில் கடுமையான வார்த்தைகள் சொல்லி அவமானப் படுத்தினான். உடனே துருபதராஜன் எழுந்து, 'ஒருவேளை சண்டை வந்தால் அதற்கு நாம் தயாராய் இருக்கவேண்டும். ஆதலால் நமக்கு அதில் ஸகாயம் செய்யச் சீக்கிரத்தில் சிற்றரசர்களுக்கு இந்த விஷயங்களைத் தெரிவித்து அவர்களை வெகு த்வரையாய் படைகள் சேர்க்கச் சொல்லவேண்டும்' என்று தனது அபிப்பிராயத்தை வெளியிட்டான். இதைக் கிருஷ்ணபகவானும் அங்கீகரித்தார். இவ்வாறு படைகள் சேர்ப்பதற்கு, சிற்றர

சர்களிடம் சில தூதரையும், தருமபுத்திராது இராஜ்ய பாகத்தை கொடுத்து விடும்படி சொல்லி வருவதற்காகத் துரியோதனனுக்கு ஒரு தூதனையும் அனுப்புவதாக தீர்மான மானவுடன், கிருஷ்ணபகவான் யாதவர்களை அழைத்துக்கொண்டு விராடராஜனிடம் மரியாதைகளைப் பெற்றுத் துவாரகையை நோக்கிச் சென்றார்.

வினு 2.—இப்படி கிருஷ்ண பகவான் சென்றதும், துருபதராஜன் இந்தத் தீர்மானங்களை எவ்வாறு நடத்தினன்?

விடை.—பரதகண்டத்தில் உள்ள தமக்குத்தெரிந்த அரசர்கள் எல்லோரிடத்தும், பாண்டவர்களுக்கு ஸகாயமாய்ப் படை முதலியவைகளோடு புறப்பட்டு வரவேண்டும் என்று சொல்லி வருவதற்காக பலதூதர்களை அனுப்பினன். துரியோதனனுக்குத் தனது புரோஹிதர்கள் ஒருவரை அழைத்து, கேட்டவர் மனம் உருகிப் பாண்டவருக்கு இராஜ்ய பாகம் கொடுப்பது நியாயம் என்று சொல்லும்படியாக, வார்த்தை சொல்லும் வழிகளை அவருக்கு எடுத்துக்காட்டி, அவரை ஹஸ்தினபுரத்திற்குத் தூதாக அனுப்புவித்தான். இதன் பின்பு பாண்டவர்களை விராடராஜனும் துருபதராஜனுமாகச் சேர்ந்து உபப்பிலாவியம் என்ற கிராமத்தில் குடியேற்றி ஸுகமாய்ப் பாதுகாத்து வந்தனர். அப்பொழுது பாண்டவர்களிடம் அநேக அரசர்கள் தமது படைகளுடன் வந்து சேர்ந்தார்கள்.

வினு 3.—யாதவர்களையும் கிருஷ்ணபகவானையும் படைத்துணையாக அழைப்பதற்கு யார் சென்றது? அங்கு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—அர்ச்சுனனே கிருஷ்ண பகவானைப் படைத்துணையாக அழைப்பதற்கு புறப்பட்டான். அங்குச் சென்று கிருஷ்ண பகவான் இருக்குமிடம் போகையில், அங்கு அவர் படுத்து உறங்கிக் கொண்டிருப்பதையும் தனக்கு முன்னமே துரியோதனன் மகா இறுமாப்போடும், அவர் கால்மாட்டில் உட்கார்ந்தால் மானக்குறைவு என்கிற எண்ணத்தோடும், அவர் தலைமாட்டில் உட்கார்ந்திருப்பதையும் கண்டான். உடனே அர்ச்

சுனன் மஹா விநயம், பக்தி முதலிய நற்குணங்களோடு கிருஷ்ண பரமாத்மாவின் கால்மாட்டில் வந்து நமஸ்கரித்துத் தரையில் உட்கார்ந்தான். அவன் வரவை எதிர்பார்த்திருந்த மாயாவியான பகவான் தூக்கத்திலிருந்து எழுந்திருப்பவர் போல் கண்ணைத் தேய்த்துக்கொண்டு உடனே எழுந்தார். அர்ச்சுனன் உடனே அவர் கண்ணில் பட, 'உனக்கு என்ன வேண்டு' மென்று கேட்க, அதற்கு அர்ச்சுனன் 'எனக்கு நீர் போரில் ஸகாயமாய் வரவேண்டு' மென, 'அப்படியே ஆகட்டும்' என்று ஒப்புக்கொண்டார்.

வினு 4.—முன்னமேயே வந்து காத்துக்கிடந்த துரியோதனன் கதி என்னமாயிற்று?

விடை.—முன் சொல்லியபடி அர்ச்சுனனுக்கு வாக்களித்து விட்டு தற்செயலாய் திரும்புபவர்போல் பகவான் தலையைத் திருப்பத் துரியோதனனைக் கண்டார். உடனே அவனிடமிருந்து அவன் நோக்கத்தை அறிந்து கொண்டு, 'முன் அர்ச்சுனனுக்கு ஸகாயம் செய்வதாக நான் வாக்களித்தாய் விட்டது. ஆகையால் கிருதவர்மாவிடம் இருக்கும் ஒரு அக்ஷௌகணி ஸேனையை உனக்கு ஸகாயமாய் அனுப்புகிறேன்' என்று பகவான் சொல்ல, அதைத் துரியோதனன் ஒப்புக்கொண்டு போய் விட்டான்.

வினு 5.—கிருஷ்ண பகவானை படைத்துணையாக அழைக்கப் போன துரியோதனன், எவ்வாறு கிருதவர்மாவினது அக்ஷௌகணி ஸேனைகளைப்பெற்று திருப்தி அடைந்து போனான்?

விடை.—துரியோதனன் தனது எண்ணத்தைத் தெரிவித்ததும், பகவான் 'நான் இந்த யுத்தத்தில் படை எடுக்கப்போகிறதில்லை. படை எடுக்காத என் ஸகாயம் வேண்டுமா? அல்லது, படை எடுத்துப் போர்செய்யக் கூடியதும் கிருதவர்மாவால் நடத்தப் பெற்றதுமான ஒரு அக்ஷௌகணி ஸேனை வேண்டுமா? என்று கேட்டார். அப்பொழுது பகவானது குணுதிசயங்களை அறியாத துரியோதனன், கிருதவர்மாவது

ஸேனையை ஸந்தோஷமாய்ப் பெற்றுக்கொண்டு, ஹஸ்தினுபுரி போவதற்முன், பலராமரிடம் வந்தான். அவர் 'இருதிறத் தாரும் எனக்கு வேண்டியவர்கள் ஆகையால், நான் ஒரு பக் கத்திலும் சேரமாட்டேன்' என்று மறுக்கத் துரியோதனன் ஹஸ்தினுபுரம் சென்முன்.

வினு 6.—பகவான் படை எடாது பாண்டவர்களுக்கு எவ்வாறு ஸகாயம் செய்வதாக ஒப்புக்கொண்டார்?

விடை.—பகவான் அர்ச்சுனனது வேண்டுகோளின்படி, அவனுக்கு ஸாரதியாக இருந்து யுத்தத்தை ஒழுங்குபெற நடத்தி வருவ தாக ஒப்புக்கொண்டார்.

வினு 7.—அப்பொழுது பாண்டவர்களுக்கு ஸகாயமாக வந்த எந்த அரசனை துரியோதனுதியர் எவ்வாறு வசப்படுத்திக் கொண் டார்கள்?

விடை.—பாண்டவர்களது மாமனுகிய மத்திரதேசாதிபதி சல்லியன் தனது ஏராளமான ஸேனைகளோடு பாண்டவர்கள் இருக்கும் உபப்பிலாவ்யத்தை நோக்கிப் புறப்பட்டான். இந்தச் செய்தி யை துரியோதனன் தெரிந்துகொண்டு சல்லியன் வரும் வழி யில் அனேக அரண்மனைகள், கிணறுகள், தண்ணீர்ப்பந்தல் கூடாரங்கள் முதலியவைகளை ஏற்படுத்தி, காரியஸ்தர்கள் மூல மாய் இவைகளை நடத்தி வந்தான். இவைகளால் ஸந்தோஷ மடைந்து சல்லியன் 'இதை ஏற்படுத்திய தர்மபுத்திரரது ஆட்கள் எங்கே, அவருக்கு வெகுமதி அளிக்கிறேன்' என்று உறக்கச்சொன்னுன் உடனே அங்கு ஒளிந்திருந்த துரியோ தனன் ஓடிவந்து தனக்கு யுத்தத்தில் ஸேனுதிபதியாக வேண்டு மென்று கேட்க, சல்லியன் தான் அடைந்த உபகாரத்திற்குப் பதிலாக துரியோதனனுக்கு ஸகாயம் செய்வதாக ஒப்புக் கொண்டான். இந்த விதமாய் சல்லியனை மோசம் செய்து துரியோதனன் தன் வசப்படுத்திக்கொண்டான்.

வினு 8.—இவ்வாறு துரியோதனனுக்கு வசப்பட்ட பின்பு சல்லி யன் என்ன செய்தான்?

விடை.—பாண்டவர்களிடம் சென்று, அவர்களைப் பார்த்து ஹஸ் தினுபுரம் தன் ஸேனையோடு வருவதாக துரியோதனனுக்கு

வாக்களித்துவிட்டு, உபப்பிலாவியம் சென்று பாண்டவர்களைக் கண்டான். அங்கு, தான் மோசம் போனதை எடுத்துரைக்க, தருமபுத்திரர் ' அப்படியானால் அர்ச்சுனனும், கர்ணனும் சண்டையில் எதிர்க்குங்கால், கர்ணனுக்கு நீ ஸாரதியாக இருந்து, அவனை அதைரியப்படுத்தி அவன் சீக்கிரத்தில் அர்ச்சுனனால் அடிபட்டுவிழும்படி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சல்லியன் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு, பெரியவர்களும் கஷ்டகாலங்கள் வருங்கால் கஷ்டப் படவேண்டியதுதான் என்னும் விஷயத்தில், இந்திரன் பட்ட கஷ்டங்களை எடுத்துரைத்தான்.

வினா 9.—இந்திரனுக்குக் கஷ்டம் வரக் காரணம் என்ன ?

விடை.—துவஷ்டா என்ற ஒரு மஹானுக்கு, இந்திராணியிடம் கோபமுண்டாக, மூன்று சிரமுடைய ஒரு பிராமணனை சிருஷ்டித்து, அவரை தபஸு முதலியவைகளைச் செய்யச் சொல்லி இந்திர பதவியை விரும்பும்படி துவஷ்டா ஏவினார். இந்தப் பிராமணர் செய்த தபஸை இந்திரன் முதலில் அப்ஸர ஸ்திரீகளால் அழிக்கப் பார்த்து முடியாததுகண்டு, கடைசியில் தான் தனது வச்சிராயுதத்தால் இப்பிராம்மணனைக் கொன்றான். உடனே இந்திரனை பிரம்மஹத்தி சூழ்ந்து கொண்டது.

வினா 10.—இதற்காக இந்திரன் என்ன செய்தான்?

விடை.—இந்திரன் பிரம்மஹத்திக்குப் பயந்து உலகெங்கும் ஓடிப் பார்த்தும் பிரம்மஹத்தி தன்னைத் தொடர்ந்து வருவதைக் கண்டு, கடைசியாய் ஹிமயமலைக்கு வடக்கே தாமரைப் பூக்கள் நிறைந்த ஓர் ஏரியுட் சென்று ஒரு தாமரைத்தண்டுள் ஒளித்துக்கொண்டான். பிரம்மஹத்தி அக்குளத்துள் செல்ல முடியாது கரையிலேயே இருந்தது.

வினா 11.—இந்திரன் இவ்வாறு சென்றதும், யார் இந்திரப் பட்டத்திற்கு வந்தது ? அவன் என்ன செய்தான் ?

விடை.—நகுஷ மஹாராஜன் அக்காலத்தில் 100 அசுவமேதயாகம் செய்திருந்தமையால், அவனுக்கு இந்திரப்பட்டம் கிடைத்தது. அவனுக்கு உடனே இந்திராணியுடன் ஸுகிக்கவேண்டுமென்ற கெட்ட எண்ணம் வர, அவன் தன்னிடம் இந்திராணியை வரும்படி தூதனிடம் சொல்லி அனுப்பினான்.

வினு 12.—இந்திராணி கதி என்னமாயிற்று? அவள் என்ன செய்தாள்?

விடை.—இந்திராணி முதலில் நகுஷனிடம் போவதற்கு மயங்க தேவர்கள் அவளை நகுஷனிடம் போய் கொஞ்ச நாள் கெடு வைத்துப் பின்பு அவனோடேயே வந்து சேருவதாக ஒப்புக் கொண்டு வரும்படி ஏவினார்கள். உடனே, இந்திராணி நகுஷனிடம் சென்று, இவ்வாறு சொல்ல, அவன் அதற்கு ஒப்புக் கொண்டான். இதைக் கேட்டுக்கொண்டு, இந்த நாளுள் இந்திரனிருக்கு மிடத்தைத் தேடிக் காண இந்திராணி யத்தனம் செய்து, கடைசியில் இந்திரன் தாமரைத் தண்டுள் ஒளித்திருப்பதை ஒரு தேவதையின் ஸகாயத்தால் கண்டு பிடித்தாள். அப்பொழுது இந்திரன் தான் கூடிய சீக்கிரத்தில் வருவதாகச் சொல்ல, அதற்குள் தனக்கு நகுஷனால் அவமானம் வருமே என்று இந்திராணி சொன்னாள்.

வினு 13.—இந்திராணிக்கு இந்திரன் என்ன உபாயம் சொல்லிக் கொடுத்தான்? இது எவ்வாறு முடிந்தது?

விடை.—நகுஷன் கெடுவு முடிந்ததும், உன்னை அழைப்பான். அப்பொழுது நீ, 'இந்திரன் என்னிடம் எப்படி ஸப்தரிஷிகளால் சுமக்கப்பட்ட பல்லக்கில் வருவாரோ அதுபோல நீயும் வந்தால், நான் உன்னுடன் சேருவேன்' என்று சொல்லு. இதனால் காமுகனான நகுஷனுக்கு ஆபத்துவரும் என்று இந்திரன் உபாயம் சொன்னான். இது எவ்வாறு முடிந்தது என்பதை ஆரண்ய பர்வத்தில் 85-ம் விடையில் காண்க.

வினு 14.—இந்திரன் எவ்வாறு பிரம்மஹத்தி நீங்கி விளங்கினான்?

விடை.—பிரகஸ்பதி முதலியவர்கள், அக்கினியின் மூலமாகத்தேடி, இந்திரன் இருக்கும் இடத்தை அறிந்து, விஷ்ணுவினிடம் தெரிவிக்க, அவர், தமது உத்தேசமாக ஒரு அசுவமேத யாகம் நடத்தினால் இந்திரனுக்கு பிரம்மஹத்தி நீங்கிவிடும் என, தேவர்கள் அவ்வாறே செய்து இந்திரனைப் புனிதனாக்கினார்கள். உடனே இந்திரன் அமராவதி வந்து, முன்போல அரசுபுரிந்து வந்தான்.

வினு 15.—இக்கதையைச் சொன்ன பின்பு சல்லியன் என்ன செய்தான்?

விடை.—'இந்திரனுக்கு வந்த கஷ்டம் எவ்வாறு நீங்கியதோ, அது போல உங்களுக்கு வந்திருக்கும் கஷ்டமும் நீங்க, நீங்கள் ஸுகமடைவீர்' என்று பாண்டவர்களை ஆசீர்வதித்து விட்டு சல்லியன் துரியோதனனிடம் சென்றான்.

வின 16.—துரியோதனனுக்கு அனுப்பிய தூதரான புரோஹிதர் காரியம் என்னமாயிற்று?

விடை.—புரோஹிதர் துரியோதனன் ஸபைக்குச் சென்று, ஸாம தான பேதமாகிய ராஜோபாயங்களை முன்னிட்டுக்கொண்டு பாண்டவர்களது அபிப்பிராயத்தை வெளியிட, பீஷ்மர் அதை அங்கீகரித்து, தம்மாலியன்றமட்டும் திருதிராஷ்டிர ராஜனைப் போரில்லாது பாண்டவர்களுக்கு அவர்களுடைய பாகத்தை கொடுக்கும்படி சொல்லிப்பார்த்தார். இதன் மத்தியில் கர்ணன், பீஷ்மர் அர்ச்சுனனைப் புகழ்ந்து பேசுங்கால், அவரைத் தடுத்துப்பேச, அவர் கர்ணனை அந்த ஸபையில் நன்றாய் அவமானப்படுத்தினார். திருதிராஷ்டிர ராஜன் புரோஹிதனை நோக்கித் தான் கூடிய சீக்கிரத்தில் பாண்டவர்களுக்குத் தன் கருத்தை ஸஞ்சயர் மூலமாய்த் தெரிவிப்பதாகச் சொல்லி அனுப்ப, அவரும் பாண்டவர்களிடம் வந்து நடந்த விஷயம் யாவையும் சொல்லிவிட்டார்.

வின 17.—ஸஞ்சயர் வந்து பாண்டவர்களுக்கு என்ன ஸங்கதி தெரிவித்தார்?

விடை.—முதலில், ஸஞ்சயர் சண்டையிடாது எல்லோரும் ஸமாதானமாகப் போகவேண்டியது என்று திருதிராஷ்டிர மஹாராஜா சொன்னதாகச் சொன்னார். அதற்கு யுதிஷ்டிரர் தாங்கள் சண்டைபோடப் பயப்பட்டவர்களல்ல வென்றும், அப்படிச் சண்டையிடத்தகுந்த காரணங்கள் இருக்கின்றன வென்றும், அப்படி இருந்தபோதிலும், அவருக்காகத் தாங்கள் சண்டையிடாது நிற்பதாகவும், தங்களுக்கு முன் இருந்தபடி இந்திரப்பிரஸ்தத்தைத் துரியோதனுதியர் ஸமாதானமாய்க் கொடுத்து விடட்டும் என்றும் சொன்னார். அப்பொழுது ஸஞ்சயர் 'திருதிராஷ்டிராருக்கு நீங்கள் சொல்லியவாறு கொடுப்பது இஷ்டம் தான். அவரது கொடிய பிள்ளைகள் கொடுக்கமாட்டேன் என்று பிடிவாதமாய் இருக்கிறார்கள், அவர்களைத் தடுத்துச்சொல்ல தைரியம் அவருக்கில்லை. ஆகையால், அவர் உங்களைச் சண்டைக்கு வராது எங்கேயாவது

சென்று பிரம்மசாரிகள்போல ஸத்காலக்ஷேபம் செய்து புண்ணியம் ஸம்பாதிக்கச் சொன்னார். அவர் முரட்டுப் பிள்ளைகளோடு சண்டையிடுவதால் பயன் ஒன்றும் இல்லை, அந்தச் சண்டையில் யார் ஜயிப்பார்களோ? யார் தோற்பார்களோ? யார் ஜயித்தாலும் அனேகம் பேர்கள் முதலில் இறக்கவேண்டும். ஏனெனில் இருபக்கத்திலும் மஹா பலவான்கள் சண்டைக்கு வருவார்கள். வேண்டியவர்கள் இறந்தபின் உங்களுக்கு ஜயம் கிடைத்தென்ன பயன்? தோல்வி அடைந்தால் அவமானம். ஆகையால் உங்களை வேறு எந்தப்பட்டணமாவது போய், சண்டை சச்சரவின்றி ஸுகமாய் நல்ல காலம் கழிக்கச்சொன்னார்' என்று விஸ்தாரமாய்த் திருதிராஷ்டிரன் சொன்னதை, யாவரும் அறிய வெளியிட்டார்.

வினு 18.—இவ்வாறு நயவஞ்சகமாய் திருதிராஷ்டிரன் சொன்னதற்கு தருமபுத்திரர் என்ன பதில் சொன்னார்? அவ்விஷயத்தில் வேறு யார் தமது அபிப்பிராயத்தை சொன்னது? கடைசியில் என்ன முடிவுண்டாயிற்று?

விடை.—தருமபுத்திரர், திருதிராஷ்டிரர் சொல்லியபடி தாம், இராஜ்யம் வாங்காது ஸமாதானத்திற்கு வந்து ஸந்நியாஸிகளைப்போல வஸித்தல் க்ஷத்திரிய தர்மமல்லவென்றும், கிருஷ்ணபகவான் இவ்விஷயத்தில் என்ன சொல்லுகிறாரோ அப்படியே தாம் செய்வதாகவும் ஒப்புக்கொண்டார். இதைக் கேட்டு கிருஷ்ணபகவான் எழுந்து, முதலில், பாண்டவர்கள் துரியோதனாதியரால் அடைந்த அவமானம், கஷ்டம் இவைகளை கேட்போர் மனங்கரையும்படி எடுத்துரைத்து, கடைசியில் மஹாத்மாவான பாண்டவர்கள் சண்டைக்குவர சக்தியுடையவராயும் தயாராயும் இருந்தபோதிலும், நியாயமான ஸமாதானத்திலேயே எண்ணமுடையவர்களாய் இருக்கிறார்கள் என்று ஸஞ்சயரை திருதிராஷ்டிர ராஜாவிடம் சொல்லும்படி சொன்னார். தருமபுத்திரரும் இதை அங்கீகரித்தார்.

வினு 19.—ஸஞ்சயர் இதைக் கேட்டுக்கொண்டு ஹஸ்தினாபுரி போகுமுன், தருமபுத்திரர் என்ன சொல்லி அனுப்பினார்?

விடை.—துரியோதனாதியருக்கு ஸகாயம் செய்ய வந்திருக்கும் பெரியோர்கள் எல்லோருடைய க்ஷேமத்தைத் தாம் விசாரித்ததாக அவரவர்களிடம் சொல்லும்படி ஸஞ்சயருக்கு

தருமபுத்திரர் கட்டளை யிட்டார். 'இந்திரப்பிரஸ்தம் அல்லது வேறு ஏதாவது ஐந்து கிராமங்கள் இவற்றுள் எதையாவது எங்களிடம் கொடு. இல்லாவிட்டால் சண்டைக்குப் புறப்படு' என்று தாம் சொன்னதாக அவர் துரியோதனனிடம் சொல் லும்படி ஸஞ்சயரிடம் சொல்ல, அவர் தருமபுத்திரரிடம் விடைபெற்று ஹஸ்தினபுரம் சென்றார்.

வினா 20.—ஹஸ்தினபுரம் சென்று ஸஞ்சயர் என்ன செய்தார்?

விடை.—ஒரு நாள் ஸாயங்காலம் ஸஞ்சயர் ஹஸ்தினபுரம் வந்து, உடனே திருதிராஷ்டிரன் இருக்கும் அந்தப்புறம் சென்று, அரசனிடம் தாம் போய் வந்த செய்தியைச் சொன்னார். கடைசியில் 'பாண்டவர்களோடு ஸமாதானமாய் அவர்கள் கேட்டதை நல்ல மனதோடு கௌரவர்கள் கொடுக்காது, வீண் சண்டைக்குப் போவார்களேயானால், கௌரவர்கள் நிர்மூல மாய் அழிவார்கள் என்பது திண்ணம். அர்ச்சுனன் ஒரு வனே கௌரவரை ஜயிக்கப்போதும். அவனை விடச் சிறந்த வீரர்கள் யார் இருக்கிறார்கள். ஆகையால் எப்படியாவது பாண்டவர்களோடு ஸமாதானம் செய்துகொள்ள வேண்டும்' என்று ஸஞ்சயர் தமது அபிப்பிராயத்தை வெகு உருக்கத் தோடு வெளியிட்டுத் திருதிராஷ்டிரன் மனதைக் கலக்கி விட்டு, மறுநாள் காலை தருமபுத்திராதிகள் சொன்னவைகள் எல்லாவற்றையும் விடாது இராஜ ஸபையில் சொல்லி விடுவ தாக வாக்குக் கொடுத்து திருதிராஷ்டிரனிடம் விடைபெற்று தமது வீடு சேர்ந்தார்.

வினா 21.—அன்றிரவை திருதிராஷ்டிர மஹாராஜா எவ்வாறு கழித்தார்?

விடை.—திருதிராஷ்டிரன், எவ்வளவு தான் தூங்க முயன்றும், முடியாது அவன் மனம் குழம்பியது. தன் பிள்ளைகள் பாண்ட வர்களால் மாண்டுபோகப் போகிறார்களே என்ற ஏக்கத்தால் அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. உடனே அவன் விதுரரை அழைப்பித்துத் தன்னிடம் ஸஞ்சயர் வந்து பாண்டவர் கள் சொல்லியனுப்பிய விஷயத்தை மறுநாள் ஸபையில் சொல்லுவதாகச் சொல்லித் தன்னைப் பல்வாறாக நிந்தித்து பயமுறுத்தி போய்விட்டதாகவும், அதனால் தனக்குத் தூக் கம் வராது மனம் குழம்புகிறதாகவும், ஆதலால் ஏதாவது விஷயத்தைப்பற்றிச் சொல்லி அன்றிரவைக் கழிக்க வேண்

டும் என்றான். விதுரர், யுதிஷ்டிரரது மேன்மையையும், ஒற்றுமை யின்மையால் வரும் கேட்டையும், ஒரு முடிவை அடைவதற்கு ஏற்பட்ட நல்லது, மிச்சிரம், கெட்டது ஆகிய மூன்று வழியையும், ஸ்நேகிதர்கள் ஸம்பத் காலத்திலும், ஆபத் காலத்திலும் இவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதையும், சித்த நிரோத இந்திரிய நிரோதங்களால் வரும் பலன்களையும், எந்தக் கஷ்ட காலத்திலும் பொய் சொல்லக் கூடாது என்பதையும், மேலான குணங்களோடு கூடி இருத்தலே உயர்குடிப் பிறந்ததற்கு அடையாளம், கெட்ட குணங்களோ மனிதனது ஆயுளைக் குறைக்கும் என்பதையும், ஆசிரம தர்மங்களையும் பற்றி வெகு விஸ்தாரமாக எடுத்துரைத்துக் கடைசியில் பாண்டவர்களோடு எப்படியாவது ஸமாதானம் செய்துகொள்ள வேண்டியது என்று வற்புறுத்தினார். திருதிராஷ்டிரன் 'விதியை எவ்வாறு மதியால் வெல்லுவது' என்று சொல்லி, சும்மா இருந்தான். (இப்பாகத்திற்கு விதுரப்பிரஜாகரம் என்று பெயர்.)

வினு 22.—இதன் பின்பு யார் திருதிராஷ்டிரனுக்கு எதைச் சொன்னது? ஏன் விதுரர் இதைப்பற்றிக் கூறவில்லை?

விடை.—திருதிராஷ்டிரன், விதுரரை ஆத்மஞான விஷயத்தைப் பற்றிச் சொல்லும்படி தூண்ட, தாம் அதைப்பற்றிச் சொல்லத் தகுந்தவரல்லர் என்று சொன்னார். மேலும் திருதிராஷ்டிரன் இதைப்பற்றிக் கேட்கவேண்டும் என்று சொல்ல, விதுரர் தமது தியான விசேஷத்தால் அந்த நடு இரவில் அந்தப்புரத்திற்கு பிரம்மாவினது மானஸ புத்திரராகிய ஸனத்குமாரரை அழைப்பித்துத் தமது தமயனுக்கு ஆத்மஞானத்தை உபதேசிக்கச் சொன்னார். ஸனத்குமாரர் புண்ணிய பாப ரகஸியம், லோகாந்தரங்களின் ரகஸியம், மௌனநிலையின் ஸ்வரூபம், வேதங்களின் நோக்கம், ஸந்நியாஸ தர்ம விசேஷம், ஸந்நியாஸத்திற்கு விரோதமாக இருக்கும் குற்றங்கள், பிரம்மசரியத்தின் ஸ்வரூபம், பிரம்மஸ்வரூப லக்ஷணம் ஆகிய இவைகளை 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கி மறைந்தருளினர். இதற்குள் பொழுதுவிடியத் திருதிராஷ்டிரனும் விதுரரும் தமது காலைக்கடனை முடிக்க வெளியிற் சென்றனர்.

வினு 23.—மறுநாட்காலையில் ஸஞ்சயர் இராஜ ஸபையில் என்ன வெளியிட்டார்?

விடை.—நான் ஒருவனே கௌரவ ஸேனையை யமலோகத்திற்கு அனுப்பி இராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொள்ளுவேன். என்னிடத்தில் அவ்வளவு சிறந்த அஸ்திரங்கள் இருக்கின்றன. மேலும் ஜோதிஷத்தில் சிறந்தவர்கள் எங்களுக்கு ஜயம் வரும் என்றும் கௌரவருக்கு தோல்விவரும் என்றும் சொல்லி இருக்கிறார்கள். கிருஷ்ணபகவானும் இதை உண்மை என்று ஒத்துக்கொள்ளுகிறார். ஆகையால் நாங்கள் சண்டைக்கு வரத் தயார் தான். எப்படி இருந்தபோதிலும் நாங்கள் இந்த விஷயத்தில் பீஷ்மர், துரோணர், கிருபர் முதலிய மஹாத்மாக்கள் என்ன சொல்லுகிறார்களோ அதன்படி நடக்கத் தயாராய்க் காத்திருக்கிறோம்' என்று அர்ச்சுனன் சொல்லிவிட்டதாக ஸஞ்சயர் ஸபையில் சொன்னார்.

வின 24.—ஸஞ்சயர் இவ்வாறு சொன்னதும் ஸபையில் இதைப் பற்றி என்ன ஆலோசனை நடந்தது?

விடை.—இதைக் கேட்டதும் பீஷ்மர், அர்ச்சுனன், கிருஷ்ண பகவான் ஆகிய இவர்கள் நரநாராயணர் என்றும், இவர்கள் யுகங்கள் தோறும் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனார்த்தம் உலகத்தில் அவதரிப்பவர்கள் என்றும், அவர்களோடு ஸமாதானமாக நடக்காவிட்டால், துரியோதனன் முதலிய கொடியவர்களுக்கும் கேடு இவர்களால் விளையும் என்றும் விஸ்தாரமாக எடுத்துச் சொன்னார். துரோணரும் பீஷ்மர் சொல்லியதே நியாயம் என்றார். இதன் பின்பு திருதிராஷ்டிரர் பாண்டவர்கள் எவ்வாறு யுத்தத்திற்குத் தயாராய் இருக்கிறார்கள் என்று கேட்க, பாண்டவர்களது கஷ்டம் ஸஞ்சயருக்கு ஞாபகம் வந்தது. உடனே அவர் மூர்ச்சையாய் விழுந்தார். சற்று நாழிகையான பின்பு ஸஞ்சயர் எழுந்து, அநேக பலமான ராஜாக்கள் தருமபுத்திரரது உத்திரவை எதிர்பார்த்திருக்கிறார்கள் என்றும், அவர் யுத்தம் செய்யலாம் என்று சொல்லவேண்டியதுதான், கௌரவ ஸேனையைச் சின்னபின்னப் படுத்துவார்கள் என்றும் எடுத்துரைத்தார். திருதிராஷ்டிரனுக்கு, பீமன்முன் சொக்கட்டாணடிய காலத்தில் செய்த சபதம் ஞாபகம்வர, வெகுவாக அவன் துக்கப்படத்தொடங்கினான். இதுதான் ஸமயம் என ஸஞ்சயர் திருதிராஷ்டிர ராஜனை பாண்டவர்களிடம் இதுகாறும் அசட்டையாய் இருந்ததைப்பற்றி மிகவும் நிந்தித்தும் பேசினார்.

வினு 25.—இவ்வாறு ஸமாதான விஷயமாய் எல்லாம் நடந்து வருகையில் யார் இதை எவ்வாறு தடுத்தார்கள்?

விடை.—துரியோதனனே ஸபையில் வந்து, பீஷ்மர், கர்ணன் முதலிய யுத்தவீரர்கள் தனது பக்கத்திலிருப்பதாகவும், ஆகையால் பாண்டவ பலத்தைக் கண்டு மனமழிய வேண்டியதில்லை என்றும், தன் தகப்பனைத் தேற்றினுன். இதன் பின்பு துரியோதனன் தருமபுத்திரரது செய்கைகளையும், அர்ச்சுனனது குதிரைகளையும் பற்றி ஸஞ்சயரை விசாரித்தான். தருமபுத்திரருக்கு யுத்தம் வரப்போகிறது என்று தெரிந்தபோதிலும், அவர் வெகு உத்ஸாகத்தோடுதான் இருக்கிறுர் என்றும், அர்ச்சுனனது குதிரைகளுக்கு ஈடு உலகில் வேறு குதிரைகள் இல்லை என்றும் ஸஞ்சயர் சொன்னுர்.

வினு 26.—இதைக் கேட்டதும் திருதிராஷ்டிரன் கதி என்னமாயிற்று? யார் அவனை எவ்வாறு தேற்றியது? மேல் என்ன நடந்தது?

விடை.—திருதிராஷ்டிரனுக்குப் பாண்டவர்களது பலத்தைக் கேள்விப்பட்டதும் பயம் அதிகரிக்க, பித்துப்பிடித்தவன் போலானுன். அப்பொழுது துரியோதனன் மறுபடியும் தனது பக்கத்திலிருந்து போர்செய்ய வந்திருக்கும் அரசர்கள் பலத்தை எடுத்துச்சொல்லி, தன் தகப்பன் மனதைத் தேற்றினுன். உடனே தகப்பன் பிள்ளையை நோக்கிப் பாண்டவர்களுக்கு அவர்களது பாகத்தைக்கொடுக்கும்படி தன்னுல் கூடியமட்டும் சொல்லிப்பார்த்தான். அப்பொழுதும் துரியோதனன், தான் பீஷ்மர் முதலியவர்கள் பலத்தை உத்தேசித்திருக்கவில்லை என்றும், கர்ணனை ஸஹாயமாய் வைத்துக்கொண்டு யுத்தத்தை நடத்துவதாகப் பெருமை பேசினுன். அப்பொழுது திருதிராஷ்டிரன், கிருஷ்ணுர்ச்சுனர்கள் இருவரும் என்ன சொன்னுர்கள் என்று ஸஞ்சயரைக் கேட்டான். அதற்கு ஸஞ்சயர், அவர்கள் இருந்தவிடம், தான் மஹா பயபக்தியோடு சென்றபொழுது, அவர்கள் ஸ்நேகிதர்கள் போல வெகு ஸஹஜமாய் உட்கார்ந்திருந்தார்கள் என்றும், அப்பொழுது அவர்களை தன்னை ஒரு தங்க ஆஸனத்தில் உட்காரவைத்து, திருதிராஷ்டிரன் முதலியவர்களை க்ஷேமம் விசாரித்துவிட்டு, அவர்களிடம் அர்ச்சுனனை எதிர்க்கவல்லார் ஒருவருமில்லை என்று சொல்லச் சொன்னுர்கள் என்றும் பதில் சொன்னுர். அர்ச்சுனனது பலத்

தைக் கேள்விப்பட்டதும் திருதிராஷ்டிரனுக்கு பழையபடி மனோவியாகூலம் வந்துவிட்டது.

வி 27.—இதைத் துரியோதனன் தீர்க்க முயலுங்கால் ஸபையில் என்ன விபரீதம் ஏற்பட்டது?

விடை.—திருதிராஷ்டிரனைத் தேற்றுவதற்காக துரியோதனன் தனது பௌருஷத்தை எடுத்துப் பலர் அறியப்பேசினான். அப்பொழுது கர்ணனும் தனது பௌருஷத்தைச்சொல்லி தன்னைத்தானே துதித்துக்கொண்டான். இதைக்கேட்டதும் பீஷ்மர், இவர்கள் விராட நகரத்தில் மாடுபிடி சண்டையில் அர்ச்சுனன் கையில் அகப்பட்டு பட்டபாடுகளைச் சொல்லி, இவர்களை நிந்தித்துப் பரிஹாஸம் செய்தார். உடனே கர்ணனுக்கு அதிகக்கோபம் வர, அவன் பீஷ்மர் கீழே விழும் வரை, தான் யுத்தம் செய்வதில்லை என்று சபதம் செய்து கொண்டு அவன் ஸபையைவிட்டு வெகு கோபத்தோடு வெளியே சென்றான்.

வி 28.—இவ்வாறு கர்ணன் கோபித்துக்கொண்டு சென்றதும், திருதிராஷ்டிரனுக்கு யார் எவ்வாறு புத்திமதி கூறியது?

விடை.—விதுரர் இத்தருணத்தில் முன் வந்து, அரசனுக்குப் புத்திமதி கூறினார். ஒருவனுக்கு ஜயம் முதலியவைகள் வேண்டுமானால், மனோ நிரோதம், சாந்தம், அடக்கம் முதலிய நற்குணங்கள் இருக்க வேண்டும். மேலும் ஒற்றுமை அவசியம் வேண்டும். ஒரு வேடன் பட்சிகளைப் பிடிக்க வலையை வீசினான். கொஞ்ச நாழிகையில், அதில் இரண்டு அந்நியோந்நியமான பறவைகள் பிடிபட, அவைகள் ஒற்றுமையாய் வலையைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் பறந்தன. அப்பொழுது வேடன் அவைகளைப் பின்தொடர்ந்து போனான். கொஞ்சதூரம் போகையில், பறவைகள் தம்முள் சண்டை வர, அவைகள் வலையோடு கீழே விழுந்து, வேடன்கையில் அகப்பட்டுக்கொண்டன. ஆகையால், துரியோதனாதியர் சண்டை போட்டுக் கொள்ளுதல் தகாது, கேடே நேரிடும். மேலும், நாங்கள் கந்தமாதன மலைக்குப் போயிருக்கையில், அங்குக் குபேரனுக்கு வைக்கப்பட்டும், பாம்புகளால் காவல் காக்கப்பட்டும், உண்போருக்கு யௌவனம் உண்டாக்கும் திறனுடையதாயும் உள்ள தேன் இருப்பதைக் கண்டோம். அது மலை உச்சியில் இருந்தது. இதன் மேன்மையைக் கேள்

விப்பட்டு, இதைக் குடிக்கவேண்டும் என்ற ஆசையோடு, சில வேடர் அங்கே போய்க் கீழே விழுந்து, பாம்புகளால் மாண்டார்கள். அதுபோல துரியோதனன், ஜயத்தை எண்ணுகிறானே ஒழிய, அர்ச்சுனனது பலத்தால் தனக்கு உண்டாகும் அபாயத்தைக் கவனியாதிருக்கிறான். இவனுக்கும் அந்த வேடர்கள் கதிவரும் என்று விதுரர் திருதிராஷ்டிரனுக்கு நல்ல புத்திமதி கூறினார்.

வினு 29.—இவ்வாறு விதுரர் புத்திமதி கூறியதும், திருதிராஷ்டிரன் என்ன செய்தான்? பின் என்ன நடந்தது?

விடை.—இந்தக் கதைகளைக் கேட்டதும், திருதிராஷ்டிரன் துரியோதனனை பாண்டவர்களோடு ஸமாதானம் செய்து கொள்ளும்படி எவ்வளவோ சொல்லிப்பார்த்தான். இதன் பின்பு ஸஞ்சயரை நோக்கி, 'கிருஷ்ண பகவான் அர்ச்சுனனைப் புகழ்ந்து பேசியதன் பிறகு, உன்னிடம் அர்ச்சுனன் என்ன சொல்லி அனுப்பினான்' என்று கேட்க அவர் தம்மிடம், 'கௌரவர் பக்கத்தில் ஸகாயம் செய்ய வந்திருக்கும் அரசர்கள் எல்லோருக்கும் முடிவுகாலம் வந்திருக்கிறது. அவர்கள் எல்லோரையும் யுத்தமாகிற அக்கினியில், துரியோதனனை சேர்த்து ஆகுதி செய்யப்போகிறான்' என்று சொன்ன வாக்கியத்தை ஒளியாது ஸபையோர் அறியச் சொன்னார். இதைக் கேட்டும் துரியோதனன், அசட்டையாய் இருப்பதையும், மற்றையவர் பேசாதிருப்பதையும் கண்டு, ஸபையிலிருந்த அரசர்கள் யாவரும் எழுந்திருக்க, ஸபை கலைந்தது,

வினு 30.—ஸபை கலைந்ததும் திருதிராஷ்டிரன் என்னசெய்தான்? பின் என்ன நடந்தது?

விடை.—ஸபை கலைந்ததும் திருதிராஷ்டிரன் ஸஞ்சயரை நோக்கி தன் ஸேனைக்கும் பாண்டவஸேனைக்கும் உள்ளவிசேஷபாகங்களைப்பற்றி வினவினான். அதற்கு ஸஞ்சயர், திருதிராஷ்டிரனிடம் ரகஸியமாய்த் தாம் ஒன்றும் சொல்வதில்லை; பலரறியத்தான் எல்லாம் சொல்லுவதாகச் சொன்னார்.

வினு 31.—அப்பொழுது யார் ஸபைக்கு வந்தது? அங்கு அப்பொழுது என்ன நடந்தது?

விடை.—விதுரர், வியாஸரையும் காந்தாரியையும் அங்கு கூட்டிக் கொண்டுவர, வியாஸர் ஸஞ்சயரை நோக்கி, திருதிராஷ்டிர

னுக்கு அவசியம் சொல்லவேண்டியவைகளைச் சொல்லும்படி கட்டளையிட்டார். உடனே ஸஞ்சயர், கிருஷ்ணபகவானது ஸ்வரூபத்தை திருதிராஷ்டிரன் அறியும்படி சொல்லி, 'எங்கே ஸத்யம் முதலிய நற்குணங்கள் இருக்கின்றனவோ, அங்கே கிருஷ்ணபகவான் இருப்பார். அவர் இருக்கும் பக்கத்திற்கே ஜயம் நிச்சயம்' என்றுசொல்லி முடித்தார். இதன் பின்பு ஸஞ்சயர் பகவானது குணாதிசயங்கள், நாம விசேஷங்கள் ஆகிய இவைகளைப்பற்றி விஸ்தரித்தார்.

வினா 32.—இவ்வாறு பகவானது குணாதிசயங்களைக் கேட்ட திருதிராஷ்டிரன் என்ன செய்தான்? கடைசியில் என்ன நடந்தது?

விடை.—திருதிராஷ்டிரன், துரியோதனனை நோக்கிப் பாண்டவர்களோடு ஸமாதானம் செய்துகொண்டு பரம்பொருளாகிய கிருஷ்ணபகவானது கிருபைக்கு ஆளாகும்படி எவ்வளவோ மறுபடியும் சொல்லிப் பார்த்தான். துரியோதனன், அப்பொழுதும் பிடிவாதமாய் ஸமாதானமாக இடங்கொடுப்பதில்லை என்று சொல்லிவிட்டான். அப்பொழுது வெகு கோபத்தோடு காந்தாரி 'பீமஸேனனால் நீ அடிபட்டு விழும்போது, எங்கள் புத்திமதியின் சிறப்பு உனக்குத் தெரியவரும்' என்று சொன்னாள். உடனே அவரவர்கள் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

வினா 33.—இவ்வாறு ஹஸ்தினாபுரியில் காரியங்கள் நடந்து வருகையில், பாண்டவர்கள் உபப்பிலாவ்யத்தில் என்ன செய்தார்கள்?

விடை.—தருமபுத்திரர், கிருஷ்ணபகவானை நோக்கி, ஸஞ்சயரோ திருதிராஷ்டிரனது எண்ணத்தை நமக்குத் தெரிவித்துவிட்டார். நாம் இப்பொழுது சண்டைக்குப்போவதா? போனால் எல்லோரும் அநியாயமாய் மாண்டுபோக வேண்டிவருமே. சண்டையிடாதும் இராஜ்யம் கேட்காதுமிருந்தால், நம்மைக் கௌரவர்கள் பரிஹாஸம் செய்வார்களே. இதற்கு என்ன செய்வது' என்று கேட்டார். அப்பொழுது கிருஷ்ணபகவான் தாமே இந்த ஸமாதான விஷயத்தில் கௌரவர்களிடம் பாண்டவர்களுக்காகத் தூது செல்வதாக ஒப்புக்கொண்டார். அப்பொழுது 'எங்களுக்கு நியாய விரோதமாய் ஐந்து கிராமங்கள் கொடுப்பதாக கௌரவர்கள் சொன்

ஞலும், அதை ஒப்புக்கொண்டு ஸமாதானம் பண்ணிக் கொண்டு வரவேண்டும்' என்று தருமபுத்திரர் பகவானிடம் சொன்னார்.

வின 34.—பகவான் தூது செல்வதைப் பற்றி மற்றைய பாண்டவர்களுக்கும், இன்னும் மற்றவர்களுக்கும் என்னென்ன அபிப்பிராயம்?

விடை.—தருமபுத்திரர், அர்ச்சுனன், நகுலன் ஆகிய இவர்களுக்கு கிருஷ்ணபகவான் துரியோதனனிடம் போய் எப்படியாவது ஸமாதானம் செய்துகொண்டு வரவேண்டும் என்பதும், போரைத் தடுத்து வரவேண்டும் என்பதுமே பீமனுக்கு மனதில் சண்டைசெய்ய வேண்டும் என்ற ஆசை இருந்தபோதிலும், வெளிப்படையாய் அவன் ஸமாதானத்தையே விரும்புவதாகச் சொன்னான். ஸஹாதேவன் மாத்திரம் அவசியம் சண்டைக்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பண்ணிக்கொண்டு பகவான் திரும்பவேண்டும் என்று அபிப்பிராயப்பட்டான். ஸாத்யகி (பகவானது தம்பி) யும், திரௌபதியும், ஸஹாதேவன் சொன்னது நியாயம் என்று ஒப்புக்கொண்டார்கள். அர்ச்சுனன் கடைசியாகப் பகவானை நோக்கிப் 'பாண்டவர்களுக்கும், கௌரவருக்கும் எது ஹிதமோ அதைச் செய்து வரவேண்டும்' என்று சொல்ல அவ்வாறே செய்து வருவதாகப், பகவான் ஒப்புக்கொண்டு புறப்பட்டார்.

வின 35.—இவ்வாறு கிருஷ்ணபகவான் புறப்பட்டுப் போகையில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—பகவான் புறப்படும் பொழுது அநேக அபசகுணங்கள் காணப்பட்டன. அனேக ரிஷீச்வரர்கள் பகவான் கண்ணில் பட, அவர் 'நீங்கள் யாது காரணத்தால் இங்கு வந்தீர்கள்' என அவர்கள் 'பகவானாகிய தாங்கள் இராஜஸபையில் உட்கார்ந்து ஸமாதானத்திற்காகப் பேசும் அழகிய பேச்சுக்களை கேட்க வந்தோம்' என்று மறுமொழி கூறினர்.

வின 36.—பகவான் தூது வருகிறார் என்று திருதிராஷ்டிரன் முதலியவர்கள் கேட்டதும், இராஜ ஸபையில் அவர்கள் என்ன ஆலோசனை செய்தார்கள்?

விடை.—கிருஷ்ணபகவானுக்குத் தகுந்த மரியாதை செய்து, அவரை வெகுமானப் படுத்தவேண்டும் என்றும் திருதிராஷ்டி

ரன் சொல்ல, அதை பீஷ்மர் அங்கீகரித்தார். விதுரர், உடனே எழுந்து 'பகவான் பாண்டவ ஸகாயர் அவருக்கு மரியாதை செய்து, அவரை நமக்கு அனுகூலராக்கவேண்டும் என்ற மோசக் கருத்தோடு ஒருமரியாதையும் செய்யாது, மனதாரப், பக்தியோடு செய்யவேண்டும்' என்று திருதிராஷ்டிரனுக்குப் புத்திமதி கூறினார். இதைக்கேட்ட துரியோதனன், 'விதுரர் சொல்லியது உண்மை, நமக்கு விரோதியாய் இருக்கும் கிருஷ்ணனை நாம் மரியாதை செய்யலாகாது. சண்டையைத் தொடங்குவதிலேயே நாம் கருத்துடையவராய் இருக்கவேண்டும்' என்றான். உடனே துரியோதனனை நோக்கிப் பீஷ்மர் 'பகவான் சிறந்தவர். அவர் உனது நன்மையையே எடுத்துக் கூறுவார். ஆகையால், நீ அவர் சொல்லுவதை சிரத்தையோடு கேட்டு, அதின்படி நடக்க முயலவேண்டும்' என்று புத்திமதி கூறினார். துராத்மாவான் துரியோதனனுக்கு நல்ல புத்தி தோன்றாமல், 'கிருஷ்ண பகவானை யான் சிறைபிடிக்கப்போகிறேன். இது ஸித்தித்தால் பாண்டவர்கள் என்னை எதிர்த்து வரமாட்டார்கள். நான் ஸுகமாய் அரசாளலாம்' என்று தனது கெட்ட எண்ணத்தை வெளியிட்டான். இது தர்ம விரோதம் என்று எவ்வளவோ திருதிராஷ்டிரன் சொல்லிப்பார்த்தும், துரியோதனன் கேட்கவில்லை. இதைக்கண்டு பீஷ்மருக்குக் கோபம் வர 'இந்த மூர்க்கனோடு என்னபேச்சு?' என்று சொல்லி ஸபையைவிட்டுப் போய்விட்டார்.

வி௵ 37.—இங்கு இப்படியிருக்க பகவான் வந்து யார் வீட்டில் தங்கினார்?

விடை.—பகவான், ஹஸ்தினாபுரிக்கு வரும்பொழுது, துரியோதனனைத் தவிற மற்றைய எல்லோரும் அவரை எதிர்கொண்டு அழைக்கவந்தனர். ஊரிலிருந்தவர்கள் எல்லோரும், கண்கொட்டாது பகவானது தூத அவஸரத்தை நோக்கி ஆனந்தித்தனர். இப்படி ஸகலரையும் ஸுகப்படுத்திக்கொண்டு, பகவான் இராஜஸபை வர, அங்கு யாவரும் எழுந்து மரியாதை செய்தனர். திருதிராஷ்டிரன் பகவானுக்கு உபசாரா திகள் செய்தான். இதைப் பெற்றுக்கொண்டு பகவான் விதுரர் வீடு சென்றார். தாம் ஹஸ்தினாபுரியில் இருந்தவரையில், பகவான் அங்கேயே தங்கியிருந்தார்.

வினு 38.—விதுரர் வீட்டில் இருந்துவிட்டு, பகவான் யாரைப் பார்க்கப்போனூர்? அங்கு என்ன நடந்தது?

விடை.—அன்று பிற்பகலில் தமது அத்தையாகிய குந்தியைப் பார்க்கப் போனூர். கிருஷ்ணனைக் கண்டதும், குந்தி முதலில் தன் பிள்ளைகள் பட்ட கஷ்டங்களை எண்ணிக் கண்ணீர் பெருக்கினுள். பின்பு பிள்ளைகளின் க்ஷேம ஸமாசாரத்தை விசாரித்தாள். கடைசியாய், பீமனும் அர்ச்சுனனும் இருக்கையில், போர்க்களத்திலிருந்து தமது இராஜ்யத்தை மீட்டுக் கொள்ளாது வீட்டுக்குத் திரும்பக்கூடாது என்று பிள்ளைகளிடம் தான் சொன்னதாகச் சொல்லும்படி பகவானிடம் சொல்லி அனுப்பினுள். பகவான், பாண்டவர்களுக்குத் தான் கடைசியில் ஜயம் வரும் என்று சொல்லிக் குந்தியைத் தேற்ற, குந்திக்கு அஞ்ஞானமும் துக்கமும் நீங்கப், பகவானை மனதாரத் துதித்தாள்.

வினு 39.—ஸாயங்காலம் பகவான் எங்கே போனூர்? அங்கு என்ன நடந்தது?

விடை.—இதன் பின்பு, பகவான் துரியோதனன் ஸபைக்குச் சென்றூர். அங்கு இவருக்கு மரியாதைகள் ஒருவாறு நடக்க, துரியோதனன், பகவானை சாப்பாட்டிற்கு அழைத்தான், பகவான் ஒத்துக்கொள்ளவில்லை. இதற்கு துரியோதனன் காரணம் கேட்கப், பகவான், 'தூதர்கள் தாங்கள் வந்த காரியத்தைத் தமக்கு அனுகூலமாய் முடித்தால் அல்லது, தாம் வந்திருக்கும் எஜமானன் வீட்டில் சாப்பிடுவதில்லை. ஆகையால் என் மனதை முதலில் திருப்திசெய்துவிட்டுப் பின்பு என் வயிற்றைத் திருப்திசெய்' என்றூர். இது துரியோதனனுக்குத் தகுந்த காரணமாகப் படாதது கண்டு, பகவான் தமது உண்மைக் கருத்தைப் பின்வருமாறு வெளியிட்டார். 'அன்போடு இடாத அன்னத்தைப் புஜிக்கலாகாது. அதை, ஒருவேளை கஷ்டகாலத்தில் மாத்திரம் புஜிக்கலாம் என்பது சாஸ்திரவிதி. என்னிடம் உனக்கு அன்பும் இல்லை, நானும் இப்பொழுது கஷ்ட ஸ்திதியிலும் இல்லை. பாண்டவர்மேல் உனக்குப் பிறந்த நாள் முதல், ஏன் இவ்வளவு அகாரணமான பொறுமை இருக்கவேண்டும். பாண்டவர்கள் மஹா தர்மாத்மாக்கள். அவர்களைக் குற்றங்கூற ஒருவராலும் முடியாது. இக்குணம் வாய்ந்த பாண்டவர்களை

வெறுத்தவர்கள் என்னையும் வெறுத்தவர்கள்தான். தர்மாத்மாக்களைக் கெடுக்க எண்ணுபவன் மஹா பாபி. அவனுக்கு மேலான நிலை நிலைக்காது. நீ கொடுக்கும் வஸ்துக்கள் யாவும் உனது குணங்களால் அசுத்தமாயிருக்கின்றன. இவ்வூரில் எனக்குச் சுத்தபோஜனம் அளிக்க வல்லவன் விதுரன் ஒருவனே' என்று சொல்லிவிட்டுப் பகவான் விதுரர் வீடு சென்றார்.

வினா 40.—விதுரர் வீடு சென்று பகவான் அன்று மிஞ்சிய பகலையும், இரவையும் எவ்வாறு கழித்தார்?

விடை.—விதுரர் வீடு சென்று ஸாயங்காலம் வந்து சேர்ந்ததும், பகவானைத் தரிசிக்கப், பீஷ்மர் முதலிய தர்மாத்மாக்கள் அங்கு வந்து பகவானைத் தமது திவ்ய மாளிகைகளில் வந்து வஸிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். பகவான் அவர்கள் செய்த மரியாதைகளை ஒத்துக்கொண்டு அவர்களைத் தத்தம் இருப்பிடம் போகும்படி அனுப்பிவிட்டார். அதன்பின், விதுரர் பக்தியோடு அளித்த போஜனத்தை வயிறார உண்டு, பகவான் ஓரிடத்து வந்து உட்கார்ந்தார். அப்பொழுது விதுரர் 'துரியோதனன் ஸ்வபாவமாகவே துராத்மா, மேலும் அவனுக்கு பீஷ்மர், துரோணர் முதலியவர்களது ஸகாய மிருக்கையில், தன்னை ஒருவராலும் ஜயிக்க முடியாது என்ற எண்ண முண்டாயிருக்கிறது. அவனை அநேகம் கொடியவர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். இப்படி முரட்டுத்தனமுள்ளவனிடம் பேசத் தாங்கள் வருவானேன். ஆனால் தங்களைக் கண்டு நான் கிருதார்த்தனானேன். தாங்கள் வந்தது எனக்கு மாத்திரம் தான் நன்மையாக முடியும்' என்று தன் எண்ணத்தை வெளியிட்டார். அதற்குப் பகவான், 'நீ சொல்லியது உண்மைதான். அப்படி இருந்தபோதிலும், நான் ஸமாதான விஷயத்தில் என்னால் கூடிய வரையிலும் நயமாய்ச் சொல்லிப் பார்க்கிறேன். இது நான் அவசியம் செய்யவேண்டியது தான். இதற்குப் பின்னும், துரியோதனன் முரட்டுத்தனமா யிருப்பானாயின், அவனை நாசம் செய்யத்தக்க யுத்தத்தைத் தொடங்குவேன்' என்று மறுமொழி கூறினார். இவ்வாறு பேச்சிலேயே அன்றிரவு கழிந்தது?

வினா 41.—மறுநாட் காலையில் பகவான் என்ன செய்தார்? அங்கு என்ன நடந்தது?

விடை.—பகவான் எழுந்து, காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, திருதிராஷ்டிரனது ஸபைக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கு யாவரும் எழுந்து, பகவானுக்கு ஏற்பட்ட ஆஸனத்தில் அவர் உட்கார்ந்ததும், எல்லோரும் உட்கார்ந்தார்கள். பகவானது வாக்சாதுரியத்தைக் கண்டு ஆனந்திக்க, நாரதரை முன்னிட்டுக்கொண்டு அனேக ரிஷீசுவரர்கள், திருதிராஷ்டிரன் ஸபைக்குவர, அவர்களையும் தகுந்த ஆஸனங்களில் பீஷ்மர் முதலியோர் உட்காருவித்தார்கள். விதுரர், பகவான் பக்கத்தில் உட்கார்ந்தார். ஸபையானது மிக அழகாய் விளங்கியது,

வினு 42.—பகவான் துரியோதனுதியரை நோக்கி என்ன சொன்னுர்?

விடை.—பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ஸமாதானம் இருக்கவேண்டும் என்றும், சண்டை நேர்ந்தால் இருதிறத்தாருக்கும் மிகுந்த அபாயம் வரும் என்றும், திருதிராஷ்டிரன் நினைத்தால் சண்டை வராமல் தடுக்கலாம் என்றும், பாண்டவ கௌரவர்கள் ஒற்றுமையாய் இருந்தால் அவர்களை ஒருவராலும் ஜயிக்க முடியாதென்றும், இருதிறத்தாருக்கும் ஸுகமுண்டாகும் என்றும், அத்தருணத்தில் திருதிராஷ்டிரனுக்குப் பாண்டவர்கள் தகப்பனை சிறுவயதில் இழந்தவர்கள் என்ற எண்ணம் வந்தால், அன்பு உண்டாகும் அதனுல் சண்டை தடைபடும் என்றும், வெகு விஸ்தாரமாக பகவான் ஸமாதான விஷயத்தில் பேசினுர். அதன் பின்பு பாண்டவர்கள்' 'நாம் உமது கட்டளைப்படி எமது உறவினரோடு கஷ்டங்களை அனுபவித்தாய்விட்டது. ஆகையால் உங்கள் வாக்குப்படி இப்பொழுது நீங்கள் நடந்து எங்களை தர்ம மார்க்கத்தில் நடக்கும்படிச் செய்யவேண்டும். உம்மை நாம் எங்கள் தகப்பனுராகப் பாவிக்கிறேம்' என்று திருதிராஷ்டிரனுக்கு சொல்லிவிட்ட ஸமாசாரத்தை பகவான் ஸபையோர் முன்னிலையில் வெளியிட்டார். தர்மபுத்திரர் மஹாத்மா என்றும், ஆகையால் திருதிராஷ்டிரன் தனது பிள்ளைகளை அடக்கி ஆண்டு ஸமாதானத்தையே செய்து கொள்ள வேண்டும் என்றும், தமது அபிப்பிராயத்தைப் பகவான் வெளியிட்டார். இதைக் கேட்டதும் எல்லோரும்

இதற்கு விரோதமாய் ஒன்றும் சொல்ல முடியாமல் மௌனமாய் இருந்தனர்.

வின 43.—இவ்வாறு பகவான் சொல்லி முடித்ததும், யார் ஸபையில் எழுந்திருந்து என்ன சொன்னார்கள்?

விடை.—ஸபையில் மஹாரிஷிகளோடு வந்த பரசுராமர் எழுந்து டம்போத்பவராஜன் உலகத்தை ஜயித்து, மேலும் ஜயிக்க ஒருவருமில்லாததைக் கண்டு பிராம்மணர்களிடம் கேட்டு அடிக்கடி கஷ்டப்படுத்தினதையும், அப்பொழுது அவர்கள் நரநாராயண யோகிகள் பதரிகாசிரமத்திலிருக்கிறார்கள் அவர்களைப்போய் ஜயித்துவா என்று அனுப்பியதையும், இந்த அரசன் சென்று யோகிகளது தர்ப்பையில் மந்திரித்து விடப்பட்ட அஸ்திர வேகத்தைத் தாங்கமுடியாது தத்தளித்ததையும் எடுத்துச் சொல்லி, அந்த நரநாராயணுளே கிருஷ்ணார்ச்சுனுள் என்றும் சொன்னார். இந்தக் காரணத்தால் பாண்டவர்களோடு கௌரவர்கள் ஸமாதானம் செய்துகொள்ளுவதே நலம் என்று பரசுராமர் வற்புறுத்தினார்.

வின 44.—இதன் பின்பு யார் ஸபையில் எழுந்து தமது அபிப்பிராயத்தை எவ்வாறு வெளியிட்டது?

விடை.—கண்வ மஹாரிஷி எவ்வளவு பலவானாயினும், தேகபலம் மனோபலத்தின் முன்பும், நியாயத்தின் முன்பும், நிற்கமாட்டாது. ஆகையால் பாண்டவரோடு ஸமாதானம் செய்தலே நலம் என்று எடுத்துரைத்துக், கருடன் கர்வ பங்கப்பட்ட கதையைச்சொன்னார். இந்திரனது ஸாரதியான மாதலி தன் பெண்ணுக்குத் தகுந்தநாயகனை, நாரத ஸஹாயத்தால் தேடி வருகையில், நாகலோகத்தில் ஒரு நாகனைக்கண்டு அவனுக்குத் தன் பெண்ணைக் கொடுப்பதாக எண்ணியதையும், அப்பொழுது அந்த நாகன் கூடிய சீக்கிரத்தில் கருடனால் மாளப்போகிறதை அறிந்து, அவனை மாதலி தேவலோகம் அழைத்துப்போய் விஷ்ணுவும் இந்திரனும் இருக்கையில் அவர்களின் அனுமதியின் பேரில் அமிருதம் உண்பித்ததும், இதை அறிந்த கருடன் விஷ்ணுவிடம் சென்று, தன் பலத்தைப் பற்றிப் பெருமை பேசுங்கால், பகவான் தமது கையை அதன் மேல் வைக்க, அதைத் தாங்கமுடியாது கருடன் தத்தளித்து நின்றதையும், விஸ்தாரமாகக் கண்வர் எடுத்துரைத்தார்.

வினு 45.—இதன் பின்பு யார் துரியோதனனுக்கு இவ்விஷயத்தில் புத்திமதி எவ்வாறு கூறியது ?

விடை.—நாரதர், நல்ல விஷயத்திலேயே முரட்டுத்தனம் அதிகமாயிருந்தால் கேடுவிளையும் என்பதைக் காலவரிஷி உபாக்கியானத்தால் வெளியிட்டு, துரியோதனனை நோக்கி அவன் கெட்ட விஷயத்தில் முரட்டுத்தனமாய் இருந்தால் அதிகக்கேடு உண்டாகும் என்று பயமுறுத்தினார்.

வினு 46.—காலவ ரிஷி யார்? இவர் எந்த நல்லவிஷயத்தில் முரட்டுத்தனமாய் இருந்தார் ? என்ன கெடுதி இவருக்கு உண்டாயிற்று ?

விடை.—விசுவாமித்திரர் முன் காலத்தில் பிராம்மண்யம் தமக்கு வரவேண்டும் என்று தபஸுசெய்தார். இந்த தபஸு பலிக்குங் காலம் வந்தபொழுது இவருக்கு ஒரு கஷ்டம் வந்தது. இந்தக் கஷ்டகாலத்தில் காலவர் என்ற மஹாரிஷி விசுவாமித்திரர் அருகில் சிஷ்யராய் இருந்து, அவருக்கு வேண்டிய சிசுரூஷை செய்து வந்தார். இவரது பக்திக்கு மெச்சி, விசுவாமித்திரர், 'இனிமேல் உன் இஷ்டமான இடம் வெகு தாராளமாய்ப் போகலாம்' என்று உத்தரவு கொடுத்தார். அப்பொழுது காலவர் எதாவது குருதக்ஷிணை கொடுத்துவிட்டு தான் போவதாகச் சொல்ல, விசுவாமித்திரர் வேண்டியதில்லை என்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தும், சிஷ்யன் பின்னும் பிடிவாதமாய் இருக்கக்கண்டு, அவருக்குக் கோபம் வர, 'எனக்கு வெளுப்பாகவும், ஒரு காதுமாத்திரம் கருப்பாகவும் உள்ள 800 குதிரைகளைக் குருதக்ஷிணையாகக் கொடு' என்றார். இவைகளைக் கொண்டுவருவதில் காலவர் மிகுந்த கஷ்டப்பட்டுப் போனார்.

வினு 47.—விசுவாமித்திரருக்கு தபஸு பலிக்குங்காலத்தில் என்ன கஷ்டம் வந்தது ?

விடை.—விசுவாமித்திரர் தபஸுசெய்யுங்கால் யமதர்மராஜன் இவரது குணத்தைப் பரீக்ஷித்தறிய எண்ணி, வஸிஷ்டர் உருக்கொண்டு இவரிடம் வந்து போஜனம் பண்ண வேண்டும் என, விசுவாமித்திரர் மனதில் விரோத மின்றி வஸிஷ்டரை இருக்கச் சொல்லிவிட்டு பயபக்தியுடன் போஜனம் தயார் செய்து வஸிஷ்டரைத் தேடிப் பார்த்தார், சோதிக்கவந்த

தர்மராஜன் மறையவே, வஸிஷ்டரை எங்கே தேடியும் அகப்படவில்லை. உடனே வஸிஷ்டருக்காகத் தயார்செய்த போஜனத்தைக் கையில் எடுத்துக்கொண்டு தூண்போல அசைவற்றிருந்து வெகுகாலம் இவர் வாயுபக்ஷணம் செய்துகொண்டிருந்தார். வெகு காலமான பின்பு தர்மராஜன் வஸிஷ்டர் உருவத்தோடு வந்து அந்த உணவை உண்டு விசுவாமித்திரரை வாழ்த்திச் சென்றான்.

வின 48.—காலவரிஷி இக்குதிரைகளை ஸம்பாதிக்க முதலில் எப்படிக் கஷ்டப்பட்டார்?

விடை.—காலவரிஷி முதலில் தாமே பரதகண்டம் முழுவதும் திரிந்து பார்த்தார். எங்கும் இம்மாதிரி ஒரு குதிரைகூட அகப்படவில்லை. அதன் பின்பு, இவர் மஹா விஷ்ணுவைத் துதிக்க, அவர் இவரை நினைத்த இடத்திற்கெல்லாம் எடுத்துச் செல்லும்படி உத்திரவு செய்து, கருடனை அனுப்பினார். கருடனது ஸஹாயத்தால் காலவர் எல்லாதிக்கின் முடிவுவரையில் சென்று தேடிவருகையில் ஸமுத்திரங்களது அக்கரையில் ரிஷப மலையின் சிகரத்தில் வந்து இறங்கினார். அங்கு சாண்டிலி என்ற ஸந்நியாஸினியைக் கண்டார். அவளால் கொடுக்கப்பட்ட உணவை உண்டு இருவரும் தூங்கினார்கள். கருடன் தூங்கிவிழித்து, பறக்க யத்தனிக்கையில், தனக்கு சிறகுகளே இல்லாதிருப்பதைக் கண்டு மிகுந்த கஷ்டத்தை அடைந்தான். காலவரிஷி இதன் காரணம் என்னவென்று கேட்க கருடன், 'இந்த ஸந்நியாஸினியைக் கண்டதும் இவளைத் தூக்கிப்போய் மஹாவிஷ்ணுவினிடம் விடவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. இதனால் தான் எனக்கு இந்தக் கஷ்டம் வந்திருக்கும். ஆகையால் நான் இப்பொழுது அந்தச் சிறந்தவளை மனதார மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்' என்று பச்சாத்தாபத்துடன் மறுமொழி சொன்னான். இதைக் கேட்டதும், சாண்டிலி கருடனுக்கு இறகு உண்டாகும்படி செய்து, பறந்து போகும்படி அனுப்பினாள். இவ்வளவு கஷ்டப்பட்டும் காலவருக்குக் குதிரைகள் அகப்படவில்லை. வேறு இடம் நோக்கிப் போகையில் வழியில் விசுவாமித்திரர் காலவரைக்கண்டு, 'குருதக்ஷிணை கொடுக்குங் காலம் வந்துவிட்டது. ஆனாலும் நான் இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்கொள்ளுகிறேன்' என்று காலவருக்கு

குருதக்ஷிணையை ஞாபகப்படுத்த, அவர் மிகுந்த கஷ்டத்தை அடைந்தார்.

வினு 49.—காலவரிஷி இதன்பின்பு எப்படி பிரயத்தனப்பட்டார்? இதன் பலன் என்ன?

விடை.—இவ்வளவு தேடியும் காணுததுகண்டு, கருடன் காலவரிஷியை எவ்விதத்திலாவது குதிரைகளை வாங்கப் பணம் முதலில் ஸம்பாதிக்கச் சொன்னுன். இதன்படி கருடனும், காலவரும் சந்திர வம்சத்தில் பிறந்த யயாதி ராஜனிடம் செல்ல காலவர், தமது கோரிக்கையைத் தெரிவித்தார். கருடன் காலவருக்கு நல்ல சிபாரிசை செய்தான். அப்பொழுது யயாதி நன்குய் ஆலோசித்துப்பார்த்து காலவருக்கு அனுகூலமாக சீக்கிரத்தில் 800 குதிரை கிடைப்பதற்கு தனது பெண் மாதவியை அவருக்குக் கொடுத்தான்.

வினு 50.—இதனுல் காலவர் எண்ணம் எப்படி நிறைவேற இடமுண்டாயிற்று?

விடை.—இந்த மாதவிக்கு நான்கு கல்யாணம் செய்துகொள்ளலாம் என்றும், ஒவ்வொரு கல்யாணத்தின் பிறகு மறுபடியும் இவளுக்குக் கன்யாப்பருவம் வந்துவிடும் என்றும், ஒரு ரிஷியின் வரம் இருந்தது. இதை உத்தேசித்து இவளை நான்கு இராஜாக்களுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தால் காலவருக்கு 800 குதிரைகள் கிடைக்கலாம் என்று எண்ணியே யயாதி இவளை காலவருக்குக் கொடுத்தான். காலவரும் இந்தக் குறிப்பை நன்குய் அறிந்துகொண்டு, திருப்தியோடு பெண்ணை வாங்கிக் கொண்டார்.

வினு 51.—இதன் பின்பு காலவர் எவ்வாறு 800 குதிரைகளை மாதவியின் மூலமாய் ஸம்பாதித்தார்?

விடை.—இத்தருணத்தில் கருடன் காலவரிடம் விடை பெற்றுப் போக, முதலில் இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்து அயோத்தியில் அரசாண்டு வந்து பிள்ளையில்லாது தவித்துக்கொண்டிருந்த ஹரியசுவராஜனுக்கு மாதவியைக் கல்யாணம் செய்விக்க, அதற்கு விலையாக 200 குதிரைகள், வேண்டிய மாதிரியில் காலவருக்கு அரசன் கொடுத்தான். இவ்வரசனுக்கு மாதவியினிடம் வஸுமனஸ் என்ற பிள்ளை பிறந்தது. உடனே மாதவிக்கு கன்யாப்பருவம் வந்துவிட்டது. காலவர் தாம் மாதவியை உபயோகப்படுத்தும் எண்ணத்தை

இவ்வரசனுக்கு வெளியிட, அரசன் அதை ஒப்புக்கொண்டான். உடனே மாதவியை அழைத்துக்கொண்டும் காசிதேசத்தில் பிள்ளைவேண்டும் என்ற ஆவலோடிருந்த திவோதாஸ ராஜனிடம் சொல்ல முன்போல மாதவியின் மூலமாய் 200 குதிரைகள் இவருக்குக் கிடைத்தன. இவ்வரசனுக்கு மாதவியிடம் பிரதர்த்தனன் என்ற பிள்ளை பிறந்ததும், முன்போல அவளுக்கு கன்யாப்பருவம் வந்தது. முன்போலவே காலவர் மாதவியைப் பெற்று அரசன் அனுமதியின் பேரில் போஜர்களுக்கு அரசரான உசீனரரிடம் போய் இப்பெண்ணைக் கொடுக்க அங்கு அவருச்கு 200-குதிரைகள் அகப்பட்டன. உசீனரருக்கு மாதவியிடம் சிபி என்ற மஹாத்மா பிறந்தார். இதன் பின்பு காலவர், கன்னிகையாகி யிருக்கும் மாதவியை அழைத்துக் கொண்டு, இன்னுரிடம் போவது என்று அறியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

வினு 52.—இவ்வாறு இன்னும் 200 குதிரைகள் கிடைக்காமல் வருந்தும் காலவரை யார் எவ்வாறு காப்பாற்றியது? குருதக்ஷிணையை காலவர் எவ்வாறு கொடுத்தார் ?

விடை.—இப்படி காலவர் தத்தளித்துக் கொண்டிருக்கையில் வழியில் இவர் கருடனைச் சந்தித்தார். கருடன் 60 குதிரைகள் தான் அகப்படும் என்றும், இனிமேல் ஒன்றும் அகப்படாதென்றும் சொல்ல, காலவருக்கு மிகுந்த துக்கம் வந்துவிட்டது. அப்பொழுது கருடன் 'விசுவாமித்திரருக்கே இப்பெண்ணைக் கொடுத்து 200 குதிரைக்குப் பதிலாக இவளிடமிருந்து ஒரு பிள்ளையை அடைந்து கொள்ளும்படி செய்து உம்முடைய பிரதிக்கினையை நிறைவேற்றலாம்' என்று உபாயம் சொல்லிக்கொடுக்க, காலவர் அவ்வாறே செய்தார். விசுவாமித்திரருக்கு, தனது முரட்டுத் தனத்துக்காக சிஷ்யன் பட்டபாடு போதும் என்ற கருணைவர, மாதவியிடம் தனக்கு உண்டான அஷ்டகன் என்ற பிள்ளையை 200 குதிரைக்குப் பதிலாக வைத்துக்கொண்டு மற்ற 600 குதிரைகளைப்பெற்று தனக்கு குருதக்ஷிணை பூர்த்தியாகக்கொடுத்து ஆய்விட்டதாக ஸந்தோஷத்துடன் சிஷ்யனை ஆசீர்வதித்தார்.

வினு 53.—200 குதிரைகள் கிடைக்காமலே போகக்காரண என்ன?

விடை.—முன்காலத்தில், ரிசீகர் என்ற மஹாரிஷி விசுவாமித்திரரது பாட்டனுரான காசிராஜனது பெண்ணுகிய ஸத்யவதியை

தனக்கு பெண்சாதியாய் வரிக்க, அரசன் கன்யா சுல்கமாக சந்திரனைப்போல் வெளுத்ததும், ஒரு காதுமாத்திரம் கருத்ததுமாக இருக்கும் 1000 குதிரைகள் வேண்டும் என்ருர். உடனே ரிஷி வருணனிடம் இதைச்சொல்ல, அவன் தனது அசுவதீர்த்தத்திலிருந்து குதிரைகளை எழுப்பிக்கொடுத்தான். இதை அரசனிடம் ரிஷி கொண்டுவந்து கொடுத்து ஸத்யவதியைக் கல்யாணம் செய்துகொண்டார். அந்த 1000 குதிரைகளில் 400-ஐ ஒரு ஆற்று வெள்ளம் அடித்துக்கொண்டு போய் விட, உலகில் 600 குதிரைகள்தான் மிஞ்சின. அதைக் காலவர் முதலில் ஸம்பாதித்துவிட்டார். இதனுல்தான் கருடன் 200 குதிரைகள் அகப்படமாட்டாது என்ருன்.

வினு 54.—அஷ்டகன் பிறந்தபின்பு மாதவி என்ன செய்தாள்?

விடை.—மாதவி ரிஷி காரியத்தை முடித்துவிட்டுத், திரும்பி கன்னிகையாகவே யயாதியிடம் சொல்ல, அரசன் இவளுக்கு ஸ்வயம்வரம் ஏற்படுத்தினுன். இதைக் கவனியாது, மாதவி ஸந்நியாஸினியாகிக் காட்டில் மான்களைப்போல் ஜீவித்துக் கொண்டு பகவத்தியானம் செய்ய எண்ணி, காட்டிற்குச் சென்ருள். இதுமுதல் தன்காலம் முடியும் வரையில் இப்படியே இருந்து காலக்கிரமத்தில் மாதவி பரமபதம் அடைந்தாள். இவ்வாறு மாதவி துறவியாக யயாதிக்கு உலக இன்பங்களில் ஒருவாறு வைராக்கிய முண்டானது.

வினு 55.—இதன் பின்பு எப்பொழுதாவது மாதவி யயாதியை ஸந்தித்தாளா ?

விடை.—யயாதி ஸ்வர்க்கத்திலிருந்து கர்வ பங்கமாய்க் கீழே விழுங்கால் அஷ்டகர் முதலிய பேரப்பிள்ளைகள் செய்யும் யாகப் புகையால் ஆகாசத்தில் நிறுத்தப்பட்டதாகவும், அப்பொழுது அவர்கள் தமது பாட்டனுர் என்று அறியாமலே தமது புண்ணியங்களின் பாகங்களை அவர்கள் கொடுத்ததாகவும் ஆதி பர்வத்தில் சொல்லி யிருக்கிருேம். அப்பொழுது தான் க்ஷத்திரியன் என்றும் தனக்கு பிறர்கொடுப்பதைவாங்க அதிகாரமில்லை என்றும் யயாதி சொல்லிக்கொண்டிருக்கையில், மாதவி காட்டில் உலாவிக்கொண்டு அவ்விடம் தற்செயலாய் வந்து, தன் தகப்பனது கஷ்டத்தைக்கண்டு அவருக்கு யாகம்செய்பவர்கள் தன்வயிற்றில் பிறந்த பேரப்பிள்ளைகள் என்று எடுத்துரைத்தாள். இவள்செய்த இந்த ஸகாயத்தால் யயாதி இவர்

களது புண்ணியத்தைப் பெற்றுக்கொண்டு ஸ்வர்க்கத்தை மறு படியும் அடைந்து ஸுகமாய் வாழ்ந்திருந்தான்.

வினு 56.—இவ்விசித்திரமான காலவரிஷி கதையைச் சொன்ன நாரதர் துரியோதனனுக்கு என்ன புத்திமதி கூறினுர்?

விடை.—நாரதர் துரியோதனனை நோக்கி, 'இம்மாதிரி யயாதி கர்வத்தால் என்ன பாடுபட்டான் பார், காலவர் (நல்ல விஷயத்தில்) பிடிவாதமாய் இருந்ததினுலேயே என்ன பாடு பட்டார் பார், ஆகையால் நீ உன் முரட்டுத் தனத்தை அவ சியம் விடவேண்டும், மேலும் நீயோ கெட்ட விஷயத்தில் பிடிவாதம் பிடிக்கிறுய். ஆகையால், அதை நீ உடனே விட் டால் தான் நலம். நீ க்ஷேமம் அடையவேண்டுமானுல் சீக் கிரத்தில், பாண்டவர்களோடு ஸமாதானம் செய்துகொள்' என்று மிகுந்த ஆதரவுடன் சொன்னுர்.

வினு 57—இதைக் கேட்டதும் திருதிராஷ்டிரன் என்ன செய் தான்? மேல் என்ன நடந்து என்னமாய் முடிந்தது?

விடை.—திருதிராஷ்டிரன் கிருஷ்ணபகவானை நோக்கி, 'பகவா னே, நான், விதுரர், பீஷ்மர் முதலிய எல்லோரும் துரி யோதனனுக்கு எவ்வளவோ இந்த விஷயத்தில் சொல்லிப் பார்த்தோம். அவன் கேட்கவில்லை. இனிமேல் கடைசி யாய்த் தாங்களே சொல்லிப் பார்க்கவேண்டும், என்று விண் ணப்பம் செய்தான். உடனே பகவானும், துரியோதனனை நோக்கி, எவ்வளவோ நயமாய் ஸமாதானம் செய்துகொள்ளு வது நலம் என்று சொல்லிப்பார்த்தார். அப்பொழுது பீஷ் மர், துரோணர், விதுரர், திருதிராஷ்டிரர், இவர்கள் மறு படியும் தம்மாலியன்றமட்டும் நயமாயும், கோபமாயும், துக்க கரமாயும் சொல்லிப் பார்த்தார்கள். அப்பொழுது துரி யோதனன், 'ஊசி குத்தும் இடங்கூட இனி நான் பாண்ட வர்களுக்குக் கொடுக்கமாட்டேன்' என்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்லி விட்டான். அப்பொழுது பகவான் 'யுத்தத்தில் முன்வைத்த கால் பின்வாங்காமல் சண்டைசெய்து மாண்டால் கீர்த்தியும், வீர ஸ்வர்க்கமும் வருமென்று எண்ணுகிறுயோ? அவை, இம்மாதிரியான அநியாயமாயும், பெரியோர்களது வாக்கிற்கு விரோதமாயும் ஏற்படும் சண்டையால் உனக்கு ஒரு நாளும் கிடையா. உனக்கு அபகீர்த்தியும் நரகமுமே

கிடைக்கும்' என்று கோபத்துடன் சொன்னார். அப்பொழுது துச்சாஸனன் மஹா கர்வத்தோடு சிலவார்த்தைகள் சொல்ல, துரியோதனன் மிகுந்த கோபத்தோடு ஸபையை விட்டு எழுந்து வெளியே போய்விட்டான்.

வினு 58.—இவ்வாறு துரியோதனன் மஹா கோபத்துடன் ஸபையைவிட்டு வெளியே சென்றதும் என்ன நடந்தது? எவ்வாறு முடிந்தது?

விடை.—இவ்வாறு துரியோதனன் வெளியே சென்றதும், திருதிராஷ்டிரன் காந்தாரியை அழைத்துவரும்படி சொல்லி அனுப்பிவிட்டு, விதுரரை அழைத்து, வெளியே சென்ற துரியோதனனைத் திரும்பவும் ஸபைக்கு அழைத்து வரும்படி ஏவினன். இதற்குள் பகவான், முன்பு விதுரர் சொல்லிவந்தபடி 'துரியோதனனை சிறைச்சாலையில் அடைத்து வைத்துவிட்டு, மற்றையவர்கள் பாண்டவர்களோடு ஸமாதானம் செய்துகொள்ளுங்கள்' என்று திருதிராஷ்டிரனுக்குப் புத்திமதி கூறினர். இப்படி யிருக்கையில், காந்தாரியும் துரியோதனனும் ஸபைக்குவர, காந்தாரி, பிள்ளையை நோக்கி, தன்னால் கூடிய வரையில் ஸமாதானம் செய்துகொள்ளுதலே நலம் என்று சொல்லிப் பார்த்தாள். இதை அலட்சியம் செய்துவிட்டு, துரியோதனன் ஸபையைவிட்டு மறுபடியும் வெளியே சென்றுன்.

வினு 59.—இரண்டாந்தரம் வெளியே சென்ற துரியோதனனுக்கு என்ன விபரீத புத்தி உண்டாயிற்று? இதனால் என்ன விளைந்தது?

விடை.—வெளியே போன துரியோதனன், சகுனி முதலிய துஷ்டர்களோடு ஆலோசனை செய்து, பகவானை எப்படியாவது சீக்கிரத்தில் சிறைபிடித்துக் கட்டிவிட்டால், தமது காரியம் ஜயமாகும் என்று தீர்மானித்தான். இந்த ஸமாசாரம் ஸாத்யகிக்குத் தெரிந்தது. உடனே கிருதவர்மாவினிடம் சென்று, பகவான் ஸஹாயத்திற்காகப் படைகளைத் தயார் செய்துவைக்கச் சொல்லி விட்டு, பகவானுக்கு இதைத் தெரிவித்தான். உடனே திருதிராஷ்டிரன் துரியோதனனை ஸபையில் அழைத்து வரும்படி செய்து, அவனைப் பலவாறு நிந்தித்துப் பேசினன் விதுரர் அப்பொழுது பகவானது பல விசேஷங்களை எடுத்துச்சொன்னர். இவ்வளவு சொல்லியும் துரியோதனன்

கேட்காது, பகவானைக் கட்டிப்பிடிக்க யத்தனிக்க எண்ணுகையில், பகவான் அந்த ஸபையில் யாவரும் பார்க்கும்படி தமது விசுவரூபத்தைக் காட்டினார். உலகங்கள் யாவும் பகவானிடம் சிறு அணுக்களைப்போல் அடங்கி இருப்பதை யாவரும் கண்டார்கள். பீஷ்மர், விதுரர், ஸஞ்சயர் முதலிய மஹாத்மாக்கள் இந்த ஆனந்த சேவையைக்கண்டு களித்துத் துதித்தார்கள். தேவதுந்துபி ஆர்த்தன. ஆகாயத்திலிருந்து பூமாரி பொழிந்தது. அப்பொழுது பகவானது அனுக்கிரகத்தால் திருதிராஷ்டிரனுக்குக்கூட கண் உண்டாக, அவன் பகவானைத் தரிசித்து கிருதார்த்தனானன். துரியோதனன் முதலிய துராத்மாக்களுக்கு இந்த உருவத்தைக் கண்டதும் பயமுண்டாக, கண்ணை மூடிக்கொண்டார்கள். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் பகவான் தன் விசுவரூபத்தை ஒடுக்கிக்கொண்டு ரிஷிகளிடம் விடைபெற்று வெளியே புறப்பட்டார். ரிஷிகளும் விடைபெற்று உடனே மறைந்தருளினர்.

வின 60.—பகவான் இதன் பின்பு எங்கே சென்றார்? அங்கு என்ன நடந்தது?

விடை.—பகவான் குந்திவீடு சென்று ஸபையில் அன்று நடந்தவைகளை ஆதியோடந்தமாய்ச் சொல்ல, குந்தி, யுதிஷ்டிரருக்கு க்ஷத்திரியர்போல் நடக்கவேண்டும் என்றும், விதுரர், தோல்வியடைந்து துக்கப்படும் தன் பிள்ளையை நோக்கிச்சொன்ன வீரிய வாக்கியங்கள் இன்னவை என்றும் சொல்லி அனுப்பினாள். அர்ச்சுனனுக்கு, 'திரௌபதி சொல்லுவதுபோல் நட' என்று குந்தி சொல்லி அனுப்பினாள்.

வின 61.—கிருஷ்ணன் உபப்லாவ்யம் நோக்கிப் போகையில் என்ன செய்தார்?

விடை.—கர்ணனைத் தனது தேரில் ஏற்றிக்கொண்டு, வெகு தூரம் பகவான் போய், அங்கு அவன் இவ்வாறு குந்தியின் கன்னியாப்பருவத்தில் அவளுக்கு ஸூர்யானுக்கிரகத்தால் பிறந்தான் என்றும், ஆகையால் அவன் தருமபுத்திரருக்கும் தமயனாக வேண்டுமென்றும், அவன் பாண்டவர்கள் பக்கத்திற்கு அப்பொழுது வந்தால் அவனுக்கு இராஜ்யம் கிடைக்கும் என்றும், உண்மையை உள்ளபடி எடுத்துச்சொன்னார்.

வின 62.—இதற்குக் கர்ணன் என்ன பதில் சொன்னான்?

விடை.—'நான் குந்திக்குப் பிறந்தவனுய் இருந்தும், எனனைக்குந்தி கவனிக்கவே இல்லை. நான் ஒரு ஸூதன் வீட்டில் வளர்ந்து துரியோதனனுல் மேன்மை அடைந்தேன். நல்ல காலங்களில் அவனிடம் இருந்துவிட்டு, இந்த அபாய காலத்தில் நான் பிரிந்துவருவது நியாயமன்று. மேலும், எனக்கு இராஜ்யம் வரும் என்ற எண்ணத்துடன் நான் வருவது இன்னும் கேவலமான விஷயம். இப்பொழுது நான் பாண்டவர்கள் பக்கம் போனுல் அர்ச்சுனனேடு சண்டைசெய்யப் பயந்து போனதாகப் பலரும் பழிப்பார்கள். நான் பாண்டவர்களை நிந்தித்தது யாவும் துரியோதனனைத் திருப்தி செய்வதற்காகவே. அந்தப் பாபச்செயலை நான் நினைத்தால் எனக்கு மிகுந்த துக்கமுண்டாகிறது. நான் அவசியம் அர்ச்சுனனுல் இறக்கப்போகிறேன். கௌரவர்களும் அவர்களுக்கு ஸகாயமாக வந்திருக்கும் அரசர்களும் இந்தச் சண்டையில் மாண்டுபோவார்கள். இவ்வாறு நடக்கவேண்டி இருப்பதால் எனது உறவைப் பாண்டவர்களுக்கு வெளியிடாது, அவர்களை யுத்தத்திற்கு அழைத்து வாருங்கள்' என்று கர்ணன் மறுமொழி சொன்ஞன்.

வினு 63.—பகவான் இதற்கு என்ன பதில் சொன்னுர்? கடைசியில் இவர்கள் எவ்வாறு பிரிந்தனர்?

விடை.—'நான் சொல்லியபடி ஒன்றும் நடக்காததால், இந்த யுத்தத்தில் எல்லோரும் மாண்டு போவார்கள். இவர்கள் மாண்டதும், கலியுகம் ஆரம்பித்து விடும். சீக்கிரம் பீஷ்மாதிகளிடம் போய், இந்த மாஸம் எங்கும் செழிப்பாய் இருக்கிறது ஆகையால் இன்னும் ஏழு நாளைக்குள் வரும் அமாவாஸை யன்றைய தினம், யுத்தத்தை ஆரம்பிக்கலாம் என்று சொல்லிவிடு' என்று பகவான் சொன்னுர். இதைக் கேட்டதும் கர்ணன், 'இதை அறிந்திருந்தும், நீர் ஏன் என்னைப் பாண்டவர்கள் பக்கம் வாவென்று ஆசை காட்டினீர். மேலும் நான் தருமபுத்திரருக்கு ஜயம் வரப்போகிறது என்று குறிப்பிக்கும் ஒரு ஸ்வப்னம் கண்டேன். ஆகையால் நான் உயிரோடிருந்தால், உம்மை யுத்தம் முடிந்ததும் பார்த்துக் கொள்ளுகிறேன், இல்லாவிடில் நான் உம்மை ஸ்வர்க்கத்தில் பார்க்கிறேன்' என்று மறுமொழி கூற, இரு

வரும் ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்துகொண்டு பிரிந்தார்கள். பகவான் பாண்டவர்களிருக்குமிடம் சென்றார்.

வினு 64.—குந்தி கிருஷ்ணனோடு சொல்லிவிட்டதையும், பகவான் கர்ணனோடு சொன்னதையும், யார் திருதிராஷ்டிரனுக்குத் தெரிவித்தது?

விடை.—குந்தி சொன்ன விஷயங்களை பீஷ்மரும் துரோணரும், திருதிராஷ்டிரனுக்கும் துரியோதனனுக்கும் தெரிவித்து, மறுபடியும் ஸமாதானம் செய்யவேண்டியது அவசியம் என்று வற்புறுத்தினார்கள். ஸஞ்சயர் கர்ணனுச்கும் பகவானுக்கும் நடந்த ஸம்பாஷணையை ஆதியோடந்தமாகச் சொன்னார்.

வினு 65.—பகவான் பாண்டவரிடம் சென்றதும், கர்ணனுக்கு வேறு யார் புத்திமதி கூறியது? அதற்குக் கர்ணன் என்ன பதில் சொன்னார்?

விடை.—விதுரரால் ஏவப்பட்டுக் குந்தி, கர்ணனுக்கு புத்தி கூறச் சென்றாள். கர்ணனை நோக்கி 'நீயும் அர்ச்சுனனும் சேர வேண்டியது அவசியம். நீ இப்படிச் செய்தால் உன்னைப் பாண்டவர்களெருவரும் மரியாதை செய்வார்கள்' என்று சொன்னாள். இவ்வாறு குந்தி சொன்னதும், ஸூரியனும் குந்தி சொல்லியபடி அவசியம் செய்யவேண்டும்' என்று வற்புறுத்தினன். கர்ணன், குந்தியை நோக்கித், 'துரியோதனதியரை இந்தக் கஷ்டகாலத்தில் நான் விட்டுப் பிரியமாட்டேன். நீ என்னிடம் வந்ததற்காக நான் ஒரு உபகாரம் உனக்குச் செய்கிறேன். அர்ச்சுனனைத் தவிர நான் மற்றைய தம்பிகளைக் கொல்லமாட்டேன். என் கையில் அவர்கள் அகப்பட்டபோதிலும், அவர்களை உயிரோடு விட்டு விடுகிறேன்' என்று சொல்லத் தாயும் பிள்ளையும் பிரிந்து போனார்கள்.

வினு 66.—பகவான் உபப்பிலாவ்யம் சென்றதும் அங்கு என்ன நடந்தது?

விடை.—பீஷ்ம துரோணாதிகளும், தாமும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் துரியோதனன் கேட்காததையும், அங்கு இன்னும் நடந்த விசேஷங்களையும் பகவான் யுதிஷ்டிரரிடம் ஆதியோடந்தமாக எடுத்துச் சொல்லி இனிமேல் தாமதி

யாமல் யுத்தத்திற்குத் தயாராக வேண்டும் என்று உத்திரவு கொடுத்துவிட்டார்.

வினு 67.—இப்படிப் பகவான் யுத்தத்திற்கு ஸங்நாகமாகும்படி உத்திரவு கொடுத்ததும் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—யுதிஷ்டிரர் தமது 7 அக்ஷோகிணி ஸேனைகளையும், வியூகங்களாகப் பிரிக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு, ஸேனாதிபதிப்பட்டம் யாருக்குக் கொடுப்பதென்று, தம்பிமார், பகவான், முதலானவர்களோடு ஆலோசித்தார். அப்பொழுது ஸஹாதேவன் விராடராஜனையும், நகுலன் துருபத ராஜனையும், அர்ச்சுனன் திருஷ்டத்யும்னனையும், பீமன் சிகண்டியையும் ஸேனாதிபதியாக விருக்கத் தகுந்தவர்கள் என்று சொன்னார்கள். கடைசியில் யுதிஷ்டிரர் பகவானைக் கேட்க, அவர் திருஷ்டத்யும்னனே தகுந்தவன் என்று சொல்ல, அவனுக்கே இந்தப் பட்டங் கொடுத்தார்கள். இதற்குள் பாண்டவஸேனை, அணிவகுக்கப்பட்டுத் தயாராய் நிற்க, பாண்டவர்கள் தமது படைகளை அழைத்துக்கொண்டு குருக்ஷேத்திரபூமி வந்து அங்குத் தண்டிறங்கினார்கள்.

வினு 68.—பகவான் யுத்தம் தொடங்கவேண்டும் என்ற தீர்மானத்துடன் உபப்பிலாவ்யம் சென்றதும், யுத்த விஷயமாய் ஹஸ்தினுபுரியில் என்ன யத்தனங்கள் நடந்தன? தருமபுத்திரர் இதற்கேற்ற ஏற்பாடு என்ன செய்தார்?

விடை.—துர் மந்திரிகளாகிய கர்ண துச்சாஸன சகுனிகளால் தூண்டப்பட்டத் துரியோதனன் யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினான். பீஷ்மருக்கே அவன் தன் பக்கத்தில் ஸேனாதிபதிப்பட்டம் கொடுக்க அவரும் அதை ஒப்புக்கொண்டு விளங்கினார். இதன் பின்பு துரியோதனனது 11 அக்ஷோகிணி ஸேனைகளும் யுத்தத்திற்குத் தயாராயின. தருமபுத்திரரும் இதை அறிந்து, தமது 7 அக்ஷோகிணி ஸேனைக்கும் 7 ஸேனைத்தலைவர்களை ஏற்படுத்தி, அர்ச்சுனனை இவ்வேழு பேருக்கும்மேல் அதிபதியாக்கினார். அதன்பின்பு பகவானுக்குப் பொதுவான ஆதிபத்தியம் கொடுத்தார்.

விஞ 69.—இவ்வாறு பாண்டவர்கள் யத்தனம் செய்துகொண்டிருக்கையில் அவர்களைப்பார்க்க யார்வந்து என்ன சொன்னார்? பின் அவர் என்ன செய்தார்?

விடை.—குருக்ஷேத்திரத்தில் பலராமர் பாண்டவர்களிடம் வந்தார். அப்பொழுது யாவரும் எழுந்து பலராமருக்கு வந்தனம் செய்தார்கள். அப்பொழுது பலராமர், தான் ஒருவர் பக்கத்திலும் சேருவதில்லை என்றும், இந்த யுத்தத்தில் எல்லா க்ஷத்திரியர்களும் இறக்கப் போகிறார்கள் என்றும் கடைசியில் ஜயம் பாண்டவர்களுக்கு வருமென்றும் எடுத்துரைத்த பின்பு தீர்த்த யாத்திரைக்காகச் சென்றார்.

விஞ 70.—வேறு யார் பலராமரைப்போல நடந்துகொண்டது? ஏன்?

விடை.—விதுரரும் ஒரு பக்கத்திலும் சேராது, இத்தருணத்தில் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டார். பகவான் தூதுவந்து சென்றதும், ஒருநாள் இரவில், விதுரர் திருதிராஷ்டிரனோடு வெகு நாழிகை துரியோதனன் முரட்டுத்தனத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், அவனை மாத்திரம் சிறையிலடைத்துப் பாண்டவர்களோடு ஸமாதானம் செய்துகொண்டால்தான் கௌரவர்கள் பிழைப்பார்கள், இல்லாவிடில் எல்லோரும் யுத்தத்தில் மாண்டுபோக வேண்டியதுதான் என்று சொல்லிமுடித்தார். இவைகள் எல்லாவற்றையும் ஒளிந்து கேட்டுக்கொண்டிருந்த துரியோதனன், கோபாவேசத்தோடு வெளியில் வந்து, விதுரரை வாயில் நரம்பில்லாது திட்டி தன் ஊரைவிட்டே போய்விடும்படி கட்டளையிட்டான். இந்தத் தருணம் வரவேண்டும், துராத்மாவான துரியோதனனிடமிருந்து பிரியவேண்டும் என்று காத்திருந்த விதுரர் தமது அம்பறாத் தூணியையும், வில்லையும் அங்கேயே வைத்துவிட்டு பாண்டவர்கள் பக்கம் தனக்குச் சேரிட்டவனுக்கு விரோதமாய் அந்த ஆபத்காலத்தில் போக மனம் வராதவராய், பலராமர்போலத் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டார்.

விஞ 71.—பலராமர் இவ்வாறு தீர்த்தயாத்திரை சென்றதும், குருக்ஷேத்திரத்தில் என்ன நடந்தது?

விடை.—கிருஷ்ண பகவானது மைத்துனனான ருக்மி என்பவன், பாண்டவர்களுக்கு ஸகாயம் செய்யவந்து தன் பலத்தைப்

பற்றி பெருமை பாராட்டினுன். அப்பொழுது அர்ச்சுன னுக்கு கோபம்வர, அவன் ஸகாயம் தன் பக்கத்தில் வேண்டு வது அவ்வளவு அவசியமில்லை என்றுன். உடனே ருக்மி கோபத்தோடு துரியோதனன் பக்கம் சேரலாம் என்று போய் அங்கும் முன்போல பெருமை பேசினுன். இதைக் கேட்ட தும், துரியோதனனுக்கும் கோபம் வர, தனக்கும் அவன் ஸகாயம் வேண்டுவதில்லை என்று தள்ளிவிட, ஒருபக்கத்திலும் சேராது ருக்மி தன்னூருக்குப் போனுன்.

வினு 72.—இதன் பின்பு துரியோதனன் என்ன செய்தான்?

விடை.—துரியோதனன் உலூகன் என்ற ஒருவனை அழைத்து தரும புத்திரர், பகவான், திருஷ்டத்யும்னன், சிகண்டி முதலிய பிர தான மனுஷ்யர்களுக்கு மனதில் தைக்கும்படியான சில தகாத வாக்கியங்களைத் தூதாகச் சொல்லி அனுப்ப, இவர்கள் ஒவ் வொருவரும் அவரவர்களுக்காகச் சொல்லி அனுப்பிய வாக் கியங்களுக்குத் தகுந்தபடி வீரத்தனமான மறுமொழிகளைச் சொல்ல, அவைகள் எல்லாவற்றையும் உலூகன் துரியோதன னிடம் வந்து சொன்னுன். உடனே துரியோதனன் படையை அணி வகுத்து நிற்கும்படி ஏற்பாடுசெய்ய, யுதிஷ்டிரரும் தமது ஸேனையை அணிவகுத்து, அப்பாகங்களை நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தினுன். அப்பொழுது திருஷ் டத்யும்னன் கௌரவர்களில் சிறந்தவர்களோடு இன்ன இன் னுர் யுத்தம் செய்வது என்று ஏற்படுத்திச், சண்டைக்கு எதிர் பார்த்திருந்தான்.

வினு 73.—இப்படிப் பாண்டவர்கள் யுத்த ஸந்நாகமாய் இருக்கை யில் துரியோதனுதிகள் பக்கத்தில் என்ன நடந்தது?

விடை.—பீஷ்மர் தமது பக்கத்திலும் பாண்டவர்கள் பக்கத்திலும் உள்ள ரதர், அதிரதர் முதலிய வீரச்சிரேஷ்டர்களைச் சொல் லிக்கொண்டு வருகையில், கர்ணனை அர்த்தரதன் என்று சொன்னுர். அப்பொழுது கர்ணனுக்கு அதிக கோபம்வர, பீஷ்மர் உயிரோடிருக்கும் வரையில் தான் சண்டை செய் வதில்லை என்று மறுபடியும் சபதம் செய்தான். அப்பொ ழுது பீஷ்மருக்கு வந்த கோபத்தை துரியோதனன் அடங் கும்படி செய்தான். இதன் பின்பு துருபதராஜன் பிள்ளை சிகண்டியைப்பற்றிச் சொல்லுங்கால் பீஷ்மர் அவன் தம்மை

அடிக்க எண்ணி எதிரே வந்தபோதிலும், அவனைத் தாம் கொல்லப் போகிறதில்லை என்றார்.

வி௵ 74.—சிகண்டி விஷயத்தில் பீஷ்மர் இப்படி இருக்கக் காரணம் என்ன?

விடை.—இந்த சிகண்டி துருபதராஜனுக்குக் குழந்தையாகப் பிறந்ததும், இவன் முதலில் பெண்ணாக இருந்து பின்பு ஆண் பிள்ளையாக மாறியவன். ஆகையால் இவனோடு சண்டை செய்ய பீஷ்மருக்கு மனம் வரவில்லை.

வி௵ 75.—சிகண்டி முதலில் பெண்ணாய் இருந்து எதற்காக ஆணாக மாறினான்? எவ்வாறு?

விடை.—துருபதராஜனுக்குப் பெண்பிறந்ததும், அதைப் பிள்ளை என்று அவர் எல்லோருக்கும் சொல்லிவிட்டார். இது உண்மை எனப் பலரும் நம்பிவிட, இச்சிகண்டிக்கு கல்யாணமாயிற்று. இவன் பெண்சாதிக்கு, உடனே, தனது நாயகன் ஒரு பெண் என்று தெரிந்துவிட, தனது தகப்பனிடம் சொல்லியனுப்பினாள். உடனே இவள் தகப்பன் துருபதனைத் தண்டிக்கப் படை எடுத்து வந்தான். அப்பொழுது தன்னால் தன் தகப்பனுக்கு கேடுவந்தது என்று மனம் நொந்து சிகண்டி தற்கொலை செய்துகொள்ளக் காட்டிற்குச் செல்ல, அங்கு குபேரனது வேலைக்காரனாகிய ஸ்தூணாகர்ணன் என்ற யக்ஷனைக் கண்டான். அவன், இவனுக்குத் தன் ஆண்தன்மையைக் கொடுத்துவிட, சிகண்டி கூடிய சீக்கிரத்தில் தன் பெண் தன்மையை வாங்கிக் கொள்வதாகச் சொல்லிவிட்டுத் தன் ஊர் போய்ச் சேர்ந்தான்.

வி௵ 76.—துருபதன் கதி என்னமாயிற்று? சிகண்டி ஏன் தன் வாழ்நாள் முழுதும் ஆணாகவே இருந்து விட்டான்?

விடை.—சிகண்டியின் மாமனார், ஊருக்கு வெளியில் வந்து தண்டிறங்கி, சிகண்டியின் தன்மையை அறிந்துவர ஆள்களை அனுப்பினான். அவர்கள் சிகண்டி, ஆண் பிள்ளை தான் என்று வந்து கூற தனது ஸேனையை அழைத்துக்கொண்டு தண்டிக்கவந்த அரசன் தன் ஊரை நோக்கிச் சென்றான். இதற்குள் குபேரன் தன் வேலைக்காரனது செய்கையை அறிந்து, சிகண்டி சாகிறவரையில் அவன் ஆணாகவும் தன்

வேலைக்காரன் பெண்ணாகவும் இருக்கும்படி சபித்தான். இதனால் சிகண்டிக்கு ஆண் தன்மை உயிருள்ளவரையில் நிலைத்தது.

வினு 77.—இம்மாதிரி சிகண்டி பீஷ்மருக்கு விரோதியாய் வருவானேன்?

விடை.—சிகண்டி பூர்வ ஜன்மத்தில் காசிராஜன் புதல்வியாகிய அம்பாவாக இருந்தான். அம்பா பட்டபாட்டை ஆதிபர்வத்தில் ஒருவாறு சொல்லி இருக்கிறது. கடைசியாய் பீஷ்மரைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று இவளுக்கு ஆசை வந்தது. இதன்படி பிஷ்மர் நடக்கமுடியாது என்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்ல, முதலில் அம்பாவுக்கு பீஷ்மரிடம் விரோதம் பிறந்தது.

வினு 78.—இந்த விரோதம் பிறந்ததும் அம்பா என்னசெய்தாள்?

விடை.—அம்பா பீஷ்மர்மேல் கோபத்துடன் ஸந்நியாஸினியாய் மிகுதியான காலத்தைத்தள்ளித் தான் மறுஜன்மத்திலாவது பீஷ்மரைக் கொல்லவேண்டும் என்ற எண்ணத்துடன் காடுகளில் திரிந்துவருகையில் பரசுராமரிடம் வந்து தனது கஷ்டகாலத்தைத் தெரிவித்துக்கொண்டாள்.

வினு 79.—பரசுராமர் அம்பாவுக்காக என்ன செய்தார்? அது எப்படி முடிந்தது?

விடை.—பரசுராமர் அம்பாவை அழைத்துக்கொண்டு பீஷ்மரிடம் சென்று, அவளைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். பீஷ்மர் எவ்வளவோ விநயமாய் தமது பிரம்மசரிய விரதத்திற்குக் கேடுவரும் ஆகையால் தம்மால் யாரையும் கல்யாணம் செய்துகொள்ள முடியாது, என்று சொல்லியும் பரசுராமருக்குக் கோபம்வர, பீஷ்மரைக் கொன்றுவிடுவதாகத் தீர்மானித்து அவரைப் பரசுராமர் சண்டைக்கழைத்தார். குருவானபோதிலும் சண்டைக்கு அவரே முன்பு அழைத்தவுடன், க்ஷத்திரிய தர்மப்படி பீஷ்மர் யுத்தத்திற்குத் தயாரானார். இருவரும் குருக்ஷேத்திரத்திற்கு வந்து சண்டைக்காக எதிர்த்தார்கள். அப்பொழுது கங்கை வந்து தனது பிள்ளையைச் சண்டைக்குப் போகக் கூடாது என்று தன்னாலானமட்டும் தடுத்துப் பார்த்தாள். பிஷ்மர் தன் தாயின் வாக்கியத்தைக் கவனியாது க்ஷத்திரிய தர்மப்படி யுத்தத்திற்கு ஆரம்பித்து விட்டார்.

வினு 80.—சண்டையில் நடந்த விசேஷங்கள் என்ன? அது எவ்வித மாக முடிந்தது?

விடை.—முதலில் பீஷ்மர் தமது பாணங்களால் பரசுராமரை பிரஜ்ஞை தவறும்படி செய்தார். உடனே தமது குருவை இவ்வாறு செய்ததால் பீஷ்மருக்கு மனவருத்தம் வந்துவிட்டது. கொஞ்ச நாழிகையில் பரசுராமர் எழுந்து பீஷ்மரை மூர்ச்சை அடையும்படி செய்ய, அவரது ஸாரதி தேரை ஒதுக்கிக் கொண்டு போனான். உடனே பீஷ்மர் எழுந்து சண்டைக்குத் தயாரானார். பரசுராமர் பீஷ்மரது ஸாரதியைக் கொன்றுவிட அஷ்டவஸுக்கள் பீஷ்மர்முன் தோன்றி அவரை தைரியப் படுத்தினார்கள். கங்காதேவி வந்து தன் பிள்ளைக்கு ஸாரத்யம் செய்யத்தொடங்கினாள். பீஷ்மர் கங்கையைப் போகச்சொல்லி விட்டுப் பரசுராமரோடு சண்டைக்குத் தொடங்கினார். அப்பொழுது பரசுராமர் கண்ணில் துற்சகுனங்கள் பட்டன. அஷ்டவஸுக்கள் பீஷ்மருக்கு பிரஸ்வபாஸ்திரத்தை ஞாபகப் படுத்த, அவர் இதை பரசுராமர்மேல் பிரயோகிக்கத் தொடங்கினார். அப்பொழுது நாரதர் வந்து இதை விடக்கூடாது என்று தடுக்க பீஷ்மர் நிறுத்திவிட்டார். உடனே பரசுராமரது பிதிர்க்கள் பீஷ்மரிடத்தில் போய் சண்டையை நிறுத்தச் சொல்ல, அவர் நிறுத்தமுடியாது என்று சொல்லிவிட்டார். மறுபடியும் இவர்கள் பரசுராமரிடம் வந்து சண்டையை எப் படியாவது நிறுத்த வேண்டுமென, அவர் தாம் அபஜயம் அடைந்ததாகச் சொல்லி இனிமேல் க்ஷத்திரியனை சிஷ்யனாகக் கொள்ளுவதில்லை என்று சபதம் செய்துவிட்டு தமது இருப் பிடம் சென்றார்.

வினு 81.—இதன் பின்பு அம்பாவின் கதி என்னமாயிற்று?

விடை.—அம்பா கதியற்றவளாய்ப் போக, அவளுக்கு பீஷ்மரிடம் இருந்த வெறுப்பு அதிகமாய் விட்டது. உடனே மஹாதேவரைக் குறித்துத் தபஸு செய்ய அவர் பிரத்யக்ஷமாக, அவரை நோக்கி 'நான் எப்படி பீஷ்மரைக் கொல்லத்தக்க நிலையை அடைய வேண்டும்' என்று கேட்க அவர், 'அடுத்த ஜன்மத்தில் நீ, புருஷனாகி பீஷ்மரைக் கொல்லப் போகிறாய்' என்று சொல்லி மறைந்தார். உடனே அம்பா அக்கினிப் பிரவேசம் செய்ய துருபத ராஜனுக்குப் பெண்ணாக வந்து பிறந்தாள்.

வினு 82.—இவ்வாறு பீஷ்மர் சிகண்டியைத் தான் கொல்லாதிருப்பதற்குக் காரணம் சொல்லத் துரியோதனன் ஸபையில் என்ன நடந்தது?

விடை.—துரியோதனன் தனது பக்கத்திலிருக்கும் ஸேனைத் தலைவர்களது வீரியத்தை அதிகப்படுத்த, 'உங்களைத் தனியே சண்டைக்கு விட்டால் எவ்வளவு காலத்தில் பாண்டவ ஸேனைகளை அழிப்பீர்கள்' என்று கேட்டான். அப்பொழுது பீஷ்மர் தமக்கு ஒருமாதம் வேண்டும் என்றும், கிருபர் தமக்கு இரண்டு மாதம் வேண்டுமென்றும், அசுவத்தாமா தனக்குப் பத்துநாள் வேண்டும் என்றும், கர்ணன் ஐந்து நாள் வேண்டும் என்றும் சொல்லப், பீஷ்மர் கர்ணனது தற்புகழ்ச்சியை நிந்தித்துப் பேசினார்.

வினு 83.—பாண்டவ ஸேனையிலும் இம்மாதிரியான விஷயம் நடந்ததா? பின்பு என்ன நடந்தது?

விடை.—யுதிஷ்டிரர் தமது ஸேனைத்தலைவர்களை இம்மாதிரி கேட்க அர்ச்சுனன் தனக்கு ஒருக்ஷணம் போதுமென்று சொன்னான். இவ்வாறு காரியங்கள் நடந்ததும் இருதிறத்தாரது படைகளும் யுத்த பூமியை நோக்கிப்போய் அணி வகுத்து நின்றன.

அநுபந்தம்.

தமிழ்ப் பாரதத்தில் காணப்படும் புதிய கதைகள்.

பாரதத்தின் வரலாறு :—(பீடிகை வினா 5.)

ஸர்ப்பயாகச் சருக்கம் :—ஸர்ப்பயாகம் அஸ்தீகரால் நின்றதும், வியாஸர் ஜனமேஜய ஸபையைநோக்கி வந்தார். அவரைக்கண்டு அரசன் 'நீர் ஞானியாய் இருந்தும் என் மூதாதைகளுக்குள் சண்டை வர வொட்டாது தடுத்து அவர்களுள் ஸமாதானம் செய்துவிடுவதை விட்டு அவர் சண்டையிட்டு மாளும்படி ஏன் பார்த்திருந்தீர்?' என்று கேட்டார். அதற்கு அவர், 'நமக்கு என்னதெரிந்தபோதிலும் என்ன? அவசியம் நடக்கவேண்டியதை யாரால் தடுக்கமுடியும்' என்று சொல்ல, 'நீர் நினைத்தால் முடியாதா? அவர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டிறக்கும்படி செய்துவிட்டீரே!' என்று அரசன் மறுபடியும் வியாஸரைக் குற்றங் கூறினான். வியாஸர் தமது வார்த்தையின் உண்மையை அரசனுக்குக் காட்ட, தமது ஞான திருஷ்டியால் பார்த்து 'ராஜனே உனக்கு இன்றைக்குச் சரியாய்ப் பத்தாம்நாள் ஒரு பிரம்மஹத்திதோஷம் ஸம்பவிக்கப்போகிறது. எங்கே! உன் பிரயத்தனங்களால் அதைத் தடுத்துவிடு பார்ப்போம். நான் பத்தாம் நாள் உன்னிடம் வருகிறேன்' என்றுசொல்லி தமது இருப்பிடம் சென்றார். உடனே அரசன் அநேக பிராம்மணர்களை அழைத்து வரப்போகிற பிரம்மஹத்தியைத் தடுப்பதற்கு உபாயத்தை ஆலோசித்தான். பிராம்மணர்கள் எல்லோரும் 'இன்று முதல் யாராவது ஒரு பிராம்மணனை நியமித்து அகோராத்திரம் தண்ணீர் கூடக் குடியாமல் அக்னியில் வேதமந்திரங்களால் ஹோமம் செய்தால் பிரம்மஹத்தியைத் தடுத்துவிடலாம்' என்று அரசனுக்கு உபாயம் கூறினர். இதை சரிவர நடத்தவல்லவர் யாராவது வந்து நடத்துவித்தால், அவர்களுக்கு ஏராளமான பொருள் கொடுப்பதாக அரசன் சொல்ல ஒருவரும் தைரியமாய் முன் வரவில்லை. அப்பொழுது தரித்திரத்தால் பீடிக்கப்பட்ட ஒரு கிழட்டு பிராம்மணர்

அந்த வேலையை ஒப்புக்கொண்டு ஊண் உறக்கமின்றி ஒன்பதுநாள் ஹோமத்தை ஸரிவர நடத்திவிட்டார். ஒன்பதாம்நாள் பின் இரவில் நாலாம் ஜாமத்தில் அந்தப் பிராம்மணன் கொஞ்சம் கண்ணயர்ந்தார். அருகில் மந்திரம் சொல்லிக்கொண்டிருந்த அரசன் அவரை எழுப்பத் தர்ப்பை நுனியால் அவரைத் தொட்டான். உடனே அலறிக்கொண்டு அவர் நெருப்பில்விழுந்து இறந்தார். உடனே பத்தாம்நாள் காலையில், வியாஸர் சொல்லிப்போன பிரம்மஹத்தியும் அரசனை வந்து பிடித்துக்கொண்டது. அந்த ஸமயத்தில் வியாஸர் தமது சிஷ்யர்களோடு அங்குவந்து, 'வருவன தாமேவரும். நாம் தடுத்தால் நிற்கா. நமது புத்தியைக்கொண்டு அவைகளைத் தடுக்க முயன்றால், அம்முயற்சியே வருவனவற்றிற்கு ஸஹாயமாக ஏற்படும். இப்பொழுதாவது, நான் முன்சொல்லிய வாக்கின் பொருள் நன்றாய் விளங்கியதா?' என்று கேட்டார். அப்பொழுது அரசன் தான் செய்த அபராதத்திற்குத் தகுந்த தண்டனை ஸம்பவித்ததாக சொல்லி மஹாவிநயத்துடன் அதை நீக்க உபாயம் சொல்லவேண்டும் என்று வியாஸரைக் கேட்டான். அதற்கு அவர் 'என் சிஷ்யர் வைசம்பாயனரைக்கொண்டு உனக்கு பாரதத்தைச் சொல்லுவிக்கிறேன். அதனாலே உனக்கு பிரம்மஹத்தி போவதும் அன்றி உன் மூதாதைகள் விஷயமாக என்னிடம் வந்த அவநம்பிக்கையும் உனக்குத் தீரும். இந்தக் கரியவஸ்திரத்தை ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டிக்கொள். நீ பாரதம் கேட்கக்கேட்க, அந்த கரியவஸ்திரம் வெள்ளையாய்க்கொண்டே வரும். இதுதான் உன் பிரம்மஹத்தி போவதற்கு அடையாளம்' என்று கூறி வைசம்பாயனரை நோக்கி ஜனமேஜயனுக்குப் பாரதம் சொல்லும்படி கட்டளையிட்டுத் தமது ஆச்ரமம் சென்றார். இதுதான் வைசம்பாயனர் ஜனமேஜயருக்குப் பாரதம் சொல்லிய காரணம்.

1-வது ஆதிபர்வம்.

1. அரக்குமாளிகைக் கதை:—(வினா 122–126.) துரியோதனன் கனகன் என்ற சிற்பியினிடம் அரக்குமாளிகை கட்டும்படி சொல்லி அது எரியும்படி தீவைக்க புரோசனனுக்கு ஏற்பாடு செய்தான். அப்பொழுது வாரணவதத்தில் கனகன் அரக்குமாளிகை கட்டிவருகையில் புரோசனன் தப்பிப் பிழைத்தோட அவன் வேண்டுகோளின்

படி ஒரு ஐந்துகால் மண்டபம் இயற்றி ஐந்தாம் காலின் அருகி லிருந்து இடும்பவனம் வரை ஒரு சுரங்கம்செய்து அந்த துவா ரத்தை ஒரு கல்லால் மூடிவிட்டுத் துரியோதனனிடம் வந்து தான் அரக்குமாளிகை கட்டிவிட்டதாகத் தெரிவித்தான். இதன் பின்பு கனகன் வீட்டிற்குப் போகையில் விதுரர் அவனை ஸ்துதித்து அவ னிடமிருந்து நடந்த ஸங்கதியை அறிந்துகொண்டு மிகுந்த துக் கத்தை அடையப் பாண்டவர்களுக்கு ஸஹாயம் செய்ய எண்ணி ஐங்கால் மண்டப ரகஸியத்தை விதுரருக்கு மாத்திரம் அவன் தெரிவித்தான். உடனே விதுரர் வேண்டுகோளின்படி, அந்த ஸங் கதியை பீமஸேனனிடம் அவன் தெரிவித்தான். கனகன் சொல் லியதினத்தில் அந்த நாழிகையில் பீமன் எழுந்து அரக்குமாளிகை வர்த்தியைப் பற்றவைத்துத் தன் ஸஹோதரர்களையும் குந்திதேவியை யும் தூக்கிக்கொண்டு சுரங்கக்கல்லை காலால் உதைத்துத் தள்ளி சுரங்கத்தின்வழியாக இடும்பவனம் வந்து சேர்ந்தான்.

2. மத்ஸ்ய யந்திரம் :—(வி௵ 150.) ௭௦ அடி உயரமுள்ள இரண்டு கம்பத்தை ௭௦ அடி இடை வெளியில் நாட்டி; அதற்கு மேல் வட்டம் பூட்டி அதற்குமேல் ௭௦ அடிக்கம்பங்கள் இரண்டு நாட்டி அதன்மேல் ஓயாது சுழன்றுவரும் சக்கிரத்தை வைத்து அதன் மத்தியில் மேலே மத்ஸ்யக்குறியை வேலைக்காரர்கள் வைத் தார்கள். அதன் பிறகு விட்டங்களில் மும்மூன்று துளையுண்டாக்கி அதன் கீழே வெள்ளிக்கொப்பரையில் மஞ்சள் நீர் நிறைத்து மனி தர் உள்ளே நோக்குங்கால் மூன்று துளைகள் அவர்கள் தலைகளில் மறையும்படி அதை வைத்தனர். அப்பொழுது ஒரு கனத்த வில்லையும் அம்பறாத் தூணியும் தயார் செய்வித்து அம்பறாத் தூணியைத் தோளில் ஏந்தி, வில்லை நாண் பூட்டி மஞ்சள் நீரில் தோன்றும் மூன்று துளைகள் வழியாக மூன்று அம்பு எய்து, மேல் சுழலும் சக்கிரத்தின் உள்ளாலே மத்ஸ்யக்குறியை அடித்து அது சக்கிரத்திற்கு சரியாய் வந்ததும் சக்கிரத்தை அறுத்து அவை இரண்டும் கீழே விழாவண்ணம் பாணங்களைவிட்டு அவைகளைத் தனது கையில் ஏந்தும் வீரனுக்கே திரௌபதியைக் கொடுப்பது என்று துருபதராஜன் புரோஹிதர்கள் யோசனை கூறியவாறு ஏற் பாடு செய்திருந்தான்.

3. நளாயினி கதை :—(வி௵ 157.) நளமகாராஜனுக்கு நளா யினி என்றொரு பெண் இருந்தாள். அவளைக் கல்யாணம் பண்ணிக்

கொள்ளவேண்டும் என்று மௌத்கல்யர் என்ற கிழட்டு முனி அரச னிடம் வந்து யாசித்தார். அதற்கு அவன் 'என் பெண் ஸம்மதத் தைக் காட்டும்படி அவளது முத்திரை மோதிரத்தை நீர் வாங்கிவரு வீராயின் நான் கல்யாணம் செய்துகொடுக்கிறேன்' என்று வாக் குக் கொடுத்தான். நளாயினியிடம் புறப்பட்டுப் போகையில் மன்ம தனது ஸௌந்தரரூபத்தை எடுத்துக்கொண்டு போய் அவளிடம் தமது எண்ணத்தை வெளியிட, அவள் மிகுந்த வெட்கத்தோடு தனது முத்திரை மோதிரத்தை அந்த ஸௌந்தர புருஷனிடம் கொடுத்துவிட்டாள். உடனே அவர் அங்கிருந்து புறப்பட்டு வரும் வழியில் தமது கிழரூபத்தைத்தாங்கி அரசனிடம் வந்து மோதி ரத்தைக் கொடுக்க, அவன் பெண்ணை அழைத்து அவரைக் கல் யாணம் செய்துகொள்ளும்படி சொன்னான். தன்னிடமிருந்த மோதிரம் வாங்கியவர் கிழவர் அல்ல என்று தோன்றியபோதிலும், அவரிடம் மோதிரம் இருப்பதால் அவரையே கல்யாணம் செய்து கொண்டு காட்டில் தனக்கு வந்த கஷ்டங்களைக் கவனியாது அவ ரையே பின்தொடர்ந்து சென்றாள். வெகுகாலம் அவர் தபஸி லேயே இருந்தார். அப்பொழுது கொஞ்சமேனும் மனவருத்த மின்றி, நளாயினி அவருக்கு நல்ல மனத்துடன் தொண்டுகள் செய்து வந்தாள். இப்படி இருக்கையில் அவளது கற்பை முற்றி லும் பரிசோதிக்க ரிஷி பெருவியாதியை வரவழைத்துக்கொள்ள, அவர் அங்கங்கள் எல்லாம் அழுகிச் சொட்டின. அப்பொழுதும் நளாயினி கொஞ்சமேனும் அருவருப்பின்றி முனிவருக்கு முன் போலத் தொண்டுசெய்து வந்தனள். அப்பொழுது முனிவர் 'உன் னைக் கல்யாணம் செய்த துர்பாக்கியத்தால் எனக்கு இந்தக் கர்ம வியாதி வந்துவிட்டது. உன்னால் என் தீர்த்தயாத்திரை முத லியவைகள் எல்லாம் தடைப்பட்டுவிட்டனவே' என்று கஷ்டப்படுப வர்போல் நடித்து நளாயினியைப் புண்படுத்தினார். கணவனது நன்மையைக் கருதி இருந்த நளாயினி, உடனே அவரைக் கூடையில் வைத்துத் தன் தலைமேல் ஏற்றிக்கொண்டு அநேகம் தீர்த்தங்களுக் குக் கொண்டுபோய் நன்றாக ஸ்நானம் செய்வித்தாள். இப்படி இருக் கையில் ஓர் பட்டணத்துள் இவர்கள் போனார்கள். அங்கு முனி வர் நளாயினியின் கற்பை இன்னும் பரிசோதிக்க எண்ணி 'பெண்ணே! நான் இந்த ஊர் வேசை ஒருத்தியிடம் ஆசைகொண்

டிருக்கிறேன், நீ எப்படியாவது என்னையும் அவளையும் சேர்த்து விக்கவேண்டும்' என்ருர். உடனே நளாயினி, சற்று நாழிகை ஆலோசித்துவிட்டு அன்றுமுதல் அவர் குறிப்பிட்ட வேசை வீட்டு வாயிலை அதிகாலையில் எழுந்து விளக்கிக் கோலமிட்டுவரத் தொடங்கிளுள். ஒருநாள் வேசை அவளைக் கண்டு 'யாது காரணத்தால் இவ்வாறு செய்கிருய்' என்று கேட்க, அவள் 'குஷ்டரோகியாகிய என் நாயகன் உன்மேல் ஆசைகொண்டிருக்கிருர். நீ அவரைத் திருப்தி செய்யவேண்டும்' என, மிகுந்த தயையோடு அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டாள். அன்று முதல் நளாயினி ஒவ்வொரு இரவும் தனது நாயகனை வேசைவீட்டிற்கு கொண்டுபோய் வைப்பதும், வாயிலில் காத்திருந்து நாயகனை மறுபடியும் கூடையில் தாம் இறங்கியிருக்குமிடம் கொண்டுவருவதுமாக இருந்தாள். முனியோ, வேசை வீடுபோய் நளாயினி தன்னை விட்டகன்றதும் மன்மதரூபம் தரித்து வேசையோடு இருப்பது வழக்கம். தாம் ஒரு காரணத்திற்காக நளாயினிக்குக் கோரரூபத்தைக் காட்டுவதாகவும் ஆதலால் தமது உண்மைரூபத்தை அவளுக்கு வெளியிடக் கூடாதென்றும் வேசைக்கு அம்முனி கட்டளையிட்டிருந்தார். நளாயினி இந்த விஷயத்தை அறியாது, ஒருநாள் இருண்ட இரவில் தன் கணவனை தலைமேல் வைத்துக்கொண்டுபோகையில் வழியில் இராஜாவின் உத்தரவால் கழுவேற்றப்பட்ட மாண்டவ்ய ரிஷியின் காலில் கூடைதட்ட, அவருக்கு வேதனை அதிகரித்தது. உடனே அவர் 'ஸூர்யோதயமானதும் நீ மாங்கல்யம் இழப்பாய்' என்று அவளைச் சபிக்க, 'அவள் ஸூர்ய உதயம் ஆகாதிருக்கட்டும்' என்று மறுமொழி கூறினுள். எட்டு நாள் ஸூர்ய உதயமாகாமல்போக உலகமுழுவதும் தபிக்கத் தொடங்கியது. தேவதைகள் மாண்டவ்யரிடம் வர, அவர் நளாயினி நினைத்தால்தான் அதை மாற்ற முடியும் என, அவர்கள் நளாயினியைப் பிரார்த்திக்க அவள் என் கணவனைக் கேளுங்களென, மௌத்கல்யரும் நளாயினி நினைத்தால்தான் முடியும் என்று சொல்ல எல்லாரும் எவ்வளவோ நியாயம் சொல்லி நளாயினிடம் மன்ருடினர். முடிவில் அவள் தேவதைகளை நோக்கி 'மாண்டவ்ய ரிஷி சாபத்தை மாற்றினுல் நான் என் வார்த்தையை மாற்றுகிறேன்' என்ருள். அப்பொழுது தேவதைகளின் கட்டாயத்தின் பேரில் மாண்டவ்யர் 'தீர்க்க

ஸுமங்கலீபவ' என்று நளாயினியை ஆசீர்வதிக்க, அவள் ஸூர்யன் உதயமாகட்டும் என்று சொல்லி உலகத்தை ரக்ஷித்தாள். இவைகளைக்கண்ட மௌத்கல்யர் தமது பரீக்ஷையை நிறுத்தி கோடிமன்மத ரூபத்துடன் அவளிடம் ஸுகங்களை அனுபவித்து அவளைத் திருப்திசெய்வித்தார். அப்பொழுது ரிஷியின் உத்தரவின்பேரில் நளாயினி 'நீங்களே என்னை மறுஜன்மத்திலும் கல்லியாணம் செய்துகொண்டு என்னைப் படுத்திய கஷ்டங்கள் முற்றிலும் தீர எனக்கு ஸுகம் தந்தருளவேண்டும்' என்று வரம் கேட்டாள். அடுத்த ஜன்மத்தில் இவள் இந்திரஸேனையாகப் பிறந்தாள். அப்பொழுது நடந்த கதையை ஆதிபர்வத்தில் சொல்லியிருக்கிறது.

குறிப்பு:—மணிபுரம் என்பதற்கு மதுரை என்ற பெயர் தமிழ் பாரதங்களில் காணப்படுகிறது.

2-வது ஸபாபர்வம்.

1. கம்ஸன் கதை:—ஜராஸந்தன் பட்டணம் போகுங்கால், அவன் மாப்பிள்ளையாகிய கம்ஸனது அரசாட்சி, முடிவு முதலியவைகளைச் சொல்லும் கதை காணப்படுகிறது. (பாகவத வினு விடையில் 10-வது ஸ்கந்தம் பார்க்க.)

2. ஜராஸந்தன் கதை:—ஜராஸந்தனோடு பீமன் யுத்தம்செய்து அவனை அநேகம்தரம் காலைப்பிடித்துக் கிழித்தெறிந்தும் அவன் தேகம் மறுபடியும் சேர்ந்துகொண்டது. இவன் பிறந்தகாலத்தில் ஜரை என்ற கிராமதேவதையால் அவன் தேகத்தின் இருபாதியும் சேர்க்கப்பட்டதால் இவ்வாறு கிழித்தெறிந்தும் அவன் தேகம் முன்போலச் சேர்ந்துகொண்டது. இதை அறிந்த பகவான் தம் கையில் ஒரு துரும்பை எடுத்து பீமன்முன் சென்று அதை இரண்டாகக் கிழித்து ஒன்றைத் தலைமாற்றி எறிந்தார். இதை பீமன் அறிந்து கொண்டு ஜராஸந்தனைக் கிழித்து அவன் தேகத்தின் ஒரு பாதியை தலைமாற்றி எறிந்தான். உடனே அவன் தேகம் சேராமல் போக அவன் இறந்தான்.

3. தசாவதாரக் கதை:—இராஜஸூய யாகத்தில் தருமபுத்திரர் பீஷ்மரைநோக்கி, யார் முதல் அர்க்கியத்தை வாங்கிக்கொள்ளத் தகுந்தவர்கள் என்று கேட்க, அவர் கிருஷ்ணபரமாத்மாவே என்று

சொல்லி அவரது அவதாரங்களின் கதைகளை எடுத்துரைத்தார். (பாகவத வினவிடையைப் பார்க்க.)

3-வது ஆரண்ய பர்வம்

1. அர்ச்சுனனுக்குப் பரமசிவன் பிரத்யக்ஷமாதல் :—(வினு 20). அர்ச்சுனனுக்கும் பரமசிவத்திற்கும் வெகுகாலம் மல்லயுத்தம் நடக்க அதன் முடிவில் பரமசிவன் அர்ச்சுனனைத் தமது காலால் ஏற்றி விட அவன் ஸூர்யமண்டலம் வரையில் போய் மிகுந்த வேகமாக கீழே விழுந்தான். பார்வதியின் வேண்டுகோளின்படி வேடனுகிய பரமசிவன் அர்ச்சுனன் அடிபடாது கீழே விழும்படி செய்தனர். அர்ச்சுனன் மறுபடியும் வேடனோடு யுத்தம் செய்யச் சித்தமாகத், திடீரென்று வேடன் வேடச்சி முதலியவர்கள் மறைந்தனர். அர்ச்சுனன் திகைத்து நிற்கையில், ஆகாயத்தில் ஸகல தேவதைகளோடும் பரமசிவம் விருஷபாரூடராக அர்ச்சுனனுக்கு தரிசனம் கொடுத்தார்.

குறிப்பு :—பாண்டவர்கள் தீர்த்தயாத்திரைச் சருக்கத்தில் ஹரிச்சந்திரன் கதை இல்லை. தூர்வாஸர் பாண்டவர்களைப் பார்க்க வந்தகதை ஸாவித்ரி உபாக்யானத்தின் பின் வைக்கப்பட்டிருக்கிறது.

2. நெல்லிப்பழம் பொருந்திய கதை :—தூர்வாஸ முனிவனை திருப்தி செய்துவிட்டு பகவான் துவாரகை போனபின்பு ஒருநாள் ஸாயங்காலம் அர்ச்சுனனும் திரௌபதியும் உல்லாஸமாய் விளையாடிக் கொண்டு ஒரு ரிஷி தபஸு செய்துகொண்டிருந்த நெல்லிமரத்தடியில் வந்தார்கள். அங்கு வந்ததும் மரத்தின்மேல் இருந்த அழகிய நெல்லிக்கனியை திரௌபதிகண்டு அதைத் தனக்குப் பறித்துத் தர வேண்டுமென்று கேட்க அர்ச்சுனன் அவ்வாறே செய்தான். அதைக் கண்ட அருகிலிருந்த முனிகள் அர்ச்சுனனை நோக்கி ' இம்மரத்தடியில் தவம் செய்யும் முனிவர் ஆகாரத்திற்காக இந்த நெல்லிமரம் சிவஸங்கல்பத்தால் உண்டாயிருக்கிறது. இதில் பன்னிரண்டு வருஷத்திற்கு ஒருதரம் தான் பழம்பழுத்து இந்தமுனிவர்கையில் விழும், அவர் அதை அருகிலிருப்பவர்களுக்குக் கொடுத்துத் தாமும் புசித்து தவம்செய்யத் தொடங்குவார். பழம் நாளைக்கு விழவேண்டியது. நீ இன்று இவ்வாறு செய்துவிட்டபடியால் உனக்கு ரிஷிசாபம் வரும்' என்று தெரிவித்தனர். இதை அர்ச்சுனன் தருமபுத்திரரிடம் சொல்லப் பாண்டவர்கள் எல்லோருக்கும் மிகுந்த துக்கம்வந்தது.

அவர்கள் கிருஷ்ணபகவானைத் தியானித்தனர். உடனே அவர்வந்து அவர்களை நெல்லிமரத்தடிக்கு அழைத்துப்போய், 'உண்மையால் ஆகாதகாரியம் ஒன்றும் இல்லை. உங்கள் மனத்திற்குள் அந்தரங்கமாக இருக்கும் ரகஸிய எண்ணத்தை வெளியிடுவீராயின், இந்தப்பழம் மரத்தை நோக்கி மெதுவாக ஏறி முன்போல ஒட்டிக் கொள்ளும்' என்றார். அப்பொழுது தருமபுத்திரர், 'தர்மமும், பொறுமையும், கிருஷ்ணபகவானுமே, என் மனத்துள் ஸதா ஊறிக் கொண்டிருப்பன. பாபம் முதலியவைகள் என் மனத்துள் நுழைய நான் இடங் கொடுப்பதில்லை' என பழம் இரண்டு முழம் ஏறியது. பீமன் 'பிறன்பெண்சாதியை ஸஹோதரி என்று பாவிக்கவேண்டும்' பிறன்பொருளை வெறுக்கவேண்டும், பரநிந்தை கூடாது, பிறர்துக்கத்தைத் தன் துக்கமாகப் பாவிக்கவேண்டும் என்பதுமே நான் எண்ணும் எண்ணங்கள்' என பழம் பின்னும் இரண்டு முழம் ஏறியது. அர்ச்சுனன் 'உயிரைவிட மானம் மேல், ஆதலால் மானத்தைக் காப்பாற்றவேண்டும், மானமே உயர்ந்த குலத்திற்கு ஸமானம்' என்று தன்கருத்தை வெளியிட்டான். உடனே பழம் இரண்டு முழம் உயர்ந்தது. அப்பொழுது நகுலன் முன்வந்து 'ஞானமும் கல்வியும் இல்லாதவர்கள் பதருக்கு ஸமானம்' என்று சொல்லக் கனி இரண்டு முழம் உயர்ந்தது. அப்பொழுது ஸஹாதேவன், 'ஸத்யமே என்தாய், ஞானமே தந்தை, தர்மமே துணைவன், கருணையே ஸ்நேஹிதன், சாந்தமே பெண்சாதி, பொருமையே எனக்குப் பிள்ளை' என்றதும் கனி இரண்டு முழம் ஏறியது. பின்பு திரௌபதி வந்து மிகுந்த வெட்கத்துடன் 'எனக்கு ஐந்து கணவர் இருந்தும் என்மனம் என்னை ஓர் ஓர் ஸமயங்களில் மோசம் செய்து வேறு புருஷனை நாடிப்போகும். ஆகையால் இதை நோக்கில் ஒரு புருஷர் யாராவது இருக்கிறவரையில் பதிவ்ருதாஸ்திரீகளே உலகில் இல்லை என்று எனக்குத் தோற்றுகிறது' என்று சொல்லவும் பழம் மரத்தில் முன்னிருந்த விடத்தில் ஒட்டிக்கொண்டது. எல்லோரும் வியப்படைந்து தத்தம் இருப்பிடம் சென்றனர்.

3. யக்ஷப்பிரச்னம்:—(விஞ129-131) பாண்டவர்களுக்கு வனவாஸகாலம் முடிந்துவிடுவதற்குள் அவர்களைக் கொன்றுவிடவேண்டும் என்றுகெட்ட எண்ணத்துடன் துரியோதனன் 12-ம் வருஷம் முடி

வில் சகுனியினது துர் ஆலோசனையின்பேரில் சிவபக்தி வாய்ந்த காள மாமுனியை அழைத்து ஒரு ஆபிசாரக்கிரியைசெய்து அதன் மூலமாகப் பாண்டவர்களைக் கொன்றுவிடும்படி அவரை நயந்து கேட்டுக் கொண்டான். முதலில் அவர் பாண்டவர்களைக் கொல்லமுடியாதென்று எவ்வளவோ மன்றாடியும் முடிவில் காளமாமுனியை அதற்கு இசையும்படி செய்ய, அவர் தமது ஆச்சிரமம் சென்று வேண்டியதைச் செய்வதாகச்சொல்லிப் போயினர். தமது இருப்பிடம் சென்றதும் முனிவர் ஒரு கொடிய ஹோமம்செய்து ஒரு பூதத்தை உண்டாக்கி பாண்டவர்களைச்சென்று கொன்றுவரும்படி அதை ஏவினார். அதுபோகும்பொழுது, 'நான் போகுங்கால் பாண்டவர்கள் உயிரோடிருந்தால் ஸரி, இல்லாவிடில் உம்மை வந்து கொல்லுவேன்' என்று சொல்லிப்போயிற்று. இதற்குள் துரியோதனன் மோசக் கருத்தை அறிந்த யமதர்மராஜன் ஒரு பிரம்மசாரி உருக்கொண்டு பாண்டவர்களிடம் வந்து 'நான் வெகு காலம் கஷ்டப்பட்டு குருவுபதேசம் பெறுவதற்காக ஸம்பாதித்த அருமையான கிருஷ்ணாஜினம் ஒன்றை ஒரு மான் எடுத்துப் போய்விட்டது. அதை எனக்கு ஸம்பாதித்துக்கொடுக்கவேண்டும்' என்று விண்ணப்பம் செய்ய, பாண்டவர் ஐவரும் மானைத் துரத்திக்கொண்டு புறப்பட்டனர். முடிவில் பீமன் முதலிய நால்வரும் விஷக்குளத்தின் கரையில் மாண்டு விழ தருமபுத்திரர் தம்பிமாரைக் காணாது தேடி வரும் வழியில் சோர்ந்து இறந்தவர்போலப் பிரக்ஞையின்றி ஒரு செடி மறைவில் சாய்ந்தனர். அந்த ஸமயத்தில் காளமாமுனிவனால் ஏவப்பட்ட பூதம் வந்து பாண்டவர் இருக்கும் நிலையைக்கண்டு அதிக கோபத்தோடு சென்று முனிவனைக் கொன்று தின்றுவிட்டு அக்னியில் மறைந்ததும், உடனே யமதர்மன் அருளால் தருமபுத்திரருக்கு ஞாபகம் வர, அவர் எழுந்து விஷக்குளக்கரையில் வர பீமன் மணலில் 'நாங்கள் இக்குளத்துத் தண்ணீரால் இறந்தோம். நீங்கள் இதைக் குடியாதேயுங்கள்' என்று எழுதியிருந்ததைக்கண்டு, மிகுந்த துக்கத்தோடு அந்தத் தண்ணீரைக் குடிக்க குளத்துள் அவர் இறங்கினர். பின்பு வினாக்களுக்கு விடைகள் கூறப்பட்டன.

4-வது விராடபர்வம்.

---

1. **கீசகன்** வரலாறு :—(வி௫ 16) கேகயராஜன் கல்யாணம் செய்துக்கொண்ட ஒரு ஸூதகன்னிகையினிடம் ஸூதேக்ஷ்ணாதேவி உண்டானாள். அதன் பின்பு தனக்கு பிள்ளையில்லாதது கண்டு அரசன் வேறு பெண்சாதியைக் கல்யாணம் செய்துகொள்ள, அவளிடம் **கீசகனும்** 105 பேர் உபகீசகர்களும் பிறந்தார்கள். கீசகனுக்கு சிங்கபலன் என்றொரு பெயரும் உண்டு. விராடராஜனுக்கு முதல் பெண்சாதி சுவேதன் முதலிய நான்கு பிள்ளைகளைப் பெற்றுவைத்து விட்டு இறக்க, அவன் இந்த ஸூதேக்ஷ்ணாதேவியை கல்யாணம் செய்து கொண்டான். அவளிடம் உத்தரன், உத்தரை ஆகிய குழந்தைகள் உண்டாயின. விராடராஜன் தம்பிமார் ஒருவரும் தகுந்த பலவான்களாக இல்லாமையால் அவன் கீசகனை அழைத்து தன் ஸேனாதிபதியாக்கிக்கொள்ள, அவனே கூடிய சீக்கிரத்தில் தன் திக்குஜயங்களால் விராடராஜ்யத்தை ஆண்டுவந்தான். கீசகர்கள் பூர்வஜன்மத்தில் காலகேயர் என்ற அஸூரர்கள். பாணனே கீசகனாகப் பிறந்தான்.

2. பதிவிருதைக்கு வரும்துக்கம் எளிதில் நீங்கும்:-(வி௫ 23) உபகீசகர்களைக்கொன்று சிதற அடித்துவிட்டு பீமன் திரௌபதிக்கு மயானத்தில் இந்தவிஷயத்தைப்பற்றி ஒரு கதை சொன்னான். பார்வதியிடம் வேலைசெய்துகொண்டிருந்த ஜயை என்பவள் உலகத்தில் நடக்கும் இல்லறதர்மம் எவ்வாறிருக்கும் என்று பரதேவதையைக் கேட்க, அவள், 'நீயே பூமியிற்பிறந்து அதை நன்றாய் அறிந்துவா' என்று அநுக்கிரஹித்தாள். அவ்வாறே இவள் பூமியில் பிறந்து கன்னிகைப் பருவம் அடைந்தாள். அப்பொழுது தமக்குத்தருமபத்னி ஒருத்தி வேண்டும் என்று உலகெலாம் தேடிவந்த தேவராதர் என்ற ரிஷி இவளைக்கண்டு, இவளது கற்பைப்பரிசோதிக்க எண்ணி, ஒருராக்ஷஸ வடிவங்கொண்டு ஆகாயத்தில் தூக்கிச்சென்று ஒருதாமரைக்குளத்தின் கரையில் வைத்தார். அங்கு தம்மாலானமட்டும் அவளைத் துதித்துப்பார்த்தும் அவள் அவரைக் கல்யாணம் செய்துகொள்ள ஒப்பவில்லை. அப்பொழுது அவர் அவளது கற்பை அழிக்கமுயல, அவள் நான் இதுவரை கற்பை ஸரியாகக் காப்பாற்றியவளாகில் என்கற்பு

இப்பொழுது அழியாதிருக்கும்படி என் கால்முதல் கழுத்துவரை கல்லாய்ப் போய்விடட்டும்' என்று உரக்கக் கூவினாள். உடனே அவ்வாறாக, ரிஷிகண்டு தமது நிஜரூபத்தைக் காட்டி அவளை வேதவிதிப்படி கல்யாணஞ் செய்துகொண்டு இல்லறவிதிப்படி நடந்துவந்தார்.

5-வது உத்தியோகபர்வம்.

---

1. பீமன் அபிப்பிராயம் :—(கிருஷ்ணன் தூது, வினா 34.) பகவான் தூதுபோவதே இவனுக்கு ஸரியாகத் தோன்றவில்லை. ஸஞ்சயன் வந்துவிட்டுப் போனதும் போரைத் தொடங்கவேண்டும் என்பதே அவன் அபிப்பிராயம். அவனுக்கு வந்த ஆத்திரத்தில் பகவானை எப்படியாவது யுத்தத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு வரவேண்டும் என்று சொல்லி, 'அரவுயர்த்தோன் (துரியோதனன்) கொடுமையினும் முரசுயர்த்தோய் (ஏ தருமபுத்திரா) நின் அருளுக்கு அஞ்சினேன்' என்று சொல்லித் தன் உட்கருத்தை வெளியிட்டான்.

2. ஸஹாதேவன் அபிப்பிராயமும் அவன் சிறப்பும் :—(கிருஷ்ணன் தூது, வினா 34.) ஸஹாதேவன் பகவானை நோக்கி 'நீ தூது போனால் என்ன, போகாதிருந்தால் என்ன; துரியோதனன் பாகங்கொடுத்தால் என்ன, கொடுக்காமலிருந்தால் என்ன; திரௌபதி கூந்தலை முடித்தால் என்ன, முடிக்காவிட்டால் என்ன; நீ நினைத்தபடி காரியங்கள் முடியும் விதம் எனக்கு எப்படித் தெரியும்' என்றான். இவன் எல்லோரையும் போலத் தனது அபிப்பிராயத்தை வெளியிடாது ரகஸியம் தெரிந்தவன் போலப் பேசியதைக் கண்ட பகவான், அவனிடம் உள்ள ரகஸியத்தை அறியவேண்டும் என்று அவனைத் தனிமையாக ஒரு மண்டபத்திற்கு அழைத்துப்போய் 'நீங்கள் எல்லோரும் சொல்லியபடி பாரத யுத்தம் நடவாது நிறுத்த உபாயம் என்ன?' என்று கேட்டார். அதற்கு ஸஹாதேவன் 'நீ பாரத யுத்தத்தில் எல்லோரையும் சாம்பலாக்கி பூபாரம் நீக்க வந்திருக்கிறாய். நீ நினைத்தால் அல்லவா பாரதயுத்தம் நிற்கும். அப்படி இருப்பினும் என் அபிப்பிராயத்தில் கர்ணனுக்கு இராஜ்ய பட்டாபிஷேகஞ்செய்து, அர்ச்சுனனைக் கொன்று, திரௌபதியின் கூந்தலையும் அறுத்து, உன்னையும் பிடித்துக் கட்டிவிட்டால் இந்த யுத்தம் உடனே நின்றுவிடும்' என்று சொன்னான். அப்

பொழுது பகவான் 'முன்னே சொல்லியவைகள் எல்லாவற்றையும் நீ செய்தாலும், என்னை எவ்வாறு ஒருவரால் கட்டமுடியும்' என்று கேட்க, 'நீங்கள் உங்களது ரூபத்தைக் காட்டுங்கள் நான் கட்டுகிறேன்' என்றான் ஸஹாதேவன். உடனே பகவான் அநேக ரூபங்களோடு அவன்முன் தோன்ற, அவன் பகவானது உண்மை ரூபத்தை தன் ஞானத்தால் உணர்ந்து தனது கருத்தாகிய கயிற்றினால் கட்டி விட்டான். அக்காலத்தில் பகவான் தம்மை விட்டுவிடும்படி கேட்டுக்கொள்ள, அவன் 'எங்கள் ஐவரையும், வரும் யுத்தத்தில் காக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டான். பகவான் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி, அப்பொழுது நடந்த விஷயங்களை ஒருவருக்கும் சொல்லாதிருக்கும்படி கட்டளையிட்டுப் பாண்டவர்கள் இருந்த இடம் வந்து சேர்ந்தார்.

3. விதுரர் வில்லை முறித்தல் :—(வினா 39) முதல் தரம் பகவான் துரியோதனன் ஸபை போய் அவன் 'ஈ இருக்கும் இடம் எனினும் இப்புவியில் யான் அவர்க்கு (பாண்டவர்களுக்கு) அரசு இனிக் கொடேன்' என்று சொல்லியதைக் கேட்டு பகவான், அவன் எவ்வளவு வருந்திப் போஜனத்துக்கு அழைத்தும் போகாது, விதுரர் வீடு நோக்கிச் சென்றார். அப்பொழுது ஸபையிலிருந்த விதுரரை துரியோதனன் மிகுந்த கோபத்துடன் தாஸிபிள்ளை, ராஜத்துரோகி, ராஜவிரோதியை வீட்டில்வைத்து விருந்து செய்பவன் கொடிய பாபி என்று பலவாறாகத்திட்ட, அவர் மனம் பொறாது 'அடே பாபி, உனக்கு நான் வரும் யுத்தத்தில் ஸஹாயம் செய்வதில்லை, இதோ பார்!' என்று ஒன்றும் யோசிக்காது தமது வில்லை முறித்து எறிந்துவிட்டுத் தமது வீடு சென்று பகவானிடம் நடந்தவைகளை உள்ளபடி சொல்லிவிட்டார்.

4. பகவான் குந்திவீட்டிற்குப் போதல் :—(வினா 8) விதுரர் வீட்டிலிருந்து பகவான் குந்திவீடுசென்று அவளுக்கு கர்ணன் பிள்ளையாகப்பிறந்த கதையையும் எடுத்துச் சொல்லி, நீ இதை கர்ணனுக்குத் தெரிவித்து அவனைப் பாண்டவர்கள் பக்கம் சேரும்படியாகவும், அப்படி முடியாவிடில் கர்ணன் அர்ச்சுனனைத் கொல்லவேண்டும் என்று பூஜித்து வைத்திருக்கும் அசுவஸேனன்

என்ற நாகாஸ்திரத்தை ஒரேதரந்தான் தொடுக்கும்படி வரம்பெற்று வரும்படியாகவும் உத்தரவு செய்தார். (இந்த நாகம் காண்டவவன தகனகாலத்தில் அர்ச்சுனனால் கழுத்தை அறுக்கப்பட்டதாயின், வாயிலிருந்து வால் அறுபட்டு தப்பித்து அவனைக் கொல்வதாக சபதம் கூறியிருந்த நாகம்.) குந்தி எப்படியாவது நமக்கு பிள்ளையில் ஒருவன் இறக்கும்படியான காலம் வந்துவிட்டதே என்று துக்கிக்கத் தொடங்கினாள். பகவானும் விதுரர் வீடு சென்றார்.

5. சதியாலோசனை:—(வினா 59) அன்றிரவு எல்லோரும் உறங்கிக்கொண்டிருக்கையில் துரியோதனன் தனது தம்பிமார் கர்ணன், சகுனி முதலானவர்களோடு பகவானை எப்படியாவது பாண்டவர்களிடம் போகாமல் தடுக்க வேண்டிய உபாயத்தைக் குறித்து ஆலோசனை செய்ய லாயினன். அப்பொழுது துச்சாஸனன் அன்றிரவே அநேக ஸேனைகளால் பகவான் நித்திரைசெய்யும் இடத்தை வளைந்துகொண்டு பகவானைச் சீக்கிரத்தில் கொல்லுவதே நலம் என்றான். துரியோதனன் முதலிய தம்பிமார்கள் இதை ஸரியென்று அங்கீகரிக்க, விகர்ணன் ஒருவன் மாத்திரம், விபீஷணரைப்போல, தூதரைக் கொல்லுவது பயங்கரம், பகவானை ஒருவராலும் கட்டமுடியாது, வீணாய் அவமானம் அடைய வேண்டாம் என்று பலவாறாகத் தடுத்துக் கூறினான். அதற்கு துச்சாஸனன் 'பெரியோர்கள் சொல்லுகிறபடி நட, வீணாக எதிர்த்துப் பேசாதே' என்று சொல்லி அவனை அடக்கிவிட்டு, தன் தமயனை நோக்கி 'நமக்கு தூதனைக்கொன்ற அபவாதம் வருவானேன். விதுரன் வீட்டை வளைத்துக்கொண்டு செத்தை குப்பைகளைச் சேர்த்துத் தீயை வைத்துவிடுவோம். தீயில் விதுரனும் பகவானும் இறந்தார்கள் என்று எல்லோரும் எண்ணுவார்கள்' என்று சொன்னான். இதைக்கேட்டுக் கர்ணன் 'நான் ஒருவனே ஒரு பாணத்தால் அவர்களிருவரையும் கொன்றுவிடுகிறேன், வீணாலோசனை எதற்கு' என்றான். விகர்ணனைத்தவிர எல்லாத் தம்பிமாரும், எப்படியாவது விடியும்முன் பகவானைக் கொல்லாவிடில் அவர் பாண்டவர்களிடம் போய்விடுவார், பின் வருத்தப்பட்டுப் பயனில்லை என்று கூச்சலிட்டனர். இவைகளை எல்லாம் கேட்டிருந்த சகுனி நகைத்து 'என்ன சிறு

பிள்ளைகள்போல ஆலோசனை கூறுகிறீர்கள். தூதரைக் கொல்வதும் நியாயம் அன்று, பெரியோர்கள் வீட்டில் தீவைப்பதும் நியாயம் அன்று, பாணப்பிரயோகம் செய்தால் இன்றே பாரதப்போர் தொடங்கிவிடும். ஆகையால் நமது ஸபையில் ஒரு படுகுழி வெட்டி அதனுள் அநேக ராக்ஷஸர்களை வைத்து, மேலே இலேசாக மூடி அலங்கரித்து ஆஸனம் ஒன்றைப் போட்டு வைப்போம். நாளைச் செலவு பெற்றுக்கொள்ள பகவான் ஸபைக்கு வந்ததும், அதில் உட்கார்ந்து படுகுழியில் விழுவார். உடனே அவரை உயிரோடு பிடித்து விடலாம்' என்று சொல்ல எல்லோரும் அதை ஒப்புக்கொண்டு அன்று விடிவதற்குள்ளேயே ஏற்பாட்டின்படி படுகுழி முதலியவைகளைச் செய்து முடித்தனர்.

6. விசுவரூபதர்சனம்:—(வினு 59) மறுநாட் காலையில் பகவான் திருதிதராஷ்டிரன் முதலியோரிடமிருந்து விடைபெற்றுப் பாண்டவர்களிடம் போவதற்காக ஸபைக்கு வந்தார். அப்பொழுது துரியோதனன் முதலியோர் பகவானை மிகுந்தமரியாதையாக படுகுழியின்மேல் அமைக்கப்பட்டு அலங்காரங்களால் நிறைந்திருந்த திவ்யாஸனத்தின்மேல் உட்காரும்படி சொன்னார்கள். எல்லோர் மனதையும் அறிந்த மாயன் புன்னகையுடனே அந்த ஆஸனத்தில் உட்கார அடி எடுத்து வைத்ததும் அடிப்பலகை மளமளவென்று முறிந்தது. உடனே பகவான் படுகுழியுள் போய்விட்டார். உள்ளே போனவர் உடனே தமது விசுவரூபத்தை எடுக்க அவரது தலை ஸூர்யமண்டலத்தையும் அவர் கால் பாதாள லோகத்தையும் எட்டின. படுகுழியில் பகவான் அட்டுரல்குழவிபோல் அசைந்தாட, உள்ளே இருந்த ராக்ஷஸர்கள் எல்லோரும் துவையலாக நசுங்கி உயிர் விட்டனர். ஸபையிலிருந்த பீஷ்மர் முதலிய மஹாத்மாக்கள் யாவரும் பகவானை வாயாரத் துதித்தனர். ஆகாயத்தில் தேவதைகளும் ஸ்துதி பாடினர். உலகம் முழுவதும் அந்த திருவிக்கிரம ரூபத்தைக் கண்டு நடுங்கின. திருதிதராஷ்டிரனுக்கும் அப்பொழுது கண்ணுண்டாக பகவானது ஆனந்த கோரஸேவைகண்டு அவனும் மெய்மறந்தான். இப்படி எல்லோரும் பக்தியின் வசப்பட்டு நிற்கத் துரியோதனன் மாத்திரம் இதைப்போல இந்திரஜாலம் நான் கண்டதில்லை என்று அப்பொழுதும் இருமாந்திருந்தனன். இதற்குள் பகவான்

சாந்தமாகித் தமது விசுவரூபத்தை அடக்கி, துரியோதனனை நோக்கி 'அடே பாபி, பாண்டவர்கள் சபதங்கள் இன்னும் நிறைவேறாமல் இருப்பதால் உன்னை இன்று உயிரோடு விட்டேன்' என்று கூறி ஸபையைவிட்டுப் போய்விட்டார்.

7. அசுவத்தாமனைப் பிரித்தல் :—(வி௫ 63). ஸபையிலிருந்து வெளியே போகையில் பகவான் கர்ணனுக்கு அவன்பிறப்பு வளர்ப்பு முதலியவைகளைச் சொல்லிப் பாண்டவர்கள் பக்கம் அவனை இழுக்கப் பார்த்து முடியாததுகண்டு அருகிலிருந்த அசுவத்தாமனைக் கூட்டிக்கொண்டு ஸபையைவிட்டுப் போய்க்கொண்டிருந்தார். போய்க்கொண்டிருக்கையில் பகவான் அவனை நோக்கி 'ஏ துரோணபுத்திரா! நாளை யுத்தத்தில் நீ பாண்டவர்களுக்கு ஓர் ஸஹாயம் செய்ய வேண்டும். அதாவது நீ ஸேனாதிபதிபட்டம் ஒருபோதும் ஒப்புக்கொள்ளக்கூடாது' என்று சொன்னார். உடனே பகவான் தமது கை மோதிரத்தை கீழே நழுவவிட, அசுவத்தாமன் அதை வெகு பரபரப்பாய் எடுத்து 'உமது மோதிரம் நழுவி விழுந்துவிட்டது, இதோ வாங்கிக்கொள்ளும்' என்று கொடுக்க, அதை வாங்க கை நீட்டிக் கொண்டிருக்கையில் அவனை நோக்கி 'ஏ அசுவத்தாமா இதோ ஸூர்யனைப்பார், அதைச்சுற்றி ஒரு பரிவேஷம் இருக்கிறது. நான் ஊருக்குப்போம் முன் மழைவந்தாலும் வரலாம்' என்று சொல்ல அசுவத்தாமன் ஸூர்யனைப் பார்த்தான். உடனே பகவான் மோதிரத்தை வாங்கிக்கொண்டு அவனிடம் விடைபெற்று ஸபையை விட்டு வெளியே போயினர். இவைகளை அரைகுறையாகக் கேட்ட சகுனி துரியோதனனிடம் சென்று, 'தனக்கு ஸேனாதிபதி பட்டம் வருங்காலத்தில் உனக்குக் கேடுவிளைப்பதாக அசுவத்தாமன் பகவானுக்கு பூமியைத் தொட்டு ஸூர்ய ஸாக்ஷியாக வாக்கு உறுதி கொடுத்திருக்கிறான்' என்று கோட் சொன்னான். துரியோதனன் அசுவத்தாமன் ஸபைவந்ததும் இதைச்சொல்ல அவனை எல்லோரும் இகழ்ந்து பேசினர். தன்மேல் ஒரு குற்றமும் இல்லாதிருக்கையில் இப்படி விளையும்படி பகவான் செய்த உபாயத்தை எண்ணி எண்ணி வியந்துகொண்டிருந்தனன் அசுவத்தாமன்.

8. குந்தி கர்ணனை ஸந்தித்தல் :—(வி௫ 65). குந்தி கர்ணனிடம் சென்று 'நான்தான் அப்பா உன் தாய்' என்று சொல்ல,

அதற்கு அவன் 'என்னை எடுத்து வளர்த்த அதிரதன் ராதை என்பவர்களை என் தாய் தந்தையர்கள் யார் என்று எனக்கு வயது வந்த பொழுது கேட்டேன். அதற்கு அவர்கள் நான் ஒரு பெட்டியில் கங்கையில் மிதந்து வந்ததாகவும், அப்பொழுது பிள்ளை இல்லாத அவர்கள் என்னை எடுத்து வளர்த்ததாகவும் சொன்னார்கள். என்னோடு வேறு ஏது வஸ்துவாவது அந்தப்பெட்டியில் கண்டீர்களா என்று நான்கேட்க, அவர்கள் இதோ இந்த வஸ்திரம் ஒன்றுதான் கண்டோம் என்று ஒரு வஸ்திரத்தைக் கொண்டுவந்தார்கள். அந்த வஸ்திரத்தை எனக்கு தாய் என்று சொல்லிக்கொண்டுவந்த எல்லோருக்கும் கொடுத்துப் பார்த்தேன். அதைப் பிரிக்கும்பொழுதே அதன் தாபம் தாங்கமுடியாது எறிந்துவிட்டுப் பலர் ஓடிப்போயினர். நீ அதைக் கட்டிக்கொண்டால்தான் எனக்கு உன்னிடம் நம்பிக்கை வரும்' என்று சொல்லி அந்த வஸ்திரத்தைக் கொண்டு வந்து குந்தியின்முன் வைத்தான். உடனே அவள் தான் குழந்தைக்கு மெத்தென்று இருப்பதற்காகப் பெட்டியில்வைத்த வஸ்திரம் அதுவென்று சொல்லி அதை ஸாதாரணமாக எடுத்துக் கட்டிக் கொள்ள உடனே பிள்ளையைக் கண்ட தாய்க்கு உண்டாகும் மாறுபாடுகள் யாவும் அவளிடம் உண்டாயின. அப்பொழுது கர்ணன் அவள் கோரியபடி பாண்டவர்கள் பக்கம் போய்த் துரியோதனனுக்கு நம்பிக்கைத்துரோகம் செய்யத் தனக்கு மனம் இடங் கொடாது என்று சொல்ல, குந்தியின் வேண்டுகோளின்படி நாகாஸ்திரத்தை அர்ச்சுனன் மேல் ஒரு தரம் தான் தொடுப்பதாகவும், அர்ச்சுனனைத் தவிர மற்றைப் பாண்டவர்களைத் தான் கொல்வதில்லை என்பதாகவும் அவன் வாக்குக் கொடுத்தான். இதற்குப் பதிலாக ஒருவருக்கும் தான் பாண்டவர்கள் தமயன் என்று தெரிவிக்கக் கூடாதென்றும், தான் யுத்தத்தில் அர்ச்சுனனை கொன்ற பின்பாவது, அல்லது தான் இறந்தபின்பாவதுதான் பாண்டவர்கள் தமயன் என்பதைக் கூசாது வெளிவிடவேண்டும் என்றும் குந்தியிடம் சொல்ல அவளும் அவ்வாறே சொல்லுவதாக ஒப்புக்கொண்டாள். பின்பு அவள் பகவானிடம்வந்து நடந்தவைகளை எல்லாம் ஆதியோடந்தமாகச் சொன்னாள்.

9. பகவான் உபப்பிலாவ்யத்திற்குப் பிரயாணப்படலம்: (விஞ 65)

பகவான் உபப்பிலாவ்யத்திற்கு புறப்பட்டதும் விதுரர் ஓடிவந்து

'ஐயா துரியோதனன் சொன்ன இகழ்ச்சியான பேச்சுக்கள் முழுவதையும் பாண்டவர்களிடம் சொல்லிவிட வேண்டாம்' என்று தடுத்தார். இருபக்கத்தாரிடத்தும் இருந்த அன்பால் விதுரர் இவ்வாறு சொன்னார்.

10. துரியோதனன் முகூர்த்தம் கேட்டல்:—(விஞ 68). இருபக்கத்தாரது ஸேனைகளும் யுத்தத்திற்குத் தயாராகிக்கொண்டு வருகையில், துரியோதனன் தருமபுத்திரர் தலை அறுபட்டு தனக்கு ஜயம் வரும்படியான நாழிகை அறிந்து அதில் காளிக்கு பலி கொடுத்து ஆயுத மெடுக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் புரோஹிதர்களை அழைத்தான். இதைக் கண்ட பீஷ்மர் 'இவர்களால் எல்லாம் உனக்கு வேண்டியதைச் சொல்லமுடியாது. நீ ஸஹாதேவனைப் போய்க் கேட்டால் அவன் நல்ல முகூர்த்தம் வைத்துக்கொடுப்பான். நீ பயப்படாது போய்க்கேள். அவன் பெருந்தன்மை வாய்ந்தவனாகையால் உன்னிடம் கூட அவன் பொய் சொல்லமாட்டான்' என்று சொல்ல, துரியோதனன் உடனே மாறு வேஷம் பூண்டு உபப்பிலாவ்யம் சென்று ஸஹாதேவனைக் கேட்க, அவன் ஸத்யஸந்தனாகையால் கொஞ்சமும் தயங்காது, 'அமாவாசை அன்றையதினம் 9-நாழிகைக்குமேல் ஸேனைகளைக் குருக்ஷேத்திரங் கொண்டுபோய் அப்பொழுதே எதிர் ரோமக்காரன் ஒருவனை பராசக்திக்குக் களபலியாகக் கொடுத்து யுத்தத்தைத் தொடங்கினால் தர்மபுத்திரர் தலை அதில் அறுபட்டு விழும்' என்று உண்மையை உரைத்தனன். உடனே துரியோதனன் ஸஹாதேவன் செய்த உபசாரங்களைக் கவனியாது பலி லக்ஷணங்கள் அமைந்த இராவானிடம் போய் அவனைத் தனக்கு களபலியாக வரும்படி அவன் யாசிக்க, அவன் 'அதுவரையில் என் தேகம் நிலைக்குமாயின் யான் உமக்கு களப்பலியாக வருகிறேன்' என்று சொல்லி அவன் துரியோதனனை அனுப்பிவிட்டான்.

11. தர்மபுத்திரர் இந்த ஸங்கதிகளை அறிதல்:—(விஞ 68). பகவான் முதலியோரைக் குருக்ஷேத்திரத்திற்கு புறப்படும்படி தருமபுத்திரர் வேண்ட, அவர் 'நான்செய்யும் வேலைகளுக்கெல்லாம் விரோதமான காரியங்கள் இங்கே நடந்து வருகின்றன. நான்தான் பொல்லாதவன் என்று பெயர் எடுக்கிறேன். நீங்கள் எல்லோருக்கும் என்

கெட்டபெயரால் நல்லவர்களாய் விடுகிறீர்கள்' என்று கடிந்து கூறி ஸஹாதேவன் உரைத்த உண்மையை தருமபுத்திரரிடம் சொல்ல, அவர் அவனைக் கோபித்துக்கொள்ளாது 'எனக்குக் கெடுதலைகூடக் கவனியாத இவ்வளவு ஸத்தியஸந்தனை தம்பி கிடைத்தானே என்று மிகுந்த ஸந்தோஷத்தோடு ஸஹாதேவனைப் புகழ்ந்து பேசினார். இதன்பின்பு அமாவாஸைக்கு முந்தின நாளே தாம் களப்பலி கொடுத்துவிடலாம் என்றும், பலியாக வருபவனைக் கொல்ல வேண்டியதில்லை என்றும், அவனது முப்பத்திரண்டு அங்கங்களின் சிறு பாகங்களை மாத்திரம் வெட்டிவைத்தால் போதும் என்றும் சொல்ல, அப்பொழுது தான் துரியோதனனிடம் சொன்னதை இராவான் வெளியிட்டு முந்தித்தமது களப்பலி நடக்கப்போகிறபடியால் தானே அந்த பலியாக வருவதாக ஒப்புக்கொண்டான். இதைக்கேட்டதும் தருமபுத்திரர் இராவானது ஸ்வயநயம் கருதாக்குணத்தைப் புகழ்ந்து பேசினர்.

12. களப்பலியூட்டல் :—(விஞ 68). அமாவாஸைக்கு முதல் நாள் இன்றுதான் அமாவாஸை என்று பகவான் எல்லோரையும் தர்ப்பணம் செய்யச்சொல்லிப் பின்பு எல்லோரும் குருக்ஷேத்திரம் சென்று இராவானை பலிக்காகத் தயார்செய்தனர். அப்பொழுது ஸூர்ய சந்திரர்கள் முதலிய தேவர்கள் எல்லோரும் பகவானிடம் வந்து 'நாளையன்றோ அமாவாஸை இன்றைக்கு நீங்கள் எல்லோரையும் தர்ப்பணம் செய்யும்படி சொல்லிவிட்டால் நாளைக்கு எங்கள் கதி என்னவாவது' என்று கேட்க, அப்பொழுது பகவான் 'அமாவாஸை என்றால் என்ன, ஸூர்ய சந்திரர்கள் சேர்வதல்லவா. இதோ! நீங்கள் சேர்ந்திருக்கிறீர்கள். இன்று தான் அமாவாஸை. இதனால் உங்களுக்கு எப்பொழுதும் கஷ்டம் இருக்கவேண்டாம், ஏனெனில் அமாவாஸை இனிமேல் சற்று முன்னும் பின்னுமாகவே வரும். நீங்கள் ஸுகமாகப் போய் வரலாம்' என்று மறுமொழி கூறி தேவதைகளை அனுப்பிவிட்டார். உடனே இராவான் கையிலேயே வாளைக் கொடுத்து தனது 32 அங்கங்களில் சிறு பாகமாக அறுத்து காளிக்குப் பலியாக வைக்கும்படி சொல்ல அப்பொழுது யுத்தத்தில் இறவாதிருக்கும்படியான அவ்வளவு சக்திவாய்ந்த அவனுக்கு முக்கால் வாசிபலம் குறைந்துபோய்விட்டது. பகவான் அனுக்கிரஹத்தால்

களபலியாகும் தன்மையும், யுத்தத்தில் இறக்கும் தன்மையும் இவனுக்கு வந்தது. அப்பொழுது மயனது ஸஹாயத்தால் பாண்டவர்கள் தமக்கு எளிதில் அங்கு படை வீடு கட்டிக்கொண்டனர்.

இவ்வாறு தந்திரமாக இராவானைப் பகவான் பலிகொடுத்து அமாவாஸையைச் சற்று மாற்றிவிட்ட ஸங்கதி துரியோதனனுக்குத் தெரிய அவன் மிகுந்த வியஸனம் அடைந்து கெட்ட ஸமயத்திலே நாழிகையைக் கவனியாது தனது பட்டத்துயானையைப் பலிகொடுக்க மறுநாள் யுத்தம் தொடங்கியது.

BOOKS APPROVED BY THE TEXT BOOK COMMITTEE.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை

1. ஸ்ரீமத் ராமாயண வினாவிடை.—நான்காம் பதிப்பு. இதில் அநேக சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. 366 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு பக்கத்திலும் அங்கங்குள்ள முக்கிய விஷயம் தலைப்பில் குறிக்கப்பட்டுள்ளது. புதிய அனுபந்தங்கள் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஷை புஸ்தகம் படங்களுடன் விலை ரூபா 1

ஷை படங்களில்லாமல் ,, அணா 10

2. ஸ்ரீ மஹாபாரத வினாவிடை.—1-ம் பாகம்: ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்தியோக பர்வங்களடங்கியது. விலை அணா 12

3. ஸ்ரீ மஹாபாரத வினாவிடை.— 2-ம் பாகம்: பீஷ்ம, துரோண, கர்ண, சல்லிய, ஸௌப்திக, ஸ்திரீ பர்வங்களடங்கியது. விலை அணா 12

4. ஸ்ரீ மஹாபாரத வினாவிடை.—3-ம் பாகம்: சாந்தி, அநுசாஸன, அச்வமேத, ஆச்ரமவாஸிக, மௌஸல, மஹாப்ரஸ்தான, ஸ்வர்க்காரோஹண பர்வங்களடங்கியது. விலை அணா 12

5. ஸ்ரீமத் பாகவத வினாவிடை.—1-ம் பாகம்: முதல் ஒன்பது ஸ்கந்தங்கள் அடங்கியது. ஆர்ட் பேபரில் அச்சிட்ட 10 அழகிய படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 1

6. ஸ்ரீமத் பாகவத வினாவிடை.—2-ம் பாகம்: 10, 11, 12 ஸ்கந்தங்கள் அடங்கியது. இதிலும் அநேகம் படங்கள் சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1

7. ஆர்யமத உபாக்யானம்.—முதல் பாகம்: 54 சிறந்த நீதிக் கதைகள் கொண்டது. 14 அழகிய படங்களும் சேர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய புஸ்தகம். விலை அணா 4

8. இயற்கை அற்புதங்கள்.—காலஞ்சென்ற ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ம-া-া-ஸ்ரீ ராவ் பஹதூர் L. C. வில்லியம்ஸ் பிள்ளை அவர்கள் எழுதிய சிறந்த முகவுரையுடன் கூடியது. அநேகம் படங்கள் சேர்க்கப்பட்டுள்ளது. மிகவும் நேர்த்தியாய் பைண்டு செய்திருக்கிறது. விலை அணா 8

விலாஸம்:—ஜனரல் ஸப்ளைஸ் கம்பேனி, மயிலாப்பூர், மதராஸ்.

BOOKS AT CONCESSION RATES TO SUBSCRIBERS

OF THE

"VIVEKA BODHINI"

☞ The annual subscription to the "**Bodhini**" is **Rs. 3(three only).** Subscription can commence either from **January** or **July**. Any one who wishes to buy books at the concession rates must become a subscriber remitting **Rs. 3** one year's subscription, in advance. Those who are in arrears cannot have concession rates.

Some of our Interesting Tamil Publications

VERY USEFUL TO MEMBERS OF BOTH SEXES

Ramayana Catechism.—*4th Edition.* Completely revised and greatly improved. Contains all the 7 Cantos of Sri Valmiki Ramayana and is written in simple and chaste Tamil. **Price As. 10.**
To subscribers As. 8.

Mahabharata Catechism.—*Part I.* Contains *Adi*, *Sabha*, *Aranya*, *Virata* and *Udyoga* Parvas. 3rd Edition, completely revised. **Price As. 12.**
To subscribers As. 9.

Mahabharata Catechism.—*Part II.* Contains *Bhishma*, *Drona*, *Karna*, *Salya*, *Sauptika* and *Stri* Parvas. In this part Sri Krishna's expounding Gita to Arjuna is most interestingly told. **Price As. 12.**
To subscribers As. 9.

Mahabharata Catechism—*Part III.* Contains *Santi*, *Anusasana*, *Aswameda*, *Asramavasika*, *Mahaprasthana*, *Mausala*, and *Swargarohana* Parvas. This part is the most interesting portion in the whole Mahabharatam as it contains a large collection of morals. **Price As. 12.**
To subscribers As. 9.

Bagavata Catechism.—*Part I.* Contains the first 9 *Skandas*, written in simple and chaste Tamil. Beautifully illustrated by 10 half-tone plates.
To subscribers As. 12. **Price Re. 1.**

Bagavata Catechism.—*Part II.* Contains, 10th, 11*th* and 12*th Skandas*. In this Sri Krishna's Avatar and his several lilas are beautifully described with 10 beautiful illustrations. **Price Re. 1.**
To subscribers As. 12.

Aryamata Upakyanam.—*Part I. Fifth Edition.* A collection of 54 interesting and instructive moral stories selected from Ramayana, Bharata and Bagavatam with an appreciative introduction by the **Hon'ble Mr. P. S. Sivasawmy Aiyar, C. S. I., C.I.E.**, Member of Executive Council, Madras. Has 14 most beautiful illustrations. **Price As. 4.**
To subscribers As. 3.

Aryamata Upakyanam.—*Part II.* This also contains 54 instructive moral tales mostly selected from our Puranas. Has also the lives of Sankara, Ramanuja, Madhvacharya. Written in easy Tamil with a number of illustrations.

Address :—The Manager, "Viveka Bodhini," Mylapore, Madras.

Nalopakyanam.—The story of Nala and Damayanti every one ought to read. Translated directly from Mahabharata by the late Pandit S. M. Natesa Sastri, B.A. Excellently written in simple and chaste Tamil. With illustrations.

To subscribers As. 9. **Price As. 12.**

Chandrasekaran.—A high-class Tamil Novel. Very interesting and instructive. **Price As. 8.**

To subscribers As. 6.

Lessons from **Geology.**—Specially adapted for Elementary and Training and High Schools. Very useful for boys and girls. It treats of Rocks and minerals, their action and uses. Has more than 30 fine illustrations. **Price As. 8.**

To subscribers As. 6.

Wonders in Nature.—Some of the greatest Wonders of Nature, have been described in chaste and popular Tamil. Each lesson is neatly illustrated. The book has an introduction by late Rao Bahadur, Mr. L. C. Williams Pillai Retired Inspector of Schools. **Price As. 8.**

To subscribers As. 6.

Sathiavalli.—*Second Edition*. A high-class Tamil Novel. Very interesting and instructive. This has been prescribed as a text-book for Government Training and other Schools. Rao Sahib Mr. T. RamakrishnaPillai, B.A., F.M.U., Chief Examiner in Tamil, has written an appreciative introduction to the book. **Price As. 12.**

To subscribers As. 9.

Life of Rajam Aiyar.—This is the Author of Kamalambal Charitram and Editor of Prabhudha Bharata. Several of his writings have been translated. With illustrations. **Price As. 8.**

To subscribers As. 6.

Draupadi.—(Indian Heroines No. 1). This is also very interesting and instructive. This is well written in simple and chaste Tamil. With Illustrations. **Price As. 8.**

To subscribers As. 6.

Griselda or **Patient Wife.**—Highly interesting, instructive and thirlling story. **Price As. 3.**

To subscribers As. 2.

Prabavathi.—An interesting Tamil Novel. Neatly printed. **Price As 4.**
To subscribers As. 3.

Neeli Vasikaram.—(An adaptation of Shakespeare's Taming of the Shrew). A high class Interesting Tamil Drama. **Price As. 8.**
To subscribers As. 6.

Ambuja.—An interesting small story. **Price As. 2.**
To subscribers As. 1½.

Ramanathan.—An interesting small story. **Price As. 2.**
To subscribers As. 1½.

Tirumayilai Chirappu or **The Greatness of Mylapore.**—In this the Arupattu Muvar Festival, Tiruvalluwar Charitram, Payalvar Charitram, &c., are described with *2* half-tone illustrations. **Price As. 2.**

To subscribers As. 1½.

Address:—The Manager, "Viveka Bodhini," Mylapore, Madras.

சத்தியவல்லி

ஓர் சிறந்த தமிழ் நாவல்

மிஸ்டர். ஆர். பி. குழந்தைசாமிப்பிள்ளை, பி. ஏ., எல். டி., அவர்கள் எழுதியது. சென்னை சர்வகலாசாலை முக்கிய பரீக்ஷகரான ராவ் ஸாஹேப் மிஸ்டர் T. ராமகிருஷ்ண பிள்ளை, பி. ஏ., அவர்கள் எழுதிய சிறந்தமுகவுரையுடன் கூடியது. விலை அணா 12

ஸத்யமே ஜயம் எனும் படிப்பினையையும், கடவுளை நம்பினோர் கைவிடப் படார் எனும் நீதியையும் கற்பிக்கிறது. தர்மஸங்கடங்களிலும், கஷ்டத் திலும் நன்மையையே கைபிடிக்கவேண்டும் எனும் நிலைமையையும் ஆழ்ந்த உணர்வோடு காட்டப்பட்டிருக்கிறது. தவிர, அக்காலங்களில் மனம் அலை பாயும் விதத்தை விவரிப்பதும் வியக்கத்தக்கது. வாக்கின் நடையும், பாஷையின் போக்கும், யுக்தியின் ஸமீசகமும், கதையின் தாட்டியும், மனதை யிழுக்கும்வன்மையும் எவரும் வியக்கத்தக்கவை.

இப்புத்தகம், கவர்ன்மெண்டு டிரெயினிங் ஸ்கூல்களுக்கு டெக்ஸ்டு புக் காக ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன், அநேகம் பாடசாலைகளிலும் 3,4,5-ம் பாரங்களுக்குப் பாடபுத்தகமாக வைத்து நடத்தப்பட்டுவருகிறது. மிகவும் எளிய நடையில் எழுதப்பட்டது. அவசியம் ஒவ்வொரு பெண்டிரும் வாசிக்கவேண்டிய புத்தகம்.

இப்புத்தகத்தைப்பற்றிய சில முக்கிய அபிப்பிராயங்கள்.

The Standard:—* * Situations are contrived with skill and the plot is constructed in an appealing way.

The Hindu:—* * *We commend the book for ladies and boys.*

Rev. D. Devapriam, B.A., L.T., Head Master, L. M. High School, Shiyali:— Your Tamil Novel *is simply excellent in matter and style. It deserves to be intrdouced as an extra reading book in Schools.*

சுதேசமித்திரன்:—* * * கதாநாயகியான சத்தியவல்லி எவ்வளவோ கஷ்ட தசைக்கு வந்துகூடத் தனது சத்தியத்தையும், பிதாவின் ஆக்கினை யையும் தளரவிடாமல் பாதுகாத்த விதத்தை நூலாசிரியர் மிக நன்றாய் எடுத் துச் சொல்லுகிறார்.

பூர்ண சந்திரோதயம்.—* * * பெண்பாலார் இப்புத்தகத்தை வாசிப்பார்களாகில் மனத்தூய்மை எய்துவார்கள். நன்மதியும் பெறுவார்கள்.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்

LESSONS from GEOLOGY

பூதத்வ போதினி

By Mr. M. R. Subrahmanyam, B.A., L.T., Assistant, Teachers' College, Saidapet. With numerous illustrations.

Calico Bound, As. 8; Paper Bound, As. 6.

சைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜ் உதவிபோதகரான Mr. எம். ஆர். சுப்பிரமணியம், பீ.ஏ., எல்.டி. அவர்கள் எழுதியது. அநேகம் படங்களுடன் கூடியது. காலிகோ பைண்டு, அணா 8; ராபர் பைண்டு, அணா 6.

CONTENTS.

1. The Earth and its crust
2. Rocks and their classification.
3. Fossils.
4. Sedimentary and Aqueous rock.
5. Clayey rocks and coal.
6. Structure of Aqueours rocks.
7. The earth movements and faults.
8. Denudation of rocks in tropical regions.
9. Denudation of rocks in temperate regions.
10. Denudation of rocks in cold regions.
11. Volcanoes.
12. Volcanic rocks
13. Granitic rocks.
14. Metaphorphic rocks.
15. Diamond, Coal and Gold in India.

பொருளடக்கம்.

1. பூமியும் அதன் மேற்பரப்பும்.
2, மலைகளும், அவைகளின் வகுப்பு வகுப்புகளும்.
3. சிலா ரூபங்கள்.
4. வண்டல்களாலாகிய அல்லது நீர்ஸம்பந்தத்தாலாகிய மலைகள்
5. மண்மலைகளும் நிலகரியும்
6. நீர் ஸம்பந்தத்தாலாகிய மலைகளின் அமைப்பு.
7. பூமி அசைவும் படைகளின் களங்களும்
8. உஷ்ண ப்ரதேசங்களில் மலை உரிதல்.
9. ஸம சீதோஷ்ண தேசங்களில் மலை உரிதல்.
10. குளிர் தேசங்களில் மலை உரிதல்.
11. எரிமலைகள்.
12. எரிமலை ஸம்பந்தமான மலைகள்.
13. கருங்கல் மலைகள்.
14. உருவம் மாறின மலைகள்.
15. இந்தியாவிலுள்ள வஜ்ரமும், நிலக்கரியும், பொன்னும்

சில முக்கிய அபிப்பிராயங்கள்.

The Madras Mali.—* * The book is well adpted for introduction in Elementary Schools.

H. Narayana Row, Esq., M.A., F.G.S., Lecturer in Geology, Presidency College, Madras.—* * The author has given a general outline of the subject in an *easy and popular style. I have no doubt that the book will supply a real want* and I hope it will be largely used in Secondary schools and especially teachers.

The Hindu.—* * We are sure the pupils of the Elementary and the Secondary Schools and especially tne teachers of the Elementary and the Training Schools *will be highly benefited by this book.*

சந்திரசேகரன்

இது 'ஆனந்தமடம்' என்ற தேசபக்தி புகட்டும் நாவலின் ஆசிரியராகிய ஸ்ரீ பங்கிம்சந்திர சட்டோபாத்தியாயரால் பங்காளிபாஷையில் இயற்றப் பட்டு அந்தப் பங்காளி பாஷையிலிருந்தே நேராக தமிழில் மஹேச குமார சர்மாவால் மொழிபெயர்க்கப்பட்டது. இதன் மூலத்தின் சொன்னயம் பொருணயமெல்லாம் சிறிதேனும் குன்ருமல், கற்பின் பெருமை யையும், வைராக்கியச் சிறப்பையும், தன் மறுப்பின் மாட்சியையும் விசேஷ மாய் விளக்கிய அற்புதக்கதை. அழகாய் வர்ணிக்கப்பட்டது. கற்புநிலையி னின்றும் தவறுவதற்குச் சிறிது முயன்ற சைவலினி யென்னும் பெண்ணுக் குத் தனது பர்த்தா யோகசக்தியால் அருளிய வசீகர நித்திரையின் பிரபாவத் தால் அவள் துர்க்குணம் மாறி கிருதார்த்தமான வைபவத்தை இந்நூலைப் படித்தே அறியவேண்டும். ... விலை, அணு 8

சுதேச வைத்திய ரத்தினம்

நம் நாட்டிலுண்டாகும் செடி கொடிகள், காய் கனிகள், கடை மருந்து கள் முதலியவற்றின் குணம், செய்கை, உபயோகம், உபயோகிக்கும் விதம், அவற்றைப் பலநோய்களுக்கும் உபயோகித்துக் குணங்கண்ட ஐரோப்பிய டாக்டர்மார்களின் பெயர்களுடனும், பல நூல்களின் ஆதாரங்களுடனும், ஒவ்வொரு மூலிகைகளுக்கும் தமிழ் இங்லீஷ் பெயர்களுடனும், அந்நோய் களுக்கு வைத்தியருதவியின்றி நாமே செய்துகொள்ளக்கூடிய விபரங்களுட னும் சிறுவர்களும் வாசிக்கக்கூடிய செந்தமிழ் நடையில் வரைப்பட்டிருக் கின்றது. இரண்டாம் பதிப்பு. விலை, ரூ. 1

பிரபாவதி

இது வங்காளி பாஷையில் கனந்தங்கிய நரேந்திரநாத சட்டர்ஜி அவர்கள் இயற்றிய நவீனத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. கஷ்டம் கூலிதரும், முயற்சி திருவினையாக்கும், நெடுங்காலங் கடந்தபின் நடக்கும் மணத்தினால் வரும் ஸுகம் முதலியவைகளைப் பற்றிய இனிய செந்தமிழ் நவீனம். ஸரளமாக எவரையும் எடுத்தபின் கீழ்வைக்க முடியாமல் படிக்கும்படி செய்யும் திறமையுள்ளது. ஸ்ரீசைல தாதாசாரியாரால் இயற்றியது. விலை அணு 4

விஜயசுந்தரம்

விஜயசுந்தரம் என்னும் செந்தமிழ்க் கற்பனைக் கதை, பெரும்பாலும் ஆங்கிலேய நாவல்களின் போக்கை யனுசரித்து, எளிய நடையில் நாடகச் சாயலாயும், சம்பாஷணை ரூபமாயும், "கமலாக்ஷி" என்னும் அரிய கற்பனைக் கதையைப்போல் எழுதப்பெற்றுள்ளது. இதிலும் சந்தர்ப்பத்துக்கேற்ற விதம் அழகிய படங்கள் ஏறக்குறைய 20 சேர்க்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டின் வழக்க ஒழுக்கங்களையும், நன்னெறியையும், செந்தமிழ் நடையையும், உலக தந்திரங்களையும் அறிய விரும்புவோர்க்கெல்லாம் இக்கதை மிகுந்த பயனளிப்பதோடு மனக்களிப்பையும் தரும் என்பதற் கையமில்லை. அன்றியும் நாட்டுக்கோட்டை செட்டிகளுடைய வியாபாரத்திலுண்டாகும் கெடுதிகளும் அக்கெடுதிகள் நீங்கவேண்டிய உபாயங்களும், இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன.

விலை, காலிகோ பயிண்டு, ரூ. 2—8; ராப்பர் பயிண்டு, ரூ. 2—0

அயாஷா

அல்லது

ஐயாயிரவருடம் வாழ்ந்த அரசி

இக்கதாநாயகி சுமார் 5000 வருடங்கள் சீவித்திருந்ததாகக் கூறப்படுகிறதும் உண்மையென்றே இந்நூலை ஆங்கிலத்தில் எழுதிய கிரந்தகர்த்தர் கூறுகிறார். இக்கதையால் இறந்தவர் மறுபடி பிறப்ப துண்மையென்றும், பிறப்பு இறப்பைச் சேர்ந்த இன்னும் பல இரகசியங்களும் வெளியாகின்றன. இதில் அடங்கியுள்ள விஷயங்கள் அற்புதத்திலும் மகா அற்புதமாய்த் தோன்றினாலும் அசம்பாவிதமானவைகளாய்ப் புலப்படவில்லை.

இது இனிமையான எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இது இரண்டு பாகங்களாய், நேர்த்தியான ஹாப்டோன் படங்களோடு அச்சிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாகமும் டிம்மி 160 பக்கங்கள் கொண்டது.

முதல் பாகம், அணு 12; இரண்டாம் பாகம், அணு 12.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

ஹைகோர்ட்டு வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ ப. சம்பந்த முதலியார்

அவர்கள் இயற்றிய நவீன நாடகங்கள்

				ரூ. அ.
அமலாதித்யன்.—இது ஷேக்ஸ்பீயர் மகாகவி எழுதிய 'ஹாம்லெட்' என்னும் நாடகத்தின் தமிழ் அமைப்பு			...	1 0
லீலாவதி ஸுலோசனு	...	...	...	0 12
இரண்டு நண்பர்கள்	...	...	...	0 12
சத்ருஜித்	...	...	...	0 12
மனோஹரன்	...	...	...	0 12
காலவரிஷி	...	...	...	0 8
யயாதி	...	...	...	0 8
சாரங்கதரன்	...	...	...	0 8
வேதாள உலகம்	...	..	...	0 8
காதலர் கண்கள்	...	...	...	0 12
பேயல்ல பெண்மணியே	...	...	...	0 8
கள்வர் தலைவன் (புதிய பதிப்பு)	...	...	...	0 12
ரத்னவளி	...	...	...	0 12
பொன் விலங்குகள்	...	...	...	0 8
நற்குல தெய்வம்	...	...	...	0 8

BY THE SAME AUTHOR IN ENGLISH

Harischandra (A Drama)	...	...	...	1 0
Yayathi (Do.)	...	...	...	0 8

கண்ணகி	...	...	...	0 12
பங்கஜாக்ஷி	...	...	...	0 8
கமலினி	...	...	...	0 10
மரகதமணி	...	...	...	1 0
ஸுசீலா	...	...	...	1 0
அம்பாலிகை	...	...	...	0 12
சீதாராம்	...	...	...	1 0
தேவலோக கிரிமினல் கேஸ்	...	...	...	1 8
பத்மாவதி, 2 பாகமும்	...	...	...	1 0

ஜனரல் பப்ளிஷிங் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

ஸ்ரீமத் பாகவத வினாவிடை, 1-ம் பாகம்

முதல் ஒன்பது ஸ்கந்தங்களின் கதை அடங்கியது

கபிலாவாஸுதேவர், த்ருவர், ப்ராசீன பர்ஹிஸ், ரிஷபயோகி, ஜடபரதர், அஜாமிளன் முதலிய மஹான்களின் சரிதையும், ஸ்ருஷ்டி விஷயம், வருணாசிரம தருமம் முதலிய விஷயங்களும், தக்ஷயாகம், கஜேந்திரமோக்ஷம் முதலிய உபாக்யானங்களும் அமைந்திருப்பதன்றி, மஹாப் பிரளயம், சாஸ்திர சிருஷ்டிக் கிரமம், சாஸ்திர புராண சிருஷ்டிகளின் பொருத்தம், திரிமூர்த்திகளின் ஸமரஸம், நெடுங்கால அளவை ஆகிய இவைகளைப்பற்றிய வியாஸங்களை அநுபந்தமாக உடையது. பரசுராமாவதாரம் வரையுள்ள கதை பொருந்தியுள்ளது. பத்து உயர்ந்த சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது.

படங்களின் விபரம்.—(1) கிருஷ்ண பரமாத்மா வேணுகானம், (2) சுகரம்பா, (3) க்ஷீராப்தி நாதர், (4) வராஹாவதாரம், (5) பகவான் துருவருக்குப் பிரத்யக்ஷமாதல், (6) மத்ஸ்யாவதாரம், (7) கூர்மாவதாரம், (8) நரஸிம்மாவதாரம், (9) வாமனாவதாரம், (10) பரசுராமாவதாரம். படங்கள் அழகாய் வழவழப்பான காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. விலை, ரூ. 1

ம-ா-ா-ஸ்ரீ பண்டித நடேச சாஸ்திரியாரால் எழுதப்பட்டவை

		ரூ.	அ.
தீக்கற்ற இருகுழந்தைகள்		0	12
தீனதயாளு		0	8
ஸ்ரீ மாமி கொலுவிருக்கை		0	8
தலையணை மந்திரோபதேசம்		0	8
முத்திரா ராக்ஷஸம்		0	4
மிருச்சகடி		0	4
வேணீ ஸம்ஹாரம்		0	3
ஷேக்ஸ்பீயர் நாடகக் கதைகள்		0	6
கோமளம் குமரியானது		0	8
நளோபாக்கியானம்		0	12
பாலகாண்டம்	வால்மீகி இராமாயண வசனம் (உயர்ந்தபதிப்பு)	1	12
அயோத்தியாகாண்டம்		3	0
ஆரண்யகாண்டம்		1	12
கிஷ்கிந்தாகாண்டம்		1	12
ஸுந்தரகாண்டம்		1	12

BY THE SAME AUTHOR IN ENGLISH

"Indian Folk Tales," containing 51 interesting tales. 533 pages 2 8

ஏ. கிருஷ்ணசாமி ஐயா இயற்றியவை

வாஸந்திகை	0	8
சபலை	0	8

Address:—The General Supplies Co., Mylapore, Madras.

இந்திரஜித்தன் அல்லது கள்ளர்தலைவன்

இது ஒரு அபூர்வமான கள்ளன் கதை. இக்கதையால், ஒருவன் எவ்வளவு சாமர்த்தியமாய் தான் துஷ்ட காரியங்களைச் செய்தாலும் அச்சமயம் அவைகள் வெளிவராமல் மறைபட்டு அவன் க்ஷேமத்தை யனுபவிப்பதுபோல் தோன்றினாலும், முடிவில் யாவும் வெளியாகி அவன் அவமானத்தையும், உலக நிந்தனையையும், துன்பத்தையும் அடைவது திண்ணமென்றும், நேர்மை, சத்தியம், இரக்கம் ஆகிய நற்குணங்களைக் கடைப்பிடித்த ஒருவன் தற்காலம், கஷ்ட திசையை யனுபவிப்பதாய் தோன்றினாலும், கூடிய சீக்கிரத்தில் புகழையும் செல்வத்தையும் பெற்று மனோ நிம்மதியோடு க்ஷேமத்தை யனுபவிப்பானென்பது உண்மையென்றும் நன்குவிளங்கும். விலை, அணா 12

கமலாக்ஷி

கமலாக்ஷி என்னும் செந்தமிழ் கற்பனைக்கதை, பெரும்பாலும் ஆங்கிலேய நாவல்களின் போக்கை அனுசரித்து, எளிய நடையில் நாடகச்சாயலாயும், சம்பாஷணை ரூபமாயும், "விஜயசுந்தரம்" நூலாசிரியரால் எழுதப்பெற்று இரண்டாம் பதிப்பு அச்சாகி விற்பனையாகி வருகிறது. இதில் சந்தர்ப்பத்துக்கேற்ற விதம் அழகிய படங்கள் ஏறக்குறைய 20 சேர்த்திருக்கின்றன. தமிழ் நாட்டின் வழக்க ஒழுக்கங்களையும், நன்னெறியையும், செந்தமிழ் நடையையும், உலக தந்திரங்களையும் அறிய விரும்புவோர்க் கெல்லாம் இக்கதை மிகுந்த பயனளிப்பதோடு மனக்களிப்பையும் தரும் என்பதற்கு ஐயமில்லை. அன்றியும் பத்தொன்பதாவது அத்தியாயம் தருக்கநெறி பிறழாது சாஸ்திரவிசாரணையைச் செய்யும் நன்மையினையும் அதன் உயர்வினையும் காட்டுவதால் அது அநேகம் பால்யைகளுக்கும் மிகவும் பயன்படும் என்பதற்கு ஐயமில்லை.

விலை, காலிகோ பயிண்டு, ரூ. 2 8: ராபர் பயிண்டு ரூ. 2

மோஹனா

இந்த நாவலில் இன்றியமையாதிருக்கவேண்டிய பூடணமாகிய கற்பின் தன்மையைப் பற்றியே அறிவுறுத்தக் கூடிய விஷயங்கள் யாவும் அடங்கியிருக்கின்றது. "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்றபடி, ஒரு ஸ்திரீயானவள் தன் கணவனை யெவ்வாறு மதித்துநடக்கவேண்டுமென்பதும், இன்ப துன்பங்களை யடையுங்காலங்களில் கொழுநனிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டியதென்பதும், தனக்கும் தன் கற்பிற்கும் இடையூறான ஆபத்துகள் நேர்ந்த காலங்களில் தான் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதும், முக்கியமாய் ஸ்திரீகளுக்குவேண்டிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் விஷயங்களைப்பற்றியும் நன்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. விலை, அணா 5

மிஸ்டர் ஆர் எஸ் நாராயணஸாமி அய்யர், B.A., B.L., இயற்றியது

மாண்டவன் மீண்டமாயம் (The Mystery of Revival)

1885-ம் ஸு நாடெங்கும் பிரபலமாயிருந்த மங்களபுரம் கொலை விஷயமும், அதில் மங்களபுரத்தில் வசித்துவந்த சோமு என்பவர் இறந்ததும், அவர் பிரேதமகப்பட்டதும், அவருடைய கொடும் பகைவனான தர்மராஜு காணுமற்போனதும், அவர் மனைவி ஜானகியம்மாள் குற்றஞ்சாட்டப்பட்டு விடுதலையானதும், எவ்வளவோ நுட்பதர்சிகளாகிய போலீஸ் நிபுணர்களாலும் கூட இம்மாயக் கொலையின் இரகஸ்யம் இதுவரை கண்டுபிடிக்கப்படாது, மற்ற மாயங்களைப்போலவே இம்மங்களபுரம் கொலையும் மனிதர் மனத்தினின்றும் மாயப்பழங்கதையாய் மறைந்ததும், அதன் ரகஸ்யம் கடைசியாகச் சோமுவின் புதல்வன் ராமஸ்வாமியின் முயற்சியாலும், பால்ய வக்கீல் கைலாஸத்தின் புத்திநுட்பத்தாலும் 20 வருஷங்களுக்குப்பிறகு வெளியாகும்படி ஸம்பவித்ததும் இந்நாவலின் முக்கிய கதாம்சமாக அமைந்திருக்கின்றது. விலை, அணு 8

மானிட ஜீவிய சிந்தாமணி

(ஆண்மையின் அழிவும் அதனை யகற்றும் விதமும்)

இப்புத்தகம் அமெரிக்காக் கண்டத்திலுள்ள பேர்போன அநேக அரிய பெரிய நவீன சாஸ்திரங்களிலிருந்தும், நமது பூர்வீக கிரந்தங்களிலிருந்தும் எடுத்து எழுதப்பெற்றுள்ளது. மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இம் "மானிட ஜீவிய சிந்தாமணி" என்னும் புத்தகம் இன்றியமையாதது. இதில் சரீரதத்வ விளக்கம், ஸ்திரீ புருஷர்களின் ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும், சூதகபந்தம் சூதகப்பெருக்கு, ஆண்மலடு பெண்மலடு, தாது நஷ்டம் முதலிய ரோகங்களின் விபரங்களும், அவற்றிற்கான பரிகாரங்களும், மருத்துவ சாஸ்திரம் சுகாதார சாஸ்திரம், சிசுபரிபாலனம், பால்ய விவாகம், விவாகமும் தேசாச்சாரமும், விவாகம் செய்யத்தகாத குடும்பங்கள், ஆண்பெண் சிசு உற்பத்தி விபரம், பாம்பு, தேள், நண்டுவாக்கல்லி, வண்டுகடி முதலிய விஷக் கடிகளும், அவற்றிற்கான பரிகாரங்களுடனும் இன்னும் இவ்விடத்தில் சொல்லமுடியாத அநேக இரகசியமான விஷயங்களும் அடங்கியது. சித்திரப்படங்களுடன் கூடியது. விலை, ரூ. 1 8

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

ராஜம் அய்யர் சரிதை

இது 'கமலாம்பாள்' சரித்திரம் என்னும் அற்புதக்கதையின் நூலாசிரியரும் பிரபுத்த பாரதம் என்ற மாதாந்தப் பத்திரிகையை மிகுந்த சிறப்புடன் நடத்தி ஆங்கிலம் உணரும் திறனுடையவர்களுக்கு நமது வேதாந்த உண்மைகளை எளிய நடையில் ஸுலபமாகத் தெரிவித்தவரும் ஆகிய ஸ்ரீமான் பி. ஆர். ராஜம் அய்யர், பி. ஏ., அவர்கள் சரித்திரம். இதனுடன் இவர்செய்த நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ள உபதேசமொழிகளும், இவர் முதலில் ஆங்கிலத்தில் எழுதிய வேதாந்த வியாஸமும் சேர்க்கப்பட்டுள்ளன. அணா 8

கல்யாணி அல்லது வாழ்வில் தோன்றிய விபத்து

ஓர் சிறந்த துப்பறியும் தமிழ் நாவல்

சாந்தமும் அமைதியுமுள்ள ஓர் பெருங்கடல் மத்தியில் அழகிய சந்திரிகையுடன் கூடிய ஓர் இரவில், உத்ஸாகமாய்ச் சென்றுகொண்டிருக்கும் ஓர் பெரிய கப்பலானது திடீரென்று ஆவிற்பவிக்கும் பெரும் புயலால் தாக்கப்பட்டு, அங்குமிங்கும் தந்நிலையற்றுத் தத்தளித்துப் பெருந்துன்பமும் கலக்கமும் அடைந்து கடைசியாய் அப்புயலின் ஆபத்தினின்றும் நீங்கி மறுபடி தந்நிலை யடைவதுபோல், எவ்வளவோ சவுகரியமாயும் சந்தோஷமாயும் வாழ்ந்து வந்த ராமஸ்வாமி சாஸ்திரியார் குடும்பமானது திடீரென்று துன்பத்துக்குட்பட்டு, பலவித கஷ்டங்களனுபவித்துக் கடைசியாய் அவைகளினின்றும் தப்பித்து மறுபடி சவுக்கியமடைந்து வாழநேர்ந்ததே இந்நாவலின் கதாம்சமாகும். விலை, அணா 10

கம்பனும் கலைமகளும்

இது ஓர் இனிய செந்தமிழ் சரித்திரம். இதில் கலைமகளின் கருணையும் பெருமையும், கவிச்சக்ரவர்த்தி கம்பரின் சரித்திர விபரம், கம்பர் இராமாயணம் இயற்றிய விபரம், தாசியின் மோசகரமான சாகஸம், கம்பர் சேரதேசமடைந்து சிறக்க வாழ்தல், அம்பிகாபதி ஒட்டக்கூத்தர், காளமேகப்புலவர் முதலிய புரர்த்னப் புலவர்களின் பெருமைகளுடன், காதல்மாட்சி, ஸ்நேக வாஞ்சை, யுக்தி புக்திகளின் மகிமை, பக்திரஸம், சிருங்காரரஸம், சோகரஸம், இன்பரஸம் முதலிய நவரஸங்களும் ஊற்றெடுத்தோட பண்டித பாமர ரஞ்சிதமாக வரையப்பட்டிருக்கிறது. இதில் சாதுரிய சம்பாஷணைகள் வெகு விநோதமாயிருக்கும். விலை, அணா 4

இதரத் தமிழ்ப் புத்தகங்கள்

	ரூ.	அ.
இங்கிலீஷ் வைத்திய சங்கிரஹம்	3	8
அனுமான்லிங்	0	12
காமாக்ஷி	0	8
பிரேமகலாவதீயம்	0	12
வத்ஸலா	0	8
கண்மணி	0	3
சின்னத்தம்பி	0	4
லீலா அல்லது மங்கைபுர மாணிக்கம்	0	12
சாரதாம்பாள்	0	8
புருஷோத்தமன்	0	10
மாலிகாபூஷணி	0	10
ஆங்கில சிரோமணிகள்	0	12
மோஹனாங்கி	1	4
ஸ்ரீ விவேகானந்த விஜயம்	1	4
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம்	1	4
தாயுமானவர் பாடல் (உயர்ந்த பதிப்பு)	1	0
நைடதம் : மூலமும் உரையும்	2	0
விநோதரஸ மஞ்சரி	1	2
அராபிநைட் கதை ; படங்களுடன்	2	8
விக்கிரமாதித்யன் கதை	1	8
தேசபக்தர்கள் சரித்திரம்	0	12
நாலடியார் உரையுடன்	1	2
அம்பாவிகை	0	12
தாமோதரன்	0	12
இளமையும் ஒழுக்கமும்	0	8
சத்தியவல்லி	0	12
பிமலா	0	6
யெலேன்	0	6
கற்பகவல்லி	0	8
திருமாளிகை,	0	6
குணசீலன்	0	[illegible]
மீனாக்ஷி	1	[illegible]

ஜே. ஆர். ரங்கராஜு இயற்றியவை

ராஜாம்பாள்	0	12
சந்திரகாந்தா	0	12
மோஹனசுந்தரம்	0	12

விவசாயிகளுக்கு மிகவும் அவச்யமானவை

நெல்	1	0
கரும்பு	1	0
தென்னை	1	0
மாம்பழம்	0	7
விவஸாய போதினி	1	4
விவஸாய விளக்கம்	1	4

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

Temple & Co., Madras.